மாநிலத்தின் தீரர்கள்

பழனியப்பா பிரதர்

நிலத்தின் தீரர்கள்

[அமெரிக்க தேசத்தின் குடதிசைப் பகுதியில்
குடியேறிய வீரமக்களைச் சார்ந்த சிறுகதை]

முதனூல் ஆசிரியர் :

ஒல். ஈ. ரோல்வாக்

தமிழாக்கம் :

கே. எஸ். வேங்கடராமன்

பழனி[illegible]பிரதர்ஸ்

சேப்பாக்கம் : : தெப்பக்குளம்
சென்னை-5. : : திருச்சி-2.

முதற் பதிப்பு : டிசம்பர், 1960.

விலை ரூ. 2—00

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.

முகவுரை

பல்வேறு துறைகளில் உலகனைத்திலும் தலைசிறந்து விளங்கும் அமெரிக்கா தேசம் ஒரு குடியேற்ற நாடென் பதை யறிவோம். ஐரோப்பா கண்டத்தின் தேசங்கள் எல்லாவற்றிலிருந்தும் நல்வாழ்க்கையின் பொருட்டுப் பெருவாரியான மக்கள் அங்குப் புகுந்து நிலையாகச் சமைந்து விட்டனர். ஆண்மை மிக்க நார்வே நாட்டு முன் னோடிகள் பலர், அமெரிக்காவின் மேற்கு மத்தியப் பகுதியி லுள்ள 'டகோடா' எனும் பிராந்தியத்தைச் சார்ந்த விரிந்த பூமியிலுள்ள புல்வெளிகள், புதர்கள், அடர்ந்த அடவிகள் நிறைந்த பிரதேசங்களைச் சீர்செய்து செப்பனிட்டு அனேக குடும்பங்கள் அங்கு நிலைபெற்றுச் செவ்வனே வாழ்க்கை நடத்த வழிகோலினர் என்பதைச் சுவை ததும்ப சித்திரிக்கின்றது இந்தக் கதை. மூக்கியமாக, 'பெர்ஹான்ஸா' என்பவர் இத்துறையில் ஆற்றிய அருந் தொண்டு பிரமிக்கத்தக்கது. அவருடைய மனைவி மக்கள் பட்ட அல்லல்கள் பற்றிப் படிக்கப் படிக்க உள்ளம் உருகும். அரிய சிறுகதை இது.

கே. எஸ். வேங்கடராமன்

முதலாவது பாகம்

1

பொழுது சாயும் நேரம். புல் செழித்து உயர்ந்திருந்த சமவெளி. அதனூடே சிறியதொரு வண்டித் தொடர் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. அகன்ற தோளுடைய பலசாலி யொருவன் அத்தொடருக்குத் தலைமை வகித்து நடத்தினான். அவனுக்குச் சில அடிகள் பின்னால் ஒன்பது வயதுச் சிறுவனொருவன் நடந்தான்—தந்தையும், மகனுமாவர் அவர்கள்.

அவ்விருவருக்கும் பின்னே சில காளைகள் மெதுவாக நடந்தன. எப்போதோ அக்குவேறு, ஆணிவேருக விழுந்திருக்க வேண்டிய பழைய வண்டியொன்றை அவை இழுத்துச் சென்று கொண்டிருந்தன. மரச் சட்டத்தின்மேல், படுதா போர்த்திய வண்டி அது. வீட்டுக்குத் தேவையான பலவேறு தட்டுமுட்டுச் சாமான்களும், மற்றும் கருவிகள், ஆடைகள் ஆகியவையும் அந்த வண்டியில் நிறைந்திருந்தன. அதற்குப் பின்னால் மற்றொரு சிறு வண்டி சென்றது. அதிலும் உணவு வகைகளும் தட்டுமுட்டுச் சாமான்களும் நிரப்பப்பட்டிருந்தன. அவ்வண்டிகளின் மரச் சக்கரங்கள் பெரிய ஓசை எழுப்பிக் கொண்டே முன்னேறின. ஆங்காங்கு சற்றுத் தங்கி, சிறிதளவு புல்லைத் தின்றவாறு ஒரு பசு அவ்வண்டிகளைப் பின்தொடர்ந்தது.

வண்டிகளில் இருந்தோரின் இரவு உணவுக்காக இன்னும் சற்று நேரத்தில் பால் கொடுக்கவேண்டியிருக்கும் அப்பசு.

முதல் வண்டியின் முன் புறத்தில் குறுக்காக மரப் பலகையொன்று அடிக்கப்பட்டிருந்தது. அதன் ஒரு புறத்தில் அமர்ந்திருந்த பெண் ஒருத்தி, மாடுகளை ஓட்டிக் கொண்டிருந்தாள். அவள் மேல் சாய்ந்தவாறு ஒரு சிறுமி உறங்கினுள். பலகையின் மறுபுறத்தில் ஏழு வயதுப் பையனொருவன் நேராக முன்பக்கம் நோக்கிய வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

பெர்ஹான்ஸாவின் குடும்பம் இது. அவருடைய பெரிய மகனின் பெயர் ஓல். மனைவியின் பெயர் பெரெட். அன்னுமேரி அவர்களுடைய சிறுமகள். சிறுவனின் பெயரோ ஹான்ஸ்.

தங்கள் உடைமைகள் அனைத்துடனும் மின்னஸோட்டாவிலிருந்து டகோடா பிரதேசத்துக்கு அவர்கள் குடி பெயர்ந்து கொண்டிருந்தனர். அங்குப் புதுநிலம் பெற்றுச் சாகுபடி செய்யவும், புதுவீடு கட்டவும் பெர்ஹான்ஸா உத்தேசித்திருந்தார். புதிய பிரதேசத்தில் அநேக அற்புதங்களைச் சாதிக்கலாம் என்பது அவர் நினைப்பு. அங்குதான் அதற்குற்ற வாய்ப்புக்கள் ஏராளமாயிற்றே.

அந்தப் பரந்த சமவெளியில் ஊர்ந்தபோது சின்னஞ் சிறியவையாக அவ்வண்டிகள் தோற்றமளித்தன. நேர் வரிசையிலிருந்து சற்றும் பிறழாமல் மெதுவாக முன் னேறின அவை. ஏறக்குறைய நான்கு வார காலம் அவை பிரயாணம் செய்திருந்தன. சில தினங்களுக்கு முன் வழி தவறி விட்டார், பெர்ஹான்ஸா. இன்னமும் அதை அவர் திரும்பக் கண்டுபிடித்த பாடில்லை. எனவே தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர், எங்கே செல்கிறோம் என்பதே தெரியாமல். சரியான பாதைக்குத் திரும்ப வேண்டுமானுல் ஸ்பிரிட் ராக் க்ரீக்கை அடைந்தாக வேண்டும்; அது எங்கே இருக்கிறது என்பதை அவரால் இன்னமும் அறியக்கூடவில்லை. திட்டப்படி இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே அவ்விடத்தை அவர் அடைந் திருக்க வேண்டும். ஆதலால் அவர் கவலைப்படலானுர்.

வெகுநேரம் மௌனமாக நடந்தபின் ஓலியனிடம் பெர்ஹான்ஸா: "இனி நீ திரும்பிச் செல்லலாம். போய்,

வண்டியைச் சிறிது நேரம் ஓட்டு. அதோடு உன் தாய் தனியாயிருக்கும் நிலைமையைப் போக்க அவளுடன் நீ பேசவும் வேண்டும்.''

தந்தைக்கு அடுத்தாற்போல் நடக்கவே ஓலுக்கு விருப்பம்; அங்கிருந்து அப்பாற்செல்ல அவனுக்கு மன மில்லை. இருந்தபோதிலும், வண்டியை நோக்கித் திரும் பியவாறே கேட்டான் : ''இன்றிரவு அவர்களைப் பிடித்து விட முடியும் என்று நினைக்கிறீர்களா, அப்பா ?''

'' முடியாது. அவர்கள் நம்மை வெகுவாக முந்திக் கொண்டு விட்டார்கள். இருப்பினும் இங்குள்ளவற்றுக்கு மாறுனதாக ஏதேனும் தென்பட்டால் என்னிடம் சொல்லு '' என்று கூறிவிட்டுத் தனியே நடக்கலானூர் பெர்ஹான்ஸா.

வண்டி மீதிருந்த பலகையில் ஓல் ஏறி உட்கார்ந்தான். ''ஏதாவது அடையாளம் தெரிகிறதா ?''— கலக்கம் அடைந்திருந்த அன்னை அவனைக் கேட்டாள்.

'' இன்னும் இல்லை '' என்று மெள்ளச் சொன்ஞன் ஓல்.

'' இனி அவர்களை நாம் எப்போதாவது பார்ப்போமா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது'' என்று தனக்குத் தானே பெரெட் கூறிக்கொண்டாள்.

தன் தாய் ஏன் அவ்வளவு அஞ்ச வேண்டும் என்பது சிறுவன் ஹான்ஸுக்குப் புரியவில்லை. தன் தந்தையிடம் இவனுக்கு நம்பிக்கை உண்டு. அவரோ, சரியான வழியி லேயே தாங்கள் செல்வதாகக் கூறியிருந்தாரே!— ஓடிச் சென்று தந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு நடக்க லாஞன் அவன்.

தாய் மிகவும் களைத்திருந்தாள். அன்னுவை மடிமீது இருத்தியவாறே பின்னுல் சாய்ந்துகொண்டாள் அவள். ஓல் அவளைவிட வேகமாக மாடுகளை ஓட்டலாஞன். அதோடு சுற்றுப் புறப் புல்வெளியையும் அவன் ஊன்றிக் கவனித்தான். தங்களுக்கு முன்னுல் இருந்த பிரதேசம் சிறுகச் சிறுக மேடிடுவதை அவர்கள் கண்டனர். நேர் எதிரே இல்லாவிடினும்கூட, அந்த மேட்டுப் பரப்பை

நோக்கி ஹான்ஸா திரும்பினார். சூரியன் மறையத் தொடங்கியிருந்தான். திடுமெனத் தங்களை அஸ்தமனம் சூழ்ந்ததை அவர்கள் கண்டனர். வானம் மேன்மேலும் இருளத் தொடங்கிற்று. அது அந்த சூன்யப்பிரதேசத்தை மேலும் துயரும் தனிமையும் கூடியதாய்த் தோன்றச் செய்தது. எனினும் ஒலுக்கு அது மிகவும் அழகானதாகவே தென்பட்டது. அந்தச் சமவெளிமீது தாழ்ந்து கவிந்திருந்த ஒரு சில மேகங்களையே அவன் வெகுநேரம் நோக்கிக் கொண்டிருந்தான்.

அன்னாவை மடியில் வைத்தவாறே மௌனமாக அன்னை அழுதாள். சற்றுநேரம் களைத்துப் போயிருந்த அவள் தன் கணவரைக் கூப்பிட்டுக் கேட்டாள்: ''நாம் விரைவில் எங்காவது தங்குவோமல்லவா, பெர் ?''

''இதோ, இன்னும் சிறிது நேரத்தில்'' என்று ஹான்ஸா பதலளித்தார் நிற்காமலேயே.

தன் தாய் அழுவதை ஒல் கவனித்திருந்தான். ஆயினும் அதைத் தான் கண்டதாக அவளிடம் அவன் காட்டிக் கொள்ளவில்லை. நேர் முன்னாலேயே தொடர்ந்து நோக்கிக் கொண்டிருந்த அவன், ''அதோ அங்கே ஒரு காடு தெரிகிறது, அப்பா!'' என்று கூவினான்.

''அட, இப்போதுதான் நீ பார்க்கிறாயா? ஹான்ஸும் நானும் எப்போதோ அதைக் கவனித்து விட்டோமே! அந்தப் பக்கம்தான் இப்போது நாம் போகிறோம். இது தான் சரியான பாதை என்பதில் எனக்கு ஐயமில்லை.''

''மற்றவர்களும் இந்தப் பக்கம்தான் சென்றிருக்கிறார்களா ?'' என்று ஹான்ஸ் வினவினான்.

''ஆமாம். அதில் சந்தேகமென்ன ?'' என்றார் தந்தை.

''வேறு யாராவது இந்த வட்டாரத்தில் இருக்கிறார்களோ ?''

''இல்லை, யாருமே இல்லை.''

இறுதியாக ஓரிடத்தில் பெர்ஹான்ஸா நின்று, அன்றையப் பிரயாணத்தை முடித்தார். அனைவரும் மிக

மிகக் களைப்படைந்திருந்தனர்—அந்தப் பிரயாணிகள் மட்டுமின்றிப் பிராணிகளும்கூட.

தாங்கள் கடைசியாகக் கடந்த சிறு மரத்தோப்பில் பொறுக்கிய மரத்துண்டுகளைச் சிறுவன் ஹான்ஸ் எடுத்து வந்தான். தரையில் மூன்று இரும்புச் சட்டங்களைப் பொருத்தி அடுப்பு அமைத்தான் ஓல்; அத்துடன் போதுமான தண்ணீருக்கும் ஏற்பாடு செய்தான். மாடுகளைக் கவனித்துக் கொண்டார் தந்தை. அவற்றை அவிழ்த்து விட்டபின் பசுவைக் கட்டிப் போட்டுப் பால் கறந்தார். பின்னர் அதையும் அவர் அவிழ்த்து விட்டார். அதன் பிறகு வண்டியின் அடியில் தம் குடும்பத்துக்குப் படுக்கை விரித்தார். தாயோ, தரையில் ஒரு கம்பளியை விரித்து, அதன் மேல் உணவுக் கலங்களை வைத்தாள். புல்லில் தத்தித் தத்தி நடந்து தவறி விழுந்துகொண்டிருந்த தன் சிறுமகளையும் அவள் கவனித்துக் கொண்டாள்—விழுந்த போதும்கூட ஓயாமல் சிரித்துக் கொண்டு சந்தோஷமாயிருந்த சிறுமி அவள்.

ஒரு வழியாகக் கடைசியில் இரவு உணவு தயாராகி விட்டது. தந்தைக்கும் இரு பையன்களுக்குமாக ஒரு பெரிய கலத்திலும், தாய்க்கும் மகளுக்குமாகச் சிறியதொரு கலத்திலும் அது பகிரப் பட்டது. அதனுடன் உட்கொள்ளத் தேவையான அளவு பால் அவர்களிடம் இல்லை. வெகு தூரம் நடந்ததால் களைத்திருந்த படியாலும், போதிய அளவு புல் தின்ன அவகாசம் அல்லாதபடியாலும் கொஞ்சம் பாலையே பசு கொடுத்திருந்தது. குழந்தைகளுக்கு நிறையப் பால் கிடைக்கும்பொருட்டுத் தண்ணீரைக் குடித்தார் தந்தை—பாலின் ருசி தனக்குப் பிடிக்க வில்லையென அவர் சாக்குக் கூறினார்! உணவிலும் சிறிய பங்கையே எடுத்துக்கொண்டார்.

யாருமே ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அந்தப் பரந்த சமவெளியின் நடுவில் சிறு தூசிகள் போலவே அவர்கள் காணப்பட்டார்கள். அவ்வுணர்வு, சாப்பிட்டு முடித்த பிறகுகூட அவர்களை வாய் திறக்க விடவில்லை. ஆண்டவனுக்கு நன்றி கூறும் வகையில், சிறுமி அன்னா தான் அந்த மௌனத்தைக் கலைத்தாள்; பின்னர், தாயின்

மடியில் படுத்து உறங்கிவிட்டாள். மற்றவர்கள் மீண்டும் மௌனமாக அமர்ந்து, சந்திர உதயத்தைக் கவனிக்கலாயினர். மிகப் பெரிதாகவும், பிரகாசமானதாகவும் சந்திரன் தோன்றியது—அது அவர்களுக்குத் தெம்பு அளித்தது.

அனைவரும் வண்டிக்கடியில் நுழைந்து, அங்கே தயாராக விரித்து வைக்கப்பட்டிருந்த படுக்கையில் படுத்தனர். குழந்தைகள் தூங்கிவிட்டதாகத் தோன்றியதும் தாய் கேட்டாள்: ''மற்றவர்களை மறுபடியும் நாம் காண முடியுமென நினைக்கிறீர்களா?''

''நிச்சயமாகப் பார்க்கப் போகிறோம். அதில் எனக்குச் சந்தேகமேயில்லை'' என்றார் ஹான்ஸா. பிறகு அவள் பக்கமிருந்து தலையைத் திருப்பிக் கண்களை மூடிக்கொண்டார். அதையடுத்துத் தாயும் பேச்சை நிறுத்தினாள்.

2

ஆனால் பெர்ஹான்ஸா உண்மையில் களைத்திருக்கவில்லை. மீண்டும் குடி பெயர்வதைத் தன் மனைவி விரும்பாததை எண்ணியவாறே உறங்காமல் படுத்துக் கிடந்தார் அவர். உண்மையில் அவள் கெட்டிக்காரிதான். அவள் நினைத்தது சரியாகிவிட்டதே என்று கலங்கினார் அவர். தாங்கள் புறப்பட்டபோது பெரிய வண்டி உடைந்து பழுதானதிலிருந்தே அவருக்கு ஓயாத கலக்கம் தான். அந்த வண்டியைச் செப்பனிடுவதற்காக அவர் பின் தங்க நேர்ந்தது. அதன் விளைவாக அந்த வண்டித் தொடரைச் சேர்ந்த மற்றவர்கள் முன்னே சென்றுவிட்டார்கள். அவரைவிட்டுச் செல்ல மற்றவர்களுக்கு மனமில்லை. அவர்தான் அவர்களை முன் செல்லுமாறும், விரைவில் அவர்களைத் தன்னால் பிடித்து விட முடியுமென்றும் கூறி அனுப்பினார். அவர்களிடம் இருந்தவையோ புதிய வண்டிகள். ஆகவே அவர்கள் வெகு வேகமாக முன்னேறிவிட்டார்கள்.

போதாக் குறைக்கு இப்போது அவருக்குத் திசையும் தவறிவிட்டது. சரியான பாதையில் சென்றிருந்தால் மற்றவர்களின் சுவடுகளைக் கண்டிருக்க வேண்டுமே! அந்த மற்றவர்களில் ஹான்ஸ் ஓல்ஸா ஒருவர்; வெகு நாளைய நண்பரான அவர் தம் மனைவியுடன் பிரயாணம் செய்தார். இன்னொருவர் டோன்ஸெடன். அவரும் தம் மனைவி க்ஜெர்ஸ்டியை அழைத்துச் சென்றார். அந்த கோஷ்டியில் ஸோலம் சகோதரர்களும் இருந்தனர். அமெரிக்காவிலேயே பிறந்து வளர்ந்தவர்கள் அவர்கள். அதைப் பற்றி ஹான்ஸாவைவிட அவர்கள் அதிகம் அறிந்தவர்கள்—அவர்களின்றி பிரயாணத்தைத் தொடர்ந்திருக்கலாமா ?.........கூடாது, மின்ன ஸோட்டாவிலேயே தங்கி யிருக்க வேண்டும்—இவ்வாறெல்லாம் எண்ணி மிக மிகக் கலக்கமுற்றார் ஹான்ஸா. தூங்கவே முடியவில்லை அவரால்.

இரவு கழிந்துகொண்டே யிருந்தது. குழந்தைகளும், தாயும்கூட அமைதியாக உறங்கினர். சிறுகச் சிறுக அவர்களிடமிருந்து விலகி, ஆடைகளை உடுத்திக் கொண்டார் ஹான்ஸா. தனிமை கவ்வியிருந்த அந்தக் காரிருளில் நடக்கலானார். துருவ நட்சத்திரத்தின் துணை கொண்டு வழியறிந்து, காடு தென்பட்ட மேட்டுப் பகுதியின் உச்சிக்கு விரைந்தார். கிடைத்த புல் பூராவையும் மேய்ந்து கொண்டிருந்த காளைகளையும் பசுவையும் கடந்தார். அந்தக் காட்டை அணுகும்வரையில் நடந்து கொண்டே யிருந்தார். அதை அடைந்ததும் அங்கு பார்த்தபோது வண்டிகள் இருந்த இடமே தெரியவில்லை. எனவே, திரும்புவதற்கு வழியை உறுதிப்படுத்திக் கொள்ள மீண்டும் அண்ணாந்து துருவ நட்சத்திரத்தைப் பார்த்தார்—கிட்டத் தட்ட நான்கு மைல் தூரம் நடந்திருந்தார் அவர்.

காட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை நடந்தார். சுற்றுமுற்றும் கவனமாகப் பார்த்தார். தரையைக் கூர்ந்து நோக்கினார். வெகு நேரம் எதையுமே அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. பின்னர், புதர்கள் அகற்றப்பட்டதொரு அகன்ற பகுதியைக் கண்டார். அங்கே, சில தினங்களுக்கு முன்தான் அடுப்பு எரிந்

திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தார். அங்கு இருந்த சாம்பலில் இன்னமும் புது மணம் வீசிக்கொண்டிருந்தது —இந்தக் காட்சி அவரை ஆனந்தக் கண்ணீர் வடிக்கச் செய்தது. தன் நண்பர்கள் அவ்வழி சென்றுள்ளனர் என்பதை அறிந்துகொண்டு விட்டார் அவர்!

காலையில் வழிதேடி அலைந்து கால தாமதமாவதைத் தவிர்க்கும்பொருட்டு ஸ்பிரிட் ராக் க்ரீக்கைக் கண்டு பிடிப்பதில் அவர் முனைந்தார். விரைவில் அதுவும் அகப் பட்டு விட்டது. அந்த க்ரீக்கை மற்றவர்கள் கடந்த இடத்தைக் கூடக் கண்டுபிடித்து விட்டார்; அவர்கள் திட்டமிட்டிருந்த இடமே அது! சற்றுப் பொறுத்து அந்த ஓடையின் கரையில் அவர் கண்ட மற்றொரு பொருள் அவருக்கு மேலும் ஆச்சரியம் அளித்தது. குனிந்து அதை எடுத்தார். சந்தேகமேயில்லை, ஹான்ஸ் ஒல்ஸா விட்டுச் சென்ற உலர்ந்த மாமிசத் துண்டுதான் அது! தங்களுக்குப் பின்னால் ஹான்ஸா வரும்போது உபயோகிப் பதற்காக அந்தக் காய்ந்த காலை விட்டுப் போயிருந்தார் அந்த நல்ல மனிதர்!

வண்டிகள் தங்கியிருந்த இடத்துக்கு மெதுவாகவே திரும்பினார் ஹான்ஸா. அனைத்தையும் பொறுத்து அளப் பரிய மகிழ்ச்சி அவருக்கு! மற்றவர்களைப் பிடிப்பதற்குள் பெரிய வண்டி பழுதாகிச் சிதறாமல் இருக்க வேண்டுமே என்ற ஒரே பிரார்த்தனைதான் அப்போது. அவர்களைப் பிடிக்க அதிக நாளும் ஆகிவிடாது.

ஆயினும் தங்கள் முகாமுக்குத் திரும்பியபோது அவரை மீண்டும் கலக்கம் கௌவிக்கொண்டது—அங்கே யாரோ உட்கார்ந்திருந்தார். அருகில் சென்று பார்த்தும் அது தன் மனைவிதான் என்பதைக் கண்டார். அந்நேரத் தில் அவள் விழித்திருந்தது கண்டு மனம் கலங்கினார். ''இந்த நள்ளிரவில் இங்கே என்ன செய்து கொண்டிருக் கிறாய், பெரெட் ?'' என வினவினார்.

''நீங்கள் சென்ற பிறகு என்னால் தூங்க முடிய வில்லை''—மிகத் தாழ்ந்த குரலில் பதில் கூறினாள் அவள். வெகு நேரம் அவள் அழுதிருக்கிறாள் என்பதை அவர் கண்டு கொண்டுவிட்டார். அவருக்கும் அழவேண்டும்

போலிருந்தது. எனினும் அதை அடக்கிக்கொண்டு அவர் கேட்டார்: " விழித்துக்கொண்டே இருந்தாயா, அன்பே ? தூக்கம் அவசியமாயிற்றே உனக்கு ?"

" நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்பதை அறிந்த பிறகும் என்னுல் எப்படி உறங்கவியலும் ? என்னிடம் நீங்கள் எதையும் சொல்வதில்லையானுலும் கோளாறு என்ன என்பது எனக்குத் தெரியும்" என்று கூறி மீண்டும் அழவாரம்பித்துவிட்டாள் பெரெட் ; ஹான்ஸாமீது சாய்ந்தவாறு சற்றும் ஓயாமல் அழுதாள் அவள்.

ஏதோ சொல்ல நினைத்தார் ஹான்ஸா. ஆனுல், சிறிது நேரம் அவரால் வாயைத் திறக்கவே முடியவில்லை. பின்பு சொன்னுர்: "இனியும் நீ அழக்கூடாது, பெரெட். இதோ, ஹான்ஸ் ஓல்ஸா விட்டுச் சென்ற உலர்ந்த மாமிசத் துண்டொன்றை வைத்திருக்கிறேனே, கவனிக்க வில்லையா நீ ?"

இரண்டாவது பாகம்

1

சமவெளியில் சிறியதொரு அருவியின் அருகே அமைந்திருந்த, சிறு குன்றமொன்றின் சரிவில் களிமண் பிண்டங்களைக் கொண்டு வீடு கட்டிக்கொண்டிருந்தார் ஹான்ஸ் ஓல்ஸா. பாதியளவு பூர்த்தியாகிவிட்டது அவ்வீடு. மீதியைக் கட்டி முடிக்கப்போதுமான மட்பிண்டக் குவியல் அவர் பக்கத்தில் இருந்தது. பருமனை மனிதர்தா னெனினும் சுறுசுறுப்புடையவர் அவர். ஆயினும் இன்று மெதுவாகவே வேலை செய்தார். சில சமயம் அறவே வேலையை நிறுத்திவிட்டு, தனிமை கவிந்திருந்த அந்தப் பரந்த சமவெளியை அவர் நிமிர்ந்து பார்த்தார். அதில் எதையோ தேடினார் அவர். எதுவுமே அவர் கண்ணில் படவில்லை. எனினும் பலமுறை அவ்வாறு ஊன்றிப் பார்க்கத் தவறவில்லை. பின்னர், அதனால் வீணாகிவிட்ட நேரத்தை ஈடுகட்ட, முன்னிலும் வேகமாக வேலை செய்யத் தொடங்குவார்.

வீட்டின் மறுபுறத்தில் ஒரு கூடாரம் இருந்தது. அதற்கு அடுத்தாற்போல் ஒரு வண்டி நிறுத்தப்பட்டிருந்தது. தரையில் ஒரு அடுப்பும், சில நாற்காலிகளும், மற்றுமிதர எளிய மரச் சாமான்களும் கிடந்தன.

களிப்பும் கனிவும் மிகுந்து காணப்பட்ட ஒரு பெண்மணி, ஒரு பாட்டை முணுமுணுத்தவாறு மும்முரமாகப் பகலுணவு தயாரித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய பத்து வயது மகளான ஸோபீ அந்த வேலையில் அவளுக்கு உதவினுள்.

இந்தக் குடும்பம் இருந்த இடத்துக்கு அருகிலேயே மற்றொரு குன்றின் சரிவில் இன்னொரு மண்வீடு கட்டி முடிக்கப்பட்டிருந்தது. அதன் புகை போக்கியிலிருந்து புகை வந்துகொண்டிருந்தது. ஸிவெர்ட்டோன் ஸெடெனுக்குச் சொந்தமான வீடு அது. வட திசையில் மற்றுமிரு மண் வீடுகள் காணப்பட்டன. இன்னொரு பெரிய குன்றினல் மறைபட்டிருந்த அவை இன்னும் பூர்த்தியாகியிருக்கவில்லை. இரு ஸோலம் சகோதரர்களும்தான் அவற்றை நிர்மாணித்துக்கொண்டிருந்தவர்கள்—ஸ்பிரிங் க்ரீக், குடியேற்றத்திற்குற்ற இடமென்பதைக் குறித்தன, இவ்வீடுகள் அனைத்தும்.

சாப்பாடு தயாராகிவிட்டதெனத் தன் கணவருக்குத் தெரிவித்தாள் அந்த மாது. அவள் இருந்த இடத்தை நோக்கி அவர் நடந்தார். பிறகு, வெறுமை மண்டியிருந்த அந்தச் சமவெளியை மற்றுமொரு நிமிஷநோம் நோக்கினுர். அப்போதும் அவரால் அங்கு எதையும் காணக்கூடவில்லை.

கூடாரத்தின் உள்ளே பிரகாசமாக இருந்தது. கூடவே அதில் வெப்பமும் மிகுந்திருந்தது. நாள் முழுவதும் அதன்மீது தன் கதிர்களைச் சூரியன் சொரிந்துகொண்டிருக்தான். ஒல்ஸாக்களுக்குச் சொந்தமான தட்டுமுட்டுச் சாமான்கள் அனைத்தும் அதனுள் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. ஆகவே அது ஒரு வீடுபோலவே ஓரளவு தோன்றியது. தன் மனைவி தயாராக வைத்திருந்த ஒரு பெரிய பேலாவிலிருந்து தண்ணீரை எடுத்துத் தன் முகத்தையும் கைகளையும் ஹான்ஸ் ஒல்ஸா கழுவிக்கொண்டார். அதன்பின் கூடாரத்துக்கு வெளியே தரையில் அமர்ந்தார், சாப்பிடுவதற்காக—கூடாரத்தை விட அங்கே குளிர்ச்சியாக இருந்தது.

"அவர்களைப் பற்றிய சுவடு ஏதேனும் தென்பட்டதா ?" என்று மனைவி கேட்டாள்.

'' இல்லை, ஒன்றுமேயில்லை.''

'' அவர்களுக்கு என்ன நேர்ந்திருக்குமென நினைக்கிறீர்கள் ?''

'' உண்மையிலேயே எனக்குத் தெரியாது.''

கணவர் முகத்தைக் கவ்வியிருந்த கவலையைக் கண்டதும் தன் பேச்சை நிறுத்திக்கொண்டாள் அவள். உற்சாகம் குறையவேயில்லை அவளைப் பொறுத்த வரையில்; அப்போதும், இன்னும் சிறிது நேரத்தில் பெர்ஹான்ஸா அங்கு வந்து சேர்வாரென்றே அவள் எண்ணினாள். ஹான்ஸ் ஓல்ஸாவோவெனில் கவலைப்படுவதை நிறுத்தவில்லை. பேசாமலே சாப்பிட்டார். உண்டு முடித்ததும், தாம் கட்டிக்கொண்டிருந்த வீட்டிற்குச் சென்று, கிழக்குத் திசையை நோக்கியவாறு உட்கார்ந்தார். '' பெர்ஹான்ஸாவுக்கு என்ன நேர்ந்துவிட்டது ?'' எனத் தம்மைத் தாமே கேட்டுக்கொண்டார்.

அவர் அமர்ந்திருந்ததைக் கவனித்த மனைவி, அருகே வந்தாள். '' நீங்கள் கிளம்பிச் சென்று அவர்களைத் தேடினால் என்ன, ஹான்ஸ் ?'' என்று கேட்டாள் அவள்.

'' எங்கேயென்று தேடுவது இந்தப் பரந்த வெளியில்? இயலாத காரியமாயிற்றே அது !''

'' ஆம், அது உண்மைதான். ஆயினும் தேடும் முயற்சியில் இறங்கினால் அதுவே தென்படக் கூடுமே ?''

இன்னமும் கிழக்குப்புறமே பார்த்துக் கொண்டிருந்தார் ஹான்ஸ் ஓல்ஸா. பின்னர், ''பெர்ஹான்ஸா தான் மிகவும் கெட்டிக்காரராயிற்றே! நாம் இங்கு வந்து ஐந்து நாட்களாகிவிட்டன. எந்த நிமிஷமும் அவரும் இங்கு வந்து சேர்ந்து விடக்கூடும். நம்மைக் கடந்து மேற்குத் திசையில் அவர் மேற்கொண்டு சென்றிருக்கலாம் என்பதே என் கவலையெல்லாம்'' என்று கூறி, துக்கம் மேலிட்டவராய் ஆயாசத்துடன் மீண்டும் அமர்ந்தார். அவர் மனைவியும் அவரைப்போலவே ஆழ்ந்த மௌனத்துடன் உட்கார்ந்தாள்.

இறுதியாக, '' பெரெட்டுக்காகவும், அவளுடைய குழந்தைகளுக்காகவும் நான் மிகவும் வருந்துகிறேன்.

அவளது நிலைக்கேற்ற வேகத்துடன் அவரால் செல்ல இயலாது. அவள் மீண்டும் கருவுற்றிருக்கிறாள் என்றே நினைக்கிறேன்'' என்றாள்.

தெற்குப்பக்கத்தில் இருந்த சிறு குன்றில் அமைந்த வீட்டிலிருந்து குட்டையான தாடிக்காரரொருவர் வருவதை அதன்பின் அவள் கண்டாள். அண்டை வீட்டுக்கார டோன்ஸெடென் தான் அவர். நிறையப் பேசுபவரெனப் பெயர் பெற்ற அவர் வருவதை ஹான்ஸ் ஓல்ஸாவும் கவனித்தார். முகமனேதும் கூறாமலே அவர்களை நெருங்கிய டோன்ஸெடன், ''கண்டுவிட்டீர்களா அவர்களை ?'' என்று வினவினார்.

'' என்ன, அவர்களைக் கண்டீர்களா, என்ன ?''

''கண்டேனாவது ? அதைச் சொல்லத்தானே இங்கு நான் வந்தேன் ! இந்தப் பக்கமாக அவர்கள் வருவதை ஒரு மணி நேரத்துக்கு மேலாகவல்லவா கவனித்து வருகிறேன் ? விரைவில் அவர்கள் இங்கு வந்து விடுவார்கள், பாருங்கள்.''

அது கேட்டு அவர்கள் மிகுந்த பரபரப்பு அடைந்தனர். '' எங்கே அவர்கள் ?'' என்று கணவரும் மனைவியும் ஒருமிக்கக் கேட்டார்கள்.

'' அதோ, மேற்குத் திசையில் நோக்குங்கள், அவர்களை நீங்கள் பார்க்கலாம். பெர்ஹான்ஸா எங்காவது சற்று வழி தவறியிருக்கத்தான் வேண்டும்.''

சமவெளியினூடே வண்டிகள் வருவதைப் பார்த்த போது ஹான்ஸ் ஓல்ஸாவினாலும், அவரது மனைவியினாலும் தங்கள் கண்களை நம்ப முடியவில்லை. பேசக்கூட முடியாத அளவு உவகை அடைந்தனர் இருவரும். புதிதாக வருவோரை வரவேற்று உபசரிக்கக் காப்பி தயாரிக்கவும், கூடாரத்தில் இருந்த சிறந்த உணவு வகைகளை எடுத்து வரவும் உடனே புறப்பட்டாள் மனைவி. ஹான்ஸ் ஓல்ஸாவின் மகிழ்ச்சிக்கும் ஓர் அளவில்லை; பெர்ஹான்ஸா வந்து சேருமளவு மீண்டும் வேலைசெய்யத் தொடங்கினார். டோன்ஸெடன் அவருக்கு உதவி செய்யலானார்.

விரைவில் அந்த வண்டிகள் மிக அருகில் வந்து சேர்ந்தன. அவற்றின் முன்னால் பெர்ஹான்ஸாவும், அவருக்கு அடுத்தபடி சிறுவன் ஹான்ஸும் வந்தனர். மாடுகளை ஒல் ஓட்டினான். பெரெட்டும் அன்னாவும் வண்டிக்குள் உட்கார்ந்திருந்தனர். அவர்களை வரவேற்க அனைவரும் தயாராயிருந்தனர்; சிறுகச் சிறுக நெருங்கி வருவதைச் சந்தோஷமுடன் கவனித்தனர்.

"அப்பாடா, ஒரு வழியாக எங்களைக் கண்டுபிடித்து விட்டீர்கள்!" என்று வாய்விட்டுச் சிரித்தவாறு வரவேற்றார் ஹான்ஸ் ஒல்ஸா. பெர்ஹான்ஸாவின் கையை அவர் விடுவதாயில்லை.

"ஏன், அது சுலபமாகவல்லவோ இருந்தது! நீங்கள்தான் சுவடுவிட்டு வந்திருந்தீர்களே! இவ்விடத்துக்கும் ஸியூக்ஸ் நீர்வீழ்ச்சிக்குமிடையே சற்று மேற்கே சென்றுவிட்டேன், அவ்வளவுதான்!" — சிரித்தவாறு சுற்றிலும் பார்த்தார் பெர்ஹான்ஸா. "இதுதான் நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் நிலம் போலிருக்கிறது. நன்றாக, மிகமிக நன்றாக இருக்கிறதே!"

வண்டியிலிருந்து பெரெட்டும் சிறுமி அன்னாவும் இறங்கினர். மற்றவர்களுடன் சேராமல் சற்றுப் பின்னால் தள்ளி நின்றாள் பெரெட். இதுதான் தாங்கள் தங்கி வாழப் போகும் பிரதேசம் என்பதை அவளால் நம்ப முடியவில்லை. இங்கு ஏதோ கோளாறாக முடியப் போகிறது என்று திடுமெனத் தீவிர எண்ணமொன்று அவளுக்கு ஏற்பட்டது. ஆகவே அவளால் உற்சாகம் கொள்ள இயலவில்லை. ஆயினும் மற்றவர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருந்தபடியால் கண்ணீரை அடக்கிக்கொண்டாள். இறுதியில் மற்றப் பெண்டிரோடு கூடாரத்தினுள் சென்றாள். அங்கே தங்கி இளைப்பாறும் படியும், உடைகளை மாற்றிக்கொள்ளும்படியும் அவர்கள் கூறினர். பின்னர், குளிப்பதற்காக அவளைத் தனியே விட்டனர்.

இங்கு வசிக்க இயலுமென்றே பெரெட்டினால் எண்ண முடியவில்லை! எப்படி இயலும் அது? ஏன், மறைந்து

கொள்ளக்கூட இங்கு எதையுமே காணோமே என்று நினைத்தாள் அவள். மற்றவர்களின் மன நிலையை அவளால் சற்றும் புரிந்துகொள்ள முடியவில்லை.

கூடாரத்துக்கு வெளியே இருந்த ஆடவர்கள் அந்தப் பிரதேசத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். தம் நிலத்தை அடுத்தாற்போலிருந்த பகுதிக்கு அவர் சார்பில் பாத்யதை மனு எழுதிப் போட்டிருப்பதாக பெர்ஹான்ஸாவிடம், ஹான்ஸ் ஓல்ஸா தெரிவித்தார். அதைவிடச் சிறந்த நிலம் தென்பட்டால் அதை பெர்ஹான்ஸா எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் கூறினார். அவ்வாறின்றி அதையே அவர் எடுத்துக்கொண்டால் தாங்கள் அண்டை நிலக் காரர்களாக இருக்க முடியும் என்பதை எடுத்துக் காட்டினார்—தம்மை உத்தேசித்துத் தம் நண்பர் ஹான்ஸ் ஓல்ஸா செய்திருந்தவற்றைக் கண்டு மிக மனக் கிளர்ச்சி அடைந்தார், பெர்ஹான்ஸா.

அதையடுத்து ஒரு வெள்ளை விரிப்பைச் சுற்றித் தரையில் உட்கார்ந்து அவர்கள் உண்ணலாயினர். காய்ந்த காற்பகுதி மாமிசம், ரொட்டி, பாலாடைக்கட்டி, வெண்ணெய், இனிப்பான பால் கொண்ட ஒரு பேலா ஆகியவை அவர்கள் முன் வைக்கப்பட்டிருந்தன. அடுப்பில் காப்பி தயாராகும் மணமும் வீசியது. அனைவரும் சிரித்தவாறே அந்த இன்சுவை உணவுகளை உண்டு களித்தனர். அதன்பின் ஹான்ஸ் ஓல்ஸாவின் மனைவியான ஸாற்றினு ஒரு விஸ்கிப் புட்டியையும், சிறிய தொரு கண்ணாடிக் கோப்பையையும் வெளிக்கொணர்ந் தாள், ஆண்மக்கள் சிறிது குடித்து மகிழ்வதற்காக.

பகலுணவு சாப்பிட்டபோது இருந்தது போல மௌனம் வகிக்கவில்லை ஹான்ஸ் ஓல்ஸா. மற்றவர்களை விட அதிகமாக இப்போது அவர் சிரித்தார். பெர்ஹான் ஸாவைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தார். மற்றொரு மாமிசத் துண்டை நறுக்கியவாறே பெர்ஹான்ஸாவும் அவரை நோக்கி முறுவல் செய்தார். ''எல்லா உணவு வகைகளையும் பத்திரமாக உங்களுடன் எடுத்து வந்தீர்க ளல்லவா?'' என்று வினவினார் பின்னர்.

சற்றுப் பொறுத்துப் பதில் சொன்னார் ஹான்ஸ் ஒல்ஸா. ''ஆம், சந்தேகமில்லாமல் எங்கோ ஓரிடத்தில் ஒரு உலர்ந்த கால் மட்டும் காணாமல் போய்விட்டது.''

தமக்காக அவர்கள் விட்டு வந்த அந்த மாமிசத் துண்டைத் தாம் கண்டெடுத்துவிட்டதாக அவர்களிடம் தெரிவித்தார் பெர்ஹன்ஸா. அது பற்றி ஹான்ஸ் ஒல்ஸா கூறிய பொய்யை அவர் நம்பிவிடவில்லை! தம்மைப்பற்றியே எப்போதும் நினைத்துக் கொண்டிருந்த தற்காக அவருக்கு மறுபடியும் நன்றி செலுத்தினார் —அவர்கள் அனைவரும் நெருங்கிய நண்பர்களாயிற்றே. சமயத்தில் ஒருவருக்கொருவர் உதவாமல் போய்விடு வார்களா ?

2

இரவு நெருங்கும் வரையில் அவர்கள் அங்கேயே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். முக்கிய விஷயங்கள் பற்றியே இப்போது பேசலாயினர். இங்கு எம்முறையில் அவர்கள் வாழ்வது, என்னென்ன பயிர்களைச் சாகுபடி செய்வது, அந்தச் சிறிய குடியேற்றம் எப்படி வரவரப் பெரிதாகும் என்பவை பற்றியெல்லாம் பேசினர். அந்தி நேர இருள் அதிகமாதலுமே, பேச்சை நிறுத்தி, சூரியன் மறைவதைக் கவனிக்கத் தொடங்கினர். இந்த அகன்ற, பெரிய சமவெளியில், இதையும் விட விரிவான வானத்தின் கீழே தாங்கள் எத்துணைச் சிறியவர்கள் என்பதை நினைத்து மலைத்தனர். அவர்களைச் சுற்றி யிருந்த அனைத்திலும் மௌனம் நிலவியது. அதனை யெல்லாம் அவர்கள் அஞ்சிவிடவில்லை. ஆயினும் எல்லாம் சரிவர நடந்தேறிவிடுமென முன்னைப் போல் அவ்வளவு நிச்சயமாக அவர்களால் நம்ப முடியவில்லை. வெளி யுலகிலிருந்து வெகு தொலைவில் இருந்த இடத்தில் எதுவும் நடக்கக் கூடுமே !—எனினும் திடீரெனத் தங்களைக் கவலை கவ்விவிட்டதை மற்றவர்கள் அறியுமாறு செய்ய அவர்களில் எவருக்கும் மனமில்லை.

கடைசியில் சட்டென எழுந்தாள் பெர்ஹான்ஸா. இந்தப் பகுதி எவ்வளவு தனித்திருக்கிறது என்பதைத் தன்னைப் போலவே அறிந்து ஆயாசப்படுகிறார் அவர் என்பதை அவர் மனைவி கண்டு கொண்டுவிட்டாள். எனினும் அப்போது மற்றவர் அனைவரையும் உற்சாகப் படுத்தவே அவர் விரும்பினார். "நம் புது உறை விடத்தைப் பார்ப்போமே!" என்றார். அவருக்குப் பிடிக்குமென ஹான்ஸ் ஒல்ஸா கருதிய நிலத்தை ஆடவர் எல்லோரும் போய்ப் பார்த்தனர். "நீங்கள் இதை எடுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும் என்று கட்டாயமில்லை. இது உங்களுக்குப் பிடித்திருக்குமானால் ஸியூக்ஸ் நீர் வீழ்ச்சிக்குச் சென்று கையெழுத்திட்டால் போதும். மற்றவர் எவரும் பாத்யதை கொண்டாடப் புகுமுன் அதைச் செய்து முடிக்கவேண்டும், அவ்வளவுதான்" என்றார் ஹான்ஸ் ஒல்ஸா.

அனைத்தும் இவ்வளவு இனிது நடந்தேற இயலுமென பெர்ஹான்ஸாவினால் நம்பமுடியவில்லை. வளமான நிலத்தில் பெரியதொரு பரப்பு, அண்டை நிலத்தவர்களாக அருமை நண்பர்கள், தன் வாழ்க்கையைப் பெரிய வெற்றியாக்க ஒரு அரிய வாய்ப்பு—இவையெல்லாம் சாதாரணமாகக் கிடைக்கக் கூடியவையா, என்ன? மேலும், அந்நிலம் உயரமானதொரு பகுதியில் அமைந்துள்ளது. அருகே அருவியும் ஓடுகிறது! சாகுபடிக்கு நேர்த்தியான நிலம்தான் அது, சந்தேகமேயில்லை!

ஹான்ஸ் ஒல்ஸாவின் வீட்டுக்குக் கூடுமான வரையில் அருகே தம் வீட்டைக் கட்ட பெர்ஹான்ஸா முடிவு செய்தார். அப்போதுதானே பெண்டிர் ஒருவரையொருவர் அடிக்கடிப் பார்த்துக் கொள்ள முடியும்?—இவ்வாறு தீர்மானம் செய்ததும் முற்றிலும் புதிய மனிதராகி விட்டார் அவர். இதோ இந்த பூமி அவருடைய உடைமையாகவும் உழுநிலமாகவும் ஆகப்போகிறது! யாரால் நம்பமுடியும் இதை?

3

நிலத்துக்குப் பாத்யதை மனுவைப் பதிவு செய்ய மறுநாள் ஸியூக்ஸ் நீர்வீழ்ச்சி ஸ்தலத்துக்கு பெர்ஹான்ஸா சென்றார். அவர் அங்குச் சென்றிருக்கையில், தங்கள் புதிய வீட்டுக்கான பொருள்கள் அனைத்தையும் ஆயத்தம் செய்ய முற்பட்டாள் பெரெட். அப்போதும் கூட இங்கேயே தாங்கள் தங்கப் போவதாக அவள் எண்ண விரும்பவில்லை. ஒருகால் வேனிற் காலத்துக்கு மட்டும் இங்கே தாங்கள் தங்கக் கூடும், அப்புறம் கீழ்த்திசைக்குத் திரும்பிவிடலாம் என்றே நம்பினாள் அவள். இங்கு தனிமை தாங்கமுடியாத அளவு இருந்தது. மறைவ தற்குக்கூட ஓரிடமும் இல்லை என்ற எண்ணமே அவளுக்குத் திரும்பத் திரும்ப ஏற்பட்டது.

பையன்களோ இங்குத் தங்குவதில் மகிழ்ச்சி கண்டனர். வேலையும் அவர்களுக்குப் பிடித்தமாக இருந்தது. அனைத்தையும் ஆயத்தமாக்கப் பாடுபட்டு உழைத்தனர். அவர்கள் வண்டியிலிருந்து எல்லாப் பொருள்களையும் அகற்றி விட்டு அதை ஒரு படுக்கையறையாக மாற்றினர்—வீடுகட்டி முடியும்வரை இவ்வாறு உதவும் அது. ஆக, எல்லாமுமே அப்போது நேர்த்தியாக அமைந்து விட்டன. ஆயினும் பெரெட்டுக்கு இன்னமும் உற்சாகம் ஏற்படவில்லை. தங்கள் நிலத்தில் இருந்த சிறிய குன்றின் உச்சிக்கு அவள் ஒருநாள் சென்று சுற்றிலும் பார்த்தாள். மிக அழகாக இருந்தது அவள் கண்ட காட்சி. தான் அறிந்து நேசித்த சமுத்திரத்தை அது அவளுக்கு நினைவூட்டியது.

ஆனால் இப் பிரதேசமோ சமுத்திரத்திலிருந்து மாறுபட்டது. வெறும் மாயத் தோற்றமே என்று எண்ணுமளவு இங்கு யாவும் அமைதியாக இருந்தன. பட்சியெதுவும் கூவவில்லை. பூச்சி புழுக்கள் கூடக் கிடையாது. இங்கே எதுவும் வாழமுடியாது என்றே அவளுக்குத் தோன்றியது. தன்னருகே களிப்புடன் விளையாடிக் கொண்டிருந்த தன் குழந்தைகளை அவள் பார்த்தாள். மறுபடியும் மக்களைப் பார்க்கக் கூடிய கிழக்குப் பிரதே

சத்துக்குத் திரும்பச் செல்ல வேண்டுமானுல் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய நெடும் பிரயாணத்தைப் பற்றி அவள் நினைத்துப் பார்த்தாள். உம், இங்கு தங்குவதில்லை யானுல் அந்த நீண்ட பயணத்தைப் பற்றிக் கூட அவள் கவலைப் படவில்லை. இந்தத் தனிமை செறிந்த பிர தேசத்தில் தன்னுல் குழந்தையைப் பெற்றெடுக்க இயலாது என்று முடிவு கட்டினுள்.

இருள் சூழச் சூழ அந்த வெட்டவெளியைக் காணப் பொறுக்கவில்லை அவளுக்கு. மல்லாந்து படுத்து வான வெளியைப் பார்க்கலானுள். ஆனுல் அதிலும்கூட இருட்டும், தனிமையும் மண்டியிருந்தன. இவ்வுலகில் தனியொருத்தியாகத் தான் நிற்பதாக அவளுக்குத் தோன்றியது. தன்னைப் போல் எவருக்கும் இத்தனைக் கஷ்டம் ஏற்பட்டதில்லை என்றே எண்ணினுள்.

பலகாலம் முன்பு தாயகமான நார்வேயிலிருந்து தாங்கள் புறப்பட்டது முதல் எவ்வளவு தூரம் தாங்கள் பிரயாணம் செய்திருக்கிறோம் என்பதை நினைத்துப் பார்த்தாள். படகேறிப் பல மாத காலம் அந்த மாபெருங்கடலில் அவர்கள் பிரயாணம் செய்தனர்; எத்தனை காலம் என்று அவளால் எண்ண இயலாத அளவு நெடும் பிரயாணமாக அது அமைந்திருந்தது. அதற்குப் பிறகு முற்றிலும் புதுமையாகத் தென்பட்ட பெரிய தொரு நகரத்தில் அவர்கள் இறங்கினர். ஆனுல், அதோடு அவர்கள் பயணம் முடிந்தபாடில்லை. மேற்குத் திசையில் சென்று கொண்டே யிருந்தனர். ஓரிடத்திலும் தங்காமல் எப்போதும் தாங்கள் குடிபெயர்ந்து கொண்டே யிருப்பதாக அவளுக்குத் தோன்றியது. 'இனிமேல் என்னுல் வரமுடியாது' என்று கூற விரும்பினுள் அவள். ஆயினும் அவர்கள் பயணம் தொடர்ந்து கொண் டிருந்தது. இறுதியில் மின்ன ஸோட்டாவை அடைந் தனர். ஆனுல் சிறிது காலம்தான் அங்கு அவர்கள் தங்கினர். இப்போதோ இங்கே வந்து விட்டனர். இனி மறுபடித் தன் தாயகத்தை அவள் காணப் போவ தில்லை—அந்த நினைப்பு ஏற்பட்டதும், தான் மிக மூப்பு அடைந்து விட்டது போன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது.

தன்னோடு திரும்பி வரும்படிக் குழந்தைகளை மெல்ல அழைத்தாள். மறுநாள் இங்கு மறுபடி வந்து விளையாடலாம் என்றாள். அதன்பின் அவர்கள் எல்லோரும் அந்த இருண்ட இரவில் வண்டியை நோக்கித் திரும்ப நடந்தனர். அவர்களைச் சுற்றிலும் எங்கும் ஒரே அமைதி.

மறுநாள் பெர்ஹான்ஸா திரும்பி வந்து சேர்ந்த போது, பெரெட்டும் பையன்களும் செய்திருந்தவற்றைக் கண்டு மகிழ்ந்தார். அந்த நேர்த்தியான நிலவரத்தினால் அவருக்குக் குதூகலம் மேலிட்டது. ஓயாமல் பேசினார். இனி எது அவரைத் தடுக்க முடியும்! பத்திரமாக வைத்திருப்பதற்காக நிலச் சாஸனத்தை பெரெட்டினிடம் கொடுத்தார். ''விரும்பினதும் எடுத்துக் கொண்டு நல்ல படிச் சாகுபடி செய்வதற்காக இத்தனை நிலத்தை ஒருவன் பெறமுடிவது விந்தையாக இல்லையா? எவ்வளவு அற்புதமான நாடு இது!'' என்று வியந்தார்.

அந்நிலையில் அவரிடம் எதையும் கூறமுடியாது என்பது பெரெட்டுக்குத் தெரியும். தன் திட்டங்கள் பற்றி எண்ணி யெண்ணி அவர் அளவிலா ஆனந்தம் அடைந்திருக்கும் அந்த நேரத்தில் அவள் பேச்சைச் செவி மடக்கவே மாட்டாரே அவர்! ஆயினும் அவளால் சோக உருவாகக் காட்சியளிக்காதிருக்க முடியவில்லை. அவளுக்கு உற்சாக மூட்ட முயற்சி செய்தார் பெர்ஹான்ஸா.

''நேற்று சாஸனத்தைப் பெற்றுக் கொண்டதும் எனக்கு ஒரு அருமையான யோசனை உதித்தது. உடனே பத்து மூட்டை உருளைக் கிழங்கு வாங்கினேன். மற்றவர்களைப் போல முதலில் நாம் வீடு கட்டுவதில் இறங்கப் போவதில்லை. ஆம், நாளைக் காலை அந்த உருளைக் கிழங்குகளை நாம் விதைக்க ஆரம்பிக்கப் போகிறோம். அடுத்த இலையுதிர் பருவத்தில் அது நமக்கு விளைச்சல் கொடுத்துவிடும். பின்னர் கோடைக் காலத்தில் நமக்கு அதிக அவகாசம் இருக்கும் போது வீட்டைக் கட்டப் போகிறேன்.''

அன்றிரவு பெர்ஹான்ஸாவுக்கு இலகுவில் தூக்கம் பிடிக்கவில்லை. தங்கள் எதிர் காலத்துக்கான திட்

டங்கள் அவர் மூளையில் நிரம்பி யிருந்தன. முதலில் தங்கள் வாழ்க்கை கடினமாகத்தான் இருக்கு மெனினும் இறுதியில் எல்லாம் நலலபடியாகி விடுமென அவர் நம்பினர். வெள்ளை, பச்சை வர்ணங்கள் பூசிய பெரிய தொரு வீட்டையும், சிவப்பு, வெள்ளை வர்ணங்கள் அடித்த பண்டசாலையையும் கட்டிவிடலாம். எல்லா வகையிலும் சிறந்து விளங்குவதுதான் தங்களுக்குத் தகுந்தது என்றே எண்ணினர் அவர்!

கலப்பையைக் கேட்டுப் பெறுவதற்காக மறு நாள் அதிகாலையிலேயே ஹான்ஸ் ஓல்ஸாவின் வீட்டுக்கு பெர்ஹான்ஸா சென்று விட்டார். பின்னர், அந்தக் கலப்பையில் தன் காளைகளைப் பூட்டி, மண்ணைப் புரட்டிப் போடத் துவங்கினர். அந்த நேரத்தில் மற்றவர்களெல்லாம் உறங்கிக் கொண்டிருந்தனர். ஆகவே அக்காலை முழுவதும் எவருடைய குறுக்கீடுமின்றி வேலை செய்யலாயினர். வளமான அந்த பூமியில் சிறிதளவு உழுத பின், மண் வெட்டியைக் கொண்டு கொத்தினர். அதே சமயத்தில், தன் வீட்டைக் கட்ட மண் பிண்டங்களையும் வெட்டிப் போட்டார். அவ்வாறு ஒரே சமயத்தில் இரு வேலைகள் ஒருங்கே நடந்தேறின! காலையுணவின்போது மாத்திரம்தான் சிறிது நேரம் தன் வேலையை நிறுத்தினர். பிறகு இரு பையன்களுடனும் மீண்டும் வயலுக்குத் திரும்பி விட்டார். பண்படாத புதிய நிலமாகையால் வேலை கடினமாக இருந்தது. எனினும் சாப்பாட்டு நேரம் வரையில் நிறுத்தாமல் மூவரும் உழைத்தனர். அதற்குள் ஒரு வண்டி நிறைய மண் பிண்டங்கள் சேர்ந்து விட்டன. பல படைச் சால்களும் உழுது முடிந்து விட்டன. காப்பி வேளைக்குள் மற்றொரு வண்டி மண் பிண்டங்களும்,.இரவுணவு நேரத்துக்குள் இன்னொரு வண்டியளவும் குவிந்து விட்டன. ஆகவே, பெர்ஹான்ஸா எதிர்பார்த்ததை விட அதிகமாகவே முதல் நாள் வேலை நடந்து விட்டது!

அவர் அன்று மாலையே வீட்டைக் கட்டத் தொடங்கி விட்டார். ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு பெரெட் கூறினள். ஆனல் 'உழுவதினின்று ஓய்வேயாகும் வீடு கட்டுவது' என்று அவர் பதிலளித்தார். அதோடு, மற்ற

வர்களையும் தனக்கு உதவச் சொன்னார். இருள் கவியு மளவு அவர்கள் வேலை செய்தனர். பிறகு உடனே உறங்கி விட்டனர்.

நாள் தோறும் காலைச் சிற்றுண்டி நேரம் வரை யிலும், இரவுணவுக்குப் பிறகு வீடு கட்டுவதில் முனைவார் பெர்ஹான்ஸா. வேறு வேலை யேதும் இல்லாதபோது குடும்பத்தினர் எல்லோரும் அவருக்கு உதவி செய்தனர். அக்காட்சியைக் கண்ட மற்றக் குடும்பங்களால் தங்கள் கண்களையே நம்பமுடியவில்லை. நாள் முழுவதும், குடும்பம் பூராவும் வயலில் வேலை செய்கிறது; அப்படி யிருந்தும் கூட விரைவாக வீடும் எழுகிறது என்றால் அது நம்ப முடியாத காட்சிதானே ?

தினந்தோறும், நாள் பூராவும் மும்முரமாக வேலை செய்தார் பெர்ஹான்ஸா. தூங்குவதைக் கூட அவர் வெறுத்தார். செய்யப்பட்டு வருகின்ற வேலைகள் ஒவ்வொன்றையும் காணத் துடித்தார். பெரெட்டும் கூடத் தன் பங்குக்கும் அதிகமாகவே வேலை செய்தாள். எவ்வளவு அருமையான மனைவி அவள் !

இறுதியாக எல்லா உழவு வேலைகளையும் முடித்து விட்டார் பெர்ஹான்ஸா. கூரை போடும் அளவுக்கு வீட்டைத் தயாராக்கி விட்டார். மற்றவர்களோ அப் போதுதான் கூரை வேய்ந்து முடித்து, உழ ஆரம்பித் திருந்தனர். ஒரு நாள் பிற்பகல் தங்கள் பெரிய நிலப் பரப்பில்உருளைக்கிழங்குகளை பெர்ஹான்ஸா விதைத்தார்; அத்துடன் முக்கிய வேலைகளில் பெருமளவு பூர்த்தியாகி விட்ட திருப்தி ஏற்பட்டது அவருக்கு.

பெரெட் மிகவும் களைத்துப் போயிருந்தாள்; கடும் உழைப்பின் விளைவாக முதுகு வலி ஏற்பட்டு விட்டது. ஆயினும் மற்றவர்கள் மகிழ்ச்சி மிகுந்து காணப்பட்ட தால், தன் வலியைப் பற்றி வாய் திறக்கவேயில்லை. அதற்கு மாறாக, அவர்களது கடின உழைப்புக்குப் பரிசாக அன்றிரவு அவர்கள் உணவில் கொஞ்சம் வெண்ணெயும், சர்க்கரையும் சேர்த்தாள். பெர்ஹான்ஸாவும் பையன் களும் சந்தோஷமாக இருப்பதைக் காண்பதில்தான் அவளுக்கு இன்பம்.

பெர்ஹான்ஸாவின் வீட்டைக் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப் பட்டனர். மற்றவர்கள் வீடுகளைவிட அது பெரிதாக இருந்தது. அதுமட்டுமன்று—மிகச் சீரான தொரு குறுக்குச் சுவரால் பிரிக்கப்பட்ட இரு அறை களும் அதில் அமைந்திருந்தன. இரண்டு கதவுகள் கூடக் கொண்டதாக இருந்தது அது! கூரை வேய்வதற்குப் போதிய மரக்குச்சிகள் கிடைக்காதென நிச்சயமாகக் கருதினர் டோன் ஸெடன். எனவே, அவ்வீடு அளவுக்கு மிஞ்சியதென பெர்ஹான்ஸாவிடம் எடுத்துரைக்கும் படிக் கூற ஹான்ஸ் ஓல்ஸாவிடம் விரைந்தார் அவர். ஆனல் ஹான்ஸா பெரிய குடும்பம் உடையவராதலால் பெரிய வீடு தேவைதானெனப் பதிலளித்து விட்டார். ஸோலம் சகோதர்களும் அவ்வாறே கூறினர். ஆகவே, டோன் ஸெடன் மட்டுமே அதைப் பற்றிச் சிந்தித்துக் குழம்பும்படியாயிற்று. பகுத்தறிவு உடையவர் பெர் ஹான்ஸா என்பதுதான் மற்றவர்கள் நன்கறிந்த தாயிற்றே!

ஒரே கூரையின்கீழ் வீட்டையும் பண்டசாலை யையும் பெர்ஹான்ஸா கட்ட முற்பட்டதுதான் அவ் விதம் பெரிய வீடாக அது அமைந்ததின் உண்மைக் காரணமாகும். இதர நாடுகளில், பணக்காரர்களிலும் கூட இவ்வாறு வீடு கட்டப் பட்டிருக்கிறது என்பது அவ ருக்குத் தெரியும். இத்தகைய அமைப்பின் பயனக வீடும் பண்டசாலையும் கதகதப்பாக இருப்பதுடன் அவர்களது பசு ரோஸியும் பக்கத்தில் இருக்க ஏதுவாகும். மேலும், இன்னும் பண்டசாலையை அமைக்கப் புகாத அவரது நண்பர்களை அவர் முந்திக் கொண்டவரும் ஆவா ரல்லவா ?

முதலில் பெரெட்டுக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. ஒரே வீட்டில் மனிதரும் மாடுகளும் வசிப்பது அவளால் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை. எனினும் இறுதியில் பக்கத் துணையாக ரோஸி இருப்பது தனக்கு விருப்பமான தாகத்தான் இருக்கும் என்பதைக் கண்டாள். ஆகவே அந்த ஏற்பாட்டை ஒப்புக் கொண்டாள்—தனக்கு வாய்த்த மனைவி எத்தனை அருமையானவள் என்றெண்ணி மற்றுமொரு முறை வியந்தார் பெர்ஹான்ஸா.

4

வீட்டுக்குக் கூரை போடத் தேவையான மரத்தைச் சேகரிக்கத் தருணம் வந்து விட்டது. அருகில் கிடைத்த குச்சிகள் மிக மெலிந்திருந்தன. அவை போதிய அளவும் இல்லை. ஆகவே, முப்பது மைல்களுக்கு அப்பால் இருந்த ஸியூக்ஸ் நதிக்கரைக்குப் போக பெர்ஹான்ஸா முடிவு செய்தார்; அங்கே கனமான மரங்கள் நிறைய இருப்பதாக அவர் கேள்விப் பட்டிருந்தார். மேலும், நார்வேயின் மற்றொரு பகுதியிலிருந்து வந்திருந்த இன்னொரு கோஷ்டி யினரும் அங்கே குடியேறி யிருந்தனர். தான் போக உத்தேசித்த இடத்தை ஹான்ஸ் ஓல்ஸாவிடம் மட்டுமே அவர் தெரிவித்தார்; மற்றவர்களுக்குச் சொல்ல வில்லை. அங்கு போய் வர இரண்டு நாட்களாகிலும் பிடிக்கும்.

தன்னுடன் சிறுவன் ஹான்ஸையும் அழைத்துச் செல்ல அவர் தீர்மானித்தார். ஓலே இட்டுச் செல்வதற் கில்லை; ஏனெனில், பண்ணையை அவன் கவனித்துக் கொண்டாக வேண்டும். ஆனால், ஓலுக்கு இந்த ஏற்பாடு பிடிக்கவில்லை; தந்தையுடன் செல்லவே அவன் விரும் பினான். தவிர, அவனைவிட ஹான்ஸ் சிறியவன்; அப்படி யிருக்க, அச்சிறுவனை அழைத்துச் செல்வது நியாயமாகுமா! இருந்தாலும் அவன் என்ன செய்ய முடியும்? ஹான்ஸோ வெனில் தான் போகப் போவதைப் பெரிய விஷயமாகவும், தன்னைப் பெரிய மனிதனாகவும் நினைத்துப் பிரயாண ஏற் பாடுகளுக்குத் தன்னாலியன்ற உதவியைச் செய்தான்.

பெர்ஹான்ஸா சென்றுதானாக வேண்டும் என்பது தெரிந்திருந்த போதிலும் மறுபடியும் தனியாக இருக்க பெரெட்டுக்கு இஷ்டமில்லை. ஹான்ஸ் ஓல்ஸாவின் குடும் பத்தினிடம் போய்த் தங்கியிருக்கும்படி பெர்ஹான்ஸா அவளிடம் கூறினார். ஆனால், அவளுக்குத் தான் அங்கு போகமாட்டோம் என்பது தெரியும். அதைவிடத் தனியாகக் காத்திருக்கவே அவள் விரும்பினாள்.

எண்ணியதற்கு அதிகமாகவே அவள் காத்திருக்க வேண்டியதாகி விட்டது. அதற்குள் திரும்ப மாட்டார்கள் என்பதை அறிந்திருந்தும் முதல் நாளிரவே அவர்களை

எதிர்பார்த்தாள். மறுநாளிரவும் எதிர் பார்த்தாள். மூன்றுவது தினமும் பிறந்துவிட்டது; பெர்ஹான்ஸா இன்னமும் திரும்பி வரவில்லை. ஹான்ஸ் ஒல்ஸானை அவள் தேடிச் சென்றுள். கவலைப்பட வேண்டாம் என்றுர் அவர். மாரிக்காலத்துக்குத் தேவையான மரத்தைச் சேகரிக்க பெர்ஹான்ஸா தங்கியிருக்கக் கூடுமென அவர் சமாதானம் கூறினுர். 'அட, அதுபற்றி அதற்கு முன் அவள் நினைக்கவேயில்லையே! மழைக் காலத்துக்கு மரம் தேவைதானே?'

அன்று பிற்பகல் வெகுநேரம் கழித்து வீடு திரும் பினுர் பெர்ஹான்ஸா. மாடுகள் மிகச் சிரமப்பட்டே இழுக்குமளவு வண்டியில் மரங்கள் நிறைந்திருந்தன. அவர்களுடைய எல்லாத் தேவைகளுக்கும் போதுமான மரங்களைக் கொண்டு வந்து விட்டார். அவற்றேடு, தங்கள் வீட்டைச் சுற்றி நடுவதற்காக ஆறு பழமரங்களையும் பெர்ஹான்ஸா கொண்டு வந்திருந்தார். வண்டியின் பின் புறத்திலோ வியப்பூட்டும் வஸ்துக்கள் அடங்கிய இரு பெரிய மூட்டைகள் இருந்தன. ஒன்றில் மீன்கள், மற்றெரு மூட்டையில் கன்றுச் சடலம் ஒன்று இருப்ப தாகத் தோன்றியது. எங்கிருந்து அந்தக் கன்று கிடைத் திருக்கக் கூடும்?—அதற்கு மேலும் சிறுவன் ஹான்ஸினுல் வாளா விருக்க முடியவில்லை. "அப்பா கொன்ற துஷ்ட மிருகம் அது!" என்று அவன் கூவினுன்.

அன்றிரவுச் சாப்பாட்டுக்குப் பழைய முறையில் பக்குவப் படுத்தப்பட்ட மீன் அவர்களுக்குக் கிடைத்தது. இதை யெல்லாம் கண்டு பெர்ஹான்ஸாவின் நண்பர்கள் பரபரப்பு அடைந்தனர்; அவர்களும் ஸியூக்ஸ் நதிக்குச் செல்லத் துடித்தனர். ஆனுல், அதற்குப் போதிய அவகா சம்தான் அவர்களுக்குக் கிடைக்காது போலிருந்தது. பெர் ஹான்ஸாவின் வீட்டைச் சுற்றி மரங்கள் வளர ஆரம் பித்தன; அந்தக் குடியேற்றப் பிரதேசத்தில் வேறெங்குமே அவ்வாறில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, நார்வேயின் பிறிதொரு பகுதியிலிருந்து வந்து ஸியூக்ஸ் நதிக்கரையில் குடியேறி யிருந்த விவசாயிகளின் நட்பு பெர்ஹான்ஸாவுக்குக்

கிடைத்தது. இந்தப் புதிய நாட்டில் அவர்களெல்லாம் ஒருவருக் கொருவர் உதவிக் கொள்ளலா மல்லவா ?

5

ரைவசம் இருந்த உணவு வகைகளெல்லாம் சிறுகச் சிறுகத் தீர்ந்து வந்தன. அனைவரையும் விட அதிகம் வைத்திருந்த ஹான்ஸ் ஒல்ஸா கூடக் கவலைப் படலானார். மேற்கொண்டு வாங்கிச் சேமித்து வைக்க வேண்டுமானால் நகரத்துக்குச் சென்றாக வேண்டும். யாரார் போவது, எவை யெவற்றை வாங்குவது என்பது பற்றிப் பேச ஆடவர் அனைவரும் கூடினர். உணவு மட்டு மன்றி பண்ணைக்குத் தேவையான சாமான்களும், சில ஆடைகளும் கூட அவர்களுக்கு வேண்டியிருந்தன.

நகரமோ தொலை தூரத்தில் இருந்தது. அதை அடைய இரண்டு நாட்களாகிலும் பிரயாணம் செய்தாக வேண்டும். திரும்பிவர மேலும் இரண்டுநாட்கள் பிடிக்கும். பெண்டிரையும் பாலரையும் பார்த்துக் கொள்ளக் குடியேற்றத்தில் யாராவது சில ஆண் மக்கள் தங்கி யிருக்க வேண்டு மென அவர்கள் தீர்மானித்தனர். வெளிப் படையாக ஒப்புக் கொள்ளாவிடினும் கூடச் சில சமயங் களில் அவர்கள் அனைவரும் அஞ்சாமலில்லை. ஏனெனில், புதிய நாடு முற்றிலும் மாறுபட்ட ஒரு விசித்திர அமைப் பாக இருந்தது. சென்ற வாரம்தான் ஒரு புயல் காற்று ஹான்ஸ் ஒல்ஸாவின் கூடாரத்தை—அவரது மனைவியோடு—அடித்துச் சென்று விட்டது. இப்போது அவள் குண மடைந்து விட்ட போதிலும் புயல் என்றாலே பயப்படு கிறாள். மற்றவர்கள் இந்தியரை நினைத்து அஞ்சுகின்றனர். தான் சந்தித்த மற்ற நார்வேக்காரர்களிட மிருந்து இந்தியர்கள் பற்றிய பல விஷயங்களை அறிந்து வந்திருந் தார் பெர்ஹான்ஸா. அந்த இந்தியர்களின் வாசஸ்தலம் அதிக தூரத்திலில்லை. அங்கிருந்து வருஷா வருஷம் மேற்குத் திசை நோக்கி அவர்கள் செல்வராம். அவ்வாறு செல்கையில், தங்கள் பிரதேசத்தின் வழியாகத்தான் அவர்கள் போவார்களென பெர்ஹான்ஸா கருதினார்.

எனினும் அதற்காக அவர் கவலைப் பட்டுக் கலங்கி விட வில்லை.

இறுதியில் பெர்ஹான்ஸாவையும் ஸாம்ஸோலத்தையும் அங்கு விட்டுச் செல்வதென இதர ஆண்கள் தீர்மானித்தனர். மற்ற மூன்று ஆடவரிடமும் மூன்று குதிரைகள் இருந்தன. அந்தக் குதிரைகளையும் மூன்று வண்டிகளையும் கொண்டு தாங்கள் வாங்குனவற்றையெல்லாம் எடுத்து வந்து விடலாமென அவர்கள் எண்ணினர். அம்முடிவு பெர்ஹான்ஸாவுக்கு அறவே பிடிக்க வில்லை. அவர்களுடன் செல்ல வாய்விட்டுக் கூற இயன்றதைவிட அதிகமாகவே அவர் விரும்பினார். மற்றவர்கள் தன்னைப் பற்றி நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்றும் நினைத்தார். அவர்கள் புறப்பட்ட தினத்தன்று அதிகாலையிலேயே அவர் எழுந்து, தன் மாடுகளைக் கொண்டு ஒன்றரை ஏக்கரா நிலத்தை உழுதார்—அதுதான் அது வரை எவரும் உழமுடிந்த அளவு. அது அவருக்குச் சற்றே சாந்தி அளித்தது.

பெர்ஹான்ஸா பாடுபட்டு உழைத்துக் கொண்டேயிருந்தார். உழவு வேலையில் மற்றவர்களைவிடத் தாம் முன்னேறியிருந்தது அவருக்கு மனத்திருப்தி அளித்தது. மறுநாள் வயலிலிருந்து மிகுந்த மகிழ்ச்சியிடன் வீடு திரும்பினார். வழியில், சிறுவன் ஹான்ஸ் தன்னை நோக்கி வேகமாக ஓடிவரக் கண்டார். ''யாரோ வருகிறார்கள்!'' என்று கூவினான் அவன். முதலில் பெர்ஹான்ஸா அவன் கூற்றை நம்பவில்லை. ஆனால் அப்புறம் திரும்பியபோது, பெரியதொரு கூட்டம் மெதுவாக வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். ''அவர்கள் இந்தியரென அம்மா நினைக்கிறாள்'' என்று சிறுவன் சொன்னான்.

அது கேட்டு துரிதமாக வீட்டை நோக்கி நடந்தார் பெர்ஹான்ஸா. தங்களை அம்மக்கள் நெருங்கி வருவதைக் கையில் அன்னாவுடன் பெரெட் கவனித்துக்கொண்டிருப்பதை அவர் கண்டார். அவள் மிகவும் கலங்கியிருப்பதாகக் காணப்பட்டாள். இந்தியர்கள் தன்னைக் கொன்று விடுவர் என்றே அவள் எண்ணினாள்.

வீட்டினுள் திரும்பிச் சென்று சமையல் வேலையைக் கவனிக்கும்படி அவளிடம் பெர்ஹான்ஸா கூறினார்.

செய்தியை ஸாம் ஸோலமிடம் சென்று சொல்லுமாறு ஹான்ஸை ஏவினர். தேவையாயிருந்தால் உபயோகிப்ப தற்காகத் தன் துப்பாக்கியை எடுத்து வரும்படி ஓலேயும் அனுப்பினர். இந்தியர்கள் அருகில் வருவதைக் கண் காணித்தவாறே கூரை வேய்வதில் முனேயலானர். சம வெளியில் சுற்றித் திரியும் குடும்பங்களின் கும்பல்தான் அது என்பதை அதன் பின்பே அவர் அறிந்தார். அவர்கள் அவரைக் கொல்லமாட்டார்கள். ஆகவே, வாய் விட்டுச் சிரித்த வண்ணம் துப்பாக்கியைத் திரும்பக் கொண்டுபோய் வைத்துவிடும்படி ஓலுக்கு உத்தர விட்டார். ''இந்தியர்கள் வருவதாயும், இஷ்டமிருந்தால் இங்கு வந்து அவர்களேப் பார்க்கும்படியும் ஸாற்றிஞவிடம் சொல்லு. ஆனல் அவளேப் பயமுறுத்திவிடாதே!'' என்று அவர் கூறியதும் ஓல் ஓட்டம் பிடித்தான்.

அச்சத்தினல் முகம் வெளிறியவராய்க் கையில் துப்பாக்கியுடன் ஸாம்ஸோலம் விரைந்தோடி வந்தார். அது கண்டு பெர்ஹான்ஸா சிரித்தார்; துப்பாக்கியை அப்பால் போட்டுவிட்டுக் கூரை வேய்வதில் தனக்கு உதவும்படி அவரிடம் கூறினர். இந்தியர்களேக் கண்டு விட்ட க்ஜெர்ஸ்டியும் தன் பசுவை இழுத்துக்கொண்டு அங்கே வந்து சேர்ந்தாள். ஸாற்றிஞலோ தன் பசுவை மறந்துவிட்டாள்; வீட்டுக்குச் சற்று அப்பால், சமவெளி யிலேயே இருந்தது அது.

பயத்தினலும் தனிமையினலும் நடுங்கியவர்களாய்ச் சிறு கும்பலாகப் பெண்டிர் கூடி நின்றனர். மற்றவர் களுக்குத் தெம்பூட்ட அவர்கள் ஒவ்வொருவரும் முயன்றனர். ஆனல் பெரெட் மட்டும் வாளாவிருந்தாள். தான் கொல்லப்படக்கூடுமென்றே அவள் அப்போதும் கருதினள். அந்த வெட்ட வெளியில் எந்தத் தீங்கு நேரினும் அவளுக்கு அது ஆச்சரியமாயிராது. ஆனல் பெர்ஹான்ஸாவோ அனேவரையும் வேலேக்குத் திரும்பச் சொன்னர். 'அவருக்கு வேண்டுவது சாப்பாடு! அது கிடைத்தால் போதும், வேறு கவலேயில்லே' என அவள் கொதித்தாள்.

இந்தியர்கள் மேன்மேலும் நெருங்கி வருவதை அவர்கள் அனேவரும் தொடர்ந்து கவனித்தனர்.

பெர்ஹான்ஸாவின் வீடு இருந்த குன்றின் மறுபுறத்தில் அந்த இந்தியர்கள் வட்டமாக நின்றனர். அதன் பின், புல் மேய்வதற்காகத் தங்கள் குதிரைகளை அவிழ்த்து விட்டனர்—சுத்த அப்பாவிகள் அவர்கள்!

ஆயினும் சிறிது நேரத்திற்குப் பிறகு அமைதியாக மேய்ந்துகொண்டிருந்த ஸாற்றினுவின் பசு உரக்கக் குரலெழுப்பிக் கொண்டு திடுமென ஓடத் துவங்கியது. அதைத் தொடர்ந்து இதர பசுக்களும் இந்தியர்கள் நின்ற இடத்தை நோக்கி ஓடின. எந்த வண்டியைக் கண்டாலும் அதனுடன் சேர ஓடும் வகையில் மேற்குப் பிரதேசப் பிரயாணங்களில் பழக்கப்பட்டிருந்தன அப் பசுக்கள். இம்முறை அவற்றைக் கட்டிப்போடக் குடி யேற்றக்காரர்கள் மறந்துவிட்டனர். அதனுல் வந்தது வினை! அது கண்டு பெண்மணிகள் அழவாரம்பித்து விட்டனர். இனி அவர்களுக்குப் பாலே கிடைக்காது அல்லவா? ஆயினும் பெரெட் மட்டும் இந்தியர் முகாமை நோக்கி நடக்கத் தொடங்கினுள். பசுக்களை மீட்க ஆடவர் செல்லாவிடில் தானுவது செல்லவேண்டுமெனத் தீர்மா னித்தாள் அவள்.

சற்றுப் பொறுத்திருக்கும்படியும், சாப்பாட்டிற்குப் பிறகு ஆடவர் அவற்றை மீட்பரென்றும் அவளிடம் பெர்ஹான்ஸா கூறினுர். சாம்பிடும்போது, இந்தியரைப் பற்றிக் கதைகதையாகச் சொன்னுர் அவர். எல்லோரை யும் பயமுறுத்தப் பார்க்கிருரென அவரை பெரெட் கடிந்துகொள்ளுமளவு இருந்தன அக்கதைகள். மற்ற வர்கள் முன்னிலையில் அவரை அவள் அவமானப்படுத்தி யது அதுதான் முதல் தடவை. ஆகவே பெர்ஹான்ஸா வின் மனம் மிகவும் நொந்துவிட்டது. ஆயினும் அதை அவர் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை.

கடைசியில் அவரே இந்தியர் முகாமுக்குச் செல்லத் தயாரானுர். அவரோடு அங்குப் போக சிறுவன் ஹான்ஸும் மிகவும் விரும்பினுன். ஆனுல் அவனது அன்னை, "போகாதே நில்!" என்று கூவினுள். இருப்பினும் அந்தச் சிறுவனின் கையைப் பிடித்துக்கொண்டு அவனையும் அங்கு அழைத்துச் சென்ருர் பெர்ஹான்ஸா.

இந்தியரை அவர் என்ன செய்யப் போகிறுர் என்று அறியத் துடித்தான் சிறுவன். ஆனால் அவரோ, மற்ற வர்கள் முன்னிலையில் தம்மை பெரெட் கடிந்து கொண்டது பற்றியே சிந்தித்தவராய் வாய் திறக்கவில்லே. இந்தியர் முகாமை அவர்கள் நெருங்கலாயினர். அங்கே சிறு குழந்தைகள் ஓடி விளையாடிக்கொண்டிருந்தன. பெண்டிரும் சுறுசுறுப்பாக வேலையில் முனைந்திருந்தனர். அமைதி நிலவியிருந்தது. ஒரு கணப்பைச் சுற்றிச் சில ஆண் பிள்ளைகள் அமர்ந்து மௌனமாகப் புகை பிடித்துக் கொண்டிருந்தனர்.

பெர்ஹான்ஸாவுக்கு அரை குறையாக ஆங்கிலம் தெரியும். அம்மொழியில் இந்தியர்களுடன் அவர் பேசத் தொடங்கினர். அவர்களிலொருவன் அவருக்குப் பதில் கூற முன் வந்தான். ஆங்கிலத்தில்தான் பேசப் புகுந் தான் அவன். ஆனல் அவன் பேச்சு பெர்ஹான்ஸாவுக்குப் புரியவில்லே. சிறுவன் ஹான்ஸ் அதில் அவருக்கு உதவ முற்பட்டான். இவ்வகையில், பெர்ஹான்ஸா எங்கு வசிக்கிறுர் என்பதை அந்த இந்தியர்கள் அறிந்து கொண்டனர். அதற்கு மேல் பேச விஷயமேதுமில்லே. வீட்டுக்குத் திருப்பி அழைத்துச் செல்லப் படக் காத்துக் கிடந்தன நான்கு பசுக்களும். ஆனல் அவ்வளவு சீக்கிரத்தில் அங்கிருந்து கிளம்பிவிட பெர்ஹான்ஸாவுக்கு மனமில்லே. அந்த அரிய சந்தர்ப்பத்தை அவர் அனுப வித்து மகிழ்ந்தார். தாமும் புகை குடிக்க விரும்பினர். புகையிலேயை அவர் பார்த்தே பல வாரங்களாகியிருந்தன. இறுதியில், தமக்கும் அதில் சிறிது தேவையென ஒரு இந்தியனுக்குத் தெரிவித்தார். தன் குழாயை நிரப்பியதும் அவர்களுடன் கணப்புக்கருகில் உட்கார்ந்து இயன்றவரை இன்பமாகக் காலம் கழித்தார்.

அதன் பிறகு அவர் புறப்படச் சித்தமாகிவிட்டார். ஆனல் அதன் பொருட்டுத் திரும்பியபோது கணப்புக்கு மிக அண்மையில் ஒரு இந்தியன் கம்பளியைப் போர்த்துக் கொண்டு படுத்திருப்பதைப் பார்த்தார். அவன் நோயும், மிகுந்த வேதனேயும் அடைந்திருப்பவனுகக் காணப் பட்டான். உடனே அவர், "ஏ ஹான்ஸ், இங்கே வா! இந்த மனிதனுக்கு என்ன கோளாறு என்று கண்டறிந்து

சொல்லு'' எனக் கட்டளையிட்டார். சிறுவன் அந்த நோயாளி இந்தியனை விசாரித்தபின், ''தன் கையில் காயம் பட்டிருப்பதாகக் கூறுகிறன் இவன்'' என்று தெரிவித்தான்.

அந்தக் கையைப் பார்க்க பெர்ஹான்ஸா விரும்பினர். உடனே கட்டுகள் அவிழ்க்கப்பட்டு அந்தக் கை காண்பிக்கப்பட்டது. முன்னங்கை, மணிக்கட்டு ஆகியவை மூட்டுமன்றி புஜத்திலும் அரைப் பகுதி மிகவும் நலிந்து, சிவந்து காணப்பட்டது. கையில் பெரிய வெட்டு விழுந்திருந்தது. ரத்தத்தில் விஷமேறி விட்டதாகவே பெர்ஹான்ஸாவுக்குத் தோன்றியது. தன் பையன் பக்கம் அவர் திரும்பி, ''சிறிது வெந்நீரும் சுத்தமான வெள்ளைத் துணியும் வேண்டும் என்று அவர்களிடம் சொல்லு'' என்றார். ஆனல் அந்தத் துணி எதற்கு என்பது இந்தியர்களுக்குப் புரியவில்லை. ஆகவே மீண்டும் ஹான்ஸை நோக்கிக் கூறினர்: ''சரி, உன் தாயாரைத் தருவித்துத்தாளுக வேண்டும். என்ன செய்யவேண்டும் என்பதை அவள் அறிவாள். வெள்ளைத் துணி, உப்பு, மிளகு ஆகியவற்றுடன் ஹான்ஸ் ஓல்ஸாவின் புட்டியிலிருந்து சிறிதளவு விஸ்கியையும் அவளை எடுத்துவரச் சொல், உம், ஓடு!'' என்றார்.

விரைவில் ஹான்ஸுடன் பெரெட் வந்து சேர்ந்தாள். ஆனல் அவளிடம் களிப்பைக் காணவில்லை. பெர்ஹான்ஸா விடம் இன்னமும் அவளுக்குக் கோபம் குறையவில்லை. அவர் தன்னேடு வீடு திரும்பவேண்டுமென்றே விரும்பினள். ஆனல் அவள் பேச்சை அவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவள் கொண்டு வந்த குடுவையை அடுப்பின் மீது வைத்து அதில் வெந்நீரை நிரப்பிச் சிறிது உப்பையும் போட்டார். பிறகு ஒரு சிறு கோப்பையில் கொஞ்சம் மிளகைப் போட்டு அதில் விஸ்கியை ஊற்றினர். அந்த இந்தியனிடம் அதை அவர் கொடுத்தபோது முதலில் அவனுடைய முகம் சுணங்கிய போதிலும் முழுவதையும் குடித்துவிட்டான்.

பின்னர் அந்த வெட்டுக்காயத்தின் மீது சிறிது விஸ்கியை பெரெட் தடவ, அதை நன்கு தேய்த்து

உட்செலுத்தினுர் பெர்ஹான்ஸா. அவள் மிகவும் பயந்து விட்டாள். எனினும் வாயைத் திறக்கவில்லை. அதை யடுத்து அந்தத் துணியின் மீது வெந்நீரை பெர்ஹான்ஸா ஊற்றினுர். பிறகு அதை அந்த இந்தியனின் கையைச் சுற்றிக் கட்டினுர். அதனுல் மிகுந்த வலியுண்டாகி அவன் துடித்தான்.

''சரி, நீங்கள் இருவரும் இனி வீட்டுக்குச் செல்ல லாம். நான் இங்கேயே இரவு பூராவும் தங்கி இவனைக் கவனித்துக்கொள்ள வேண்டும். அஞ்சுவதற்கு இடமில்லை என்பதை நீங்களே அறிவீர்கள். வீடு திரும்பும்போது பசுக்களையும் கொண்டு வருகிறேன்'' என்று தன் மனைவி, மகனிடம் பெர்ஹான்ஸா கூறினுர்.

பிறகு அந்த இந்தியர் முகாமில் ஆழ்ந்த அமைதி குடிகொண்டது. வீக்கம் வடியும்வரை அந்த நோயா ளியையே கவனித்துக்கொண்டிருந்தார் பெர்ஹான்ஸா. அவர் மேன்மேலும் களைப்படைந்து வந்தார். அந்தப் புல் வெளியில் யாரோ மெதுவாக நடக்கும் ஓசையைத் திடுமெனக் கேட்டார். யாராக இருக்கலாம் அது? இந்தியர்கள் தான் அமைதியாகத் துயில்கின்றனரே!—நிமிர்ந்து பார்த்தார். பெரெட்தான் அங்கே நின்றிருந் தாள்! வெகுநேரம் அழுதுகொண்டிருந்தாற்போல அவள் காணப்பட்டாள். அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்தாள். அவளிடம் பெர்ஹான்ஸாவுக்கு அனுதாபம் மேலிட்டது. அவளை அணைத்துக்கொண்டார். பேசவே முடியாத அளவு அழுதாள் அவள். ஆயினும் இருவரும் ஒன்று சேர்ந் தாவது இருக்கின்றனரே, அதுவே போதுமே! அந்த நோயாளி இந்தியன் குணமடைந்து வருவதாக அவளிடம் பெர்ஹான்ஸா கூறினுர்.

அப்போது, போர்த்துக் கொண்டு உறங்குவதற்காக அவர்களிடம் சில கனமான கம்பளிகளை மற்ெருரு இந் தியன் கொண்டுவந்து கொடுத்தான். இருவரும் மிகவும் களைத்திருந்தபடியால் சற்றும் ஆடாமல், அசையாமல் மீதி இரவு முழுவதும் நன்ருகத் தூங்கினர்.

மற்ெருரு பகல் பொழுதும் இரவும் தங்கியிருந்தபின் அங்கிருந்து அந்த இந்தியர்கள் சென்றுவிட்டனர். அவர்கள் இருந்தவரையில் அடிக்கடி அம்முகாமுக்குச்

சென்றுவந்தார் பெர்ஹான்ஸா. அவருடைய பையன்களும் அவ்வாறே போய்வந்தனர். ஆனால் மற்றப் பெண்மணிகளும் ஸாம் ஸோலமும் தத்தம் வீடுகளிலேயே தங்கியிருந்தனர். அவர்களுடைய வீடுகளுக்கருகே இந்தியர்கள் வரவேயில்லை.

அவர்கள் புறப்படத் தயாராகிவிட்டனர். அதற்காக அவர்களுடைய வண்டிகள் வரிசையாக நிறுத்தப்பட்டிருப்பதை பெர்ஹான்ஸா கண்டார். பின்னர், ஜேணம் போடப்பட்ட குதிரை யொன்றைக் கையில் பிடித்தபடி அந்த நோயாளி இந்தியன் தங்களை நோக்கி வருவதையும் அவர் பார்த்தார். ''விடை பெற்றுக் கொள்ளத்தான் இவன் வருகிறான்'' என்று நினைத்து, அவனைச் சந்திக்க முன் சென்றார். அவன் அவரையே நோக்கி முன் வந்து குதிரையின் கடிவாளத்தை அவரிடம் கொடுத்தான். அவன் அப்போது கூறிய வார்த்தைகள் பெர்ஹான்ஸாவுக்கு விளங்கவில்லை.

''இந்தக் குதிரை உங்களுக்குத்தான்!'' என்று சிறுவன் ஹான்ஸ் கத்தினான். அதை பெர்ஹான்ஸாவினால் நம்பமுடியவில்லை. குதிரையைத் திருப்பிக் கொடுத்துவிட விரும்பினார். ஆனால் மேற்கொண்டு ஏதும் பேசாமல் தன் வண்டிக்குச் சென்றுவிட்டான் அந்த இந்தியன். பெர்ஹான்ஸாவும் அவரது குடும்பத்தினரும் திகைத்து நின்றனர். சிறுவன் ஹான்ஸ் மட்டும் சந்தோஷத்தினால் துள்ளிக் குதித்தான்.

6

நகரத்துக்குச் சென்றிருந்தவர்கள் மறுநாள் திரும்பிவிட்டனர். சொல்வதற்கு அவர்களிடமும் நிறையச் செய்திகள் இருந்தன. முதலில் பெர்ஹான்ஸாவின் வீட்டுக்குத்தான் ஹான்ஸ் ஒல்ஸா வந்தார். அவருக்காகப் பல மூட்டைகள் நிறையத் தாம் வாங்கி வந்திருந்த பொருள்களையும், மற்றும் கலப்பை, மண்வாரி முதலியவற்றையும் அவர் எடுத்துவந்தார். எல்லோருமே ஆச்சரியமான பண்டங்களை வாங்கி வந்திருந்தனர்.

அன்ற றிவு ஹான்ஸ் ஓல்ஸாவின் வீட்டில் அனைவருக்கும் விருந்து நடந்தது. நகரத்தைப் பற்றியும், அங்கே அவர்கள் கண்ட மக்களைப் பற்றியும் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள பெர்ஹான்ஸா ஆசைப்பட்டார். அந்தச் சமயத்தில் பெர்ஹான்ஸா இந்தியர்களிடையே தான் சென்று வந்ததைப்பற்றி விவரித்ததை எல்லோரும் ஆவலுடன் செவி மடுத்தனர். அது குறித்துப் பல கேள்விகளைக் கேட்கத் துவங்கினர். அவர்கள் குழுவிலிருக்கக் கூடிய விசேஷங்களைவிட அது சுவையாகவன்றோ இருந்தது! ஸாற்றினாவின் புதிய சாமான்களைப் பார்ப்பதற்குப் பெண்டிரெல்லோரும் வீட்டுக்குள் சென்று விட்டனர். தொடர்ந்து பேசும் பொருட்டுப் பண்டசாலையிலேயே ஆடவர் அனைவரும் தங்கினர். பேசுவதோடு நிற்காமல் குடிக்கவும் முற்பட்டனர்—ஆனால் அதைத் தம் மனைவிமார் அறிய அவர்கள் விரும்பவில்லை!

கடைசியில், ஒரு புட்டியுடனும் சிறியதொரு கோப்பையுடனும் அந்தப் பண்டசாலைக்கு ஸாற்றினா வந்தாள். "சரியான சமயம் இது. குடித்து மகிழுங்கள்," என்றாள் அவள். தங்களுக்கு அது வேண்டாமென்பது போல ஆடவர் நடித்தபோதிலும் அவளது புட்டியிலிருந்து ஆளுக்குக் கொஞ்சம் குடித்தனர். பிறகு, பள்ளிப் பிள்ளைகளைப்போல் உரக்கச் சிரித்தவாறே பண்டசாலையினுள் திரும்பச் சென்றனர்.

அதையடுத்து, அவர்கள் ஆனந்தமாயிருந்த அவ்வேளையில் அசந்தர்ப்பமாக ஒன்று நிகழ்ந்தது. க்ஜெர்ஸ்டி தான் அதை முதலில் கவனித்தாள். வயலில் இருந்த ஆண்களுக்குப் பகலுணவை அவள் எடுத்துச் சென்று கொண்டிருந்தாள். அப்போது, தன் பசுவைச் சமவெளியில் எங்கிலும் காணோம் என்பதைக் கண்டாள். திரும்பத் திரும்ப உற்றுப் பார்த்தாள். எங்குமே காணப்படவில்லை அது. நேராக ஸாற்றினாவிடம் அவள் ஓடி, தன் பசு எங்கிருக்கிறது என்பது அவளுக்குத் தெரியுமாவென வினவினாள். சந்தேகமில்லை, அவள் பசு மட்டுமன்றி எல்லாப் பசுக்களையுமே காணோம்! அவை அனைத்தும் எங்காவது ஓடியிருக்க வேண்டும் என்று அலறினாள்

க்ஜெர்ஸ்டி. ''இவ்விஷயத்தை உடனே நம் கணவன் மாரிடம் தெரிவிக்க வேண்டும்'' என்ருள் ஸாற்றிஜு.

தன் கணவனைத் தேடி அவள் சென்ருள். அப்போது ஹான்ஸ் ஓல்ஸா உழுதுகொண்டிருந்தார். அவருடைய புதிய கலப்பை மிகச் சீராக இயங்கியபடியால் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்தார். எனவே, பெண்டிர் கலங்கிய தேன் என்பது அவருக்குப் பிடிபடவில்லை. ''பால் கறக்கும் நேரத்துக்கு அவை வீடு திரும்பிவிடும்'' என்று அவர் ஆறுதல் கூறினர். ஆனல் மனைவியின் மிதமிஞ்சிய கலக் கத்தைக் கண்ணுற்றதும் அவரும் சுற்றுமுற்றும் பார்த் தார். பசுக்கள் எதுவுமே புலப்படாது போகவே அவரும் கவலைப்படத் தொடங்கிவிட்டார். பெர்ஹான்ஸாவின் வீட்டுக்கு விரைந்தார். அங்கோ பசுக்கள் காணமற் போனதே இன்னும் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை!

இந்தச் செய்தியறிந்ததும், மேய்வதற்கு அப்பசுக் களுக்குப் பிடித்தமான இடமான அருவிக் கரைக்கு ஓலே அனுப்பினர் பெர்ஹான்ஸா. ''அங்கு அவற்றைக் காண வில்லையேல் உடனே திரும்பி வந்துவிடு. இதற்கு நாம் ஏதாவது செய்தாகவேண்டும்'' என்ருர் அவர்.

எல்லோரும் சமவெளியை ஊன்றிக் கவனித்தவாறு இருந்தனர். ஆயினும் பொழுது சாய்ந்த பிறகும்கூட மாடுகள் திரும்பி வரவில்லை. அவை அறவே காணமற் போய்விட்டன. எப்படி என்பது எவருக்கும் விளங்க வில்லை. வெகு விந்தையாகத் தோன்றியது அது. பெர்ஹான்ஸாவின் வீட்டில் ரோஸிக்காக அன்னுமேரி அழுது அரற்றினள். அவளைப் போலவே வருத்தம் மேலிட சிறுவன் ஹான்ஷும் சாப்பிட மறுத்துவிட்டான். பெரிய மனிதனைப்போல் நடந்து கொள்ளத்தான் ஓல் முயற்சி செய்தான். எனினும் சற்றைக்கெல்லாம் அவனும் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, தனித்திருக்கும் பொருட்டு வெளியே சென்று விட்டான். ரோஸி இல்லாதது அவர்கள் அனைவருக்கும் பெருநஷ்டமாகத் தோன்றியது.

மேற் கொண்டு என்ன செய்வது என்பதைத் தீர் மானிப்பதற்காக சாப்பாட்டுக்குப் பிறகு எல்லோரும் பெர்ஹான்ஸாவின் வீட்டுக்குச் சென்றனர். இரவு

இருண்டு கொண்டு வந்தது. பெரிய காற்று வேறு அடிக்க ஆரம்பித்தது. அதில் அலைபட்டு உயர்ந்த புற்கள் முன்னும் பின்னும் தழைந்தாடின. விசித்திரமானதொரு இரவுப் பொழுது அது. யாரும் வாய் திறக்கவில்லை. ஏதோவொரு அசாதாரண முறையில் பசுக்கள் கொண்டு செல்லப்பட்டு விட்டன என்றே எல்லோரும் எண்ணினர். ஆனால் அதை வெளிப்படையாகச் சொல்ல எவரும் விரும்பவில்லை.

இறுதியில் ஸாம்ஸோலம் சொன்னார் : ''இந்தியர்கள் தான் அவற்றைக் கொண்டு சென்றிருக்க வேண்டும். பசுக்களின் பொருட்டு அவர்கள் திரும்பிவந்திருக்கிறார்கள். நான் கூறுவது தான் சரி என்பதை நீங்கள் திடமாக நம்பலாம்.''

சிந்திக்கச் சிந்திக்க அதுவே சரியாயிருக்கலாம் என்று மற்றவர்களுக்குத் தோன்றியது. தாங்கள் அதைப்பற்றி முன்னதாக ஏன் நினைத்துப் பார்க்கவில்லை என்று அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். அப்படி இந்தியர்கள் அப்பசுக் களைக் கொண்டு சென்றிருந்தால், அவர்களுடன் நெருங்கி உறவாடியவராகையால் பெர்ஹான்ஸா தான் போய் அவற்றைத் தேடிப்பிடித்துவர வேண்டுமென அவர்கள் தீர்மானித்தனர். அம்முடிவைக் கேட்டபோது பெர் ஹான்ஸா மிகவும் வெகுண்டார். அவர்கள் அனைவரும் முட்டாள்கள் என்றே அவர் நினைத்தார். அவ்வாறு வாய் விட்டுக் கூறவிருந்த தருணத்தில் நல்ல வேளையாக அங் கிருந்து அவர் புறப்பட்டு விட்டார்.

ஆனால் வீட்டிலோ, நிலைமை முன்போலவே மோச மாக இருந்தது. யாருக்கும் உறக்கம் பிடிக்கவில்லை. சிறுவன் ஹான்ஸ் கதறிக் கதறி அழுதான். இறுதியில், அதைத் தாங்க மாட்டாமல் பெர்ஹான்ஸா எழுந்து, ''கவலைப் படாதே; மகனே! பசுக்கள் எங்கே இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். நாளைக் காலையில் முதல் வேலையாகக் குதிரையேறி அவற்றைத் தேடிப் புறப்படு கிறேன்'' என்று கூறி அவனைத் தேற்ற வேண்டிய தாயிற்று.

''இந்தியர்கள் அவற்றைக் கவர்ந்து சென்றுவிட்டார் களோ?'' என்று ஹான்ஸ் கேட்டான்.

''இல்லே, ஒரு நாளும் அப்படி நடந்திராது. அந்த இந்தியர்கள் நல்லவர்கள். நீயே அவர்களேப் பார்க்க வில்லேயா ?''

அந்தப் பதில் அச்சிறுவனுக்கு ஆறுதல் அளித்தது. மீதி இரவில் நன்கு தூங்கினன். எனினும் அப்போதும் ரோஸியை இழந்த வருத்தம் அவன் மனத்தை விட்டு அகலவில்லே.

மறுநாள் விடியற் காலேயிலேயே புறப்படச் சித்தமாகி விட்டார் பெர்ஹான்ஸா. அவருக்கான காலேச் சிற்றுண் டியை பெரெட் தயாரித்தாள். இரவு முழுவதும் அவள் விழித்துக்கிடந்தாள். சைத்தான்தான் தங்கள் பசுக் களேக் கொண்டு சென்றிருக்க வேண்டும் என்று அவள் கருதினள். மறையக்கூட இடமில்லாத இந்தத் தொலே தூரத்துக்குத் தாங்கள் வந்ததால் தான் சைத்தான் அவ்வாறு செய்திருக்க வேண்டும் என்றும் எண்ணினள். இப்போதோ அந்தப் பசுக்களேத் திரும்பக் கொண்டுவர அவளது கணவர் செல்கிருர். எங்கே போகிருரோ அவர்? எப்போது திரும்புவாரோ?—தாங்கள் வசிக்கத் தகுந்த இடம் இதுவல்ல வென முன்னிலும் திடமாக நம்பினள் அவள். பசுக்கள் திரும்பக் கிடைக்காவிடில் ஒரு வேளே பெர்ஹான்ஸாவும் இவ்வாறே எண்ணுவாரோ என்னவோ என்றும் நினேத்தாள்.

பொறுக்க மாட்டாமல் இறுதியாக, ''நீங்கள் சொல் வது தவறு !'' என்று பெரெட் கத்தினள். ''இப்படித் தான என்னேத் தனியாக விட்டுச் செல்வது ? எப்போது திரும்பி வரப்போகிறீர்கள் ? ஆனல் அதுதான் உங்களுக்கே தெரியாதே ! வேறு யாராவது ஏன் செல்லக் கூடாது ? எல்லாரும்தான் பசுக்களே இழந்திருக் கின்றனரே !''

''அவ்வேலேசைச் சரியானபடிச் செய்ய ஹொன்ஸ் ஓல்ஸாவைத் தவிர வேறு ஆளில்லே. அவரோ வைக் கோலேப் போரடிப்பதில் முனேந்திருக்கிருர். ஆம், பசுக் களேத் திரும்பப் பெற வேண்டுமானல் நான்தான் சென்ருக வேண்டும்.''

அப்போது அவள் அழத் தொடங்கி விட்டாள். ''வேறு யாராவது செல்லட்டும். நீங்கள் என்னுடனேயே தங்கியிருங்கள்.''

''அழுவதால் ஆவதொன்று மில்லை பெரெட். நான் போய்த்தானாக வேண்டும். எங்கே, எப்போதும் போல் நல்லபடி நடந்து கொள், பார்ப்போம்.'' தன் மனைவி இம் முறையில் பேசுவதை பெர்ஹான்ஸாவினால் நம்ப முடிய வில்லை. அவளை விட்டுப்போக அவருக்கும் விருப்பமில்லை தான். அவளும் அதற்குமுன் எப்போதும் அவர் கருத்தைப் புரிந்து கொண்டுதான் நடந்து வந்திருக்கிறாள். இம்முறை தான் அடம்பிடிக்கிறாள். ஆயினும் அவள் என்ன நினைத்த போதிலும் சரி, தாம் கட்டாயம் சென்றாக வேண்டும் என்று அவர் முடிவு கட்டினார்.

வெளிக்கிளம்பும் தறுவாயில் திடுமென ஹான்ஸ் ஓல்ஸாவின் குரல் அருகே கேட்டது: ''என்ன விசேஷம்?''

''ஒன்றுமில்லை, நம் பசுக்களுக்கு ஆண் துணை தேவைப் பட்டது போலிருக்கிறது. அதனால்தான் அவை ஓடிப் போயிருக்கின்றன என்று நினைக்கிறேன். என்ன, நான் சொல்வது புரிகிறதல்லவா ?''

பெர்ஹான்ஸா சிரித்தார். ''அப்படித்தான் நானும் நினைத்தேன். அவற்றைத் தேடி எங்குச் செல்கிறேன் என்பதையும் கூறுகிறேன். அவர்களுக்கு ஏதாவது தெரியுமா என்று விசாரிக்க கீழக்கே யுள்ள ட்ரோண்டர் களின் குடியேற்றப் பிரதேசத்துக்குத்தான் செல்கிறேன். எப்போது திரும்புவேனோ தெரியாது. அதற்காக நீங்கள் வேலையை நிறுத்தத் தேவையில்லை, என் அருமை நண் பரே! இன்றிரவு பெரெட்டுக்குத் துணையாக இருக்க இங்கு ஸாற்றினாவை அனுப்பி வையுங்கள் போதும்.''

குதிரை மீதேறிக் கொண்டு வீட்டைச் சுற்றிச் சென்றார் அவர். கணப்பொழுது அங்கே தங்கி உற்றுக் கேட்டார். பின்னர் குதிரையைப் பாய்ச்சலில் விட்டார். வீட்டினுள் இருந்தவாறு கவனித்த பெரெட், தூரத்தில் செல்லச் செல்ல அவரது உருவம் சிறுப்பதைக் கண்டாள் —கண்ணீர் விட்டுக் கதறாமல் இருக்க முடியவில்லை அவளால்.

பெர்ஹான்ஸா எங்கே சென்றுள்ளார் என்பதைக் கேள்விப் பட்டதும் மற்றவர்கள் ஏதும் செய்ய வில்லை; அவர் திரும்பி வருமளவு காத்திருக்கவே தீர்மானித்தனர். இந்தியர்கள்தான் பசுக்களைக் களவாடிச் சென்றிருக்க வேண்டும் என்று நிச்சயமாக நினைத்தார் டோன் ஸெடென். இந்தியர்களைத் தேடிச் செல்லாமல் ட்ரோண்டர்களைப் பார்க்க பெர்ஹான்ஸா புறப்பட்டுப் போனது முட்டான் தனமானது என்றும் அவர் எண்ணினர்— ''என்ன இருந்தாலும் பெர்ஹான்ஸா தானே இந்தியர்களுடன் நேசமாக இருந்தார்? வந்த வினையெல்லாம் அவரால்தான்!'' என்றே அவர் முடிவு கட்டினர்.

அன்று மாலை பெரெட்டுடன் சிறிது நேரம் தங்க எல்லோரும் சென்றனர். ஆனல் அவர்களுடன் அவள் ஏதும் பேசவில்லை. அவள் சிந்தனை எங்கேயோ லயித்திருந்தது. மற்றவர்கள் இங்கு பேசிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் போது பெர்ஹான்ஸா மட்டும் பசுக்களைத் தேடிச் செல்வானேன் என்பது அவளுக்குப் புரியவில்லை. பார்க்கப் போனல் அவர்களும்தானே பசுக்களை இழந்தார்கள்?—இவ்வாறெல்லாம் தான் எண்ணியதை வாய் விட்டுச் சொன்னுள் அவள். எவராலும் அவளுக்குப் பதில் கூற முடியவில்லை. ஆகவே விரைவில் அவர்கள் அவளை விட்டு விலகினர். மீண்டும் அவள் தனித்திருக்க நேர்ந்தது.

மறு நாள் பொழுது விடிந்ததிலிருந்து வீட்டுக் கூரையின் மேலேயே பையன்கள் வாசம் செய்தனர். பிற்பகல் நேரத்தில், ''அப்பா வருகிருர்! அதோ வருகிருர்!'' என்று சிறுவன் ஹான்ஸ் கூவினுன்; ஓலும் கத்தினுன். முதலில் அன்னைக்கும், பிறகு பிறருக்கும் அதைத் தெரிவிக்க உடனே ஓடினர் அவ்விருவரும்—வெறுங்கையுடனன்றி பசுக்களுடனல்லவா தந்தை திரும்பி வருகிருர்!

பெர்ஹான்ஸா நெருங்கி வருமளவு அவர் வீட்டுவாயிலிலேயே எல்லா நண்பர்களும் காத்திருந்தனர். அவர்களுடைய நான்கு பசுக்களை மட்டுமல்லாமல் அவற்றுக்குப் பின்னல் இன்னென்றையு மன்றே அவர் ஓட்டி வருகிருர்! அவர் முன்னிலும் நெருங்கி வந்ததும் அந்த ஐந்தாவது

மாடு ஒரு பசுவல்ல, இளங்காளேயே என்பதைக் கண்டனர்—காளேயைத் தேடித் தங்கள் பசுக்கள் திரும்பவும் ஓடிவிடாமல் தவிர்க்கத்தான் காளேயைக் கொண்டு வருகிருர் போலிருக்கிறது என்று நினேத்தனர்.

பெர்ஹான்ஸா மிகவும் களேத்தும், அழுக்கடைந்தும் காணப்பட்டார். பேசுவதே அவருக்குக் கஷ்டமாக இருந்தது. முதலில் பெரெட்டைத் தேடிச் சென்ருர். தன் மார்பின் குறுக்கே கட்டியிருந்த ஒரு பெட்டியை அவிழ்த்து அவளிடம் தந்தார். அந்தப் பெட்டியினுள் சில கோழிக் குஞ்சுகள் இருந்தன. ''இதோ, உன் கோழிக் குஞ்சுகள், பெரெட். இவை உயிருடன் உள்ளன வென்றே நம்புகிறேன்'' என்ருர், சிரமப்பட்டு.

மற்றவர்கள் எத்தனேயோ கேள்விகளேப் போட விழைந்தனர். ஆனுல் அதிகம் பேச பெர்ஹான்ஸா விஞல் இயலவில்லே. பசுக்கள் காணப்பட்ட ட்ரோண்டர் களின் குடியேற்றத்திலிருந்தே காளேயைக் கொண்டு வந்திருப்பதாக அவர் கூறிஞர். ''ஓராண்டு காலம் இதனே இங்கு வைத்திருக்க நாம் பத்து டாலர் செலுத்துவோம் என்று அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டரை டாலர் வீதமாகிறது அது. ஆனுல் அன்ருடம் நம் பசுக்களேத் தேடியோடுவதை விட இத்தொகை பெரிதல்லவே?'' என்று அவர் மேலும் சொன்ஞர்.

அப்போது, திறமைசாலியான தங்கள் பெர்ஹான்ஸாவைப் பற்றி ஒவ்வொருவரும் பூரித்துப் பெருமையடைந்தனர்.

மூன்றாவது பாகம்

1

அவ்வருட வேனிற் காலத்தின் போது பெர்ஹான்ஸா ஒரு பொழுதும் ஓய்வு கொள்ளவில்லை; சற்றும் களைப்படையவுமில்லை. முடிந்த மட்டிலும் வேலை செய்துகொண்டே யிருந்தார். நன்றாகவும் தூங்கினார். மறுபடியும் பாடுபட்டு உழைக்கச் சித்தமாக ஒவ்வொரு நாளும் எழுந்தார். எல்லா வேலைகளும் அவருக்குச் சுவையுடையனவாக இருந்தன. பெரிய பெரிய கனவுகள் காணலானார். உலகின் மிகச் சிறந்த நிலத்தில் நூற்று அறுபது ஏக்கராவுக்குத் தாம் சொந்தக்காரராக இருப்பதாகக் கண்ட கனவு அவற்றிலொன்று—'ஏன் நூற்று அறுபது ஏக்கராமட்டும்? அதற்கு அதிகமாகவும் ஏன் ஒரு நாள் சேரக் கூடாது?'—மேன்மேலும் நிலத்தைக் குவிக்க அவர் விரும்பினார். ஆனால் மற்றெல்லா விருப்பங்களையும்விட பெரெட்டுக்குப் பெரிதாக ஒரு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதிலேயே அவருக்கு அளவற்ற ஆசை. 'அவள் கற்பனை செய்யக்கூடிய எதையும் விடப் பெரிதாக, அழகாக அமைய வேண்டும் அது. அருகே ஒரு சிறு பூங்கா மனை. அதற்கு நிழல் கொடுக்க மலர்ச் செடிகளும், கனி மரங்களும் நிறைந்த பெரியதொரு தோட்டம்!—அவர் கைகள் துறுதுறுத்தன. அதற்கு

மேல் அவரது மூளை மும்முரமாக வேலை செய்தது. இந் நாட்டில் எல்லாமே அன்றே மிகமிகப் பரபரப்பூட்டு பவையாக உள்ளன !

ஒரு நாள் ஹான்ஸூம் ஒலும் வாத்துக்கள் பற்றி ஓயாமல் பேசியவாறு வீடு திரும்பினர். அன்று சம வெளியில் வெகுதூரம் அவர்கள் சென்றிருந்தனர். வழியில் ஆயிரக் கணக்கான வாத்துக்கள் நிறைந்த குட்டை யொன்றை அவர்கள் கண்டனர். கையில் எடுக்குமளவு சாதுக்களாக அவை தோன்றின. எப்படி அவற்றைப் பிடித்துவருவது என்பது பற்றியே அந்த பாலரிடையே பேச்சு. ஏனெனில் அவர்களுடைய துப்பாக்கியில் ரவைகள் கொஞ்சந்தான் இருந்தன. வாத்து வேட்டையாட அவற் றைச் செலவழிப்பதற்கில்லை. வேறென்ன செய்வது ?

ஞாயிறுதோறும் அந்தத் தடாகத்துக்குச் சென்று அவ்வாத்துக்களை இருவரும் பார்த்தனர். அவற்றைச் சுடுவதற்கான வழிகளைப் பற்றி ஓழிவின்றிச் சிந்தித்தனர். ஒரு ஞாயிறன்று அந்த வாத்துக்களைப் பார்க்க ஹான் ஸூடன் பெர்ஹான்ஸாவும் சென்றார். அன்று வீட்டில் தாய்க்குத் துணையாக ஒல் தங்க நேர்ந்துவிட்டது. அது அவனுக்கு மிகுந்த கோபமூட்டிற்று. ஆனால் அவர்கள் முறை போட்டுக் கொண்டுதான் செல்ல வேண்டும்; அன்று ஹான்ஸின் முறை என்று கூறிவிட்டார் பெர் ஹான்ஸா.

குளத்தை அவர்கள் அடைந்ததும், பரபரப்பினால் பேசக்கூட முடியவில்லை, ஹான்ஸூக்கு. வாத்துக்களைப் பிடிப்பது எப்படி என்று தந்தையைத் திரும்பத் திரும்பக் கேட்டான். பெர்ஹான்ஸாவுக்கும் அது தெரியவில்லை. ஆயினும் அதுபற்றி யோசித்து ஏதாவது வழி கண்டுபிடிப்பதாக மகனுக்கு உறுதி கூறினார். பின்னர் அவர்கள் வீடு திரும்பினர். முன்னால் ஓடினான் ஹான்ஸ். பெர்ஹான்ஸாவோ, தன் நிலத்தையும், தன் நண்பர்களின் நிலத்தையும் பார்த்து மகிழ்ந்தபடி மெதுவாக நடை போட்டார்.

அப்போதுதான் அதை அவர் கண்டுபிடித்தார் !— கண்ணாரக் கண்டு களிக்கும் பொருட்டு டோன்ஸெ டெனின் நிலத்தைச் சுற்றிக்கொண்டு சென்றார். அவ்

வேளேயில், உயர்ந்த புல்லினுல் மறைபட்டிருந்த சிறிய தொரு பாத்யதைப் பட்டயத்தில் அவரது கால் இடறியது. இங்குக்கூடவா டோன்ஸெடென் பட்டயம் நட்டிருக்கிருர்? பார்ப்போமெனக் குனிந்தார். தன் கண்களேயே அவரால் நம்பமுடியவில்லே. அந்தப் பட்டயத்தில் டோன்ஸெடென் பெயரே இல்லே! மாருக, 'ஓ'ஹாரா' என்று அதில் பொறிக்கப் பட்டிருந்தது. என்ன நேர்ந்து விட்டது இங்கே?—கண நேரம்கூட அங்குத் தங்கி யோசிக்கப் புகவில்லே பெர்ஹான்ஸா. விரைவாக ஹான்ஸ் ஓல்ஸாவின் நிலத்துக்கு நடந்தார். அங்கிருந்த புல்லினிடையே பாத்யதைப் பட்டயத்தைத் தேடியெடுத்தார். சந்தேகமே யில்லே! பெரெட்போலவே அவரும் கிட்டத்தட்டக் கதறி விட்டார். ஏனெனில், ''ஹான்ஸ் ஓல்ஸா'' என்றல்லாமல் ''ஜோகில்'' என்ற பெயர் அதில் பொறிக்கப் பட்டிருந்தது. என்னதான் நேர்ந்து விட்டது? திடுமெனத் தாம் மூப்படைந்து விட்டதாக பெர்ஹான்ஸாவுக்குத் தோன்றியது. மற்றவர்களின் நிலங்களிலும் தன் நிலத்திலும் பட்டயங்களேத் தேடினுர். அவற்றில் ஏதுமே அகப்படவில்லே. இருள் சூழு மளவு தேடிக் கொண்டேயிருந்தார். அதன் பின்னர், முன்பு எப்பொழுதையும் விடக் களேப்படைந்தவராயும், துக்கம் மேலிட்டவராயும் வீட்டுக்குத் திரும்பினுர்.

வீட்டில் அவரால் வாளாவிருக்க முடியவில்லே. அந்த மாற்றம் எப்படி நேர்ந்தது என்பது அவருக்கு விளங்கவில்லே. சைத்தான்தான் அவர்களேத் துரத்துகிறது போலும்! ஆனுல் அது ஏன் அவர் நிலத்தைச் சும்மா விட்டு விட்டது? அதுதான் புரியவில்லே அவருக்கு. தான் கண்டதை மற்றவர்களிடம் கூறவும் முடியவில்லே. வீட்டுக்கு வெளியே ஒடுங்கி உட்கார்ந்தார். வாத்துக்களேப் பற்றி விடாமல் பேசிக் கொண்டிருந்தனர், பையன்கள். பெரெட்கூட அவரிடம் ஏதோ கூறினுள். எதுவும் அவர் காதில் விழவில்லே. கற்சுவர் போல் அசையாமல், மௌனமாக அமர்ந்திருந்தார். வாத்துக்களே எப்படிப் பிடிப்பது என்பது பற்றித்தான் அவர் சிந்திக்கிருரென ஹான்ஸ் உறுதியாக நம்பினுன். அது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

மேன்மேலும் அவர் மௌனத்தில் ஆழ்ந்ததைப் பெரெட் கவனித்தாள். அவர் நிலைமையை நினைத்து அனுதாபப் பட்டாள்; ஆனால் ஆறுதலாக என்ன கூறுவது என்பது அவளுக்குத் தெரியவில்லை. முற்றிலும் மாறுபட்டுக் காணப்பட்டார் அவர். சாப்பாட்டுக்குப் பிறகு இரு பையன்களையும் அழைத்துக் கொண்டு தன் நிலத்தின் மேற்கு எல்லையை யொட்டி நடந்தார். வழக்கம் போலல்லாமல் அவர்களுடன் இன்று ஏதும் பேசவில்லை. பெயர்ப் பட்டயம் ஏதும் தென்படுகிறதா என்று மிகக் கவனமாகப் பார்த்துச் சொல்லும்படி மட்டும் அவர்களிடம் கூறினர். "இங்கே ஒரு பட்டயத்தை நட்டேன். எங்கு என்பதை இப்போது என்னால் கண்டு பிடிக்க இயலவில்லை" என்றார்.

"எப்போது இங்கே நட்டீர்கள்?" என்று ஒல் கேட்டான். ஆனால் அது பெர்ஹான்ஸாவின் செவியில் ஏறவில்லை. வேறு எவை யெவற்றையோ பற்றி அவர் எண்ணிக் கொண்டிருந்தார்.

இருட்டுமளவு அவர்கள் தேடிப் பார்த்தனர்; திரும்பத் திரும்பத் துழாவினர். தங்கள் தந்தை வழக்கம் போலில்லை என்பதைப் பையன்கள் கண்டனர். ஆனால் எல்லா இடங்களிலும் தேடிய பிறகு ஒரு பட்டயத்தையும் தாங்கள் காணவில்லை என்று அவர்கள் கூறியதும் அவர் முகம் மீண்டும் மலர்ந்தது. "பசுக்கள் அதை மிதித்து மறைத்திருக்க வேண்டும்!" என்றார், சிரித்தவாறு.

யாருக்கும் - தன்னிடம்கூட - சொல்ல விரும்பாத விஷயங்கள் பற்றி பெர்ஹன்ஸா சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பதை பெரெட் கண்டு கொண்டு விட்டாள். தான் ஏதாவது சொன்னால் காதில் விழாததுபோல் அவர் இருப்பதைக் கவனித்தாள். பல இரவுகள் விழித்துக் கொண்டே அவர் படுத்திருப்பதைப் பார்த்தாள். அவர் அடியோடு மாறிவிட்டார் என்பதில் அவளுக்கு ஐயமில்லை. அப்படி என்ன நேர்ந்து விட்டது அவருக்கு?

அந்த வாரம் பூராவும் அவர் அவ்விதமே இருந்தார், ஒரு நாள் விடியற்காலையிலேயே எழுந்து வெளியே சென்றார். அவரைப் பின்பற்றிச் சென்றபோது கலப்

பையும் மாடுகளும் பண்டசாலையிலேயே இருப்பதையும், பெர்ஹான்ஸா மட்டும் காணவில்லை என்பதையும் பெரட் கண்டுபிடித்தாள். அவரை வருத்துவது என்ன என் பதைத் தன்னிடம் அவர் கூருதது கண்டு தனிமை யுணர்ச்சியால் தவித்தாள்.

அன்று காலைப்பொழுது பூராவும் வீட்டுக்குத் திரும்ப வில்லை பெர்ஹான்ஹா. தொலை தூரத்தில் மும்முரமாக ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தார். முதலில் தன்னைத் தவிர அங்கு வேறு யாருமில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டார். அதன்பின், நிலங்களிலிருந்த பாத்யதைப் பட்டயங்களைப் பிடுங்கினுர். அவற்றினுல் ஏற்பட்ட குழிகளில் கவனமுடன் மண்ணைப் போட்டு மூடினுர். பிறகு, சுற்றிலும் இருந்த உயரமான புற்களைப் போலவே ஓங்கி வளர்ந்திருந்த புல்கொண்ட மண் பத்தைகளை அக்குழிகளின்மீது வைத்துத் தட்டினுர்—அதன் பிறகு, அங்கு பட்டயங்கள் இருந்ததாகவே யாராலும் கூறி யிருக்க முடியாது!

காலைச் சிற்றுண்டிக்காக வீடு திரும்பினுர். வீட்டில் நுழையும்முன் பண்டசாலையில் அவர் எதையோ வைத்து விட்டு வருவதை பெரெட் கவனித்தாள். மறுபடியும் மாறி விட்டார் அவர்; பழைய பெர்ஹான்ஸாவாகவே அப்போது தோற்றமளித்தார். உண்டி முடிந்ததும் பையன்களுடன் வழக்கம்போல உழுவதற்குச் செல்லத் தயாராகி விட்டார்.

தைப்பதற்காக வைத்திருந்த துணியைத் தேடி யெடுக்கப் பண்டசாலைக்குப் பின்புறம் பெரெட் போனுள். அந்தத் துணியின் அடியில்தான் பாத்யதைப் பட்டயங்களை பெர்ஹான்ஸா ஒளித்து வைத்திருந்தார். அவை என்ன என்பது அவளுக்கு விளங்கவில்லை. அவற்றில் இருந்த விசித்திரமான பெயர்கள் உண்மை மனிதர்களின் பெயர்களாகவே அவளுக்குத் தோன்ற வில்லை. அவை யாருடையவை என்று யோசித்தவாறே துணி தைக்க வீட்டுக்குத் திரும்பினுள். பின்னரும் அந்தப் பட்டயங்கள் பற்றிக் குழம்பிக் கொண்டே யிருந்தாள்.

சிந்திக்கச் சிந்திக்க மேன்மேலும் மோசமாகவே அது அவளுக்குப் பட்டது. நிலத்திலிருந்து அந்தப் பட்ட

யங்களை பெர்ஹான்ஸா எடுத்துப் பண்டசாலையில் மறைத்ததேன்?—அவரையே கேட்டுவிடுவதென முடிவு செய்தாள். ஆனால் சாப்பாட்டுக்காக வீட்டுக்குத் திரும்பியபோது மேலும் அமைதியாகவே அவர் காணப் பட்டார். ஆகவே அவரை ஏதும் கேட்க அவளுக்கு வாய் வரவில்லை.

அன்றிரவு சாப்பாட்டுக்குப் பின் பண்டசாலைக்குள் அவர் சென்று அந்தப் பட்டயங்களை எடுப்பதை பெரெட் பார்த்தாள். அவை ஒவ்வொன்றையும், அடுப்பு எரிப் பதற்கேற்ற சிறு துணுக்குகளாக அவர் வெகு ஜாக்கிரதை யுடன் வெட்டுவதைக் கண்டாள். பின்னர் அவற்றை அவர் எரித்ததையும் பார்த்தாள். தன் கண்களையே அவளால் நம்ப இயலவில்லை. ஏனெனில், மற்றவரின் பாத்யதைப் - பட்டயத்தை எரிப்பதைவிட கேவலமான செயல் வேறு கிடையாது என்பது அவள் கருத்து. அது, பிறருடைய சொந்த நிலத்தை அவர்களிடமிருந்து பிரிப்பதற்கு ஒப்பானது தானே? என்ன செய்வதென்று பெரெட்டுக்குத் தோன்றவில்லை. அவள் மணந்த மனிதர் இத்தகைய இழிகுணம் உடையவரா?—அவரோடு இனியும் தன்னால் வாழவியலாது என்றே நினைத்தாள்.

2

மறுபடியும் காலைமுதல் இரவுவரையில் ஓயாமல் வேலை செய்யத் துவங்கி விட்டார் பெர்ஹான்ஸா. ஆனால் முன்போல மகிழ்ச்சியுடனோ, அமைதியுடனோ அவர் காணப்படவில்லை. பாத்யதைப் பட்டயங்களை நட்ட வர்கள் குறித்து அவரால் சிந்தித்திருக்க முடியவில்லை. அவர்கள் திரும்பி வருவார்களோ? பட்டயங்களை நட்டால் மட்டும் போதாது என்பதை அவர் அறிந்திருக்க வில்லை. அவர்களுக்கு உண்மையிலேயே அங்குப் பாத்யதை இருந்திருந்தால் டோன்ஸெடனும் ஹான்ஸ் ஓல்ஸாவும் மனுப்போட அனுமதிக்கப் பட்டிருக்கவே மாட்டார்கள். ஆனால் அது அவருக்குத் தெரியாது.

பெரெட்டுக்கும் முன்னிருந்த சிறிதளவு மகிழ்ச்சியும் மறைந்தது. பிறர் நிலத்திலிருந்துதான் அந்தப்

பாத்யதைப் பட்டயங்களை பெர்ஹான்ஸா பிடுங்கினுரென அவள் எண்ணினுள். அதாவது, அவர்கள் வேருெருவர் நிலத்தில் தான் வாழ்ந்திருக்கிருர்கள்! ஆயினும் அதைப் பற்றி நினைப்பதைக் கொஞ்சங் கொஞ்சமாக அவள் குறைத்துக் கொண்டுவிட்டாள். ஆனுல் அதை யாராவது கண்டுபிடித்து விட்டால் என்னுகும் என்பதைப்பற்றி அதிகமாகச் சிந்திக்கத் தொடங்கினுள். பெர்ஹான்ஸா வுக்கோ ஆங்கிலம் பேசக்கூடத் தெரியாதே! அவர்கள் கதி என்னவாகுமோ?—இந்தக் கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

அந்தச் சமவெளியில் அவர்கள் குடியேறி நான்கு மாதமாகிவிட்டது. அந்தப் பட்டயங்கள் பற்றி நினைப்பதை பெரெட் விட்டுவிட்டாள். எல்லோருக்கும் தான் போதிய நிலம் இருக்கிறதே, ஆயினும் அப்படியும் வேறெவரும் அங்கு வரவேயில்லை. முன்போலவே அவர்கள் அங்குத் தனித்தனியே இருந்தனர்.

சிறிது காலத்திற்குப் பிறகு புதிதாகச் சிலர் வந்து சேர்ந்தார்கள். குடியேற்றக்காரர்கள் அனைவரும் அவர் களைக் காணச் சென்றனர். வேறு யாரோவல்லவா அங்குக் குடியேற வருகிருர்கள்! கீழ்த் திசையிலிருந்து வந்திருந்தனர் அந்த நான்கு ஆடவரும். சுமார் எழுபது மைல்களுக்கு அப்பாலிருந்த மற்ருேரிடத்துக்கு அவர்கள் சென்று கொண்டிருந்தனர். பாத்யதைப் பட்டயங்களைப் பதித்தவர்கள் அவர்கள்தானென முதலில் நினைத்தார் பெர்ஹான்ஸா. அவர்கள் யார் என்பதை அறிந்ததும் அவர் மனம் அமைதியுற்றது. ஜெர்மானியர்கள் அவர்கள். எழுபது மைல்களுக்கு அப்பால் அவர்கள் செல் கின்னர் என்பதை அறிந்தபோது அனைவரும் சந்தோஷ மடைந்தனர். அந்தச் சமவெளியில் அவர்கள் கடைசிக் குடியேற்றக்காரர்கள் அல்ல, அப்பாலும் சிலர் குடி யேறுகிருர்கள் என்ருல் அவர்கள் களிப்படைவது இயற்கைதானே!

சுமார் ஒருவாரம் கழித்துக் கிழக்குத் திசையிலிருந்து மேலும் சில வண்டிகள் வந்தன! அவற்றைக் குடியேற்றக் காரர்கள் காணும்போது இருட்டிவிட்டது. "யாரோ

விருந்தாளிகள் போலிருக்கிறது'' என்று ஹான்ஸ் ஓல்ஸாவிடம் பெர்ஹான்ஸா கூறினார். ஆனால் அவர் களின் வீடுகளுக்கருகில் அந்த வண்டிகள் நிற்கவில்லை. அவர்களைக் கடந்து செல்லவிருந்தன அவை. தான் எதிர் பார்த்துக் காத்திருந்த பேர்வழிகள் அவர்கள்தான் என்று திட்டமாகக் கருதினார் பெர்ஹான்ஸா. உடனே மீண்டும் ஆத்திரம் அடைந்தார்.

ஹான்ஸ் ஓல்ஸாவின் நிலத்தருகே புதிதாய் வந்த அவர்கள் தங்கி, அடுப்பு மூட்டினர். அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதை அறிய பெர்ஹான்ஸா பெரிதும் விரும்பினார். ''அவர்களிடம் சென்று கொஞ்சம் உரு ளைக் கிழங்குகளை விற்போமே! என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?'' என்று வினவினார். மற்றவர்கள் இறுதியில் அதற்கு இசைந்தனர். ஆங்கிலம் அறிந்திருந்ததால் டோன்ஸெடென் சென்றார். அவ்வாறே, விற்பதற்கு உருளைக்கிழங்கு வைத்திருந்ததால் பெர்ஹான்ஸாவும் போனார். வழக்கம்போல் டோன்ஸெடன் பயந்து நடுங் கினார். ஆனால் அவர் போகாது நின்றுவிட பெர்ஹான்ஸா விடவில்லை.

அந்தப் புதியவர்களிடையே பத்து ஆடவர்களையும் நான்கு பெண்மணிகளையும் காண முடிந்தது. அவர் களுடன் டோன்ஸெடன் பேசவாரம்பித்தார். பெர்ஹான் ஸாவினால் அவர்களுடைய பேச்சு பூராவையும் புரிந்து கொள்ள முடியவில்லை. எனினும் அவர்கள்தான் பாத் யதைப் பட்டயங்களை நட்டவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டார். இறுதியில் அவரிடம் டோன்ஸெடன் சொன்னார்: ''என் நிலமும், ஹான்ஸ் ஓல்ஸாவின் நிலமும் தங்களுக்குச் சொந்தம் என்கிறார்கள் இவர்கள்.'' அவர்களுடன் பேசப் பேச டோன்ஸெடனின் குரல் ஓங்கியது. வார்த்தைகள் வேகமாக வெளிவந்தன. அவரைத் தடுத்து நிறுத்தி நிதானமடையச் செய்தார் பெர்ஹான்ஸா.

''எல்லா நிலமும் தங்களுக்குத்தான் சொந்தம் என்கிறார்கள். இவர்கள் போர் வீரர்களாகையால் இந்த

நிலம் தங்களுடைய உடைமை என்பதை நிரூபிக்க எதையும் இங்குச் சாகுபடி செய்திருக்கத் தேவையில்லையாம். கடந்த கோடையிலும், இலையுதிர் பருவ முடிவிலும், வசந்தகால ஆரம்பத்திலும்கூட இங்கேதான் தாங்கள் இருந்ததாகக் கூறுகிறார்கள். கொலை, சிறை என்று என்னென்னவோ பேசுகிறார்கள். நாம் இப்போது என்ன செய்வது?'' என்றார் டோன்ஸெடன்.

''அவர்களுடைய சாஸனங்களைக்கேட்டு வாங்குங்கள்'' என்று பெர்ஹான்ஸா கூறினார்.

''அவை தங்களிடம் இருப்பதாயும், காலையில் காட்டுவதாயும் கூறுகிறார்கள்.''

''அப்படியானால் வீட்டுக்குச் சென்று தூங்குவோம், வாருங்கள். ஆமாம், இங்கே ஏதாவது பாத்யதைப் பட்டயங்களை நட்டார்களாமா?''

''நட்டிருக்கிறோம் என்கிறார்கள்.''—அச்சத்தினால் அநேகமாக அழுகையே வந்து விட்டது டோன்ஸெடனுக்கு. அவர் குமுறிக் கதறுவதற்கு முன் வீடு திரும்பி விடுவது நலமென பெர்ஹான்ஸா நினைத்தார். காலையில் ஹான்ஸ் ஓல்ஸாவிடம் விஷயத்தைச் சொல்லலாம்; அதன் பின் இவர்களிடம் திரும்பி வந்து என்ன கூறுவது என்பதை யோசித்துக் கொள்ளலாம் என்று அவர் முடிவு செய்தார்.

அவர்கள் எம்மாதிரியானவர்கள் என்பதை அறிந்ததும் ஆறுதலாகி விடடது பெர்ஹான்ஸாவுக்கு. அவர்களிடம் சாஸனம் ஏதும் இருப்பதாக அவர் எண்ணவில்லை. இருந்திருந்தால், கேட்டவுடனே காட்டியிருக்க மாட்டார்களா? என்னதான் கடுமையாகப் பேசிய போதிலும் அவர்களால் தனக்குத் தொந்தரவேதும் ஏற்படாது என்று அவருக்குத் தோன்றிற்று. ஆகவே அவர் முகத்தில் தென்பட்ட மாறுதலைக் கண்டு பெரெட் மகிழ்ச்சி அடைந்தாள். தங்களை எவ்வித அபாயமும் எதிர்ப்படவில்லை என்பதை அவள் ஊகித்தாள்.

புதுப் பேர்வழிகளைப் பற்றி அவரிடம் அவள் விசாரித்தாள். ஆனால் அவளுடைய பிள்ளைகளின் சரமாரியான பேச்சினால் அவள் கேள்வி அவரது காதில் விழ

வில்லை. அந்தப் புது மனிதர்களைப் பற்றி அனைத்தையும் அறிய அவர்கள் துடித்தனர். பெர்ஹான்ஸாவும் குதூகலம் அடைந்திருந்தபடியால் அவர்களுடைய கேள்விகள் எல்லாவற்றுக்கும் வேடிக்கையாகப் பதில்கள் அளித்தார். வந்தவர்களைப் பற்றிய பூரா விவகாரங்களையும் அவர் எடுத்துச் சொன்னார்.

வெள்ளி முளைக்கு முன்பே மறுநாள் காலை அவர் எழுந்து விட்டார். பெயரளவுக்குச் சிற்றுண்டி அருந்தி விட்டு, ஸோலம் சகோதரர்களை எழுப்பச் சென்றார். ஹான்ஸ் ஒல்ஸாவின் வீட்டுக்குச்செல்கையில்,அவர்களிடம் நடந்த விஷயங்களைக் கூறினார். டோன்ஸொடன் எளிதில் எகிறிக் குதிக்கக் கூடியவராகையால் அவர்கள் சார்பில் ஹென்றி பேசுவதென்றும், பெர்ஹான்ஸாவுக்கும் ஹான்ஸ் ஒல்ஸாவுக்கும் புரியும் பொருட்டு நார்வீஜிய மொழியில் அப்பேச்சை ஸோலம் எடுத்துரைப்பது என்றும் ஏற்பாடாயிற்று. ஏறக்குறைய வேற்றுகக் கிடந்த அந்த இடத்தில் நிலத்துக்காகச் சண்டை போடுவது என்பது வேடிக்கையாகவே பட்டது ஸோலம் சகோதரர்களுக்கு.

ஹான்ஸ் ஒல்ஸா பெரிய உருவம் படைத்தவர். எவரும் நிமிர்ந்து பார்க்க வேண்டிய உயரம் வாய்ந்தவர். உருவத்துக்கு ஏற்ப உடல் வலுவும் கொண்டவர். அமைதியாகவும் உன்னிப்புடனும் சிந்திப்பவர். எவ்வித விஷயத்தையும் ஆலோசித்து முடிவு செய்ய அவருக்கு வெகு நேரம் பிடிக்கும். ஆனால் முடிவு செய்துவிட்டாரானல் துரிதமாகச் செயலாற்றத் தொடங்கி விடுவார். அவர் வீட்டை பெர்ஹான்ஸா அடைந்தபோது ஸாற்றினும் விழித்திருந்தாள். புதியவர்களைப் பற்றி அவள் எதிரில் பேச அவர் விரும்பவில்லை. ஆனல் அவருக்கு இருந்த அவகாசமோ மிகக் குறைவு. மேலும் அதிகம் பேசாத நல்ல பெண்மணி அவள் என்பதும் அவருக்குத் தெரியும். ஆகவே முழுவிவரத்தையும் எடுத்துச் சொன்னார். அதைப் பூராவாக ஹான்ஸ் ஒல்ஸா புரிந்துகொள்ளுதற்பொருட்டுப் பல விஷயங்களைப் பன்முறை திரும்பச் சொல்ல வேண்டியிருந்தது. இறுதியில் பெர்ஹான்ஸாவுடன் சென்று அந்த ஐரிஷ்காரர்களுடன்

பேச ஹான்ஸ் ஓல்ஸா ஒப்புக்கொண்டார். யாவும் தெளிவாக எழுதப்பட்டிருந்த தன் சாஸனத்தையும் கையோடு எடுத்துக்கொண்டார் அவர்.

எல்லோரும் ஒன்ருகப் புறப்பட்டனர். வழக்கம் போல் கலக்கம் அடைந்தவராய் வெகு வேகமாகப் பேசினூர் டோன்ஸெடன். தன் சாஸனத்தைக்கூட அவர் எடுத்து வரவில்லை. ஒருவேளை அதை அவர்கள் பிடுங்கிக் கொண்டு விட்டார்களாளுல்—அப்புறம் அவர் என்ன செய்வது? யாரும் ஏதும் சொல்ல முடியாத அளவு கவலையில் தோய்ந்திருந்தார். எனினும் பெர்ஹான்ஸா அவர் மனத்தைத் திருப்பி, சாஸனத்தை எடுத்துவர அனுப்பினூர். அதன்பின். ஹென்றி ஸோலம்தான் தங்கள் சார்பில் பெரும்பாலும் பேசுவார் என்பதைத் தெரிவித்தார். டோன்ஸெடனுக்கு அந்த ஏற்பாடு பிடிக்கவில்லை. ஆயினும் அவருக்கு இருந்த கவலையில் அதிகம் பேச முடியவில்லை.

முகாமில் இருந்த ஐரிஷ் ஆடவர் அனைவரும் தம் வேலையில் முனைந்திருந்தனர். குடியேற்றக்காரர்களைப் பார்க்கவோ அவர்களுடன் பேசவோ தங்கள் முகங்களை நிமிர்த்தவில்லை. அவர்களிடம் ஹென்றி ஸோலம் சென்ருர். மற்றவர்கள் நிலத்துக்கு அவர்கள் பாத்யதை கொண்டாடுவதற்கு என்ன பொருள் என்று வினவினூர். அதுகேட்டு ஐரிஷ்காரர்கள் வாய்விட்டுச் சிரித்தனர். அவர்கள் குரலில் அற்பத்தனம் ஒலித்தது. ''உங்கள் சாஸனங்கள் எங்கே?'' என்று அவர்களிடம் உரத்த குரலில் ஹென்றி கேட்டார். பெட்டிகளுக்குள் அவை இருப்பதாயும், அப்போதைக்கு அவற்றைத் தேடியெடுப்பதற்கில்லை என்றும் அவர்கள் பதிலளித்தனர். ஆளுல் அவற்றுக்குப் பதில் பாத்தியதைப் பட்டயங்களைக் காட்டுவதாயும் கூறினர்.

''அப்படியாளுல் சரி, எங்கே, அவற்றைக் காட்டுங்கள்'' என்ருர் பெர்ஹான்ஸா. அவர்கள் அனைவரும் ஹான்ஸர் ஓல்ஸாவின் நிலத்துக்கு நடந்தனர். பட்டயங்கள் இருந்த இடத்தை அவர்கள் அடைந்த போது பெர்ஹான்ஸாவின் மகிழ்ச்சிக்கோர் அள வில்லை. அங்கே

பட்டயங்கள் இருந்ததற்கான அறிகுறி ஏதுமே இல்லை. சுற்றிலும் இருந்த நிலங்களைப் போலவே அவையும் இருந்தன. ஒரு பட்டயத்தைக் கூட அந்த ஐரிஷ்காரர்களால் தேடியெடுத்துக் காண்பிக்க முடிய வில்லை. திரும்பத் திரும்பத் தேடினர்; ஒன்று கூட அவர்கள் கண்ணில் படவில்லை. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது அவர்களுக்கு. வண்டிகளில் இருந்த மற்றவர் களும் விரைவில் வந்து சேர்ந்தனர். எல்லோருமாகக் கூடிக் கூடிப் பேசலாயினர். ஹான்ஸ் ஒல்ஸாவை உறுத்து விழித்துத் திட்டத் தொடங்கினர். தம்மைப் பொய்யன், திருடன் என்றெல்லாம் அவர்கள் ஏசுகின்றனர் என்பதை கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்து கொண்டார் ஹான்ஸ் ஒல்ஸா.

அவர்களுடன் வண்டிகளுக்குத் திரும்பிச் சென்றனர் குடியேற்றக்காரர்கள். அங்கே அந்தப் பத்து ஐரிஷ் காரர்களும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராயிருந்தனர். அவர்களில் ஒருவனிடம் கனமான பெரிய பலகையொன்று இருந்தது. ஹான்ஸ் ஒல்ஸா பற்றிக் கேவலமாக அவன் பேசத்தொடங்கினான். நல்லபடி இருக்க வேண்டுமென விரும்பினால் தன் நிலத்திலிருந்து அவர்கள் வெளியேறி விடவேண்டும் என்றான் அவன். பின்னர், இன்னும் அண்மையில் வந்து, பலகையைத் தூக்கினான். உடனே மற்றவர் அனைவரும் விலகினர். ஆனால் ஏற்கனவே ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்ட ஹான்ஸ் ஒல்ஸா மட்டும் நகரவில்லை. நகராததுடன் மாத்திரமல்ல, முடிவைத் துரிதமாகக் காரியத்தில் காட்டவும் புகுந்தார். அவரது இடது கை திடீரென உயர்ந்து அந்த ஆசாமியின் இடது காதின் மேற்புறமாகத் தாக்கியது. ஓவென்று அலறிய வாறு அவன் கீழே விழுந்தான்; பேச்சுமூச்சே இல்லாமல் கிடந்தான்.

மற்ற நார்வீஜியர்களும் சண்டைக்குச் சித்தமாயினர். ஆனால் ஐரிஷ்காரர்களோ அசையாமல் நின்றனர். பின்னர் கீழே கிடந்தவனை பெர்ஹான்ஸா தூக்கினார். மற்றவர் களின் தலைக்கு மேலாக அவனை வீசியெறிந்தார். பின்னால் நின்று கொண்டிருந்த வண்டி யொன்றின் மீது முழு

வேகத்துடன் போய் விழுந்தான் அவன். அடுத்த நிமிஷம் மற்றவர் அனைவரும் இருந்த இடம் தெரிய வில்லை !

''ஹூம், இனிமேல் இவர்கள் நமக்குத் தொல்லைதர மாட்டார்கள் என்றே நினைக்கிறேன்'' என்றார் பெர் ஹான்ஸா. பிறகு எல்லா நார்விஜியர்களும் வீடு செல்லத் திரும்பினர், டோன்ஸெடெனைத் தவிர. அவர் தான் எப்போதோ சென்று விட்டாரே !

இறுதியில், ஹான்ஸ் ஒல்ஸாவின் நிலத்திற்கு அடுத்தாற் போல் அந்த ஐரிஷ்காரர்கள் குடியமர்ந்தனர். தன் மகன்களுடன் அன்றாடம் அவர்களிடம் பெர் ஹான்ஸா போய் வரலானார். கடைசியில், பத்து டாலர் பெறுமான உருளைக் கிழங்குகளை அவர்களுக்கு விற்று விட்டார் !—அது அவருக்கு மெத்தத் திருப்தி அளித்தது.

நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பெண்டிர் பேசாமல் இருக்க முடியவில்லை. உண்மையை விரைவில் பெரெட் கண்டு பிடித்து விட்டாள். ஆக, பெர்ஹான்ஸா செய்த தெல்லாம் இது தானா! தன் கணவர் அவ்வளவு தீமை நிரம்பியவர் என்பதை அவளால் நம்பமுடிய வில்லை. எனினும் அது பற்றி அவரிடம் அவள் ஏதும் பேசவில்லை. அந்த நிலத்தைப் பொறுத்த வரையில் ஐரிஷ்காரர்களுக்கு யாதொரு உரிமையும் கிடையாது என்பது இப்போது அவளுக்குத் தெரிந்து விட்டது. ஆனால் பாத்யதைப் பட்டயங்களைப் பிடுங்கியபோது பெர்ஹான்ஸா அதை அறிந்திருக்க வில்லை—இதைத்தான் அவளால் நம்ப முடியாமல் இருந்தது.

இறுதியில், தான் செய்ததனைத்தையும் மற்றவர் களிடம் பெர்ஹான்ஸா கூறினார். அவர்கள் எல்லோரும் ஒரு நாளிரவு முழுதும் சிரித்துப் பாடிக் களித்தனர். பட்டயங்களைத் தாம் கண்டு பிடித்ததையும், அவற்றைப் பைஸல் செய்த விதத்தையும் அப்போது அவர்களிடம் பெர்ஹான்ஸா விவரித்தார். அவர் செய்த காரியம் எவ்வளவு அற்புதமானது என்று கூறி அனைவரும் வியந் தனர். அவரது கையைக் குலுக்கிப் பாராட்டினர். ஆனால் பெரெட் மட்டும், '' மற்றவர் நிலத்தை எடுத்துக்

கொள்வது என் தாயகத்தில் பாவமாகக் கருதப்படுகிறது. ஆனுல் இங்கோ அது பற்றிப் பெருமை கொள்வதைக் காண்கிறேன்'' என்ருள். அவளுடைய அந்த விசித்திரப் போக்கு எல்லோரையும் கலக்கி விட்டது. எனவே அந்தச் சிறு வீட்டிலிருந்து விரைவில் வெளியேறி விட்டனர். பெரெட்டும் வெளியே சென்ருள். அவளைத் தேடிப் போகாமல் படுக்கச் சென்ருர் பெர்ஹான்ஸா. அடுத்த சில நாட்களுக்கு அவர்கள் இருவரும் ஒருவரோ டொருவர் பேசிக் கொள்ளவே யில்லை எனலாம்

நான்காவது பாகம்

1

இலையுதிர் காலம் தொடங்கிவிட்டது. பகல் பொழுது வரவரக் குறைந்து வந்தது. கூடவே கஷ்டங் களும் அதிகரிக்கலாயின. பெரட் முன்னிலும் அதிக மௌனம் வகிக்கலாளுள். சோகச் சித்திரமாகவே ஆகி விட்டாள் அவள். பிறக்கப்போகும் குழந்தைக்காகவும், மற்றக் குழந்தைகளுக்காகவும் துணிபின்னுவதில் பல நாட் களைக் கழித்தாள். பெர்ஹான்ஸாவுக்காகவும் நெய்தாள். அவ்வேலையில் ஈடுபட்டிருக்கும் போது, வெறிச்சோடிக் கிடக்கும் சமவெளியை மணிக்கணக்கில் பார்த்துக் கொண்டே யிருப்பாள்.

ஒரு நாள் ஜன்னல் வழியாக நோக்கிக் கொண்டு தனியாக உட்கார்ந்திருந்தாள். மாரிக் காலத்துக்குத் தேவையான விறகை வெட்டிவர பெர்ஹான்ஸாவும் ஓலும் சென்றிருந்தனர். அப்போது, அந்தப் பரந்த சமவெளி வழியே ஒரு வண்டித் தொடர் நெருங்கி வருவதைக் கண்டாள். நன்ருகப் பார்ப்பதற்காக வீட்டுக்கு வெளியே வந்தாள். இந்தப் பயங்கரப் பிரதேசத்துக்கு மேலும் மக்கள் வருகிருர்களா, என்ன ? திரும்பிப் போய் விடுமாறு அவர்களிடம் ஓடிச் சென்று கூற அவள் விரும் பிளுள். சிறுவன் ஹான்ஸ் அந்நேரம் அங்கு வந்தான்.

''என்ன விசேஷம், அம்மா ?'' என்று வினவினுன். வண்டிகள் வருவதை அவனுக்கு அவள் சுட்டிக் காட்டினுள். அவர்களிடம் தன்னுல் பேசக்கூட முடியாது என்பதைக் கண்டாள்.

'' ஓடு, அவர்களிடம் ஓடு. அவர்களுக்கு ஏதாவது உதவிசெய்ய முடியுமா, பார்'' என்று அவள் கூறி முடிக்கு முன்பே குதிரை மீதேறிப் புறப்பட்டான் ஹான்ஸ். பெரெட்டைப் பார்க்க விரைவில் ஸாம்ஸோலமும் வந்து சேர்ந்தார். அவரும் வண்டிகளேப் பார்த்திருந்தார்; அதை டோன்ஸெடெனிடம் தெரிவிக்கத்தான் சென்று கொண்டிருந்தார். ஹான்ஸ் ஓல்ஸா அப்போது அங்கு இல்லே. அவரும் விறகு வெட்டச் சென்றிருந்தார். எனவே ஸாற்றினுவிடம், சேதி சொல்ல அன்னுவை அழைத்துக் கொண்டு பெரெட் புறப்பட்டாள்.

விரைவில் அனேவரும் டோன்ஸெடெனின் வீட்டு வாயிலில் கூடிவிட்டனர். வண்டிகள் அவர் வீட்டை நோக்கித்தான் வந்துகொண்டிருந்தன. எப்போதும் போல் அவர் கலங்கிப் போயிருந்தார். அவர்களும் அற்பத்தனம் பிடித்த ஐரிஷ்காரர்களாக இருப்பார்களோ என்று அவருக்குக் கவலே. மேலும், அவர் அப்போது தனியாக வேறு இருந்தார்—நல்ல இக்கட்டு என்று நொந்துகொண்டார்.

அப்போது அவர்களிடம் விரைந்து வந்தான் சிறுவன் ஹான்ஸ். '' நார்வீஜியர்கள்தான் இவர்கள்! நார்வீஜிய மொழியையே பேசுகிருர்கள் ! '' என்று அவன் கூவினுன். அடடா, என்ன அற்புதம் இது !—உடனே டோன்ஸெடென் முற்றிலும் மாறிவிட்டார். '' வா, காப்பி தயார் செய். இந்த நல்ல மனிதர்களே நாம் சரியான முறையில் வரவேற்க வேண்டும்'' என்று தன் மனேவியிடம் கூறினுர்.

வந்த ஐந்து வண்டிகளில் இருபது ஆண்கள் இருந்தனர். நார்வேயைச் சேர்ந்த ஸான், வாஸ் என்னுமிடங்களிலிருந்து வந்தவர்கள் அவர்கள். தங்கள் குடும்பங்களே மின்னஸோட்டாவில் விட்டுவிட்டு, புது நிலங்களேத் தேடி வந்திருந்தார்கள். விரைவில் கிழக்குப் பகுதிக்குத் திரும்பிச் சென்றுவிடுவார்கள். வஸந்தகாலத்தில் தங்கள்

குடும்பங்களுடன் திரும்பிவருவார்கள். இந்த ஏகாந்த மான சமவெளியில் நார்வீஜியர்கள் குடியேறியிருப்பதைக் காண அவர்கள் மிகவும் சந்தோஷம் அடைந்தனர். ஆனல் இங்கே தாங்களும் குடியேறிவிட அவர்கள் உத்தேசிக்க வில்லை. இன்னும் அப்பால் சென்று, ஜேம்ஸ் நதி தீரத் தில் இருந்த நிலத்தைப் பார்க்கத் திட்டமிட்டிருந்தனர். அவர்களை ஸ்பிரிங்க்ரீக்கிலேயே குடியேறச் செய்ய டோன் ஸெடென் முயன்ருர். டகோடா பிரதேசத்தில் தான் பார்த்திருந்த இதர இடங்களைப் பற்றி அவர்களுக்கு அவர் எடுத்துரைத்தார். அவற்றிலெல்லாம் ஸ்பிரிங்க்ரீக்கே சிறந்தது என்ருர். அவர்களுடன் பேச பெர்ஹான்ஸா இல்லையே என்று அவர் ஏங்கினுர். அந்த அருமையான நார்வீஜியர்கள் அங்கேயே தங்கிவிட வேண்டுமெனத் துடியாகத் துடித்தார்.

ஆனல் அவர்களால் அது பற்றி நிச்சயமாகக் கூற முடியவில்லை. ஒரு மரம் கூட இல்லாமல் வெறுமையாக இருந்த அந்த இடம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. வீடு கட்டவும், அடுப்பு எரிக்கவும் மரத்துக்கு எங்கே போவதென வினவினர். வழக்கத்தைவிட வேகமாகப் பேசினுர் டோன்ஸெடென். அருகில் நிறைய மரம் இருக் கிறது, நிலமும் வளம் மிக்கது என்ருர். இந்தச் சிறு குடியேற்றப் பகுதி இன்னும் சிறிது காலத்துக்குள் பெரிய நகரமாகிவிடும், அருகே இருப்புப் பாதைகூடப் போட்டு விடுவார்கள் என்ருர். '' காத்திருந்து பாருங்கள்; அதிச யங்களை !'' என்று ஆசை காட்டினுர்.

அன்றிரவு தங்கள் முகாமில் சாப்பிடும்போது அது பற்றி அந்த நார்வீஜியர்கள் விவாதித்தனர். அதன்பயனுக ஸ்பிரிங் க்ரீக்குக்கு அருகில் நதியின் மறு கரையிலேயே, குடியேறி விடுவதென அவர்களில் பெரும்பாலோர் தீர்மா னித்தனர்; முடிவில், மற்றவர்களும் அதற்கு இசைந்தனர். டோன்ஸெடெனுல் அதை நம்பவே இயலவில்லை ! ஒரே சமயத்தில் இருபது பேரை அண்மையில் குடியேறச்செய்து விட்டாரல்லவா அவர் ! அதிலும், அவர்கள் அத்தனை பேரும் நார்வீஜியர்களாயிற்றே !

சாமான்கள் வாங்கும் பொருட்டு நகரத்துக்கு ஆண் மக்கள் மீண்டும் செல்லச் சமயம் வந்துவிட்டது. அது

பற்றி நினைக்கவே பெரெட்டுக்குப் பிடிக்கவில்லை. தன் மனத்தில் இருந்ததை பெர்ஹான்ஸாவிடம் அவள் கூறவில்லை—கூறித்தான் பயனென்ன ? அதை அவர் புரிந்துகொள்ளமாட்டார்-கூறுவிடினும்கூடத் தன் பக்கத்திலேயே அவர் இருப்பதை அவள் விரும்பினாள். அந்த வெட்டவெளியில் தனித்திருப்பதை வெறுத்தாள். நகரத்துக்குச் செல்வதானால் ஒருவாரம் அவர் திரும்ப மாட்டார். அங்கு அவர் போகாமல் இருக்க முடியாது என்பதை அவள் அறிவாள். மழைக் காலத்திற்குத் தேவையான உணவு, உடைகள், மற்றும் பண்ணைக்கு வேண்டிய பண்டங்கள் முதலியவற்றை வாங்க வேண்டாமா ? ஆனால் இவையெல்லாம் அப்போது அவளுக்கு முக்கியமற்றவையாகவே தோன்றின. தன்னைச் சுற்றியிருந்த எதிலும் அவளுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. அவள் மனம் அடிக்கடி எங்கெங்கோ திரிந்தது.

இம்முறை ஹான்ஸ் ஒல்ஸாவுடனும் ஹென்றி ஸோலமுடனும் பெர்ஹான்ஸா செல்கிறார். டோன்ஸெடெனின் குதிரையையும் வண்டியையும் அவர் எடுத்துச் செல்ல வேண்டுமென்றும், பெரெட்டையும் குழந்தைகளையும் டோன்ஸெடென் கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும் ஏற்பாடு. ஐரிஷ்காரர்கள் நிறைய உருளைக் கிழங்குகளை வாங்கியிருந்தார்கள். புதிதாகக் குடியேறிய நார்வீஜியர்களும் இன்னும் அதிகமாக வாங்கிக் கொண்டிருந்தார்கள். எனவே அவர்களிடம் நிறையப் பணம் இருந்தது. அதே சமயத்தில் அவர்களுக்கு வேண்டியிருந்த பண்டங்களும் ஏராளம். அவற்றை வாங்க அந்தப் பணம் போதுமானதாக இருக்க வேண்டும் என்பதே அவர் பிரார்த்தனை. தான் நகருக்குச் சென்றிருக்கையில் தாயாருக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டும் என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்கினார். அவர்களும் அவருடன் செல்ல விரும்பினர். ஆனால் அது எப்படி இயலும் ? பெரெட்டைத் தனியேவிட முடியுமா ?

மேலும் பணம் சம்பாதிக்க பெர்ஹான்ஸா ஆசைப் பட்டார். அவர்களிடம் தேவைக்கு அதிகமாக உருளைக் கிழங்குகள் இருந்தன. வண்டியில் மூட்டை மூட்டையாக

அக்கிழங்கை ஏற்றினார். அந்த மூட்டைகள் மீது சில காய் கறிகளையும், நல்ல கனி வகைகளையும் ஏற்றிக்கொண்டார். அவற்றையெல்லாம் நகரில் விற்கத் திட்டமிட்டார்.

அந்தப் பிரயாணம் அவர்களுக்கு அரிய அனுபவமாக அமைந்தது. சமவெளியில் முன்பு ஏதும் இருந்திரா இடங்களிலெல்லாம் புதிய வீடுகள் எழும்பியிருக்கக் கண்டனர். அப்போது தான் பிடித்த மீனையும், உருளைக் கிழங்கையும் வேகவைத்துத் தயாரிக்கப்பட்ட உணவை உண்ட பின் முதல் நாளிரவு வெட்ட வெளியிலேயே அவர்கள் படுத்தனர். அதைவிட ஆனந்தம் வேறு உண்டா? மறுநாள் நகருக்குப் போய்ச் சேர்ந்துவிட்டனர். சுற்றுவட்டாரத்தில் அங்குத்தான் ஒரு சில கடைகள் இருந்தன.

பகல் பூராவும் தத்தம் அலுவல்களைத் தனித்தனியே கவனிக்க அவர்கள் பிரிந்தனர். வீடு வீடாகச் சென்றார் பெர்ஹான்ஸா. உருளைக்கிழங்கு தேவையா என்று மலர்ந்த முகத்துடன் ஒவ்வொரு வீட்டிலும் வினவினார். இலேசில் எவரும் வாங்க முன்வரவில்லை. நகரின் மறு கோடியில் இருந்த ஒரு மண்பத்தை வீட்டில் தான் நல்ல வாடிக்கை கிடைத்தது. அங்குத் தன் இரு மகன் களுடன் சிறியதொரு கோழிப்பண்ணையை நடத்தி வந்தாள் ஒரு விதவை. அவளுடன் சிறிது நேரம் பேசியபின் ஒன்பது தட்டு உருளைக் கிழங்குகளைக் கொடுத்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாக மூன்று கோழிக் குஞ்சுகளை பெற்றுக் கொண்டார் பெர்ஹான்ஸா. அந்தப் பேரம்பற்றி அவருக்கும் அந்த விதவைக்கும் மிகுந்த திருப்தி. இரவு உணவுக்கு அங்கேயே தங்கும்படி அவரை அவள் அழைத்தாள். பெர்ஹான்ஸாவும் அதற்கு இசைந் தார். அந்த வீட்டினுள் நுழைந்தபோது அவர் அடைந்த வியப்பு இவ்வளவு அவ்வளவு அல்ல. ஏனெனில், அதன் சுவர்கள் வெண்மையாக, பால்போல் பளிச்சிடுவனவாக இருந்தன. மண்பத்தை வீட்டில் இப்படிச் சுவர்களை வெள்ளையாக வைத்திருப்பது எப்படி என்று அவளை அவர் வினவினார். தண்ணீரில் சுண்ணாம்பைக் கலந்து பூசினால் இப்படி அழகிய வெண்ணிறம் அமைந்து

விடுமென அவ் விதவை அவருக்கு விளக்கினள். சாப்பாடு முடிந்ததும் கொஞ்சம் சுண்ணும்பு வாங்கி விடுவதென உடனே தீர்மானித்தார் பெர்ஹான்ஸா.

வயிறு நிறையச் சாப்பிட்டானதும் நேராக மரக் கடைக்குச் சென்றார். அக் கடையின் சொந்தக்காரர் ஒரு நார்வீஜியர். பெர்ஹான்ஸாவின் உருளைக் கிழங்குகள் மொத்தத்தையும் வாங்கிக்கொள்ள அவர் சம்மதித்தார்; பதிலுக்கு, ஹான்ஸாவுக்குத் தேவைப் பட்ட சுண்ணும்பு, அவர் எதிர்பார்த்ததையும்விட அதிக மான மரங்கள் ஆகியவற்றை மட்டுமன்றிக் கொஞ்சம் ஆணிகளையும் தந்தார். பிறக்கப்போகும் குழந்தைக்குக் கட்டில் செய்யத் தேவையான அளவுக்கு அம்மரங்கள் இருந்தன.

பலசரக்குக் கடைக்கு அவர் திரும்பியபோது, மற்ற வர்கள் தத்தம் கொள்முதலை முடித்துவிட்டுப் பண்டங்களை வண்டிகளில் ஏற்றிக் கொண்டிருந்தனர். பெர்ஹான்ஸாவும் பற்பல சாமான்களை வாங்கினார். ஆனல் பணம் தீர்ந்து விட்டபடியால் விரைவில் அவரது கொள்முதல் முடிந்துவிட்டது. ஒரு வலை பின்னுவ தற்காக ஏராள நூலை அவர் வாங்கினார். அது எதற்காக என்பது மற்றவர்களுக்குப் புரியவில்லை. அவர்கள் இப்போது செம்படவர்களாகி விட்டார்களா, என்ன? மாரிக்காலத்திற்குத் தேவையான பெரிய சாமான்கள் அனைத்தையும் வாங்கப் புகுமுன்பு பெரெட்டுக்காகச் சில சிறிய பொருள்களையும் அவர் வாங்கினார்.

அதன்பின் வீட்டுக்குத் திரும்பப் புறப்பட்டனர் அவர்கள். சமுத்திரத்தில் சென்று பழக்கப்பட்ட அவர்கள் அந்த வெற்றுச் சமவெளியில் நெடுந்தூரம் செல்வதை அனுபவித்து மகிழ்ந்தனர்.

பெர்ஹான்ஸா தங்களிடை இல்லாதது அவரது பிள்ளைகளுக்கு என்னவோ போலிருந்தது. வாயே திறவாத தாயுடன் நாள் முழுவதும் அவர்கள் அடை பட்டுக்கிடக்க வேண்டியிருந்தது. ஆகவே அவர்களிடை அடிக்கடி சண்டைகள் மூண்டன. தந்தை எப்போது திரும்புவாரென நாட்களை எண்ணலாயினர்.

வெகு தொலைவில் வந்து வசிப்பது எவ்வளவு பயங்கரம் என்பதுபற்றி நாளுக்கு நாள் அதிகம் எண்ணத் துவங்கி விட்டது காரணமாக பெரெட் ஆழ்ந்த மௌனம் வகிக்கலானாள். அவளுடைய பிள்ளைகள் இந்தியர் போலவே வளரலாயினர். அவர்கள் ஒவ்வொரு முறை சண்டை யிடும்போதும் அவளது துக்கம் அதிகரித்தது. இம்மாதிரி வாழ்வது சரியல்ல, அனைவரும் நாளடைவில் மிருகமாகிவிடுவர் என்று எண்ணினாள் அவள். ஆண்டவனின் விருப்பத்துக்கு மாறாக நடக்கிறோம் என்பதை பெர்ஹான்ஸா உணரவில்லையா? மக்கள் வாழ்வதற்காக இப் பிரதேசத்தை ஆண்டவன் படைக்கவில்லை என்பது திண்ணம்---அங்கிருந்து தாங்கள் எப்படித் திரும்புவது என்பது குறித்து அவள் சிந்திக்கத் தொடங்கிவிட்டாள். விஷமம் செய்யத் திட்டமிடும் குழந்தையினுடையது போல அப்போது அவள் முகம் மாறி விட்டது. தங்களோடு கொண்டுவந்திருந்த பெரிய பெட்டியைத் திறந்து, அதில் மிகுந்த ஜாக்கிரதையுடன் பொருள்களை அடுக்கி வைக்கலானாள். அந்த வேலையாவது முடியட்டுமே என்பது அவள் எண்ணம்! விவிலிய நூலையும், பிரார்த்தனைப் புத்தகத்தையும் அதில் எடுத்து வைத்தபின் அவனுடைய பள்ளிப் புத்தகங்களையும் கொண்டு வருமாறு ஹான்ஸை ஏவினாள்.

''என்ன செய்துகொண்டிருக்கிறாய், அம்மா?'' என்று அவன் கேட்டான்.

''திரும்பிச்செல்ல நாம் ஏற்பாடு செய்ய ஆரம்பிக்க வேண்டும். மழைக்காலம் வருமுன் மக்கள் வாழுமிடத்துக்கு நாம் சென்று விடவேண்டும்'' என்று அவள் வருத்தத்துடன் பதிலளித்தாள்.

ஹான்ஸினால் தன் காதுகளை நம்பமுடியவில்லை. ''இதற்கு அப்பா என்ன செய்வார்?'' என்பதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. அடித்துவைத்த சிலைபோல் அங்கேயே நின்றான்.

பெரெட்டின் வயிற்றினுள் இருந்த சிசு புரண்டு கொடுக்கத் தொடங்கிவிட்டது. அவனும்கூடத் திரும்பிச் செல்வதை எதிர்த்து உதைப்பதாக அவள் அதற்குப்

பொருள் கற்பித்துக் கொண்டாள். அந் நிலையில் தன்னால் ஏதும் செய்வதற்கில்லை என்பதைக் கண்டாள். இங்கேதான் தன்னந்தனி யொருத்தி, ஆண்டவன் தன்னிடம் சகல தியாகங்களையும் கேட்கிறார் என்று முடிவு செய்தாள். அந்த வெட்டவெளியை மீண்டும் நோக்க மெதுவாக வெளியே நடந்து சென்றாள். அவளை ஹான்ஸ் பின்தொடர்ந்து, அணைத்துக்கொண்டான். தனிமை அடர்ந்த அந்தச் சமவெளியின் மையத்திலே அவ் விருவரும் விம்மிவிம்மி அழத் தொடங்கினார்கள்.

ஆனால் அதற்குப்பின் வெகு விரைவில் ஆடவர்கள் வீடுதிரும்பிவிட்டனர். பெர்ஹான்ஸாவிடம் ஆனந்தம் பொங்கி வழிந்தது. செய்திகளும் நிரம்பித் ததும்பின. அந்த விவரங்களைக் கேட்டதில் தங்கள் துக்கங்களை அனைவரும் மறந்துவிட்டனர். அவருக்காகப் பெரு விருந்து சமைக்கையில் பெரெட்டும்கூட முகம் மலர்ந்தாள்.

எல்லோருக்கும் நிறைய வேலை இருந்தது. பையன்கள் படுக்கச் சென்றபின் சுண்ணும்பைப் பற்றியும் வலையைப் பற்றியும் பெரெட்டினிடம் பெர்ஹான்ஸா கூறினார். ஸியூக்ஸ் நதியில் அந்த வலையைக்கொண்டு மீன் பிடிப்பது தான் தன் திட்டமாயினும் வாத்துக்களையும் பிடிக்கலா மென நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்தார். அது அவருடைய பிள்ளைகளுக்கு ஆச்சரியம் அளிக்காதா? பெரெட் தூங்கத் தொடங்கிவிட்டாள். ஆனால் அவரோ இரவு முழுதும் கண் விழித்து வலையைப் பின்னினார். காலைக்குள் அது தயாராகிவிட்டது. காலைச் சிற்றுண்டி முடிந்ததும் அந்த வலையுடனும், நதி அருகில் வசித்த ஏழைகளுக்காக உருளைக் கிழங்குடனும் குதிரையேறிப் புறப்பட்டார். மறுநாள்வரை அவர் திரும்பமாட்டார். எனவே பெரெட் மீண்டும் தனிமையில் விடப்பட்டாள். எனினும் இம்முறை ஏதனாலோ அவருக்கு அவ்வளவு மோசமாகப் படவில்லை.

2

அக்டோபரில் மறுபடியும் பனி பொழியத் தொடங்கிற்று கையில் ஒட்டாத பனி அது. சூரியன் வழக்கம் போல் காலையில் உதித்து நாள் பூராவும் கதிர்களை வீசிய போதிலும் எதையும் அதனால் சூடேற்ற முடியவில்லை. மாலைவரையில் பலவீனமாகவே இருந்தது அதன் வீச்சு. அஸ்தமன சமயத்திலோ தங்கத்தையும் செந்நிறத்தையும் வாரியிறைத்தது அது. இவ்வாறே ஒவ்வொரு நாளும் அமைந்தது. எவ்வித மாறுதலும் இல்லாமல் பல நாட்கள் கழிந்தன. பின்னர் ஒரு நாள் சூரியன் உதிக்கவேயில்லை. அந்தச் சூரியவெளியில் சாம்பல்நிறம் செறிந்தது; அமைதியில் ஆழ்ந்தது அது.

பிற்பகலில் மீண்டும் ஓயாமல் பனி பெய்தது. அன்றிரவும் மறுநாளும்கூட விடாமல் பனி மழை தொடர்ந்தது. வெண்பனியும் காற்றும் அலைத்த அந்தச் சாகரத்தில் அக். குடியேற்றக்காரர்கள் மேலும் தனிப்பட்டனர். அவை யிரண்டையும் தவிர அங்கு அப்போது வேறேதுமேயில்லை.

அந்தக் குளிர்காலம் தொடங்குவதற்கு முந்திய சில நாட்களில் பெர்ஹான்ஸாவும் அவரது பிள்ளைகளும் ஓயாமல் உழைத்தனர். ஆனால் அவர்களுடைய வேலையிலோ, அதுபற்றிய பேச்சிலோ பெரெட்டினால் பங்கு கொள்ளமுடியவில்லை. மேன் மேலும் பேச்சற்றுப் போனாள் அவள்; மௌனமும் இருளும் மிகுந்த தன் கற்பனையுலகிலேயே வசிக்கலானாள்.

பெர்ஹான்ஸா புரிந்த சாதனைகள் பற்பல. வெளியில் பொழிந்திருந்த பனி போலவே சுண்ணாம்பு கொண்டு அவர் வெள்ளையடித்திருந்த சுவர்கள் பிரகாசித்தன. இரு பிள்ளைகளையும் ஸியூக்ஸ் நதிக்கு அழைத்துப் போய் மீன் பிடித்தார். ஏராள மீன்களுடன் திரும்பி வந்தார். அம்மீன்களில் ஒரு பகுதி வீட்டுக்கு வெளியே புதைக்கப்பட்டுப் பனியினால் உறையச் செய்யப் பட்டிருந்தது. இன்னொரு பகுதியை உப்புப் போட்டு, பீப்பாய்களில் அடக்கம் செய்து, அந்த நீண்ட குளிர்காலத் தேவைகளுக்

காகக் சேமித்து வைத்திருந்தார். நகருக்குச் சென்று திரும்பியதும் பெர்ஹான்ஸா பின்னிய வலையுடன் வாத்து வேட்டைக்கும் அவர்கள் சென்றனர். அந்தக் குளம் பனியினால் உறையும் வரையில் தினந்தோறும் வேட்டையாடினர். அதன் பயனாக அவர்களது சாப்பாட்டுக்கு உதவிய பிறகும் மீதமாகுமளவு வாத்துக்கள் சேர்ந்து விட்டன—மன்னர்களைப் போலவே தாங்கள் சம்பிரமமாகச் சாப்பிடுவதாகச் சந்தோஷப் பட்டார் பெர்ஹான்ஸா.

அந்தச் சமயத்தில் தங்கள் அண்டை வீட்டுக்காரர்களை அவர்கள் அதிகமாகச் சந்திக்க வில்லை. ஏனெனில், பெர்ஹான்ஸாவைப் போலவே அவர்களும் குளிர்காலத்துக்கு ஏற்பாடுகள் செய்வதில் முனைந்திருந்தனர். மேலும் பெரெட் மௌனம் வகித்து விசித்திரமாக நடந்து கொண்டபடியால் வந்து பார்க்க அவர்களுக்குப் பிடிக்கவுமில்லை. எனினும் ஏராள வாத்துக்களை பெர்ஹான்ஸா பிடித்து வந்திருக்கிறார் என்பதைக் கேள்விப் பட்டு அவற்றில் சிலவற்றைப் பெற்றுப் போக ஒரு நாள் அவர்கள் வந்தனர். ஆனால் அவற்றைப் பிடித்தது எப்படி என்பதை அவர்களுக்கு பெர்ஹான்ஸா சொல்ல மறுத்து விட்டார்.

வீட்டினுள் வந்து வெண்சுவர்களைக் கண்டபின் வாத்துக்களைப் பற்றிய விஷயத்தையே அவர்கள் மறந்து விட்டார்கள். தங்கள் கண்ணால் கண்ட காட்சியை அவர்களால் நம்பவே முடியவில்லை. குறிப்பாக, பெண்டிருக்கு மிகுந்த மகிழ்ச்சி. அம்மாதிரியான ஏற்பாடுகளைச் செய்யும் கணவன் கிடைத்தது அவளது அதிருஷ்டமேயென பெரெட்டினிடம் அவர்கள் கூறினர். பெரெட்டுக்கும் ஒரு விதத்தில் சந்தோஷம்தான். எனினும் எதுவும் அவளை அதிகம் மாற்ற முடியவில்லை. வெளியில் விழுந்திருந்த சமவெளியைப் போலவே தன் உள்மனத்திலும் இருளும், குளிரும் அடர்ந்திருப்பதை அவள் உணர்ந்தாள்.

பருவநிலை மிகவும் மோசமானதும் தனக்கு வெகு நாளாகத் தேவைப்பட்ட ஓய்வை பெர்ஹன்ஸா எடுத்துக்

கொண்டார். விலாப்புடைக்கச் சாப்பிட்டு விட்டு, அயர்ந்து தூங்கினர். அப்படியும் கூடப் போதிய அளவு உறங்கமுடியவில்லை. ஆனல் சில நாட்களுக்குள் அவ்வாறு சோம்பி உட்கார்ந்திருப்பது அவருக்கு அலுப்பாய் விட்டது. ஒரு நாளைப் போலவே மறுநாளும் இருந்தால் சலிப்புத்தட்டாதா? அவ்வப்போது கொஞ்சம் விறகை வெட்டிப் போடுவது தவிர வேறு வேலையே கிடையாது. பனியோ விடாமல் பெய்து கொண்டே யிருந்தது; மற்ற வீடுகளைக் கூடக் காணமுடியாமல் எங்கும் வெள்ளைக் கம்பளத்தைப் போர்த்தியது அது. பையன்களுக்கும் செய்வதற்கு ஒரு வேலையுமில்லை. அது காரணமாக அவர்கள் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டனர். படிப்பதற்காக எப்போதாவது தங்கள் புத்தகங்களைக் கையில் எடுப்பர். என்ன இருந்தாலும் சிறு பிள்ளைகள் தாமே அவர்கள்? ஆகவே படிப்பிலும் புத்திசெல்லாது.

பெரெட்டினல் இப்போதெல்லாம் வெளியே போக முடிவதே யில்லையாதலால் அவர்களுடைய அண்டை வீட்டுக்காரர்கள் சில சமயம் அங்கே வருவார்கள். பிறக்கப் போகிற குழந்தைக்காகச் சில புதிய சட்டைகளை க்ஜெர்ஸ்டி பின்னித் தந்தார். சிவப்பு, வெளுப்பு, நீல நிறங்களில் அழகான குல்லாய் செய்து கொடுத்தாள் ஸாற்றிஞ; அவற்றையெல்லாம் ஜாக்கிரதையாக எடுத்து வைத்தபோது பெரெட் உவகைக் கண்ணீர் உகுத்தாள்.

வேலையேது மின்றி உட்கார்ந்திருப்பதால் அவனை முன்னிலும் அதிகமாகக் கவனிப்பதற்கு பெர்ஹான்ஸா வுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் கண்டதெல்லாம் துயரக் காட்சியாகவே இருந்தது. இம்முறை அவள் மிக மெலிந்தும் வெளுத்தும் காணப்பட்டாள். மற்றக் குழந்தைகள் பிறந்த போது அவள் இவ்வளவு மௌனத்துடனும் வருத்தத்துடனும் இருந்ததாக அவருக்கு நினைவில்லை. அவள் ஏன் இன்னும் அதிகம் சாப்பிடக் கூடாது? உணவுவகைகள் நிறைய இருக்கின்றனவே! அவ்வாறு எண்ணி ஒரு நாள் அவளது தட்டில் பெரிய மீன் துண்டமொன்றை அவர் வைத்தார். ஆனல் அவளோ அதில் ஒரு சிறிது மட்டுமே தின்றபின் மேஜையிலிருந்து எழுந்து

விட்டாள். ''உம், உணவினுல் ஆவது அதிகமில்லை'' என்றுள் அவள்.

இரவில் பெரும்பகுதி விழித்துக் கொண்டே கிடந்தாள். எப்போதும் அவளுக்கு முன் பெர்ஹான்ஸா படுக்கச் சென்று விடுவார். காலையிலோ அவர் எழுந்திருக்கு முன்பே அவள் விழித்துக் கொண்டு விடுவாள். தனக்குப் பக்கத்தில் படுத்திருந்த அவள் ஒரு நாளிரவு ஓயாமல் அழுவதைக் கேட்டு பெர்ஹான்ஸா எழுந்தார். ஏன் என்று விசாரித்த போது, சிறுவன் ஹான்ஸுக்கு உடல்நலமில்லை என்று அஞ்சுவதாக அவள் பதிலளித்தாள். ஆனுல் உண்மையில் அவனுக்எகுவ்விதக்கோளாறும் இல்லை.

தன் தோற்றம் பற்றி மிகுந்த அக்கறை காட்டுபவள் அவள். எப்போதும் அவளிடம் தூய்மை துலங்கும்; கச்சிதம் காணப்படும். இப்போதோ அவள் குளிப்பது கூடக் கிடையாது. தலை மயிரைச் சீவுவதையும் அறவே விட்டு விட்டாள். அவள் ஆடைகள் அழுக்கடைந்தும் கிழிந்தும் இருந்தன. அதையெலாம் பற்றி பெர் ஹான்ஸாவினுல் ஏதும் சொல்ல முடிய வில்லை. எப்பொழுதும் சுத்தமாக இருந்து வந்திருக்கும் அவள் இப்படி முற்றிலும் மாறி விட்டாளே என்று மனம் நொந்தார். காரணம் கண்டுபிடித்துச் சமாதானம் காண விழைந்தார். ஆனுல் வேறு வேலையே இல்லாமல் அவர் சும்மா உட்கார்ந்திருக்க நேர்ந்திருந்ததால் அற்பவிஷயங்களையும் கூட அவரால் கவனிக்காதிருக்க முடியவில்லை. எப்படித்தான் அவர் பேசிய போதிலும், என்னதான் சொன்ன போதிலும் அவள் மனம் எங்கோ தொலைவில் திரிவதாக அவருக்குத் தோன்றியது. இறுதியில், அவளால் மாற முடியாது. எதிர்காலம் பற்றித் தான் கண்ட பொற் கனவுகளை அவளால் காண இயலாது என்பதை உணர்ந்தார். என்ன செய்வது அவர் ?

மேலும், மறதி அதிகமாகிப் பண்டங்களைக் காணுமலடிப்பது அவளுக்கு சகஜமாகி விட்டது. எதையாவது ஓரிடத்தில் வைப்பாள். பின்னர் திரும்பி, அந்தச் சிறுவீடு முழுவதிலும் அதைத் தேடுவாள். அதை எங்கே வைத்

தோம் என்பது அவளுக்கு நினைவே இராது. அம் மாதிரி அவள் அல்லாடுவது கண்டு மற்றவர் சிரிக்கும் போது அவளுக்கு அழுகை வந்து விடும். குழந்தை பிறந்ததும் இதெல்லாம் மாறிவிடும் என்று தனக்குத்தானே சமாதானம் கூறிக் கொள்வார் பெர்ஹான்ஸா. அதற்கு அவர்கள் வெகு நாள் காத்திருக்க வேண்டியிருக்கவில்லை.

குளிர் காலத்தின் கடுமை கூடலாயிற்று. எப்போதும் பனி பெய்தவாறு இருந்தது. கடுங்காற்றும் விடாமல் அடித்தது. சிவப்பு, மஞ்சள், பச்சை போன்ற பலவர்ண ஒளிக்கிரணங்களை எங்கும் நிறைத்துச் சூரியன் அஸ்தமனமாகும் மாலை வேளைகள் மட்டுமே இன்னமும் அழகாயிருந்தன. அதையடுத்து, களங்கமேது மற்ற சந்திரன் எழும்; அந்தத் தனிமை நிலவும் வான வெளியில் மௌனமாகத் தொங்கும் தங்கக் கோளம் போல் தோற்றம் அளிக்கும் அது.

ஸியூக்ஸ் நதி தீரத்தில் வசித்த ட்ராண்டெர்களைச் சென்று பார்க்க பெர்ஹான்ஸா விரும்பினார். ஆனால் இயலாது என்பதையும் உணர்ந்தார். எனவே, மேஜை முன் அமர்ந்தவாறு பெரெட்டைப் பார்த்துக் கொண்டேயிருந்தார். குளிரினால் அவள் மிகுந்த வாதைப் படுவதைக் கண்டு, கணப்பு எப்போதும் சூடாயிருப்பதில் மிகுந்த சிரத்தை செலுத்தினார். அப்படியும் அவள் பாதங்கள் குளிரால் விறைத்தன. அவற்றை எப்போதும் கதகதப்பாக வைத்திருக்கக் கூடிய மரக்கட்டை ஜோடுகளை அவளுக்குச் செய்துதரத் தீர்மானித்தார். கவனமாகச் செதுக்கி மிகவும் சீரானதொரு ஜதையைத் தயாரித்து அவளது பாதங்களில் பொருத்தினார். அதனால் அவள் மகிழ்ச்சி அடைந்த போதிலும், ''இதுபற்றி நீங்கள் முன்னமேயே யோசித்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இந்த மாரிக்காலம் முழுவதும் குளிரால் விறைத்த கால்களுடன் நான் நடமாட நேர்ந்திராது'' என்றே சொன்னாள். அவரைக் குற்றம் கூறவேண்டும் என்றெண்ணி அவள் அவ்வாறு சொல்லவில்லை. மனத்தில் பட்டதையே ஒளிக்காமல் கூறினாள். ஆனால் அதைக் கேட்டதும் பெர்ஹான்ஸாவுக்குக் கதறி அழவேண்டும் போலிருந்தது.

பிறகு ஒரு நாள் கோபமடைந்த பெர்ஹான்ஸா விடமிருந்து அது வெடித்துக் கொண்டு வெளிவந்தது. தான் செய்வதென்ன என்பதே அவருக்குத் தெரிய வில்லை. கிருஸ்துமஸைப் பெற்ரேருடன் கொண்டாடும் பொருட்டு மின்ன ஸோட்டாவுக்குத் திரும்பத் தாங்கள் திட்டமிட்டிருப்பதால் வஸந்த காலம் வரையில் தங்க ளுடைய பசுவைப் பார்த்துக்கொள்ள முடியுமா என்று கேட்பதற்காக பெர்ஹான்ஸாவிடம் ஹென்றி ஸோலம் அன்று வந்திருந்தார். அவர்கள் எங்குச் செல்லவிருக் கின்றனர் என்பது காதில் விழுந்ததும் பெர்ஹான்ஸா துள்ளி எழுந்தார். "அந்தக் கிழப் பசுவையும் உங்க ளுடன் அழைத்துச் சென்றுவிடு. ஹென்றி! உங்கள் பாலில் ஒரு சொட்டுக்கூட எங்களுக்கு வேண்டாம்" என்று அவர் கூறினர். அதற்குப் பிறகும் சற்று நேரம் பொறுமையாகப் பேசிக் கொண்டிருந்தபின் ஹென்றி சென்று விட்டார். ஜன்னல் வழியாக வெளியே பார்த் தவாறே பெர்ஹான்ஸா வெகு நேரம் உட்கார்ந்திருந் தார். இறுதியில், ஸோலம் சகோதர்கள் செல்வதேன் என்பது தனக்குத் தெரியும் என்ருள் பெரெட். "இங்கு யாரால் என்ன செய்யமுடியும்?" என்று அவள் கேட்டாள்.

"என்னது? இரண்டு பலசாலிகளுக்கா இங்கு வேலை இல்லை? நோயாளிப் பெண்போல நாள் முழுதும் நான் இங்கு உட்கார மட்டும் நேராதிருந்தால் ஒரு பண்ணைக்கும், மற்றும் வீடு, பண்டசாலைக்கும் தேவை யான அளவு மரங்களை இதற்குள் வெட்டி வந்திருப் பேனே!" என்ருர் பெர்ஹான்ஸா.

"அப்படியாளுல் அவ்வாறு செய்வதற்கு என்ன தடை?" என்று எப்போதும் போன்ற அடக்கமான முறையில் பெரெட் வினவினுள்.

"என்னவா, அதை நீ கேட்க வேறு வேண்டுமா? உன்னை இந்த நிலையில் என்ஞல் விட்டுச் செல்ல முடியுமா?"

இன்னமும் அமைதியான முறையிலேயே பெரெட் பேசினுள். "ஓ, அப்படியா! என்னுடைய இந்த நிலைக்கு

நீங்கள்தான் முழுதும் காரணம். எனக்காக நீங்கள் இங்கே தங்கித் தவம் கிடக்கத் தேவையில்லை.''

அது கேட்ட பெர்ஹான்ஸா இரைய ஆரம்பித்து விட்டார். அவரது பெருங் கூச்சலால் பையன்கள் பயந்து துள்ளினர். அன்ன மேரியோ அன்னையின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழத்தொடங்கி விட்டாள். தன் குல்லாவையும் கோட்டையும் எடுத்துக் கொண்டு வெளியே ஓடினார் பெர்ஹான்ஸா. பையன் களுக்கு இரு ஜோடி சறுக்கல் கட்டைகளைத் தயார் செய்து கொண்டு அன்று பகல் பூராவையும் வெளி யிலேயே கழித்தார். மறுபடி அவர் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது இரவுச் சாப்பாடு தயாராய் மேஜைமீது வைக்கப் பட்டிருந்தது. ஆனால் அதை எடுத்துப் போடாமல் படுக்கச் சென்றுவிட்டாள் பெரெட். சாப்பிட்டபின் அவர் மீண்டும் வெளியே சென்றார். ஹான்ஸ் ஒல்ஸாவின் வீட்டுக்குப்போய், அன்றிரவு பெரெட்டுடன் தங்குமாறு ஸாற்றினைவைக் கோரினார். ஒவ்வொரு நாளும் தன் குடும்பத்தினரையன்றி வேறெவ ரையும் காணாதிருப்பதால் அவள் தனிமையால் வாடுவ தாகக் கூறினார். உடனே பெரெட்டைக்காண ஸாற்றினா புறப்பட்டாள்; ஹான்ஸ் ஒல்ஸாவுடன் பேசுவ தற்காக பெர்ஹான்ஸா தங்கினார். ஆனால் அவர் அவ் வீட்டினுள் நுழைந்த அக்கணமே மிகவும் கலங்கிக் குமுறியவராய் டோன்ஸெடன் ஓடிவந்தார். ஸோலம் சகோதரர்கள் கிளம்பிச் செல்வதுபற்றி "அவர் கேள்விப் பட்டதன் விளைவுதான் அந்தக் கடுகடுப்பு. அவர்கள் செல்வதற்கு பெர்ஹான்ஸாவும், ஹான்ஸ் ஒல்ஸாவும் தான் காரணமென அவர் குற்றம் சாட்டினார். மாரிக் காலத்தில் தங்கள் குழந்தைகளுக்காகப் பள்ளிக்கூடம் நடத்தும்படி ஹென்றி ஸோலத்தை அவர்கள் கேட் டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிராது என்றார். தனக்குப் பிள்ளை குட்டியில்லை எனினும் அச்சகோதரர்களை இருத்தி வைத்திருப்பதற்காகக் கொஞ்சம் பணம் கொடுக்கத் தயாரெனவும் தெரிவித்தார். ஏனெனில், அவர்கள் புறப்பட்டுச் சென்றால் திரும்பி வருவது அருமையென அஞ்சுவதாக உரைத்தார்.

அது பற்றி ஹான்ஸ் ஓல்ஸா சிறிது நேரம் சிந்தித்தார். பின்னர் ஸோலம் சகோதரர்களைச் சென்று பார்க்கச் சம்மதித்தார். ஹென்றியிடம் தான் கூறியது பற்றி பெர்ஹான்ஸாவுக்கு ஞாபகம் வந்தது. எனினும் அவரும் ஹான்ஸ் ஓல்ஸாவுடன் சென்றார். சரியான சமயத்தில்தான் அவர்கள் போய்ச் சேர்ந்தனர்; சகோதரர் இருவரும் புறப்படுவதற்காக அப்போது மூட்டை கட்டிக் கொண்டிருந்தனர். அவர்கள் வெகு நேரம் பேசினார்கள். அங்கேயே தங்க ஸோலம் சகோதரர்களுக்கு முதலில் இஷ்டமில்லை. எனினும் அங்குத் தங்கிச் சிறிது பாடம் சொல்லிக் கொடுக்கக் கடைசியில் இசைந்தனர். ஒவ்வொரு குடும்பத்துடனும் ஒரு வாரம் அவர்கள் தங்குவது என்றும், அப்போது அவர்களுக்குச் சாப்பாடு போடுவதுடன் அவர்களுடைய துணிகளைப் பெண்டிர் தைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடாயிற்று. இதன் பயனாகத் தங்கள் தனிமையுணர்வு தணியுமென அவர்கள் எதிர்பார்த்தனர்.

பகல்பொழுது உற்சாகமூட்டுவதாக இருந்தாலும் சரி, எங்கும் சாம்பல் நிறம் அடர்ந்து சோகமயமாக இருந்தாலும் சரி, தன் குடிசையின் இருண்ட திரையைப் பார்த்தவாறே பெரெட் ஒவ்வொரு நாளையும் கழித்தாள். இருளைத் தவிர வேறெதையும் அவள் பார்க்கவில்லை. சூரிய ஒளி வீட்டினுள் பரவவே விடவில்லை. தான் பாவம் செய்து விட்டதாகவும், வெறுமையும் இருட்டும் நிலவும் இங்கு அனுப்பியதன் மூலம் கடவுள் தன்னைத் தண்டிப்பதாகவும் எண்ணலானாள்; நாளுக்கு நாள் அந்த எண்ணம் வலுத்தது. பாவம் செய்துவிட்டோம்; ஆனால் அதைச் செய்யும்படித் தன்னை யாரும் கட்டாயப் படுத்தி விடவில்லை என்றும் நினைத்தாள்.

பெர்ஹான்ஸாவை மணக்கு முன்பே அவர்களுக்கு ஓல் பிறந்து விட்டாள் என்பது உண்மையே. எனினும் அதன் பிறகும் அவரை அவள் மணப்பதை அவளது பெற்றோர் எதிர்த்தனர். குழந்தையுடன் கூடவே அவளைத் தங்கள் வீட்டில் திரும்பிச் சேர்த்துக் கொள்ளத் தயாராயிருந்தனர். ஆனால் அவளால் பெர்ஹான்

ஸாவைப் பிரிந்து வாழ முடியவில்லை. தன் பெற்றோரின் வார்த்தைகளை அவள் காதில் போட்டுக் கொள்ளவே யில்லை. அவர்கள் தனக்காகச் செய்ய முயன்றதெல்லாம் அவளுக்கு நினைவு வந்தது. பெர்ஹான்ஸாவுடன் செல்லும் பொருட்டு அவர்களைத் தான் புறக்கணித்த தையும் எண்ணிப் பார்த்தாள். அவர்கள் மனத்தை எப்படி முறித்து விட்டாள் அவள்! ஆம், தான் பாவம் செய்தவளே; அதற்குத்தான் இந்த தண்டனை என்று அவள் முடிவு காட்டினாள்.

அமெரிக்காவுக்குச் செல்ல பெர்ஹான்ஸா ஆசைப் பட்டபொழுது அவரிடம் அவளது தந்தை வந்தார். தங்கள் பெண்ணை எக்காலத்துக்கும் தொலைவில் அழைத்துச் சென்று விடாமல் தங்கள் அருகிலேயே தங்கச் சம்மதித்தால் தன்னுடைய படகு, மீன் பிடி கருவிகள் போன்ற எல்லா உடைமைகளையும் தந்து விடுவதாக அவர் கூறினார். ஆனால் தனிமையில் விடப்பட்ட தன் பெற்றோ ரையும், தனக்காக அவர்கள் சிந்திய கண்ணீரையும் சிந்திக்காமல் பெர்ஹான்ஸாவுடன் அவள் சந்தோஷ மாகப் புறப்பட்டு விட்டாள். அமெரிக்காவை நோக்கிப் பயணமாயினர் இருவரும்—அதைவிடப் பெரிய பாவம் ஏதாவது உண்டா?

அமெரிக்காவில் மட்டும் அனைத்தும் நேர்த்தியாக அமைந்திருந்ததா என்ன? ஒவ்வொரு ரொட்டித் துண்டுக்காகவும் அவர்கள் பாடுபட்டு உழைக்க வேண்டி யிருந்தது. ஒவ்வொரு செயலிலும் ஆண்டவனின் கரத்தை அவள் காண முடிந்தது. இதுதான் தன் ஸதி யெனக் கண்டாள். அமெரிக்காவில் இலகுவில் அவர் கள் மேற்கே செல்ல வேண்டி வந்தது. அங்கேதான் நிலம் வளமாக இருந்தது; வாழ்க்கை வசதி இருந்தது. ஆகவே மிக அதிகமாக மக்கள் கூட்டம் மேற்குத் திசை யில் சென்றவாறு இருந்தது. இளைஞர் மட்டுமின்றி வயோதிகர்களும் சென்று கொண்டிருந்தனர். அங்கு தான் சுதந்திரம் காணலாம், நிறைய நிலம் பெற்றுச் சொந்தத்தில் பண்ணை நடத்தலாம் என்று அவர்கள் நினைத்தனர்.

தான் மீண்டும் கருவுற்றிருப்பதை அறிந்ததும் குழந்தை பிறக்கு மளவாகிலும் காத்திருக்கும்படி பெர்ஹான்ஸாவை பெரெட் வேண்டிக்கொண்டாள். ஆனால் ஹான்ஸ் ஒல்ஸா புறப்படச் சித்தமாகிவிட்டார். எனவே அவருடன் பெர்ஹான்ஸாவும் உடனே கிளம்பத் தான் வேண்டியிருந்தது. அவளிடம் அவர் அபார அன்பு பூண்டிருந்தாராகையால் அவர் இஷ்டத்துக்கு அவள் இணங்க நேர்ந்தது. எல்லாம் தன் பாவமே யன்றி அவருடையதல்ல; அதற்காகத்தான் தனக்கு இந்த தண்டனை என்று சோர்ந்தாள் அவள்.

தன் பாவம் பற்றி மேலும் மேலும் எண்ணலானாள். தான் விரைவில் இறந்துவிடுவோம் என்பதில் அவளுக்கு ஐயமே இருக்கவில்லை. பிரசவப் படுக்கையிலிருந்து எழுந்து வாழ மாட்டோம் என்றே தீர்மானித்து விட்டாள். தன் குடும்பத்தாரின் சமாதிகள் சூழ்ந்த புதை பூமியில் புதைக்கப்படும் பேறுகூடத் தனக்குக் கிடைக்காதே என்று வருந்தினாள். இல்லை, இந்தப் பரந்த, சூன்ய வெளியிலேயேதான் தனித்துக் கிடக்க வேண்டும் என்பதைக் கண்டாள். தன் சமாதி பற்றி பெர்ஹான்ஸாவுடன் பேசவேண்டும் என்று நிச்சயித்தாள். அதற்கு அவகாசம் அதிகமிராது. ஆம், தன் வாழ்நாட்களின் இறுதி அணுகி விட்டதென முடிவு செய்தாள். குடும்பத்தில் வெகு காலமாக இருந்து வந்த பெரிய பெட்டியில் தன் சடலம் அடக்கம் செய்யப்பட வேண்டுமென அவள் ஆசைப்பட்டாள். அப்படியானால் அவர்களுடைய பொருள்களை வைக்க வேறொரு பெட்டியைத் தேடியாக வேண்டும்—விரைவில் இதுபற்றி பெர்ஹான்ஸாவுடன் பேசிவிடுவதென உறுதி பூண்டாள்.

3

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன் தினம் இரவு பூராவும் பனி பெய்தது. மறுநாளும் இடைவிடாமல் பொழிந்தது. கிறிஸ்துமஸ் என்றே அதை எண்ண முடியவில்லை; அந்த அளவுக்கு வெளியே இருள் கவிந்திருந்தது.

பெர்ஹான்ஸாவின் வீட்டில் அனைவரும் காத்துக் கொண்டே கிடந்தனர். அது தவிர அவர்களால் செய்யக்கூடியது வேறேதும் இருக்கவில்லை. பெரெட்டுடன் க்ஜெர்ஸ்டி ஒருநாள் தங்கினாள். மறுநாள் ஸாற்றினா அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். பெரெட்டுக்குப் பிரசவக் காலம் சமீபித்து விட்டது.

எனினும் பெரெட்டைவிட பெர்ஹான்ஸாவுக்கே அதிக உதவி தேவையாக இருந்தது. தன் கண்களில் துன்பச் சாயலுடன் அவர் வளைய வந்தார். ஒவ்வொரு நாளும் ஹான்ஸ் ஓல்ஸாவின் வீட்டுக்குக் குழந்தைகள் அனுப்பப்பட்டனர். பகல் பொழுது பூராவையும் அங்கேயே கழிக்க அவர்கள் விரைவில் பழகிவிட்டனர். அவர்கள் இல்லாமல் வீடு வெறிச்சென்று கிடந்தது. எப்போதாவது பெரெட் முறுவலிப்பாள்; ஆனால் சோக முறுவலே அதுவும்.

கிறிஸ்துமஸ் தினத்தன்று நண்பகலில் வானம் வெளி வாங்கி, நீல நிறத்துடன் பிரகாசித்தது. அந்தப் பனி படர்ந்த சமவெளிமீது பொற்கோளம்போல் கதிரவன் ஒளிர்ந்தான். அன்று பிற்பகல் பிரசவப் படுக்கையில் பெரெட் படுத்திருந்தாள். குழந்தைகளெல்லாம் கிறிஸ்துமஸுக்காக ஹான்ஸ் ஓல்ஸாவின் வீட்டில் காத்திருந்தன.

(பிரசவத்தில் உதவ ஸாற்றினாவும் க்ஜெர்ஸ்டியும் வந்திருந்தனர். தன் மேற் சட்டையை எடுத்து அணிந்து கொண்டு பெர்ஹான்ஸா வெளியே சென்றார். எனினும் அவ்வப்போது வீடு திரும்பி, கதவருகில் காத்து நின்றார். பெரெட் அழுது கதறுவதை அவளால் கேட்க முடிந்தது. இறுதியில் அந்த அழுகுரல் அதிகம் கேட்காத பண்டசாலைக்கு அவர் செல்ல நேர்ந்தது. அங்கே க்ஜெர்ஸ்டி அவரைத் தேடி வந்தாள். பெரெட் அவரைப் பார்க்க விரும்புவதாகக் கூறினாள். எனவே, அவர் வீட்டிற்குள் செல்லும் படியாயிற்று.

பெரெட்டின் முகத்தைப் பார்த்துத் தாளமுடியவில்லை, பெர்ஹான்ஸாவினால்.) அந்த அளவு அச்சத்தை அதற்குமுன் அவர் கண்டதேயில்லை. தன் கணவனுடன் பேசுகையில் வெளியே சென்று இருக்குமாறு மற்றப்

பெண்டிரை பெரெட் கேட்டுக்கொண்டாள். அதன் பின் அவரிடம் கூறினுள்: ''இன்றிரவு நான் உங்களைப் பிரிந்து செல்லப் போகிறேன். நான் சென்றேயாக வேண்டும். இதுதான் என் முடிவு என்பது எனக்குத் தெரியும். என் பாவங்களைக் கண்டு பிடித்து என்னைத் தண்டிக்கிருர் ஆண்டவன். நான் இன்றி இனி நீங்கள் காலம் தள்ளியாக வேண்டும். க்ஜெர்ஸ்டியிடம் அன்னுவைக் கொடுத்து விடுங்கள்—குழந்தை வேண்டித் துடிக்கிருள் அவள். பையன்களை அழைத்துக் கொண்டு நீங்கள் வேறெங்காவது சென்றுவிட வேண்டும். அதற்கு உறுதி அளியுங்கள், பெர்ஹான்ஸா! மேலும், ஆழமாகக் குழி தோண்டி என்னை புதைக்கவேண்டும். ஏனெனில் இரவு நேரத்தில் இங்குத் தனிமையைத் தாங்க முடியவில்லை.''

அதற்குமேல் பெர்ஹான்ஸாவுக்குக் கேட்கப் பொறுக்கவில்லை. முகத்தை மூடிக் கொண்டு கதறலானுர்: ''என் அருமைக் கண்மணியே! இத்துன்பங்கள் யாவும் வெகு விரைவில் நீங்கிவிடும். நாளை மறுபடியும் நன்கு தேறி விடுவாய்.''

வலி தாள மாட்டாமல் மீண்டும் அவள் கூறினுள். ''இல்லை யில்லை, இன்றிரவு நான் இறக்கத்தான் போகிறேன். என்னைப் பெரிய பெட்டியில் அடக்கம் செய்யுங்கள். அதன்பின் வசந்த காலத்தின்போது இங்கிருந்து சென்றுவிடுங்கள். இங்கே தங்குவது பாவமேயாகும். மக்கள் மிருகமாக மாறி விடுகிருர்கள் இங்கு!'' வலி தாங்க முடியாமல் அவள் மறுபடியும் பேச்சைச் சற்று நிறுத்த நேர்ந்தது. பிறகு சொன்னுள்: ''போய்விடாதீர்கள். இங்கேயே தங்கி மீண்டும் என்னிடம் அன்பு காட்டுங்கள். குழந்தைகளுடன் நார்வேக்கு நீங்கள் திரும்பியாகவேண்டும். என்னை மன்னித்து விடுமாறு தந்தையையும், தாயையையும் கோருங்கள். பெரிய பெட்டியில் நான் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறேன் என்பதை அவர்களிடம் சொல்லுங்கள்.'' மறுபடியும் அந்த நள்ளிரவைத் துளைத்தவாறு அவள் கூறினுள்: ''ஓ, இதோ எனக்காக அவர்கள் வந்து விட்டார்கள்!''

பெர்ஹான்ஸா குதித்தெழுந்து கத்தினர், ''சைத்தானே, உன் பிடியில் இவள் சிக்கவே மாட்டாள்!'' வெளியில் இருந்த பெண்டிரை அவர் உள்ளேகூப்பிட்டார். அன்றிரவு யாரும் உறங்கவில்லை. இரவு பூராவும் பெரெட் ஓயாமல் அழுது அரற்றினர். அந்த அளவு வேதனையை அனுபவித்தபின் வேறெவராலும் உயிரோடு இருந்திருக்க முடியாது. ஆடவர் ஒவ்வொருவராக வந்து விசாரித்தவாறு இருந்தனர். பெண்டிரால் தலையை மட்டுமே ஆட்ட முடிந்தது. ''பிரார்த்தனைதான் செய்யலாம், அவ்வளவே'' என்றனர் அவர்கள். பெர்ஹான்ஸாவை ஓரிடத்திலும் காணமுடியவில்லை. ''ஆண்டவன் அவரிடம் இரக்கம் காட்டுவாராக!'' என்று இறைஞ்சினர் ஏனையோர்.

குளிரும் இருளும் அடர்ந்த அவ்விரவை அங்குமிங்கும் நடந்தவாறு பெர்ஹான்ஸா கழிக்கலானர். ஒவ்வொரு ஆண் மகன் வரும்போதும் அவர் அப்பால் சென்று விடுவார். யாருடனும் அவரால் பேச இயலவில்லை. கண்ணீர்அவரது கன்னங்களில் உறைந்து விட்டது. வீட்டிலிருந்து வெளிப்பட்ட ஒவ்வொரு கூப்பாடும் சாட்டை போல் அவரை அறைந்தது. ஆயினும் அதைப் பொருட்படுத்தாமல் கதவருகே அவர் திரும்பத் திரும்ப வந்து நின்றார். அங்கே அவருக்கு ஆறுதலாக ஸாற்றினவால் ஏதும் சொல்ல முடியவில்லை. ஏனெனில் நிலவரத்தில் மாறுதல் ஏதுமில்லை. அத்தனை வேதனைக்குப்பின் பெரெட்டினல் உயிர் வாழமுடியும் என்று அவர்களால் நினைக்கவும் முடியவில்லை.

இரவு பூராவும் ஓயாமல் ஓலம் ஒலித்தது. இறுதியில் அது மெல்ல மெல்ல ஒடுங்கி, அறவே நின்றுவிட்டது. கதவருகில் நின்றவாறு கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தார் பெர்ஹான்ஸா. ''ஹா, முடிவுவந்துவிட்டது!''— பனிபடர்ந்த தரையில் அப்படியே வீழ்ந்தார் அவர். எனினும் அது அவ்வளவு கடுமையல்ல என்று அவருக்குத் திடுமெனத் தோன்றியது...எதையும் தாங்கக் கூடிய கனமான கயிறென்று அவரிடம் இருந்தது...அந்தக் கயிற்றைக் கட்டித்தொங்கவிட்டபின் கீழே போட நல்ல

பலகை யொன்றும் பண்டசாலையில் இருந்தது...ஆம், அவரைக்கூட அந்தக் கயிற்றினால் தாங்க முடியும் !

ஒரு கதவு திறந்தது. அவ்வழியாக வெளியே ஒளி பாய்ந்தது. '' பெர்ஹான்ஸா ! '' என்று மென் குரலொன்று அழைத்தது. க்ஜெர்ஸ்டியின் குரல் தான் அது. '' உடனே உள்ளே வாருங்கள் ! '' என்று அவள் குசுகுசுத்தாள்.

உள்ளே ஒரே அமைதி. கதகதப்பாக இருந்தது அங்கே. இருளில் வெளியே நின்றிருந்த அவருக்கு அவ்வறை பிரகாசமாக இருந்தாதகக்கூடத் தோன்றியது. திடீரெனத் தூக்க மயக்கம் அவரைக் கவ்விக் கொண்டது. '' எப்படி இருக்கிறது ? '' என்று தாம் கேட்பதை அவர் உணர்ந்தார். பின்னர், படுக்கை மீது ஸாற்றினா குனிவதைக் கண்டார். சிரித்துக் கொண்டிருந்தாள் அவள் !

'' ஆம், இதோ உங்களுடைய சின்னஞ் சிறு மகன். இங்கே வந்து இவனைப் பாருங்கள். உங்கள் மனைவியோ, மகனோ இன்றிரவு இறக்காததைப் போன்ற அற்புதத்தை நான் இதுவரை கண்டதேயில்லை. அம்மாதிரி வேதனை எனக்கு ஏற்படாதிருக்கக் கடவுள் கருணைகாட்டுவாராக!''

'' நம்பிக்கைக்கு இடம் உண்டா ? ''

'' உண்டு என்றே நினைக்கிறேன். எதற்கும் உறுதி செய்துகொள்ள இப்போதே பையனுக்கு ஞானஸ்நானம் செய்துவிடுவது நலம். ''

'' ஞானஸ்நானமா ! ''

'' ஆம், அதைத் தள்ளிப் போடுவதால் பயனில்லை. ''

அவரை நோக்கித் தன் முகத்தைச் சற்றே திருப்பினாள் பெரெட். படுக்கையை மெள்ள நெருங்கி, களைத்து வெளுத்திருந்த அவளது முகத்தை அவர் உற்றுப்பார்த்தார். ஆடாமல் அசையாமல் அவள் கிடந்தாள். அவள் முகத்தில் பரிபூரண அமைதியைக் கண்டார். அச்சம் அறவே அகன்று விட்டது. கண்களைச் சிறிது திறந்து, யாதொரு சைகையும் காட்டாமல் மீண்டும் மூடினாள்.

பெர்ஹான்ஸா மறுபடி சிந்திக்கலானார், "ஞான ஸ்நானம் செய்யலாம் என்று கூறினீர்கள்?" என்று கேட்டார்.

"ஆமாம். நீங்கள் அதைச் செய்யத்தான் வேண்டுமென நினைக்கிறேன். இவனை வெளியே கொண்டுவர நாங்கள் பட்டபாடு போதும், போதும்!" என்றாள் ஸாற்றினா.

"அப்படியானால் அதைச் செய்ய ஒரே யொருவர் தான் ஏற்றவர்" என்று கூறிய பெர்ஹான்ஸா, தம் குல்லாவையும் சட்டையையும் மறுபடி தரித்துக் கொண்டார். ஹான்ஸ் ஒல்ஸாவைக் கருத்தில் வைத்துத் தான் அவர் அவ்விதம் கூறினார். தன் கணவன்பற்றி அவர் அவ்விதம் கூறியது கேட்டு, தான் பட்ட சிரமத்துக் கெல்லாம் தகுந்த கூலி கிடைத்து விட்டதாகக் ஸாற்றினா திருப்தியுற்றாள். எல்லாவற்றிற்கும் சிறந்த அரிய செய்தியை பெர்ஹான்ஸாவிடம் அவள் தெரிவித்தாள்; பையன் தலையில் தோல் மூடியுடன் பிறந்திருக்கிறான். ஆண்டவனின் அருட் சின்னத்துடன் பிறந்த அபூர்வக் குழந்தை அது! அச் செய்தி கேட்டு மறுபடியும் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார் பெர்ஹான்ஸா.

வெளியே, அந்தக் கிறிஸ்துமஸ் தினத்தன்று கதிரவன் தகதகவெனப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். ஹான்ஸ் ஒல்ஸாவின் வீட்டில் அவர் தவிர மற்றவர் எல்லோரும் உறங்கிவிட்டனர். "குதூகல கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள், நண்பர்களே!" என்று கூவிக்கொண்டு பெர்ஹான்ஸா உள்ளே நுழைந்ததும் டோன்ஸெடென் கண் விழித்தார். 'அப்படியானால் பிரஸவம் மங்கள கரமாக நடந்தேறிவிட்டது போலிருக்கிறது' என்று அவர் நினைத்தார்.

"அப்படியொன்றும் பழுதில்லை. இன்னும் மோசமாகக்கூட முடிந்திருக்கலாம்" என்றார் பெர்ஹான்ஸா. "பெரெட் நல்லபடி எழுந்து விடுவாள் என்றே தோன்றுகிறது. ஆனால் பையனின் நிலைதான் நன்றாயில்லை. அவனுக்கு உடனே ஞானஸ்நானம் செய்யப்பட்டாக வேண்டும். அது உங்கள் வேலை, ஹான்ஸ் ஒல்ஸா,"

அதைச் செவி மடுத்ததும் ஹான்ஸ் ஒல்ஸாவின் முகத்தில் அச்சக்குறி காணப்பட்டது. ''இல்லையில்லை, என்னால் முடியாது அது. என்னைப் போன்ற பாவி அதைச் செய்யக்கூடாது'' என்றார் அவர்.

''அப்படியா! ஆண்டவன் திருவுளத்தில் உங்கள் நிலை என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆயினும் உங்களைவிடச் சிறந்தவரை வேறெங்கும் காணமுடியாது; கடவுளுக்கும் அது தெரியும் என்பதே என் கருத்து'' என்று பெர்ஹான்ஸா கூறினார்.

அவருடன் போவதைத் தவிர ஹான்ஸ் ஒல்ஸாவுக்கு வேறு வழியிருக்கவில்லை. தான் அவ் வேலைக்கு உகந்தவரல்ல என்பதை அவர் உணர்ந்தார். எனினும் பாதிரி எவரும் சுற்று வட்டாரத்தில் இல்லாதபோது சாதாரண மக்களும்கூட ஞானஸ்நானம் செய்து வைத்துப் பெயர் சூட்டமுடியும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். தன்னால் அதை நன்கு செய்யமுடியும் என்றும் நம்பினார். எனவே பனிதூறிய அந்தக் காலை வேளையில் அவ்விருவரும் அங்கிருந்து மௌனமாகப் புறப்பட்டனர்.

''பெண் குழந்தையாகப் பிறந்திருந்தால் அதற்கும் பெரெட் என்றே பெயர் வைத்திருக்கலாம். ஆனால் பையனாகப் பிறந்துவிட்ட படியால் இவனுக்கு என் பாட்டனாரைப்போல் பெர்—அதாவது, பெடர் என்றுதான் பெயர் சூட்டவேண்டும். இவனுடைய மற்றொரு பெயரைப் பொறுத்த வரையில்......'' சற்றுப் பொறுத்து பெர்ஹான்ஸா தொடர்ந்தார், ''உங்கள் மனைவி ஸாற்றினாவைப் பின்பற்றி 'ஸீயர்' என்றே அது இருக்க வேண்டும். இன்றிரவு எனக்கு அவள் செய்த உதவிக்கு நான் எவ்வளவு நன்றி கூறினாலும் போதாது. அவள் பெயரே இவனுக்குச் சூட்டப்பட வேண்டும். ஆம்...... பெடர்ஸீயர்......வெற்றிவீரன் பெடர் என்றுதான் பெயர் இருக்கவேண்டும்.''

அவ்விருவரும் மௌனமாகப் புகுந்தபோது பெர் ஹான்ஸாவின் வீடு முற்றிலும் மாறியிருக்கக் காணப் பட்டது. அடுப்பில் காப்பி கொதித்துக் கொண்டிருந்தது. மேஜைமீது வெள்ளைத் துணியொன்று விரிக்கப் பட்டு

இருந்தது. பிரார்த்தனைப் புத்தகத்தில் நாமகரணப் பகுதி பிரித்து வைக்கப் பட்டிருந்தது. மேஜைமீது ஒரு பாத்திரத்தில் தண்ணீரும், அருகே சிறிய வெள்ளைத் துண்டொன்றும் இருந்தன. அறை கதகதப் பாகவும் உற்சாக மயமாகவும் தென்பட்டது.

ஞானஸ்நானத்தை அவர் குறையின்றி நிகழ்த்த முடியுமென ஹான்ஸ் ஒல்ஸாவுக்கு ஸாற்றிஞ தைரிய மூட்டினுள். உணர்ச்சியினுல் கரகரத்த குரலில் ஞான ஸ்நானப் பிரார்த்தனையை அவர் மெதுவாகப் படிக் கலானுர். 'வெற்றிவீரன் பெடர்' என்ற பெயரை உரக்கச் சொல்லிவிட்டுக் கடவுள் பிரார்த்தனையைப் படிக்க முற்பட்டார்.

''பார்த்தீர்களா, இதைவிட இனிதாக இவ்வைபவம் நடந்திருக்க முடியாது! இனி அனைவரும் ஆளுக்கொரு கோப்பை காப்பி அருந்துவோம்'' என்ருள் க்ஜெர்ஸ்டி.

முதலில் தன் சாராயப் புட்டியை பெர்ஹான்ஸா வெளியிலெடுத்துப் பெண்டிரிடம் கொடுத்தார். ''நீங்கள் இருவரும் இன்றிரவு பட்ட சிரமத்துக்குப் பரிசு அவசியம். ஆகவே இதனை அருந்துங்கள். ஆனுல் எனக்கும் ஹான்ஸ் ஒல்ஸாவுக்கும் கொஞ்சம் பாக்கி வைத்து விடுங்கள்!''

சற்றுப்பொறுத்து அவர்கள் உணவும் காப்பியும் அருந்தினர். ''கடைசியில் நாம் களிப்பு மிக்க கிறிஸ்து மஸைக் கொண்டாடுவோம் என்றே காண்கிறது!'' என்று சிரித்தவாறு கூறினுர் பெர்ஹான்ஸா, எல்லோரும் காப்பி பருகுகையில்.

ஐந்தாவது பாகம்

1

பிறந்த குழந்தையைப் பக்கத்தில் போட்டுக் கொண்டு படுத்திருந்தாள் பெரெட். தான் மரித்துப் பூமியினுள் புதையுண்டிருக்க வேண்டும் என்றே அப் போதும் அவள் எண்ணிய போதிலும் அவள்பால் உயிரோட்டம் மீண்டும் தலைப்படத் தொடங்கியது. சிசுவை மார்போடு அணைத்து வைத்துக் கொண்டு பெருமூச் செறிந்தாள். அடடா எப்படி மடக்மடக் கெனப் பால் குடித்தது அது !

ஜன்னல் வழியாக சூரிய வெளிச்சம் உள்ளே புகுந்து அவ்வறையை ஒளிரவைத்தது. அடுப்பில் விறகு தகதக வென எரிந்தது. வெள்ளைச் சுவர்கள் முன்னிலும் நேர்த்தியாகத் துலங்கின. அடுப்பிற்கு மேல் ஒரு கம்பியில் சிசுவின் துணி மணிகள் உலர்ந்துகொண்டிருந்தன. மீண்டும் சிறிது நேரம் தூங்கியபின் அந்த நீண்ட பகலிலும் இரவிலும் நடந்தவை பற்றி நினைத்துப் பார்க்க முயன்றாள். எல்லோரும் எங்கே சென்று விட்டனரென எண்ணினாள். மறுபடியும் உறங்க முற்பட்டாள்.

அவள் விழித்தபோது படுக்கையருகே அன்னாமேரி நின்றுகொண்டு புதிய குழந்தையைப் பார்க்க முயல் வதைக் கண்டாள். ஹான்ஸும் அங்கிருந்தான். கையில்

விறகுடன் அப்போதுதான் பெர்ஹான்ஸா உள்ளே வந்து கொண்டிருந்தார். ஸோலம் சகோதர்களுடன் ஒல் சென்றிருப்பதாக அவளிடம் அவர் தெரிவித்தார்.

''பெர்மாண்டை நாங்கள் பார்க்கலாமா?'' என்று மற்றக் குழந்தைகள் அவளைக் கேட்டனர்—அதற்குள் தங்கள் புதிய சகோதரனுக்கு செல்லப் பெயரிட்டு விட்டனர் அவர்கள்! உறங்கிக் கொண்டிருந்த அந்தச் சிவந்த முகத்தை அவர்களுக்கு பெரெட் காட்டினாள். தன் உடலைத் துடைத்துச் சுத்தம் செய்து கொண்டபின் பெர்ஹான்ஸாவும் படுக்கையருகே வந்தார். உவகை மிகுதியினால் அவரால் பேசக்கூட முடியவில்லை. ஆயினும், அவரது மனத்தில் இருந்த எண்ணங்களைப் பெரெட் ஊகித்து உணரமுடிந்தது.

''எவ்வளவு அற்புதமானவள் நீ! கிறிஸ்துமஸ் காலையில் சிறந்ததொரு பெரிய பையனைப் பெற்றெடுத்துத் தந்திருக்கிறாயே!'' என்று அவளிடம் அவர் கூறினார். அவளையும் அச்சிறிய சிசுவையும் மாறி மாறிப் பார்த்த படியே நின்றார். மீண்டும் சற்று நேரம் பெரெட் துயின்றாள். வேனிற் காலத்தைப் போன்ற இனியதொரு அமைதி தன்னைச் சுற்றித் தவழ்வதாக அவளுக்குத் தோன்றியது......கதகதப்பு, அமைதி, சூரிய வெளிச்சம் ......பட்சிகளின் இன்னிசை......இவற்றை யெல்லாம் நுகரும்போது உயிர் வாழ்வது நலமேயன்றோ!

புதிய குழந்தை தங்களிலொரு பகுதியேயென எல்லோரும் எண்ணினர். அதன் தாய் அதை ஈனும் விஷயத்தில் க்ஜெர்ஸ்டியும் ஸாற்றினாவும் பேருதவியாற்றினர்; அவனுக்கு ஹான்ஸ் ஒல்ஸா பெயர் சூட்டியிருக்கிறார். மற்றவர்களோ அவன் வருகையை எதிர் நோக்கி இரவு பூராவும் விழித்திருந்திருக்கின்றனர். மேலும், அந்தக் குடியேற்ற நாட்டில் பிறந்த முதல் குழந்தை இதுவே. வளர்ந்ததும் அவன் எப்படி இருப்பான் என்பது பற்றித் தீர்மானிக்கும் வகையில் அவர்கள் பேசத் தொடங்கினர். மதகுரு ஆவான் என்றார் ஒருவர். ஆசிரியனாவான் என்றார் இன்னொருவர். இல்லை, ஜனாதிபதியாகத்தான் திகழப் போகிறான் என்று கூறினார்

டோன்ஸெடென். கடைசியில் ஹான்ஸ் ஒல்ஸா சொன்னார்: ''என்றாவது ஒரு நாள் இப்பகுதியும் ஒரு ராஜ்யமாகிவிடும். அப்போது இதற்கு ஒரு நல்ல கவர்னர் தேவையாக இருக்கும்.'' இது அறிவிற் சிறந்த கருத்து என்றே எல்லோருக்கும் பட்டது. பெரெட்டும் பெர் ஹான்ஸாவும் ஏதும் பேசவில்லை. மற்றவர்கள் கூறு வதைக் கேட்டுக் கொண்டு வாளாவிருந்தனர்; பேச முடியாத அளவு மகிழ்ச்சி அவர்களுக்கு!

அக்காலம் முழுவதிலும் பள்ளிக்கூடமும் நடந்து கொண்டிருந்தது. ஒருவாரம் ஹான்ஸ் ஒல்ஸாவின் வீட்டில் அது இயங்கியது. பெரெட் எழுந்து நடமாடத் தொடங் கியதும் அவள் வீட்டுக்குப் பள்ளிக்கூடம் மாறி ஒரு வாரம் அங்கு செயலாற்றியது. அதன் பிறகு குழந்தை இல்லா வீடாயிருப்பினும் டோன்ஸெடெனின் மனைக்குச் சென்றது. குழந்தைகள் மட்டுமன்றி ஆடவரும் பெண்டிரும் கூட அதில் படித்தனர். அனைவரும் சிறிது ஆங்கிலம் கற்றனர். அந்த நீண்ட குளிர்காலத்தில் ஒன்றுகூடிப் பொழுதைக் கழிக்க அது அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தது. தங்கள் அன்றாட அலுவல்கள் முடிந்ததும் ஆடவர்கள் அப்பள்ளிக்குச் சென்றனர். பெண்டிரும் தாங்கள் தைக்க வேண்டிய துணிகள் சகிதம் ஒவ்வொரு பிற்பகலிலும் அங்கு வந்தனர்.

நார்வீஜிய, ஆங்கில மொழிகள், மதவிஷயங்கள் போன்ற பல விஷயங்கள் அங்கே போதிக்கப்பட்டன. அனைவரும் ஒரே சமயத்தில் பேசிச் சிரித்தபடியால் அது ஒரு பள்ளியன்றிப் பொழுது போக்குச் சங்கம் போலச் சில சமயங்களில் தோன்றியது. மற்றும் சில சமயங்களில் ஆழ்ந்த மத விவாதங்கள் நிகழும்போது அது ஓர் ஆலயம் போல் திகழ்ந்தது.

முதலில் கதைகள் மூலமாகவே ஹென்ரி ஸோலம் போதனைகள் ஆற்றிவந்தார். எல்லா வார்த்தைகளையும் குழந்தைகள் தெரிந்து கொள்ளுமளவு அக்கதைகளைத் திருப்பிச் சொல்லச் செய்தார். ஒரு சிறு பென்ஸில் துணுக்கை ஹான்ஸ் ஒல்ஸா கண்டெடுத்தார்; க்ஜெர்ஸ்டி மற்றொன்றைத் தேடித் தந்தாள். எழுதுவதற்காக சிறு

பலகைகளை ஆடவர்கள் தயாரித்தனர். அவற்றின் துணை கொண்டு எழுதவும் எழுத்துக் கூட்டவும் குழந்தைகளால் இயன்றது.

அவர்களுக்காக ஒரு நாள் ஸாம்ஸோலம் பாடிக் காட்டினார். அவரது குரல் மிக நன்றாக இருப்பதை அவர்கள் கண்டனர். எனவே அந்த மாரிக்காலம் முழுவதும் அவர்களும் பாடிக் காலங்கழித்தனர். பிரார்த் தனைப் பாட்டுக்கள், நார்வீஜிய கிராமியப் பாடல்கள், ஏன், ஸ்வீடிஷ் காதற்கீதங்கள் உள்படப் பலவற்றை அவர்கள் கற்றுக் கொண்டனர். தங்களுக்குத் தெரிந்த பல பாட்டுக்களை க்ஜெர்ஸ்டியும் ஸாற்றினாவும் நினைவு படுத்திக் கொண்டனர். அவ்வாறே மற்றவர்களுக்கும் பாடினர். சில சமயங்களில் டோன்ஸெடன் வகுப்பு நடத்தினார். மற்றவர்கள் வேலை செய்யும் முறை ஒரு போதும் அவருக்குப் பிடித்தது கிடையாது. எனவே, எப்படிச் சரிவரச் செய்வது என்பதைக் காட்டப் புகுவார். ஒரு வேலையும் செய்ய முடியாத அந்த மாதங்களில் இதுவே ஒரு மாறுதலாக இருந்தபடியால் யாரும் எதையும் அதிகம் பொருட்படுத்தவில்லை.

குளிர்காலம் நெடியதாக அமைந்தது. எனவே, சேமித்து வைத்திருந்த மரங்கள் ஏறக்குறையத் தீர்ந்து விட்டன. உலர்ந்த வைக்கோல் நன்கு எரியும் என்பதை ஹான்ஸ் ஒல்ஸா கண்டு பிடித்தார். ஆனால் அதை அவர்கள் அதிக அளவில் உபயோகப் படுத்த முடியவில்லை. அப்புறம் பசுக்களுக்கு வைக்கோல் இராதல்லவா? எனவே, பிப்ரவரியில் மேற்கொண்டு மரம் கொண்டு வருவதற்காக ஸியூக்ஸ் நதி தீரத்துக்கு ஆண் மக்கள் செல்ல நேர்ந்தது. பள்ளியைத் தொடர்ந்து நடத்தவும், தனியாக விடக்கூடாத பெண்டிரையும் குழந்தைகளையும் கவனித்துக் கொள்ளவும் ஹென்ரி ஸோலமை அங்கு இருத்திச் செல்ல அவர்கள் தீர்மானித்தனர்.

அந்த மாரிக்காலத்தில் மாடுகளோடு பெர்ஹான்ஸா வினால் அப்பயணத்தை நடத்த இயலாது என்று டோன் ஸெடனும் ஹான்ஸ் ஒல்ஸாவும் நினைத்தனர். ஆகவே, தங்களுடன் வருமாறு அவரைக் கூப்பிட்டனர். ஆனால்,

மாடுகளை எப்படியாவது பயன்படுத்தலாம் என்று பெர்ஹான்ஸா கருதினார். தான் செய்த சறுக்கல் வண்டியை இழுக்க அவற்றைப் பயிற்றுவித்தார். அவற்றினால் சரிவர இழுக்க முடியவில்லை. எனினும் மற்றவர்களைப் போல் தன்னால் அங்குச் சென்றுவர முடியாது என்பதை ஒப்புக்கொள்ள அவருக்கு மனமில்லை! உண்மையில் அவர் சென்றுதானாக வேண்டுமா என்று பெரெட் வினவினாள். ''ஆம். இல்லையேல் நீங்கள் அனைவரும் குளிரால் விறைத்து விடுவீர்கள்!'' என்று அவர் பதில் சொன்னார். அதற்குமேல் அவள் பேசவில்லை. ஆனால், மறுபடியும் அவளுக்குத் தூக்கம் போய்விட்டது. 'மீண்டும் இந்த பயங்கரமா?' என்று மனமிடிந்தாள்.

பருவநிலை சற்று சீர்பெற அவர்கள் காத்திருந்தனர். நம்பமுடியாத அளவு கடுமையாக இருந்தது குளிர். காற்றும் ஓயாது அடித்தது. இருப்பினும் ஒரு நாள் காலை சூரியன் பளிச்செனப் பிரகாசித்தான். வஸந்த வாடை போல் மென் காற்றும் வீசியது. பயணத்துக்கு அதுவே சிறந்த நாளெனத் தேர்ந்தனர். ஆனால் அப்பருவத்தில் அம்மாதிரி நாட்கள் அசாதாரண மாகையால் நம்பக் கூடாது. எதுவாகிலும் நேரலாமென டோன்ஸெடென் எச்சரித்தார். ஆயினும் காலம் கடந்துவந்த படியால் அவர்கள் கடைசியில் கிளம்ப வேண்டியே நேர்ந்தது.

புறப்படச் சித்தமாவதற்கு காலை பத்து மணிக்கு மேல் ஆகிவிட்டது. பொழுது சாய்வதற்குள் ட்ராண்டர்களின் குடியேற்றப் பிரதேசத்தை அடைந்து விடலாம் என்றெண்ணிக் கொஞ்ச உணவையே அவர்கள் எடுத்துக் கொண்டனர். பெர்ஹான்ஸாவின் காளைகள் மெதுவாகச் செல்லக் கூடியவையாகையால் அவர் கடைசியாகச் சென்றார். அந்தப் பயணத்தைக் காணப் பொறுக்காத பெரெட்டைத் தவிர மற்றவர் அனைவரும் அவர்களை வழியனுப்பினர். சிசுவுடன் உள்ளேயே உட்கார்ந்திருந்தாள் பெரெட். எதையும் தடுக்கத் தனக்குச் சக்தியில்லையென்பதை உணர்ந்தாள்.

பயணத் தொடக்கம் நல்லபடியே அமைந்தது. மாடுகளும் கூடத் தளராமல் நடந்தன. சூரியன் உச்சியை

நெருங்கினுன். பனி இளக ஆரப்பித்தது. மே மாதம் மாதிரியே இருந்தது அப்போது. மீதிப் பொழுதும் இவ்வாறே இருந்தால் இன்னும் இரண்டு மூன்று மணி நேரத்தில் ட்ராண்டெர்களின் குடியேற்றப் பகுதியையும், பின்னர், ஸியூக்ஸ் நதிக்கரையையும் அவர்கள் அடைந்து விடலாம். பிற்பகல் மூன்று மணிதான் ஆகியிருந்தது அப்போது.

மீண்டும் வானத்தை அண்ணுந்து பார்த்தார் பெர்ஹான்ஸா. அங்குக் கண்ட காட்சியை அவரால் நம்பமுடியவில்லை. இருண்ட மேகம் கௌவிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். மாடுகளைத் துரிதமாகச் செல்லக் கூவினுர். வெகு விரைவில் அந்தக் கருமேகம் அச் சமவெளி முழுவதன்மேலும் படர்ந்து விட்டது. எங்கும் ஒரே மௌனம். காற்றுக் கூட ஓய்ந்துவிட்டது.

முன்னணியில் சென்றவர்கள், மற்றவர் வந்து சேரும்வரை காத்து நின்றனர். அவர்கள் அச்சுறுத்தும் புயல் பற்றிப் பேசலாயினர். அது பயங்கரமாக இருக்கும், சமாளிப்பது சிரமம் என்பதைக் கண்டனர். அதில் அவர்கள் வழி தவறிப் பிரிந்து விடாதிருக்கும் பொருட்டு எல்லாச் சறுக்கல் வண்டிகளையும் கயிறு கொண்டு பிணைத்து விடலாமென ஹான்ஸ் ஒல்ஸா யோசனை கூறினுர். தன் மாடுகள் மெதுவாகச் செல்பவையாகையால் மற்றவர்களுக்குத் தாம் வெகுவாகப் பின்தங்க நேரும் என்பதை பெர்ஹான்ஸா உணர்ந்தார். மீன்பிடிக்கையில் புயலில் அலைபட்டுத் திணறும் அனுபவம் அவருக்கும் ஹான்ஸ் ஒல்ஸாவுக்கும் உண்டு. ஆனுல் இப்புயலோ அவர்கள் அதுவரை கண்ட அனைத்துக்கும் மாறுனது, மோசமானது. தங்கள் முன்னுல் என்ன இருக்கிறது என்பதை அவர்கள் பார்க்க முடியாத அளவு அடர்த்தியாகப் பனி பெய்தது. வானத்திலோ அவர்கள் கேட்டிராத கர்ஜனைகள் ஒலித்தன. அதன்பின் முழுவீச்சுடன் காற்று அடிக்கத் தொடங்கியது. பனியும் பேய்மழைபோல் பொழியலாயிற்று.

எதுவுமே அவர்கள் கண்களுக்குப் புலப்படவில்லை. அவர்களைப் பனி பூராவாகச் சூழ்ந்து கொண்டது.

படகுகளை வலித்துத்தான் பெர்ஹான்ஸாவுக்குப் பழக்கம். மாடுகளை ஓட்டிப் பழக்கமில்லை. எனவே, சரியாகச் சிக்கிக் கொண்டோம் என்று முடிவு செய்து விட்டார் அவர். அவரது வண்டியைக் கட்டியிருந்த கயிறு திடீரெனப் பலமாக இழுக்கப்பட்டது. அந்த வேகத்தில் அவர் தடுமாறிப் பனித்தரையில் விழ விருந்தார். அவ்வாறு மீண்டும் நேராதிருக்க ஸாம் ஸோலமின் வண்டியுடனும், மற்றவற்றுடனும் தன் வண்டியைப் பிணைத்திருந்த அக்கயிற்றை அவர் துண்டிக்க நேர்ந்தது. ஆக, அப்புயலைத் தனியே எதிர்த்துப் போராடலானார் அவர்.

மாடுகளின் நடை முன்னிலும் மெதுவாகியது. இறுதியில் அவை அடியோடு நின்று விட்டன. முதல் முறையாக அவற்றைச் சாட்டையினால் பெர்ஹான்ஸா அடித்தார். ''உம், தொடர்ந்து செல்லுங்கள் !'' என்று கத்தினார். அதையடுத்து அக் காளைகள் கனவேகமாக ஓடத் தொடங்கின. அந்த வேகத்தினால் கீழே விழுவதைத் தவிர்க்க வண்டியை அவர் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள நேர்ந்தது. கப்பலில் செல்வது போலவே அவருக்குத் தோன்றியது. காற்றுப் போல வெகு வேகமாகப் பனி மீது பாய்ந்து சென்றது அந்த வண்டி. மற்றவர்களைத் தாம் கடந்து விட்டதாகக் கூட பெர்ஹான்ஸாவுக்குத் தோன்றியது. ஆனால் மாடுகள் நிற்க மறுத்து விட்டன. பிசாசுபோலப் பிய்த்துக் கொண்டு ஓடின. கடைசியில் களைத்துப் போய் நின்றன. அதன் பிறகு இம்மியும் நகர அவற்றினால் இயலவில்லை.

பெர்ஹான்ஸா தம் கையில் வைக்கோல் பையை எடுத்துக்கொண்டு மெதுவாக நகர்ந்து அம் மாடுகளை அணுகினார். ஊசிபோலப் பனி அவரது தோலைக் குத்திப் பெயர்த்தது. ''சடிதியில் தின்று விழுங்குங்கள்'' என்று மெள்ளச் சொல்லி மாடுகளை முடுக்கி விட்டார். அம் மாதிரிச் சூழ்நிலையில் அவரால் அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. மறுபடியும் மாடுகள் நடக்கத் தொடங்கின. ஆனால் கோடை காலத்தில் போல் மெதுவாக ஊர்ந்தன என்றே சொல்லவேண்டும். என்ன

முயன்றும் அவற்றை அவரால் வேகமாகச் செலுத்த முடியவில்லை.

இரவு சூழ்ந்துவிட்டது. பனி மழை சற்றே குறைந் திருந்தது. ஆனால் குளிரின் கடுமை தணியவில்லை. கத்தி போல அது அவரது உடலை ஊடுருவியது. காற்றோ அவரை வண்டியிலிருந்து கவிழ்த்துத் தள்ளிவிடும் போல் கடுமையாக வீசியது. அதுதான் தம் முடிவு என்று பெர்ஹான்ஸா தீர்மானித்துவிட்டார். தூக்கம் கண்ணைச் சொருகியது. ஆனால் அந்நிலையில் உறங்கினால் என்னா கும் என்பது அவருக்குத் தெரியும்—ஆம், அதுவே முடிவாகிவிடும்! இந்த வெட்டவெளியில் நான்கு குழந்தைகளோடு பெரெட்டைத் தனியே விட்டு விட்டு அவர் மரித்து விடலாமா?

வண்டியிலிருந்து இறங்கி நடக்கத் தொடங்கினார். சில சமயம் பனியில் இடறி விழுந்தார். மறுபடி எழுந்து நடந்தார். அவரால் தெளிவாகச் சிந்திக்க முடியவில்லை. மாடுகள் மெதுவாக நடை போட்டுக்கொண் டிருந்தன. எவ்வளவு முறை விழுந்த போதிலும் எழுந்து மீண்டும் நடந்துதானே யாகவேண்டும்! குளிரினால் விறைத்து விட்டபோதிலும் கயிற்றை அவரது கைகள் இறுகப் பிடித்துக் கொண்டிருந்தன. மேலே மேலே நடந்து கொண்டே யிருந்தார்.

மறுபடியும் மாடுகள் நின்றுவிட்டன. காரணம் என்ன? முன்னைப்போல் கயிறு அவரை இழுத்துச் செல்ல வில்லை. மாடுகளை மெள்ள அணுகிக் குனிந்து பார்த்தார். அவற்றின் தலைக்கு மேலே பெரியதொரு மஞ்சள் கண் ஒளி வீசக் கண்டார். ''ஓ, இதுதான் என் மரண அறி குறி!'' என்று எண்ண முற்பட்டார். மாடுகள் தம் தலைகளை உயர்த்தி உரக்கக் குரலெழுப்பின; மீண்டு மொரு முறை கத்தின. அந்த ஒலி பெர்ஹான்ஸாவைத் தட்டி எழுப்பியது. தட்டித் தடுமாறி வழி கண்டு பிடித்து நடந்தார். கடைசியில் அவரது கைகள் ஒரு சுவரைத் தேடித் தொட்டன. ஒரு வீட்டின் மூலைப் பகுதிதான் அது. அந்த மஞ்சள் ஒளி, சாளரத்தின் வழியே வீசிய விளக்கு வெளிச்சம்தான்! மீண்டும் தடு

மாறி நடந்து ஒரு கதவைக் கண்டார். அதை மெது வாகத் திறந்ததும் தரையில் விழுந்தார்.

அங்கு எதையும் அவரால் காணமுடியவில்லை. ஏனெனில், அவருடைய கண்களைப் பனி உறைய வைத்து, இமைகளை ஒட்டியிருந்தன. ஆனால் கதகதப்பு மிகுந்த பத்திரமான இடம் என்பதை உணர்ந்தார். 'எனவே இனி நாம் இறக்கமாட்டோம்'—இதைத் தமக்குத் தாமே கூறித் தேற்றிக் கொள்ள அவருக்கு வெகு நேரம் பிடித்தது. பிறகு வாய் திறந்து சில வார்த்தைகளை உதிர்த்தார்—தாமன்றி வேறு யாரோ பேசுவது போலவே அவருக்குத் தோன்றியது—''வெளியே மாடுகள் இருக்கின்றன......என் கால்கள்...... நான் உட்காருவதற்கு யாராவது ஒரு நாற்காலி கொடுங்கள்.'' யாரோ ஒருவர் ஒரு நாற்காலியைப் போட்டு அதில் அவரை அமர வைத்தார். அவ்வறையில் பேச்சு பலமாக இருந்தது; பலர் இருப்பது போல் ஒலித்தது. இன்னமும் அவரால் அதிகம் காணக் கூடவில்லை. தனக்குத் தெரிந்த குரலென்றைக் கேட்டார்; ''நீங்கள்தானா, பெர்ஹான்ஸா?''

''டோன்ஸெடென் அல்லவா ! நீங்கள் எல்லோரும் இங்கே இருக்கிறீர்களா, என்ன ?''—இன்னமும் அவரால் அதை நம்ப இயலவில்லை.

அவர் வாய் திறந்து பேசியவரையில் அது பெர் ஹான்ஸா தான் என்பதை மற்றவர்களாலும் கண்டு கொள்ள முடியவில்லை. அவருடைய கண்கள் மீதும், தாடி பேரிலும், குல்லாய் மேலும் கெட்டியான பனி படர்ந்து முகத்தை மறைத்திருந்தது. கோட்டின் பின் புறமோ பனி செறிந்து வெள்ளைத் துணி போலத் தொங்கியது. ஸைமன் பார்ஸ்டாடின் குடிலில் அமர்ந் திருந்த அவ்வேளையில் மனித உருக்கொண்ட பனியரசன் போலவே அவர் தோற்றம் அளித்தார். சிறுகச் சிறுக அவரது உடலில் சூடேறியதும் சுற்றுமுற்றும் பார்த்தார். அவருடைய அண்டை வீட்டுக்காரர்கள் அனைவரும் அங்கே இருந்தனர். ஸைமன் பார்ஸ்டாடை முன்னமேயே அவருக்குத் தெரியும். ஒரு நங்கையை நெருங்கினாற் போல ஸாம் உட்கார்ந்திருந்தார். அதைக் கண்டு பெர் ஹான்ஸா புன்முறுவல் பூக்கவேண்டி வந்தது.

தங்கள் உயிரைக் காத்துக் கொள்ளப் பனியுடன் போராடித் தங்கள் வண்டிகளை ஓட்டிவர நேர்ந்தது என்பதை ஹான்ஸ் ஒல்ஸா அவருக்கு விவரித்தார். இரண்டு மணி நேரத்துக்கு முன்தான் அக்குடிலுக்குத் தாங்களும் வந்து சேர்ந்ததாகக் கூறினர். எப்படியோ அந்த பயங்கரப் பயணம் முடிந்து விட்டது. அது பற்றி மீண்டும் மீண்டும் நினைக்க பெர்ஹான்ஸா விரும்பவில்லை. அதற்கு மாறாக தனக்காகப் பெரிய தொரு பாத்திரத்தில் சூடான பாலையும் விஸ்கியையும் குரினு பார்ஸ்டாட் கலப்பதைக் கண்கொட்டாமல் கவனித்தார். அப்பாத்திரத்தை அவள் கொடுத்ததும் மீண்டும், மீண்டும் குடித்தார். ஒருவாறு அதைக் காலி செய்ததும், "என்ன குரினு, மேற்கொண்டு ஒரு சொட்டுக் கூட இல்லையே?" என்று வினவினர். அவள் இன்னொரு பாத்திரம் நிறையத் தந்தாள். அதையும் அதே வேகத்தோடு அவர் குடித்து முடித்தார். பின்னர் மற்றொரு பாத்திரத்தில் சூடான சாதத்தையும், இன்னொரு கோப்பை நிறையச் சூடான பாலையும் அவள் கொடுத்தாள். எவ்வளவு அருந்தினலும் தன் வயிறு நிரம்பாது போன்றே அவருக்குத் தோன்றியது.

தங்கள் நிலங்கள் பற்றிச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தபின் அவர்கள் படுக்கச் சென்றனர். வைக்கோலை நிறையப் பரப்பி அதன்மீது வெதுவெதுப்பான துணிகள் போடப் பட்டிருந்த தரைமீது விருந்தாளிகள் துயின்றனர். ஆனால், மற்றவர்கள் உறங்குகையில் வெகுவாகக் களைத்திருந்த போதிலும்கூட பெர்ஹான்ஸாவுக்குத் தூக்கம் வரவில்லை. இருளின் மத்தியில் சுற்றிலும் பனி மூடித் தன்குடிசை தனித்திருப்பதை மனக் கண்ணால் கண்டார் அவர். அதனுள் ஒரு குழந்தையை ஏந்திய வண்ணம் ஒரு பெண்மணி நடந்து கொண்டிருந்தாள்; ஓயாமல் இங்குமங்கும் நடந்தவாறே இருந்தாள். அவளுடன் பேசவேண்டும், எல்லாம் நல்லபடி இருக்கிறது என்று அவளுக்கு உறுதி கூறவேண்டும் போலிருந்தது அவருக்கு. புயல் வருமுன் போதிய மரத்துணுக்குகளைப் பையன்கள் வீடு கொண்டு சேர்த்திருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டார். மறுபுறம் திரும்பிக் கொண்டு

மறுபடியும் தூங்க முயன்ருர். என்ன முயன்றும், அந்த மாது நடந்து கொண்டிருப்பதைப் பார்ப்பதன்றி அவரால் வேறேதும் செய்ய முடியவில்லே.

ஸியூக்ஸ் நதி தீரத்தில் பெரிய குடியேற்ற இடமாக ட்ராண்டர்கள் அமைத்துக் கொண்டிருந்தனர். அங்கே அவர்களில் பலர் ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பே வந்து, மரச்சட்டங்களினுலான வீடுகளேக் கட்டியிருந்தனர். மேன்மேலும் நிலங்களேச் சாகுபடிக்குக் கொண்டு வந்து நல்ல பயன் அடைந்து வந்தனர். தாங்கள் முதன் முதலில் வந்தபோது அங்கே எப்படி இருந்தது என்பது பற்றி அவர்கள் கதை கதையாகச் சொன்ஞர்கள். அப்போது அங்கு நிறைய இந்தியர்கள் இருந்தனராம். நகரங்களே கிடையாதாம். அக்கதைகளேக் கேட்க பெர்ஹான்ஸா வுக்குப் பிரியமாக இருந்தது. ஆயினும், அவர்களேயும் விடத் தன்ஞல் அதிகம் சாதிக்க முடியும் என்ற நம்பிக் கையும் இருந்தது. மிகுந்த தன்மானம் கொண்டவ ரல்லவா அவர் !

மறுநாள் வானம் தெளிவாகி விட்டது. எனினும் இன்னமும் குளிர் குறைந்தபாடில்லே. பார்ஸ்டாடிட மிருந்து சில மரங்களே பெர்ஹான்ஸா வாங்கி யிருந்தார். அம் மரங்களே அவர் வெட்டிச் சாய்க்க வேண்டியிருந்தது. மற்றவர்களும் மரம் வாங்க வெளியே சென்றிருந்தனர். அதை அவசரமாக அவர்களால் முடிக்க முடிய வில்லே. எனவே மூன்ரும் நாள் காலே வரை வீட்டுக்குத் திரும்பிப் புறப்பட அவர்களால் இயலவில்லே. ட்ராண்டர்களுடன் பேசுவது அவர்களுக்குப் பிடித்தமா யிருந்தது. மேலும், வேற்று முகத்தை அவர்கள் கண்டு வெகு நாளாகி யிருந்ததே! வஸந்த காலத்தில் விதைக்கத் தேவையான கோதுமையையும் இந்தப் பயணத்தில் அவர்கள் வாங்கிச் சேர்த்து விட்டனர். ஆகவே அவசரப்பட முடியவில்லே. நார்வீஜிய நடனங்களோடு நடந்த களிமிக்க விருந்திலும் கலந்து கொள்ள அவர்களுக்கு அவகாசம் இருந்தது. அப்போது பார்ஸ்டாட் நங்கைக்கு மிக அருகே ஸாம் ஸோலம் இருக்குமாறு பெர்ஹான்ஸா பார்த்துக் கொண்டார். அவர்கள் மணம் புரிய அதிகநாள் பிடிக் காது என்பது பற்றி அவருக்குச் சந்தேகம் இருக்கவில்லே.

மூன்ரும் நாளன்று, விடிவதற்கு வெகு நேரம் முன்பே அந்நால்வரும் உற்சாக மிக்க ட்ராண்டர்களேப் பிரிந்து ஸ்பிரிங்க்ரீக்குக்குத் திரும்பக் கிளம்பி விட்டனர்.

2

அன்று ஞாயிற்றுக்கிழமை. பிற்பகலில் மேகம் அடர்ந்து எங்கும் சாம்பல் நிறம் மண்டியிருந்தது. கதிரவன் வீச்சு கடுமையாக இல்லே. காற்று, தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்தது. தனிமையைத் தவிரக் காண்பதற்கு வேறேது மில்லே. புதிய சிசு உள்பட எல்லோரும் டோன்ஸெடெனின் குடிசையில் இருந்தனர். தனியாக எவரும் இருக்க முடியாத அளவு மனமிடியச் செய்யும் நாள் அது. அவ்வாறேதான் எல்லா நாட்களும் இருந்தன. ஓராண்டில், இன்னும் நான்காண்டுகளில், அடுத்த ஆருண்டுகளுக்குள் அந்தப் பிரதேசம் எத்தனே அற்புதமானதாகி விடும் என்று கற்பனேயால் கண்டு தாங்கள் கூறும் கதைகளில் அவர்களுக்கே நம்பிக்கை இருக்க வில்லே.

அவர்கள் அனேவரையும் விழித்தெழ வைத்தார் டோன்ஸெடென். அவர்களுடைய நிலங்களுக்கான சாஸனங்கள் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டதும் என்ன பெயர்களே உபயோகிக்கப் போகிருர்கள் என்று அவர்களே அவர் கேட்டார். ஏன், தங்கள் பெயர்கள் அதற்கு ஏற்றவை அல்லவா, வேறென்ன தேவை என்று பெர்ஹான்ஸாவும், ஹோன்ஸ் ஓல்ஸாவும் பதிலுக்கு வின விஞர்கள். அதைக்கேட்டு வழக்கம் போல் டோன்ஸெ டெனுக்குக் கோபம் வந்து விட்டது. அந்தப் பெயர் களேயே தொடர்ந்து வைத்துக் கொண்டால் அவர்களே நார்வீஜியர் என்று எவர் அறிவார், ஸ்வீடிஷ்காரர்கள் என்று கூட நினேக்கலாமே என்று சீறிஞர்.

அது அவர்கள் சிந்தனேக்கு சரக்குத் தந்து விட்டது! அப்போதெல்லாம் மடியிலே குழந்தையைப் போட்டு ஆட்டியவாறு அமர்ந்திருந்தாள் பெரெட். அவள் முகத் திலே ஒரு புன்னகை. வாயே திறக்க வில்லே அவள். நார்

வேயில் வாக் என்ற இடத்திலிருந்து வந்தவள் ஸாற்றிஞ. ஆகவே அவளும் ஹான்ஸ் ஓல்ஸாவும் வாக் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தனர்.

மேலும் சிறிது சம்பாஷணைக்கு பிறகு 'ஹோம்' என்ன பெயர்தான் தங்களுக்குத் தகுந்தது என்று பெர் ஹான்ஸா கூறினர்—ஓல்ஹால் டார் ஹோம்...ஹான்ஸ் கிறிஸ்டியன் ஹோம்......பெடர் விக்டோரியஸ் ஹோம்... ...இப்பெயர்களெல்லாம் அவருக்கு நேர்த்தியாகப் பட்டன. உண்மையிலேயே அவை அப்படிப் பட்டவை தான். அப்போதும் கூட பெரெட் ஏதும் பேச வில்லை. சைத்தானின் மற்றுமொரு வேலைதான் இது; ஞான ஸ்நானத்தின் போது இடப்பட்ட பெயர்களை மாற்ற அவன்தான் தூண்டுகிருன் என்றே அவள் எண்ணினுள்.

அன்றிரவு மற்றவர்கள் படுத்தபின் கணப்புக்கருகே அமர்ந்து வெகு நேரம் ஆலோசனை செய்து கொண்டே யிருந்தாள். 'தந்தைவழிப் பெயர்களை அவர்கள் விட்டா யிற்று......அடுத்தபடி இந்நாடு அவர்களிடம் என்னென்ன பலி கேட்கும் ? அதற்கு முடிவே கிடையாது !'......மற்ற வர்களின் மகிழ்ச்சியைக் கெடுக்க அவள் விரும்ப வில்லை. ஆயினும் அவர்கள் செய்தது அடாத காரியமென அவளால் எண்ணுதிருக்க முடியவில்லை. எதையும் சொல்ல அவளுக்கு விருப்பம் கிடையாது......என்ன சொன்னுலும் தான் தவருகத் தோன்றி விடுகிறதே! பைத்தியமா பிடித்து வருகிறது அவளுக்கு? ஆம், அப்படித்தான் இருக்கக் கூடும்! ஆஹா, இம்முறை ஆண்டவன் அவள் உயிரை எடுத்துக் கொண்டு விடவில்லை ; பச்சாதாபப் படச் சந்தர்ப்பம் அளித்திருக்கிருர். ஆனுல் அதுதான் அவளால் இயலவில்லை—கணப்பின் எதிரே தனியாக உட்கார்ந்திருந்த அவளால் இருட்டறையில் அகப்பட்ட சிறு குழந்தையைப் போல் பயப்படத்தான் முடிந்தது.

கணப்பு அவிந்து விட்டது. அந்தக் குளிர் கவ்விய அறையிலேயே அவள் படுக்க நேர்ந்தது. இன்னமும்கூட அவளுக்கு உறக்கம் வரவில்லை. தாம் நினைத்ததை நடத்தி இன்புறப் பலரைப் பாலைவனத்துக் கடவுள் விரட்டியிருக்கிருர் என்பது அவளுக்குத் தெரியும். ஆனுல்

இங்கோ பாலேயுடன் பயத்தையும் அல்லவா சேர்த்திருக் கிருர்?...அந்த அச்சத்தை மட்டும் ஆண்டவன் அகற்றி விடுவாராஞல் இங்கும்கூட அவருக்கு தன்ஞல் நல்ல படிப் பணி புரிய இயலுமென அவள் நிச்சயமாக நம்பினுள்.

பகல் பொழுது நீளவாரம்பித்தது. மறுபடியும் ஆண்கள் வேலே செய்யத் தொடங்கினர். பெர்ஹான் ஸாவோ இன்னமும் கூட டகோடா மக்களால் பேசப் படும் அரியதொரு காரியத்தைச் சாதித்தார். வசந்த காலத்தில் கிழக்கே அனுப்புவதற்காக மாரிகாலம் முழு வதிலும் நாற்பது மைல்களுக்கு அப்பாலிருந்த இந்தியர் கள் பிராணிகளேப் பிடித்துத் தோலுரிப்பதாக ட்ராண்டர்களிடம் அவர் கேள்விப்பட்டிருந்தார். அங்கே தோலுக்கு அதிக விலே இல்லே. ஆஞல் மின்னஸோட்டா விலோ, இன்னும் கிழக்கிலோ நிறைய விலே கிடைக்கும். இந்தியருடன் தாமே வியாபாரம் செய்யலாம் என்பது தான் அவரது திட்டம். அவர்களிடம் இயன்ற அளவு தோல்களே வாங்கி, கீழ்த்திசைக்கு அதிக விலே வைத்து அனுப்பி லாபம் சம்பாதிக்க அவர் உத்தேசித்தார். அது பற்றி ஓயாது சிந்தித்தார்.

அந்த வியாபாரத்தில் இறங்குவதாஞல் அவருக்கு மேலும் பணம் தேவை. மற்றும் பலவும் அவசியமா யிருந்தன. பெரெட்டினிடம் தம் யோசனேயை அவர் சொன்னபோது அதை ஏற்பதைத் தவிர அவளுக்கு வேறு வழி யிருக்கவில்லே. ஆடைகள் அவர்களுக்கு மிக மிகத் தேவை; ஒட்டுகள்கூடக் கிழிந்துவிட்டனவே! ''ஆம், நம்மால் இயன்ற நாள் வரை உயிர் வாழவேண்டியது தான்'' என்ருள் அவள். அங்கிருந்து போய்விட அவ ருக்கு எவ்வளவு ஆர்வம் என்பதைக் கண்டாள். மற்ற வர்களுக்கும் அத்தனே ஆவல் உண்டு என்பதை ஏன் அவர் எண்ணவே மாட்டேன் என்கிருர்?—எனினும் அது பற்றி அவரிடம் அவள் சொல்லவில்லே.

அம்முறை ஒரு வார காலம்வரை பெர்ஹான்ஸா திரும்பவில்லே. இந்தியர்களுடன் சிறிது பேசிய பின் தன்ஞல் தூக்க முடிந்த அளவு கம்பளித் தோல்களே அவர்

வாங்கி விட்டார். பின்னர் கிழக்கே சென்று அவற்றை அவர் விற்ருர். ஆனுல் எவ்வளவு கிழக்கே என்பதை எவரிடமும் அவர் சொல்லவில்லே. வீடு திரும்பியபோது அவர்களுக்குத் தேவையாயிருந்த பல பண்டங்களே வாங்கி வந்தார்......அப்படியும்கூட அவரிடம் நாற்பது டாலர் மிச்சம் இருந்தது!

ஆயினும் மூன்று நாள் கழித்து அந்தத் தோல்களுக்காக இந்தியரிடம் பணம் கொடுக்கவும், மேற்கொண்டு வாங்கவும் மீண்டும் சென்ருர். மற்றுமொரு முறையும் போனுர். ஆக மூன்று தடவை சென்று வந்தார் அவர். ஒவ்வொரு முறையும் ஒரு வாரம் பிடித்தது. அந்தப் பயணங்களின் பயனுக அவர்களுக்கு வேண்டியிருந்த அத்தனே பொருள்களும் சேகரிக்கப்பட்டு விட்டன. அவற்ருேடு முடிவில் நூற்று இருபது டாலர்களேயும் பெரெட்டினிடம் அவரால் கொடுக்க முடிந்தது.

கோதுமை விதைக்காக ட்ராண்டர்களிடம் அவர்கள் செல்ல நேர்ந்தது. அதே சமயத்தில் பார்ஸ்டாடுகளிடமிருந்து ஒரு இளங் கன்றுக் குட்டியையும் பெர்ஹான்ஸா வாங்கி வந்தார். இறுதியாக, அந்தப் பயணங்கள் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டன. ஏனெனில், வீட்டிலும் பண்ணேயிலும் வேலே செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. அந்தப் போக்கு, வரத்தின்போதெல்லாம் பெரெட் வாயே திறக்கவில்லே எனலாம். அது பற்றி எண்ணவே முடியாத அளவுக்கு காரியத்தில் முனேந்திருந்தார் பெர்ஹான்ஸா. எனினும் தன்னுடைய பழைய பெரெட்டாக அவள் ஆகமாட்டாளா, அவளுக்காகத் தான் செய்வது பற்றி மகிழ்ச்சியுடன் சொல்லமாட்டாளா என்று அவர் ஏங்காமலில்லே. எப்படியும் வசந்த காலம் வந்ததும் அவள் உடலும் மனமும் மீண்டும் தேறிவிடுமென அவர் நம்பினுர்.

ஆருவது பாகம்

1

பெர்ஹான்ஸாவும் அவருடைய குமாரர்களும் மேஜையைச் சுற்றி அமர்ந்து விதைகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தனர். அதிஜாக்கிரதையுடன் செய்யப்பட வேண்டிய காரியம் இது; களைப்பூண்டு விதைகள் அனைத்தும் களையப்பட்டாகவேண்டும். அவற்ருேடுகூட சீராக இல்லாத கோதுமை விதைகளையும் பெர்ஹான்ஸா கழித்துக் கொண்டிருந்தார். அந்தப் புதிய பூமியில் சிறந்த விதைகளை மட்டுமே விதைக்கவேண்டுமென ஆர்வம் அவருக்கு.

இந்தச் சிரமம் மிகுந்த வேலையில் ஈடுபட்டிருக்கை யிலும் அவரது மூளை சும்மா இருக்கவில்லை. மும்முரமாக வேலை செய்தது அது—'இதுதான் ஆரம்பம்! இந்தச் சில மூட்டை விதைகள் விரைவில் பல மூட்டைகளாக விளையும். வருடம் பூராவுக்கும் நம் குடும்பத்துக்குத் தேவையான கோதுமை மாவை இவை கொடுக்கும். அதோடு பணமும் சம்பாதித்து தரும். அடுத்த வருஷத் திற்கு வேண்டிய விதைகளையும் அளிக்கும். அந்தக் கோதுமையை அப்படியே வைத்துக்கொண்டு புதிய குடி யேற்றக்காரர்களுக்கு விதைக்காக விற்க முடிந்தாலும்

முடியலாம்...விதைக் கோதுமைக்காகப் பணம் கொடுக்க எவ்வளவோ புதிய குடியேற்றக்காரர்கள் தயாரா யிருப்பர். உம், பார்க்கலாம்.'

''பையன்களா, ஜாக்கிரதை! கவனித்துக் காரியம் செய்யுங்கள்'' என்று உடனே எச்சரிக்கை விடுத்தார்.

வெதுவெதுப்பான வசந்த காலம் வந்ததும் பெர் ஹான்ஸாவினுல் வாளாவிருக்க முடியவில்லை. விதைக் கப் பக்குவமாயிருக்கிறதா என்று நிலத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தார். கோழிகள் தினந்தோறும் ஐந்து முட்டைகள் வீதம் இட்டன. விரைவில் அவற்றைக் குஞ்சு பொரிக்க விடுவார். இலையுதிர் பருவத்திற்குள் பெரெட் கவனித்துக்கொள்ள மேலும் ஐம்பது குஞ்சுகள் சேர்ந்து விடும்.

கடந்த வசந்தத்துக்குப் பின் இம்மாதிரியாக அவர் இருந்ததை பெரெட் பார்த்ததேயில்லை. உயிருள்ள ஒவ் வொன்றையும் அவர் மென்மையாகத் தொட்டார். கொஞ்சிக் குலவினுர். அனைத்தும் வளர்ந்த அவ்விடத்தில் அவரிடம் வசந்தம் பூத்துக் குலுங்கியதுபோலவே தோன்றியது.

அந்தச் சமவெளிமீது நாள் தவருமல் சூரியன் ஒளிர்ந்தான். உற்சாகமூட்டும் கால நிலையும் தொடர்ந் தது. அதற்குமேல் பெர்ஹானஸாவினுல் காத்திருக்க முடியவில்லை. நார்வேயில் வழக்கமாயுள்ள விதைப்புப் பருவமான ஏப்ரல் ஆரம்பத்தில் விதைகளைத் தூவத் தொடங்கினுர். தன் நிலத்தில் மிக உலர்ந்த பகுதியில் பாத்திகளைக் கட்டித் தயார்ப்படுத்தினுர். அண்டை நிலங்களை நோட்டமிட்டார். ஆம், அவர்தான் முதலா வதாக விதைப்பவர்!

தன் வாழ்க்கையின் உன்னதத் தருணம் வந்துவிட்ட தாக பெர்ஹான்ஸா கருதினுர்.......தன் சொந்த நிலத் தில் அல்லவா கோதுமை விதைத்திருக்கிருர் அவர்! கைநிறையக் கோதுமையை எடுத்துக்கொண்டார். அதைத் தலைக்குமேல் உயர்த்திப் பிடித்து இறைத்தார். அது நாலாபுறமும் சிதறிப் பறந்தது ஒவ்வொரு மணி யும் அதற்குரிய இடத்தில் போய் விழுந்தது. மிகவும்

கவனமாக, மெதுவாக அவ்வேலையை அவர் செய்தார். எவ்வளவு மணிநேரம் பிடித்தது என்பதை எண்ணிக்கூடப் பார்க்கவில்லை.

அன்று பிற்பகல் ஓட்டமாகக் குன்றேறி வந்தார் டோன்ஸெடென். தான் கண்ட காட்சியை அவரால் நம்பமுடியவில்லை. ''உமக்குப் பைத்தியமா பிடித்து விட்டது, ஐயா? நிலம் இன்னும் போதிய அளவு காயவே இல்லையே! மேலும், குளிரும் அகன்ற பாடில்லையே!'' என்று அவர் கேட்டார். பதிலுக்கு உரக்கச் சிரித்து விட்டுத் தொடர்ந்து விதைத்தார் பெர்ஹான்ஸா. தன்னால் இயன்றது முழுவதையும் செய்து விட்டோம் என்ற ஆறுதலுடன் தன் வீட்டுக்குத் திரும்பப் புறப் பட்டார் டோன்ஸெடென்.

சூரியன் அஸ்தமிக்கும் வரையில் விதைப்பு வேலையை பெர்ஹான்ஸா தொடர்ந்து செய்தார். அன்றிரவு சாப்பாட்டு நேரத்தின்போது அவருக்கு அளவிலா ஆனந்தம், ஆயாசம். நாற்காலியில் சற்றும் அசையாமல் அமர்ந்திருக்கவே ஆசைப்பட்டார். பெரெட்டோ, பையன்களோ தன்னை நோக்கிக் கூறியது எதுவும் அவர் காதில் விழவில்லை.

மறுநாள் பூராவும் அயராமல் விதைத்தார். அவருக் குப்பின் அவருடைய பிள்ளைகள் மாடுகளைக் கொண்டு அவ்விதைகளை மண்ணினால் மூடினர். மாலை வந்தபோது அவர் வேலை முடிந்துவிட்டது. அண்டை நிலக்காரர் களோ அதை இன்னும் தொடங்கவே யில்லை! அன்றிரவு வீடு திரும்பியபோது அவர் அடைந்த திருப்தி இவ்வளவு அவ்வளவு அல்ல.

மறுநாள் ஊதல் காற்று அடித்தது. சூரியன் வெகு நேரம் மேகங்களால் மறைபட்டிருந்தான். பின்னர் மழை பொழிய வாரம்பித்தது. சற்றுப் பொறுத்து கட்டி கட்டியாகப் பனி கொட்டத் தொடங்கிற்று. தரையில் விழுந்ததும் அந்த ஆலங்கட்டிகள் தண்ணீராக மாறின. விரைவில் குளிர் கடுமையாயிற்று. கட்டிகள் கரையாமல் அப்படியே பனியாகத் தேங்கின. அதுவரை அவர்கள் கண்டிருந்த புயல் அனைத்திலும், அந்த மாரிக்காலத்தில் அனுபவித்த அனைத்தையும் விடப் படுமோசமானது அது.

மறுநாள் விடியற்காலையில் பனிமழை நின்று விட்டது. ஆனால் குளிர் குறையவில்லை யாதலால் யாரும் வெளியே போய்ப் பார்க்க முடியவில்லை. வஸந்த காலம் போய் வருடக் கணக்கில் ஆகிவிட்டது என்ற நினைப்பையே அது ஏற்படுத்திற்று.

அந்நேரம் முழுவதும் பெர்ஹான்ஸா சற்றும் தூங்க வில்லை. குழந்தைபோல் அழத்துடித்தார். விவசாயம் பற்றி ஏதும் அறியாத ஒரு மாலுமியாய்ப் பணியாற்றி யவர் தானே அவர்? அனைவருக்கும் முதலாவதாக இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்தக் கேட்டைத் தானே தேடிக்கொண்டு விட்டார்! அவரது விதை யனைத்தும் உறைந்த பூமியில் புதைந்து விரையமாகி விட்டது. மேற்கொண்டு விதை கிடைக்க வழியில்லை,— உணவு எதையும் உட்கொள்ள மறுத்தார். பெரெட் தன் அருகில் வந்தாலும், பேசினாலும் கூச்சல் போட்டார்.

மறுபடியும் சூரியன் பிரகாசிக்கத் தொடங்கினான். ஆனால் அப்போதும் பனி உருகத் தொடங்கவில்லை. சுவரை வெறித்து நோக்கியவாறு படுக்கையிலேயே கிடந்தார் பெர்ஹான்ஸா. தெய்வ சக்தி முழுதும் தமக்கு எதிராகச் செய்வதாக அவருக்குப் பட்டது. அந்நிலையில் அவரால் என்ன செய்ய இயலும்? தன்னைப் பிடித்தாட்டடைசத் தான் முற்பட்டிருக்கிறானேயானால்......உம், பண்ட சாலையில் பலகைமீது தொங்கும் கயிறுதான் அவனிட மிருந்து தப்ப ஒரே வழி என்று முடிவு கட்டினார்.

எனினும் பனி விரைவில் கரைந்தது. தரையும் காய்ந்தது. சூரியன் பளிச்சென ஒளி வீசினான். தொடர்ந்து ஆகாயத்துக்கும் பூமிக்குமாக அவன் கதிர்கள் அளாவி நின்றன. இரவு நேரத்தில்கூட தண்மையும் வெப்பமும் கலந்திருந்தன. ஆயினும் என்ன பயன்? பெர்ஹான்ஸாவின் விதைகள் தான் பனியினால் பாழடிக்கப்பட்டுப் பூமியினுள் புதைந்து கிடந்தனவே! அப்போது, டோன்ஸெடென் விதைக்கத் தொடங்கினார். அந்தக் காட்சியைப் பார்க்க பெர்ஹான்ஸாவுக்குப் பொறுக்க வில்லை. தன் நிலத்துக்குச் சென்று ஒரு விதையை எடுத்துப் பார்த்தார். பொன் நிறமாக அது

இல்லே. மாருக, வெளுத்து விகாரமாக இருந்தது; வெடிக்கச் சித்தமாக இருந்தது. ''பனியின் விளேவு இது. எல்லா விதைகளும் அழுகத் தொடங்கி விட்டன!'' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டார். ஆம், சைத்தான் தான் தன்னேத் தேடித்துரத்துகிருன் என்பதில் அவருக்கு ஐயமேயில்லே.

அப்படியும் அவரிடம் மற்ருெரு நிலம் மீதியிருந்தது. அந்த நான்கு ஏக்கராப் பரப்பில் உருளேக்கிழங்குகளே அவர் ஊன்றிஞர். பையன்கள் அவரோடு சேர்ந்து உழைத்தனர்......அப்பரப்பிலிருந்து அறுநூறு பறைகள் கிழங்கை அறுவடை செய்து விற்க இயலும். ஆகவே அடியோடு நஷ்டமாகி விட்டது. தான் தொடர்ந்து வேலே செய்து கொண்டிருக்க வேண்டும். இன்றேல் சித்தம் கலங்கிவிடும் என்பதை பெர்ஹான்ஸா உணர்ந் தார். சைத்தான் பின்பற்றுகையில் வேலே செய்வதன்றி அவனே விரட்ட வேறு வழி யேது?

ஒதுக்க முடிந்த உருளேக்கிழங்குகள் அனேத்தையும் எடுத்து, பூரா நிலத்திலும் அவற்றை நடவேண்டிச் சிறுசிறு துணுக்குகளாக வெட்டிஞர். பின்னர் அவரும் அவருடைய பிள்ளேகளுமாக அவற்றை நட்டார்கள். ஞாயி றன்று காலே அவர் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவே யில்லே; அத்தனேக் களேப்பு. மேஜைமுன் அமர்ந்து விவிலிய நூலே பெரெட் படித்தாள். கோபத்திஞல் அவர் குமுறிய வேளேகளில் அவர் அதிகம் பேசப் புகுந்ததில்லே. பொதுவாக, சமீபகாலத்தில் அவள் அபூர்வமாகவே பேசிஞள். கோதுமை விளேத்த நஷ்டத்தை ஈடுகட்ட என்ன செய்யலாம் என்று பெர்ஹான்ஸா யோசித்தவாறு இருந்தார். எப்படிச் சிந்தித்த போதிலும் அவருக்கு வழி யெதுவும் துலங்கவில்லே.

அப்போது, தன் பிள்ளேகள் வெகுவேகமாக ஓடி வரும் ஒலி அவர்கள் காதில் விழுந்தது. எழுந்து உட்காரு முன் அவர்கள் கதவைத் திறந்து விட்டனர். ''கோதுமை முளேத்து விட்டது, அப்பா!'' என்று மற்றவர்களே முந்திக் கொண்டு ஓடிவந்த ஓல் கூவிஞன். அவனுக்குப் பின்ஞல் வந்த ஹான்ஸும் கத்திஞன். ''இந்த உயரம் வளர்ந்

திருக்கிறது அது! இனி எனக்குத் துப்பாக்கி வாங்கித் தருவீர்கள் அல்லவா?''

பெர்ஹான்ஸா வாய் திறவாமல் எழுந்து வெளியே சென்ருர். அங்கு அசையாமல் நின்ருர். சற்றுப் பொறுத்து, தன்னையும் அறியாமல் அழத்தொடங்கிவிட்டார். அவ் வயல் பூராவிலும் சிறுசிறு பச்சை நிற முளைகள் சூரிய வெளிச்சத்தில் அசைந்தாடுவது தெரிந்தது. வெகுநேரம் அக்காட்சியைப் பார்த்துக் கொண்டேயிருந்தார். பிறகு வீட்டுக்குத் திரும்பியபோது முற்றிலும் புதிய மனிதராகி விட்டார். அவர் உள்ளே நுழைந்தபோது இன்னமும் விவிலிய நூலையே பெரெட் படித்துக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்துச் சொன்ஞர் அவர்: ''எங்களுக்கும் இந் நூலில் சிறிது படித்துக் காட்டேன்! ஏ பையன்களே, கூச்சல் போடாதீர்கள். இங்கே வந்து வாயை மூடிக் கொண்டு உட்காருங்கள். அம்மா நமக்காக வேத புத்த கத்தைப் படிக்கப் போகிருள்.''

வஸந்தத்தில் மேலும் பலர் அக் குடியேற்றத்துக்கு வந்தனர். ஐரிஷ்காரர்கள் திரும்பி வந்தனர். அதை யடுத்து மற்றும் பல புதிய குடியேற்றக்காரர்களுடன் வர்ஸ்ஸிங்குகளும் ஸாக்னிங்குகளும் வந்து சேர்ந்தனர். டோகெல் டல்லாக்ஸென் என்ற பேர்வழியைத் தவிர அவர்கள் அனைவரும் நல்லவர்களே. அந்த ஆளிடம் மற்ற வர்களைவிட அதிகப் பணம் இருந்தது. டோன்ஸெடெ னையும் தோற்கடிக்கும் அளவு நிறையப் பேசிஞர் அவர். எதிலும் தன் வழிதான் சிறந்ததென மற்றவர்களுக்குக் காட்ட முற்பட்டார். முதலில் நிலத்தைப் பண் செய்யப் புகாமல் தன் மர வீட்டைக் கட்ட விரும்பிஞர். ஆஞல் அதற்குத் தேவையான சாமான்களை வாங்குவதற்காக அவருடன் நகரத்துக்குச் செல்ல முடியாதபடி தத்தம் வேலைகளில் மற்றவர்கள் மூழ்கியிருந்தனர். எனவே, ஏனையோரைப் போல அவரும் மண்பத்தை வீட்டையே நிர்மாணிக்க நேர்ந்தது.

இது பற்றித் தன் கருத்தைச் சொன்ஞள் பெரெட். ஒரு மரவீடாகிலும் அங்கு எழுப்பவேண்டும் என்பது அவள் அவா. அது தன் வீடாகத்தான் இருக்க வேண்டு

மென அவள் ஆசைப் படவில்லை. ''மிருகங்களைப் போல் மனிதர்கள் வாழலாகாது. மிருகமாக மாறியபின் வீட்டைப் பற்றிய வியவஸ்தை இராது. இங்கு யாராவது எதையாவது அமைத்தாக வேண்டும் — வாய்விட்டுச் சிந்திப்பது போல்'அவள் பேசினாள். அதைக் கேட்டதும் வயலைப் பார்க்க பெர்ஹான்ஸா சென்று விட்டார்; வீடு திரும்ப அவர் இஷ்டப் படவில்லை. அவர் கண்கள் கலங்கின. ''ஓயாமல் உழைக்கிறோம் நாம். ஆயினும் நாம் உதவாக்கரை என்கிறாளே அவள்!'' என்று மனம் குமுறினார் அவர். நம்முடைய பெரெட் பெண்ணா இப்படி டோர்கெல் டல்லாக்ஸெனைப் போல் பேசுவது......என்ன நேர்ந்து விட்டது அவளுக்கு? இத்தனை உழைப்பும் இறுதியில் உபயோக மற்றுத்தான் போகப் போகிறதா?'

மற்றும் பலர் அங்கு வந்து ஒருநாள் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டனர். அங்கெல்லாம் அவ்வளவு ஜன நெரிசல் இல்லை. மேலும் மேலும் வந்து கொண்டிருந்தனர் அவர்கள்.

சமவெளியில் மூன்று நாட்களாகப் பனிமூட்டம். மூன்றாம் நாளன்று மாலையில்தான் அத்திரை சற்றே விலகியது. அப்போது பொன்னிறமுடன் பொலிந்த சூரிய அஸ்தமனக் காட்சியை அனைவரும் கண்டு மகிழ முடிந்தது. முற்றத்தில் அமர்ந்து பால் கறந்து கொண்டிருந்தாள் பெரெட். நிமிர்ந்து பார்த்த போது தங்களை நோக்கி ஒரு வண்டிவரக் கண்டாள். அதன் பின்னால் இரு பசுக்களும், களைத்துப் போன ஒரு மனிதனும், அவனைத் தொடர்ந்து மெதுவாக இரு சிறுவனும் நடந்து வருவதைப் பார்த்தாள். ''இங்கு நார்வீஜியர் யாராவது இருக்கிறார்களா?'' என்று அந்த மனிதன் கேட்டான். பண்டசாலையிலிருந்து வெளி வந்த பெர்ஹான்ஸா, ''ஓ, இருக்கிறார்களே! நார்வீஜியரை நாடுகிறீர்களென்றால் நீங்கள் நல்லதிருஷ்டம் செய்தவர்களே'' என்றார்.

அன்றிரவை அங்கு தாங்கள் கழிக்கலாமா என்று அந்த மனிதன் கேட்டான். பெர்ஹான்ஸா அதற்கு இசைந்ததுடன் வண்டியிலிருந்து சாமான்களை இறக்கு

வதில் அவனுக்கு உதவவும் முற்பட்டார். அவ்வண்டி யிலிருந்து மற்று மிரு சிறுவர்களும், ஒரு சிறுமியும் வெளிப் பட்டனர். பின்னர் வண்டியினுள் நோக்கிய அந்த மனிதன், ''நீயும் வெளியே வரப்போகிருயா?'' என்று வினவிஞன். உடனே அந்தச் சிறுமி தன் தந்தையின் பக்கம் திரும்பி, ''முதலில் நீங்கள் கயிற்றை அகற்றியாக வேண்டுமே! மறந்து விட்டீர்களா, என்ன?'' என்று கேட்டாள். அதையடுத்து அவ்வண்டிக்குள் அவன் புகுந் தான். பெர்ஹான்ஸாவும் உள்ளே உற்றுப் பார்த்தார். அங்கே தாம் கண்டதை அவரால் நம்பமுடியவில்லை. அவரது அகம் வெளிறியது—அங்கே, ஒரு பெட்டியின் பேரில் சாய்ந்தவாறு துணி மூட்டை யொன்றின் மீது ஒரு மாது உட்கார்ந்திருந்தாள். பெட்டியின் கைப் பிடிகளோடு அவளது கைகள் பிணைக்கப்பட்டிருந்தன. சாதாரணப் பெண்மணியினுடையது போல் தென்பட வில்லை அவள் முகம்.

பெர்ஹான்ஸாவைப் பொருட்படுத்தாமல் அவளைக் கவனிக்கப் புகுந்தான் அப்பேர்வழி. அவள் இறங்க உதவியதும், ''அனைத்தும் சரியாகிவிடும்'' என்று குழந்தையைச் சமாதானப் படுத்துவது போலக் கூறிஞன்.

அந்தப் பெண்மணியிடம் பெரெட் ஓடிச் சென்று அணைத்துக் கொண்டாள். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். அக்கணமே பரஸ்பரம் புரிந்து கொண்டு விட்டனர். ''இது கூட உரிய இடம் அல்லவே!'' என்று கத்தியவாறே பெரெட்டுடன் வீட்டினுள் சென்ருள் அவள்.

அதன் பின் தன் வரலாற்றை பெர்ஹான்ஸாவிடம் அந்த மனிதன் கூற வாரம்பித்தான். அவர்களுடன் மற்றும் நான்கு வண்டிகளும் புறப்பட்டனவாம். அவர்கள் சங்கடத்தில் சிக்கிக்கொண்டதும் மற்றவர்கள் அவர்களைப் பிரிந்து சென்று விட்டார்களாம். விசித்திரமான தொரு வகையில் விசித்து, விசித்து அழுவதே போல அந்த விருத்தாந்தத்தை அவன் கூறிஞன். மின்ன ஸோட்டாவி லிருந்து தாங்கள் கிளம்பி ஏறக்குறைய ஆறுவாரங்கள்

ஆகின்றன வென்றும், எங்கிருக்கிறோம் என்பது கூடத் தங்களுக்குத் தெரியா தென்றும் சொன்னான். அப்பயணம் பூராவிலும் வழிதவறித் திண்டாடியதாகவும், இனி நம்பிக்கைக்கு இடமில்லை என்ற நிலையிலேயே பெர்ஹான்ஸாவின் வீட்டுக்கு வந்து சேர்ந்ததாகவும் தெரிவித்தான். தங்களுக்கு நேராத இடையூறுகளே கிடையாது என்று கூறித் தன் கண்களை மீண்டும் துடைத்துக் கொண்டான்.

''உங்கள் மனைவி நோயுற்றிருக்கிறாளா, என்ன?'' என்று பெர்ஹான்ஸா விசாரித்தார்.

''அது பற்றி நானறியேன்'' என்று மெதுவாகப் பதில் அளித்தான் அவன். ''எப்போதும் போல் உடல் நலமுடன் இருப்பதாகத்தான் தோன்றுகிறது. ஆனால் பெண்டிரால் அதிக காலம் தாக்குத் பிடிக்க முடியாதது ஏன் என்பதை அந்த ஆண்டவன்தான் அறிவார். மேலும், அவள் ஒரு தாயுமாயிற்றே! உம், எங்களுடைய கடைசிப் பையனை சமவெளியில் தனித்ததோர் இடத்தில் புதைத்து வரும்படி வேறு நேர்ந்துவிட்டது.''

அப்போது தனக்கே அழுகை வந்து விடும் போல் பெர்ஹான்ஸாவுக்குத் தோன்றியது. ''எப்படி இறந்தான் அவன் ?'' என்று தணிந்த குரலில் கேட்டார்.

பையன் நோயுற்றதையும், வழியில் தாங்கள் கண்ட வைத்தியருக்கு ஒன்றுமே தெரியாமற் போனது பற்றியும் அம்மனிதன் மீண்டும் விவரிக்கலானான். முடிந்தவரை வேகமாக வண்டியை ஓட்டி, மற்றவர்களுடன் சேரமுயல்வதே அவர்களால் செய்யக் கூடியதா யிருந்தது. ஆனால் ஓரிரவு பையன் திடுமென இறந்து விட்டான். எனவே அந்தச் சமவெளியிலேயே ஓரிடத்தில் அவன் சடலத்தைப் புதைத்தனர். அந்த இடம் அடையாளம் தெரிவதற்காக அங்கே ஒரு பெரிய கல்லை வைத்தனர். ஐந்து இரவுகளுக்குமுன் நடந்தது இது. அது முதல் தன் மனைவியை அவன் கட்டிப் போட்டே வைக்க வேண்டி யிருந்தது. இல்லாவிடில், அவள் வண்டியிலிருந்து இறங்கி, தன் மகனைத் தேடி ஓடுவதாயிருந்தாள். திரும்பிச் சென்று தன் மகனின் சவத்தைத் தோண்டி யெடுத்து, மக்கள் வாழு மிடத்தருகே புதிய சமாதி யொன்றில் அதைப்

புதைக்காவிடில் தன் மனைவிக்குப் பைத்தியம் பிடித்துவிடும் என்றான் அவன்.

வீட்டினுள் வருமாறு அவர்கள் அனைவரையும் பெர்ஹான்ஸா அழைத்தார். அந்தப் பெண்மணியை பெரெட் மிக்க ஆதரவுடன் உபசரித்துக் கொண்டிருந்தாள். உறங்கி விட்ட அவளை இன்னும் சௌகரியமாகப் படுக்கவைக்கப் பார்த்தாள். மற்றவர்களும் இரவை அங்கேயே கழிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தாள். அவையனைத்தும் முடிந்து அவர்கள் படுத்தானதும், அந்தப் பெண்மணி ஏதாவது சொன்னாளா வென பெரெட்டை பெர்ஹான்ஸா விசாரித்தார். ''ஏதோ கொஞ்சம் சொன்னாள். அதுவும் புரியக் கூடியதாயில்லை'' என்றாள் பெரெட். அதன் பெரில் அந்த மனிதன் கூறியவற்றை பெர்ஹான்ஸா அவளிடம் சொன்னார். ''நாளைய தினம் நானும் ஹான்ஸ் ஓல்ஸாவும் அம்மனிதனுடன் அப்பையனைத் தேடிச் செல்லப் போகிறோம். அவனுக்காக நாம் ஒரு சவப்பெட்டியும் தயாரிக்க வேண்டும். இம்மாதிரி அங்கே அவன்......... தனித்துக் கிடக்கக் கூடாது'' என்று கூறினார்.

பெரெட் முதலில் பதில் சொல்ல வில்லை. பின்னர் கசப்பு நிறைந்த குரலில் கத்தினாள். ''இப்போது தெரிகிறதல்லவா இந்த வாழ்க்கை கூடாததென்று? மனிதர்களால் இப்படி இருக்கவே முடியாது!'' அவள் அப்படிச் சீறுவானேன் என்று பெர்ஹான்ஸாவுக்குப் புரியவில்லை. ஆனால் சற்று நேரம்தான் அது பற்றிச் சிந்தித்தார். பின் அந்த மனிதன் பற்றி மீண்டும் ஆலோசிக்கத் தொடங்கி விட்டார்.

அவனுடைய மனைவி அந்த வீட்டினுள் நுழைந்தவுடனேயே ஓய்வெடுக்கலாள். அங்கு யாவும் சொந்தவீடு போலவே இருந்தது. படுக்கைகள், அடுப்பில் தண்ணீர் இவை போன்ற எல்லாம் வசதியாக இருந்தன. இன்முகம் காட்டி உபசரிப்போர் வேறு. தான் தனக்கு உதவி புரிந்ததை அவள் உணர்ந்தாள். அதன் பின் நடந்தது எதுவும் அவளுக்கு அதிகம் நினைவில்லை. மேலே போதுமான உடையில்லாமல் அந்தச்சமவெளியில் எங்கோ தன் பையன்

குளிரில் விறைக்கிறுன் என்ற ஒரே ஞாபகந்தான் அவளுக்கு.

விடியற்காலே வரையில் அவள் தூங்கிஞள். பின்னர் விழித்ததும் மகன் பற்றியே மீண்டும் நினேத்தாள், வெளியே சென்று அவனேக் கண்டு பிடித்தாகவேண்டும் என்று தீர்மானித்தாள். தன் கணவன் அனுமதிக்க மாட்டாஞகையால் அவன் எழுமுன் சென்றுவிட வேண்டும். அப்போதே சென்றுவிட வேண்டும் என்று முடிவு செய்தாள். சப்தம் செய்யாமல் படுக்கையிலிருந்து எழுந்தாள்; அதே படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்த அன்ஞ-மேரியைத் தன் கைகளால் திடீரென வாரியெடுத்தாள். அச்சிறுமியை ஏந்தியவாறே விரைவாக வெளியில் சென்ருள். யாரும் விழித்துக்கொண்டு விடாமலிருக்கும் பொருட்டு கதவை அப்படியே திறந்து போட்டாள். அந்த வீட்டை விட்டு நடக்கத் தொடங்கிஞள்.

தூக்கத்தில் புரண்டாள் பெரெட். உரத்த குரலொன்று தன்னேப் பலமுறை அழைப்பது போல அவளுக்குத் தோன்றியது. எனவே இறுதியில் அவளும் எழவேண்டியதாயிற்று. மிகவும் களேத்துப் போயிருந்ததால் மெதுவாகவே எழுந்தாள். அடுத்த படுக்கையைத் திரும்பிப் பார்த்தாள். அது காலியாயிருக்கக் கண்டாள். அவ்வளவுதான், வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து விட்டாள்! தன் கணவனேக் கூவியழைத்தாள்; "அவள் போய் விட்டாள். போய் விட்டாள்! சீக்கிரம் எழுந்திருங்கள்!"

உடனே பெர்ஹான்ஸாவும் எழுந்து உடையணிந்து கொண்டார். "ஹான் ஓல்ஸாவிடம் ஓடிப்போய் இங்கே அவரை வரச் சொல்லு. இதோ நான் புறப்பட்டு விடுகிறேன்."

விடியும் தருணத்தில் அவர்கள் புறப்பட்டனர். தன் வண்டிமீது நின்றவாறு அந்தச் சமவெளியில் சுற்றுமுற்றும் பார்த்தார் பெர்ஹான்ஸா. பக்கத்திலிருந்த குன்றின் உச்சியில் ஏதோ தெரிந்தது. அவரும் பெரெட்டும் அதை நோக்கி ஓடத் துவங்கினர். அவர்கள் தன்னே நெருங்கி வரும் மட்டும் அந்தப் பெண்மணி

அங்கேயே அசையாமல் நின்ருள். அவளுடைய கையில் இருந்ததைப் பார்த்ததும் பயத்திஞல் பெர்ஹான்ஸாவின் முகம் வெளுத்து விட்டது. முன்னேவிட வேகமாக ஓடி அன்ஞமேரியை அவள் கையிலிருந்து பிடுங்கிஞர்; அக் குழந்தையைத் தன் மார்புடன் இறுக அணேத்துக் கொண்டார். பிறகு பெரெட் அங்கு வந்து சேர்ந்ததும், களேத்துப் போயிருந்த அக் குழந்தையை அவளிடம் கொடுத்தார். என்ன முயன்றும் பெரெட்டிஞல் அவளே இறுக அணேத்துக்கொள்ள இயலவில்லே. தன்னே அழைத்த குரல் ஆண்டவனுடையதே. அவர்தான் அன்றிரவு தங்களுடன் தங்கி அருள் புரிந்தார் என்றெண்ணிஞள்.

அப்பெண்மணியுடன் மெதுவாகத் திரும்பி நடந்தார் பெர்ஹான்ஸா. அவளுடைய பையனேத் தேடிச் செல்லப் போவதாக அவர் தெரிவித்தார். "அப்படியாஞல் விறைத்துக் கிடப்பான் அவன்" என்ருள் அவள். அதற்குமேல் ஒன்றும் சொல்லவில்லே. பேசாமல், அவர்கள் புறப்படச் சித்தமாவதைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். சிறியதொரு சவப் பெட்டியை ஆடவர் தயாரித்தனர். அதனுள் வெள்ளேத் துணியொன்றை ஸாற்றிஞ விரித்தாள். பெர்ஹான்ஸா, ஹான்ஸ் ஒல்ஸா, அந்தப் புதிய மனிதன், அவன் மனேவி ஆகிய நால்வரும் கிளம்பினர். அடையாளத்துக்காக வைத்திருந்த கல்லேத் தேடி நான்கு நாட்கள் அவர்கள் அலேந்து திரிந்தனர். எங்கு தேடியும் சடலம் அகப்படவில்லே. எனவே, அவர்கள் திரும்பி வந்த போது சவப் பெட்டி காலியாகவே இருந்தது.

மறுநாள் அந்தத் தம்பதி புறப்பட்டு விட்டனர். ஜேம்ஸ் நதி தீரத்துக்கு அவர்கள் சென்றுகொண்டிருந்தனர். அந்நதி எங்கு இருக்கிறது என்பது தெரியுமாவென அம்மனிதனே பெர்ஹான்ஸா கேட்டார். "ஓ, தெரியுமே! மேற்குத் திசையில் இருக்கிறது. அந்தப் பக்கம் செல்வதொன்றே நான் செய்ய வேண்டியதெல்லாம்" என்ருன் அவன். வேறேதும் அவனிடம் சொல்லிப் பயனில்லே என்பதை பெர்ஹான்ஸா கண்டார். ஆகவே, முடிந்த மட்டும் சிறந்த மார்க்கத்தைக் காட்டியுதவ முயன்ருர்.

முன்னேவிட அமைதியுற்றிருப்பதாக அப்பெண்மணி காணப்பட்டாள். அவள் மனம் எங்கோ லயித்திருந்தது. புறப்படும் நேரம்வரை மடியிலே கை வைத்தவாறு அமர்ந்திருந்தாள். வந்த போது பேசிய விசித்திரக் குரலில் என்னென்னவோ அந்த மனிதன் கூறினன். பிறகு, தன் வேலையெல்லாம் முடிந்ததும் எல்லோர்க்கும் நன்றி கூறினன். மேற்குத் திசையில் அவர்கள் வண்டி நகர்ந்தது. இருளில் மறைந்தது.

கண்ணுக்குத் தெரிந்தமட்டும் அந்த வண்டியைப் பார்த்தவாறே ஒரு சிறு குன்றின் மீது பெரெட் உட்கார்ந்திருந்தாள். அவர்கள் போவதைக் காண அவளுக்குச் சந்தோஷம் தான். அதே சமயத்தில் மேலும் மேற்றிசையில் செல்ல அவர்களைத் தான் அனுமதித்திருக்கலாகாது என்றும் நினைத்தாள். அந்த எண்ணம் அவளுக்கு மிகுந்த வருத்த மூட்டியது. ''நான் வசிக்கும் இடத்தைவிட மோசமான பகுதிகளுக்கு மக்களை அனுப்பிக் கொண்டல்லவா இங்கு உட்கார்ந்திருக்கிறேன்! அவர்களுக்கு என்ன நேருமோ?'' என்று மனங் கலங்கினள். தங்கள் சுவடே தெரியாமல் பூமியினுள் அவர்கள் புதைந்து மறைந்து விடுவர் என்றே அவர்களுக்குத் தோன்றிற்று. போதாக் குறைக்கு மழை வேறு அவர்களை வாட்டும்போல் இருந்தது. கருத்த, கனத்த மேகங்கள் அச்சமவெளியை வளைய வரலாயின. தன் அழகிய சிறு வீட்டுக்கு பெரெட் மெதுவாகத் திரும்பி இரவு உணவைத் தயாரிக்கத் தொடங்கினள். நமக்கல்லா விடினும் பிறருக்காவது மகிழ்ச்சியூட்டிப் பார்ப்போமே என்று அவள் நினைத்தாள்.

இரவு உணவு முடிந்ததும் அந்தக் குன்றுக்கு அவள் மீண்டும் சென்ருள். கண்ணுக்குத் தெரியாவிடினும் அந்த வண்டி சென்ற வழியையே பார்த்துக்கொண்டிருந்தாள். 'பாவம், அப்பாவிகள்! தாம் நேசிக்கும் மக்களுக்கு இவ்வாறெல்லாம் நேர்வதை ஆண்டவன் எப்படித்தான் அனுமதிக்கிருரோ?'—பெரெட்டுக்கு அது விளங்கவேயில்லை. சைத்தான் தான் அவர்கள் அனைவரையுமே, தேடித் துரத்தி வந்து கொண்டிருக்க வேண்டுமெனத் தீர்மானித்தாள். அண்ணாந்து நோக்கிக்

கரிய மேகங்களைப் பார்த்தாள். அவற்றில் பெரிதான தொன்று சைத்தானைப் போலவும், அது தன்னையே நோக்குவது போலவும் அவளுக்குப் பட்டது—அதோ அவள் நினைத்தது சரிதான்! இங்கு மக்கள் வாழமுடியாது என்றே எப்போதும் அவள் கூறி வந்திருக்கிறாள். அது சரியாகப் போய் விட்டது'—வெகு நேரம் அசையாமல் அமர்ந்திருந்தாள். அப்புறம் அவளுக்கே பொறுக்காமல் வீட்டை நோக்கி ஓடினாள். அங்கே எல்லா ஜன்னல்களை யும் மூடினாள்.

வயலிலிருந்து பெர்ஹான்ஸாவும் பையன்களும் சிரித்துக் கும்மாள மடித்துக் கொண்டு திரும்பினர். அவளிடம் வந்த பெர்ஹான்ஸா, "இங்கே வா, என் இனியவளே. சின்னஞ் சிறு பெரெட் பெண்ணே!" என்று மென்குரலில் அழைத்தார். ஆடைகளை அவிழ்த்து விட்டுப் படுக்கைக்குச் செல்வதில் அவளுக்கு உதவ விழைந்தார் அவர்.

"ஊஹூம், கூடாது, அது முடியாது!" என்று அவள் கூவினாள். அவருக்கு வெட்கமே கிடையாதோ? பாவம் பற்றிய நினைப்பே இல்லையா? சைத்தான் துரத்துகிறான் என்பதற்கு அதைவிட வேறு சான்று என்ன தேவை?

அந்த சைத்தான் முகமே எப்போதும் அவள் கண்முன் நின்றது. குறிப்பாக மாலை நேரங்களில் அவள் தலைக்கு நேர்மேலே அது கவிந்திருப்பதாகத் தோன்றியது. வேலை செய்யும் போது வேதனை வந்துவிடும். உடனே உட்காருவதன்றி வேறேதும் அவளால் செய்ய முடியாது. அப்போது, மேகத்தில் கண்ட அந்த முகம் பற்றி மேன் மேலும் சிந்தனை ஓடும். மற்றவர்களும் அதைப் பார்க்க வில்லையா, என்ன?— பார்த்துத்தான் இருப்பார்கள் என்று அவள் எண்ணினாள்.

ஒவ்வொரு இரவும் எல்லா ஜன்னல் கதவுகளையும் அவள் மூடலானாள். பெர்ஹான்ஸா வீட்டிலிருந்த போதும் கூட அவ்வாறே செய்தாள். அது கண்டு முதலில் அவர் சிரித்தார். தொடர்ந்து அவளை நேசிக்க முயன்றார். எனினும் விரைவில் அவளது அச்சம் அவரைத் தொற்றிக் கொண்டு விட்டது. எதைக்கண்டு

அவள் அஞ்சுகிறுள் என்பது தெரியாதிருந்தும்கூட அவரும் பயந்து நடுங்கிஞர். தன் இனிய மனைவிக்கு நேர்ந்து வந்தது கண்டு மிகவும் வருந்திஞர்.

2

ஜூலை மாதத்துக்குள் எல்லா வயல்களும் வனப்பும் வளமும் மிக்க கோதுமைக் கதிர்களால் நிரம்பி விட்டன. நாள் முழுவதும் அவற்றின்மீது தன் கிரணங்களைக் கதிரவன் சொறிந்தான். அதன் பயஞக அவை மேன்மேலும் வளர்ந்து கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்து பெர்ஹான்ஸாவுக்குச் சலிக்கவில்லை. பெரெட்டைப் பார்க்கும்போது மட்டும்தான் அவருக்குத் துயரமாக இருந்தது. அவளுக்கு நேர்ந்திருப்பது என்ன என்பது அவருக்கு விளங்கவில்லை. ஒருகால் பெரிய மர வீடு கட்டிஞல் அவள் சரியாகி விடுவாளோ? அப்படியாஞல் விரைவில் அதற்கு ஆவன செய்யவேண்டும். முடிந்தால் இந்த இலையுதிர் காலத்திலேயே செய்யத் தொடங்கிவிட வேண்டும். ஏன் முடியாது? எங்கும், எதிலும் வளர்ச்சியின் பேரெழில் நிரம்பியிருக்கிறதே! அதன் பயஞக அவருடைய அன்புக்கினிய பெரெட் பெண்ணுக்கான அழகிய வீட்டுக்குப் போதிய பணம் கிடைக்காமல் போய் விடுமா என்ன?

அதற்குள்ளாகவே புதிய உருளைக்கிழங்குகளைத் தினந்தோறும் அவர்கள் உண்ணத் தொடங்கி விட்டனர். மற்றவர் வயலெதிலும் அவை இன்னும் அறுவடை செய்யப்படவேயில்லை. ஓட்ஸ்பயிரும் ஓங்கியிருந்தது. ஆயினும் அனைத்திற்கும் அதிகமாகச் செழித்துக் கொழித்திருந்தது கோதுமைதான். அண்டை வீட்டுக்காரர்களெல்லாம் அந்தப்பயிரைப் பார்த்துவிட்டாவது போகலாமென வந்தார்கள். புதிய ஐரிஷ் குடியேற்றக்காரர்களும் வந்து பார்த்தார்கள். அந்த ஐரிஷ்காரர்களை பெர்ஹான்ஸாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர்களுடன் பேசத் துடித்தார். அது இயலாததால் அவர்களுக்குத் தம் புதிய உருளைக்கிழங்குகளில் கொஞ்சம் கொடுத்தார்.

முன்புபோல் இப்போது பெர்ஹான்ஸா கண் மூடித் தனமாகக் காரியம் செய்யப் புகவில்லை. கோதுமையை அறுவடை செய்ய அவர் அவசரப்படவேயில்லை. ''வந்து அதைப்பாரேன்'' என்று பெரெட்டை அடிக்கடி அழைத் தார். எப்போதாவது அவருடன் சென்று பார்க்க அவள் இசைவாள். ஆனால் இருட்டியபின் அங்குத் தங்க மாட்டாள். வீட்டில் ஏதோ வேலை இருக்கிறது என்று சாக்குக் கூறித் திரும்பிவிடுவாள்.

இறுதியில் ஒருநாள் டோன்ஸெடன் வந்து, அன்று பிற்பகலே அறுவடையைத் தொடங்கவேண்டும் என்றார். நண்பர்கள் அனைவருக்குமே அவர்தான் கதிர்களை அறுத் துத் தரவேண்டும். ஏனெனில், அதை எப்படிச் செய்வது என்பது அவர்களில் வேறு எவருக்கும் தெரியாது. மேலும் ஹான்ஸ் ஓல்ஸாவின் கோதுமைப் பயிரும் அறுவடைக்குத் தயாராக இருந்தது. எனவே தன் கோதுமையை முத லில் அறுவடை செய்ய பெர்ஹான்ஸா முற்படவேண்டும் என்றார் அவர். கதிர்களை எப்படிக் கட்டுவது என்பதை விளக்குவதற்கு ஸோலம் சகோதரர்கள் ஒப்புக்கொண் டிருந்தனர்—முன்பு மாலுமிகளாயிருந்த நார்வீஜியர் களான பெர்ஹான்ஸாவுக்கும் ஹான்ஸ் ஓல்ஸாவுக்கும் விவசாயத்தைப் பற்றிய எல்லா விஷயங்களுமே புதிதாக இருந்தன.

அன்று பிற்பகல் எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்தவர் டோன்ஸெடென்தான். அறுவடை தொடங்குவதைப் பார்ப்பதற்குக் குடியேற்றப் பிரதேசத் திலிருந்தவர்கள் எல்லோரும் திரண்டு வந்திருந்தனர். அவர்கள் முன்னிலையில் அவர் அறுவடை செய்யப் புகுந் தார். அன்றுபோல் வேறென்றும் தற்பெருமை அவ்வளவு தூரம் அவரிடம் தலைதூக்கியிருந்ததில்லை. கனமான அறுவடை இயந்திரத்தைஅவர் கவனமாகப் பரிசீலித்தார். அதில் குதிரைகளைப் பூட்டினார். இறுதியில், வேலையை ஆரம்பிக்கச் சித்தமானார். அன்று பிற்பகல் பூராவும் அவ்வயலில் மேலும் கீழும் போய் வந்தது அந்த இயந் திரம். ஒவ்வொரு முறையும் கோதுமைக் கதிர்களை அறுத்து வந்து குவித்தது. மற்றவர்கள் அவற்றைக்

கட்டினர்—ஏக்கராவுக்கு நாற்பது புஷல்களாவது கொள் முதலாகுமென டோன்ஸெடன் மதிப்பிட்டார்.

அஸ்தமனத்துக்குப் பிறகும் அவர்கள் தொடர்ந்து வேலை செய்தனர். ஆனால் இயந்திரத்தினால் அறுக்க முடியாத அளவு கதிர்களில் ஈரம் செறிந்ததும் அவர்கள் நிறுத்த வேண்டி நேர்ந்தது. ஆடவர் அனைவரும் களைத்து விட்டனர். ஆனால் அவர்களில் எவரும் அதை முதலில் ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. பெர்ஹான்ஸாவின் வீட்டில் அவர்கள் எல்லோருக்காகவும் பெரியதொரு விருந்தை பெரெட்டும் ஸாற்றினாவும் தயாரித்திருந்தனர். நாள் முழுவதும் உழைத்தபின் அவர்கள் அனைவரும் வயிறார உண்டனர். முதல் வருடமே அவ்வளவு அற்புத மான கோதுமை விளைந்திருக்கிறபடியால் தாங்கள் விரைவில் பெரும் பணக்காரராகி விடுவோம் என்று பேசியவாறே அவர்கள் சாப்பிட்டனர். அவர்கள் கட்டிய மனக்கோட்டைகளுக்கு எல்லையே இல்லை.

மறுநாள் கோதுமை வயல் முழுவதும் அறுவடை யாகி முடிந்து விட்டது. அப்போது, மற்ற வேலைகளைச் செய்வது பற்றிய தன் திட்டங்களை டோன்ஸெடன் திடீ ரென மாற்றிக்கொண்டுவிட்டார். 'அவசரமேதுமில்லை, ஒருவாரம்பொறுத்திருக்கலாம். பின்னர் கோதுமைச் சாகு படிச் சரிதத்திலேயே சிறந்த பயிரை அறுவடை செய்து விடலாம்' என்றார். மேலும், பெர்ஹான்ஸாவின் நிலங் களில் நான்கு ஏக்கர்தான் அவர் அறுவடை செய்வதற்கு மிகுந்திருந்தது. ஓட்ஸ் பயிரிடப்பட்டிருந்த வயல்களே அவை.

ஆகவேதான் வேலையை ஆரப்போட்டுவிட்டு, பெர் ஹான்ஸாவின் பண்டசாலைக்கு அருகே நிழலில் ஆடவர் அனைவரும் அமர்ந்தனர். மேற்குத் திக்கிலிருந்து குளிர்ச்சி யான காற்று வீசவாரம்பித்தது. கோதுமை முற்றுவதற்கு அதைவிடச் சிறந்த காலநிலை வேறு கிடையாது. அன்று போல் வேறு எப்போதும் அவ்வளவு குதூகலத்துடன் டோன்ஸெடன் இருந்ததில்லை...பார்க்கப்போனால், அவர் தானே இந்த வளமான பிரதேசத்துக்கு மற்றவர் களை அழைத்து வந்தார்? ஆகவே வாய்விட்டுச் சிரித்த

வாறு, "இப்போது என்ன நினைக்கிறீர்கள்?" என்று வினவினார்.

ஆனால் பெர்ஹான்ஸா அதற்குப் பதிலேதும் அளிக்கவில்லை. மேற்குத் திசையையே நோக்கிய வண்ணம் அவர் நின்று கொண்டிருந்தார். அங்கிருந்து கரும் அலை போலொன்று தங்களை நோக்கி வருவதை அவர் கண்டார். திடுமெனத் திகில் பற்றிக்கொண்டது. அவரை...புயலாயிருக்குமோ அது? ஹான்ஸ் ஓல்ஸாவிடம் சென்று அவரையும் அதை நோக்கச் செய்தார். "புயல்தான்!" என்று அலறினார்,ஹான்ஸ்ஓல்ஸா.இருவரும் டோன்ஸெடனிடம் ஓடினர். அறுவடையை முடிக்கத் தயார் செய்து கொண்டிருந்த அவரும் திரும்பிப் பார்த்தார். அதற்கு முன் அம்மூவரும் அதுபோல் எதையும் கண்டதில்லை. திசையிலிருந்து அடுக்கடுக்கான மேகங்கள் விரைந்தோடி வந்தன. சாதாரண மேகங்களைப் போல் இல்லை அவை. சமுத்திரத்தில்போல் அலை அலையாக வந்தன. ஒரு மினு மினுப்புடன் மேன்மேலும் வேகத்துடன் ஓடி வந்தன. அந்த அலைகள் அருகில் வந்ததும் மந்தமான முழக்கமொன்றை அவர்கள் கேட்டனர். தலைக்குமேலே பற்பல வண்ணங்கள் பளிச்சிட்டன.

ஒரு நிமிஷத்துக்குள் அம்மேகம் அவர்களைக் கவிந்து கொண்டுவிட்டது. குதிரைகள் வயல்களினூடே விரைந்தோடத் தொடங்கின. அவற்றை அவிழ்த்துவிட்டுச் சமனப்படுத்துவது டோன்ஸெடனுக்குப் பெரும்பாடாகி விட்டது. நதிக்கரையிலிருந்த பசுக்களைப் போலவே அவையும் மறைவிடம் தேடியோடின. மற்றவர்களும் கைகளை வீசியவாறு விரைந்தோடி வந்தனர். யாரும் எதுவும் பேசவில்லை. இன்னதென்று தெரியாத அச்சம் அனைவரையும் ஆட்கொண்டது.

அதன்பின் அந்த மேகம் சிதறத் தொடங்கியது. அனாதரவான அவர்கள்மீது தத்திக் குதிக்கும் சிறுசிறு பூச்சிகளின் உடல்கள் மோதின. பின்னர் அவை மீண்டும் பறந்து தரையில் வீழ்ந்தன. தங்கள் ஒலியாலும் அசைவினாலும் வயல் வெளி முழுவதையும் அவை நிறைந்தன. அந்தக் கரும் பழுப்பு உடல்கள் கணநேரங்கூட ஓய்ந்

திருக்கவில்லை. தன் தந்தையிடம் காட்ட அவற்றி லொன்றை ஹான்ஸ் பிடித்தான். சுமார் ஓரங்குல நீளமே இருந்தது அந்தப் பழுப்பு உடல். ஒளி ஊடுருவும் சின்னஞ்சிறு இறக்கைகள் அதில் பொருந்தியிருந்தன. அதன் கால்கள் நீண்டு, மெலிந்திருந்தன. அதன் பெரிய கண்களோ, ஒரே கறுப்பாகக் காட்சியளித்தன. ''அதைத் தூக்கி யெறிந்துவிடு, குழந்தாய்!'' என்று க்ஜெர்ஸ்டி கூவினுள்.

ஆனுல் .மற்றவற்றை அவர்களால் அவ்வாறு கழித்துக் கட்டிவிட முடியவில்லை. குட்டிப் பிசாசு களைப்போல் பல லட்சக்கணக்கானவை அந்நிலத்தில் மண்டின. அங்கிருந்த அனைத்தையும் அவை அழித் தொழித்தன. எல்லோரும் அவற்றை அச்சத்துடன் பார்த்தனர். விவலியநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்ற கொள்ளைநோயே அது! ஆண்டவன் தான் அதை அனுப்பி அவர்களுடன் பேசியுணர்த்த முற்பட் டிருக்கிருன்.

'' தாம் அளித்ததைத் திரும்பவும் எடுத்துக் கொள்கிருன் ஆண்டவன். நம்மால் தான் இத்தனை வளமான கோதுமையைச் சாகுபடி செய்ய முடிந்தது என்று நாம் கொண்ட அகங்காரத்துக்கு அபராதமே இது'' என்ருர் டோன்ஸெடன்.

அம்மாதிரிப் பேச்சு பெர்ஹான்ஸாவுக்கு ஆத்திர மூட்டியது. ''நம் கோதுமைதானு ஆண்டவனுக்குத் தேவை என்று நினைக்கிறீர்கள்?'' என்று அவர் கேட்டார். அவர் கேள்வி பெண்டிருக்குச் சற்று ஆறுதல் அளித்தது. ஆனுல் டோன்ஸெடெனும் ஹான்ஸ் ஓல்ஸாவும் அதனுல் தங்கள் கருத்தை மாற்றிக் கொண்டு விடவில்லை.

இறுதியில் ஹென்ரி ஸோலம்தான் அவர்களது பிரமை யைத் தகர்க்க முற்பட்டார். ''நம்மால் இயன்றதை யெல்லாம் இன்று செய்துவிடுவோம். நாளை செய்வதற்கு எதுவும் மீதியிராது'' என்ருர் அவர்.

அந்தக் குட்டிப் பிசாசுகளை எப்படியாவது நிறுத்த வேண்டுமென பெர்ஹான்ஸாவுக்குத் தோன்றியது. அவருடைய துப்பாக்கியை ஓல் கொண்டுவந்து

கொடுத்தான். அதைக்கொண்டு சுட்டுப் பேரொலி எழுப்பினார், பெர்ஹான்ஸா. உடனே, அவர்களைச் சுற்றிலுமிருந்த சிறு வெட்டுக்கிளிகள் உயரே எழுந்தன. சிறியதொரு மேகக் கூட்டமாகத் திரண்டன. பின்னர். ஒரு சிலவற்றை மட்டுமே வயலில் விட்டு விட்டு அப்பால் பறந்து விட்டன. "உண்மையிலேயே அவை சென்று விட்டனவா, என்ன?" என்று ஹென்ரி ஸோலம் வினவினார்.

"ஆம், இங்கிருந்து அவை போய்விட்டது உண்மை. ஆனால் அதோ, மற்ற வயல்கலைப் பாருங்கள்!" என்றார் ஹான்ஸ் ஒல்ஸா. சிறிதுதூரம்தான் அந்த 'மேகம்' நகர்ந்தது சென்றிருந்தது. ஆனால் அப்பூச்சிகளின் கூச்சலை பெர்ஹான்ஸா பொருட்படுத்தவில்லை. அறுவடையை முடிப்பதில் உதவ விரைந்தோடினார். அன்று மாலைக்குள் ஓட்ஸ் வயல் பூராவும் அறுவடையாகி விட்டது. தங்கள் பயிர்களைக் காப்பாற்ற முடியுமா என்று பார்ப்பதற்கு மற்றவர்கள் தத்தம் வயல்களுக்குச் சென்றனர். முடிந்தால் மறுநாளே அவர்கள் அறுவடையைத் தொடங்கி விடலாம்......அது வரை பயிரேதும் பாக்கி இருந்தால்.

பெர்ஹான்ஸாவும் வருத்தமுடன் வீடு திரும்பினார். இவருடைய தானியம் காப்பாற்றப்பட்டு விட்ட போதிலும் மற்ற விஷயங்கள் அவரது மூளையைக் குடைந்தன. அவருடைய விளைச்சல் மட்டும் காப்பாற்றப் பட்டதேன்? அவரைப் போலவே பாடுபட்டு உழைத்த, இன்னும் கடுமையாகக் கூட உழைத்த மற்றவர்கள் மீது மட்டும் நஷ்டம் சுமத்தியதேன்? அந்நிலையில் ஆண்டவன் அவரிடம் என்ன கேட்கக் கூடும்?—அன்று வேலை செய்த நேரம் பூராவும் பெரெட்டைப் பற்றிய எண்ணங்கள் அவரது அமைதியைக் குலைத்தன. எனினும் அவளைப் பற்றி அதிகம் சிந்திக்க அவருக்கு அவகாசம் இருக்கவில்லை. அன்று முழுவதும் அவளை யாரும் காணவில்லை. 'ஆம், குழந்தைகளை உத்தேசித்து வீட்டினுள்ளேயே அவள் தங்கியிருந்திருக்கிறார்' என்று பெர்ஹான்ஸா நினைத்தார். அதேசமயம், தம் வீட்டில் பயங்கரமாக ஏதோவொன்று

நடந்திருக்கிறது என்ற நினைவை அவரால் உதறித்தள்ள முடியவில்லை.

வீட்டை அடைந்த போது அங்குப் பூரண அமைதி குடிக்கொண்டிருக்கக் கண்டார். கதவுகள் அழுத்தி மூடப் பட்டிருந்தன. ''கதவைத்திற பெரெட்!'' என்று அவர் கூப்பிட்டபொழுது எளிதில் குரல் எழும்பவில்லை.

வீட்டிலிருந்து பதிலேதும் வெளிவரவில்லை. கதவ ருகில் நின்று உற்றுக் கேட்டார். உள்ளே ஏதோ சப்தம் எழுவது போலத் தோன்றியது. ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினுர். ஆயினும் கதவு திறக்கப்படவில்லை. அதன் மீது சாய்ந்து திறக்க முயன்ருர். ஆனுல் உள்ளே கனமாக ஏதோவொன்று அதன்பேரில் பொருத்தி வைக்கப்பட் டிருந்ததால் கதவு திறக்கவில்லை. ''பெரட், கதவைத் திற! எங்கே இருக்கிருய் நீ?'' என்று உரக்கக் கத்தினுர் பெர்ஹான்ஸா.

மறுபடி அவர் உற்றுக் கேட்டபோது ஏதோ ஒரு ஒலி காதில் விழுந்தது. அப்புறம் வேறெந்த அரவமும் கேட்க வில்லை. என்னதான் நேர்ந்து விட்டது? பலம் கொண்ட மட்டும் கதவைப் பிடித்துத் தள்ளினுர். இறுதியில் தாம் நுழைவதற்குப் போதிய அளவு திறந்துவிட்டார்—ஆனுல் அறை காலியாகக் கிடந்தது!

''பெரெட்! எங்கே இருக்கிருய், பெரெட்?'' என்று மறுபடியும் அவர் கூவினுர். மீண்டும் பதிலேதுமில்லை. எனினும் மறுமுறையும் சிறியதொரு சப்தம் எழுந்தது. எல்லாப் படுக்கைகளிலிருந்தும் விரிப்புக்களை இழுத்துப் பார்த்தார். அவற்றிலும் யாரும் இல்லை. கதவுக்கு முன் பெரிய பெட்டி வைக்கப்பட்டிருந்ததை அப்போதுதான் கண்டார்......யார் அதை அங்கு நகர்த்தியிருக்கக் கூடும்? அந்தப் பெட்டியிலிருந்து தான் சப்தம் வந்தது. அதன் மூடியைத் திறந்தார். அவ்வளவுதான், ஆணி அடித்தாற் போல நின்று விட்டார்! அப்பெட்டியின் அடியில், சிசுவைக் கையில் தாங்கியவாறு பெரெட் கிடந்தாள். அவள் காலடியில் அன்னுமேரி கதறிக் கொண் டிருந்தாள்......அந்த அழுகுரல்தான் பெர்ஹன்ஸாவின் காதில் விழுந்தது.

அக்காட்சியைக் கண்டதும் மூர்ச்சை போட்டு விடும் போலிருந்தது அவருக்கு. ஆனால் அது முடியுமா? முதலில் காரியங்களைக் கவனித்தாகவேண்டுமே! அன்னமேரியை வெளியிலெடுத்துப் படுக்கையில் கொண்டு போய்ப் போட்டார். பிறகு சிசுவையும் எடுத்தார். இறுதியில் பெரெட்டையும் தூக்கி, அந்தப் பெட்டியிலேயே உட்கார வைத்தார். கண்ணீர்க் கறை கனமாகப் படிந்திருந்த அவளது முகம் வேறு யாருடையதோ போலிருந்தது. அவள் கண்களிலோ ஒரு சூன்யப்பார்வை.

''சைத்தான் இன்னும் உங்களைப் பிடித்துக்கொண்டு விடவில்லையா? நாள் பூராவும் இங்குத்தான் அவன் சுற்றிக்கொண்டிருந்தான். அந்தப் பெட்டியை மீண்டும் கதவுக்கெதிரிலே வைத்து விடுங்கள். நாமனைவரும் அதில் ஒளிந்து கொண்டு விடவேண்டும்—அதைக் கொண்டு போக அவன் துணியமாட்டான்'' என்று விசித்திரமானதொரு குரலில் அவள் கூறினாள்.

அதற்கு மேல் பெர்ஹான்ஸாவினால் தாங்கமுடியவில்லை. அவளுடைய மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குழந்தைபோல அழத் தொடங்கினார். அவருடைய தலை மயிரைக் கோதியபடி பெரெட் மெதுவாக, அந்த விசித்திரக் குரலிலேயே பேசலானாள். ''உங்கள் பெரும் பாவத்தை எண்ணி அழுங்கள்! ஒவ்வொரு இரவும் நான் அழுகிறேன். அதனால் பயனேதும் விளையவில்லை. இந்தத் தனிமையில் உங்கள் அழுகுரலை யாரும் கேட்க முடியாது. அழுங்கள், அழுங்கள்......பயப்பட வேண்டாம். ஆம், முடியும் தருணத்தில்தான் எதிலும் கடுமை அதிகம்!''

தன் மனைவியின் கண்களை பெர்ஹான்ஸா ஊடுருவி நோக்கினார். அவரது தொண்டையிலிருந்து பெருங்கூவலொன்று எழுந்தது. அப்படியே அவர் கீழே விழுந்தார். பிறகு நடந்தது எதுவும் அவருக்குத் தெரியாது—இதுதான் ஆண்டவன் அவரிடம் எதிர்பார்த்தது போலும் !

ஆனால், இது ஆரம்பம் மாத்திரமேயாம். ஒவ்வொரு வருடமும் அந்தப் பூச்சிகள் திரும்பத் திரும்ப வந்தன. அவ்வாறு ஐந்து ஆண்டுகள் வந்து, கண்ணில் கண்டவை

அனைத்தையும் தின்றன. அதனால் சில குடியேற்றக்காரர்களின் மூளை கலங்கியது. சிலர் தங்கள் உடைமைகளை இழந்து பிச்சைக்காரர்களாயினர். மற்றும் சிலர் எப்பொருளுமின்றித் திரும்பிச் சென்றனர். எனினும் பெரும்பாலோர் அங்கேயே தங்கினர். ஏனெனில், திரும்பிச் செல்லக்கூட முடியாதபடி அவர்கள் அவ்வளவு ஏழைகளாகி விட்டனர். மேலும், அவர்கள் எங்குச் செல்வது? எனவே அங்கேயே தங்கி அந்தப் பூச்சிப் படையெடுப்புக்காக வருடா வருடம் காத்திருந்தனர். புல்லைத் தவிர பாக்கி யனைத்தையும் அப்பூச்சிகள் விழுங்கின—மனித முயற்சியினாலன்றித் தானாக வளர்ந்திருந்ததால்தான் புல்லை விட்டு விட்டன போலும்!

கடவுள்தான் அந்தக் கொள்ளைப் பூச்சிகளை அனுப்பியவர் என்பது பற்றிக் குடியேற்றக்காரர்களுக்கு ஐயமேதும் இருக்கவில்லை. அதை எவ்வாறு அவர்களால் மறுக்க முடியும்?—ஏனெனில், வேனிற்காலம் பூராவும் வயல்களில் பயிர்கள் வளரும், சூரிய ஒளியில் கதிர்கள் முற்றும். இப்படி எல்லாவகையிலும் பிரகாசத்துடன் இலங்கும் அப்படிப்பட்ட ஒரு நன்னாளில்—சுவர்க்கமே பூமிக்கு வந்து விடும் போலத் தோன்றும். அந்த அழகிய தினத்தில்—திடுமென மேற்குத் திசையிலிருந்து ஒரு மேகம் வரும். அந்தப் பழுப்பு நிறப் பூச்சிகள் ஒரே கூட்டமாய் மேகம்போல் குவிந்து வந்து மனிதன் மிகச் சிரத்தையுடன் நட்டது முழுவதையும் தின்று அழித்து விடும்—ஆம், ஆண்டவன்தான் அவர்களைத் தண்டிக்க அந்தப் பிசாசுகளை அனுப்பி வந்தார்!

அதையும் விடக் கேடானது யாதெனில் அந்தப் பூச்சிகள் சிறுசிறு முட்டைகளைவிட்டுச் செல்லும். அந்த முட்டைகள் மாரிக்காலம் முழுவதும் கட்டாந்தரையில் கிடக்கும். வஸந்த காலம் வந்ததும் அவை வெடித்து இன்னும் பயங்கரமான பிசாசுகளைப் போல் பரவும். அப்புறமும் கூட அவை மேன்மேலும் வந்து கொண்டேயிருந்தன. அவற்றின் படையெடுப்பு கடுமையாக இருக்கும் போது பல நாட்களுக்கு ஆகாயமே தெளிவாகத் தெரியாது. அவை தின்னாத பொருளில்லை......

மரப் பெட்டிகளையும், உலரப் போடப்பட்ட உடைகளையும், கூட உண்டன. சில சமயங்களில் ஒரு வயலை மட்டும் அவை அழித்துவிட்டு மற்றவற்றை அப்படியே விட்டுவிடும். ஆகவே அப்பால் செல்லும் வரை அவை என்ன செய்யும் என்பதை எவரும் கூறமுடியாதிருந்தது.

ஒவ்வொரு வருடமும் இதுவே கடைசிப் படையெடுப்பாக இருக்குமென மக்கள் பேசிக் கொண்டனர். அதிலிருந்து தங்களை விடுவிக்கும்படி பிரார்த்தனை செய்ய அவர்கள் ஒன்றுகூடினர். ஒருவருக் கொருவர் இயன்றை வரை உதவிக் கொண்டனர். அது முடிவதற்காகக் காத்துத் தவம் கிடந்துகொண்டே தங்கினர் அங்கேயே.

ஏழாவது பாகம்

1

ஜூன் மாதத்தில் ஒரு நாள். அதற்கு முந்திய பல நட்களைப் போலவே, பிந்தி வரவிருந்த மற்றும் பல நாட்களைப் போலவே அன்றும் சூரியன் பிரகாசமாக ஒளி பரப்பினான். எங்கும் கதகதவென இருந்தது. அன்று ஸ்பிரிங் க்ரீக் குடியேற்றத்தை நோக்கிப் புதியதொரு வண்டி மெதுவாக வந்து கொண்டிருந்தது. எக்கணமும் சிதறி விழுந்துவிடும் போலிருந்தது அந்த வண்டி; அதை இழுத்த குதிரையின் நிலையும் ஏறக்குறைய அதுவே தான். அதை ஓட்டிய மனிதரின் வயதைத் திட்டமாக கூற முடியாமலிருந்தது—நாற்பத்து ஐந்தும் இருக்கலாம், அறுபத்து ஐந்தாகவும் இருக்கலாம். அவருடைய முகம் இளமையாகவே காணப்பட்டது. ஆனால், அவருடைய உடல் மிகப் பருமனாக இருந்தது; மிகுந்த நரை பாய்ந்த நீண்ட தாடியை உடையவராகவும் இருந்தார். முற்றிலும் கருநிற ஆடைகளையே அவர் அணிந்திருந்தார்.

சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு, தனக்குத் தானே பாடியவாறு மெதுவாக வண்டியை ஓட்டி வந்து கொண்டிருந்தார். பொழுது சாயும் தருவாயில் மண் வீடுகளும் ஒரு சில மரச்சட்ட வீடுகளும் கொண்ட அந்த ஸ்பிரிங் க்ரீக் குடியேற்றப் பிரதேசத்தை அடைந்தார். அதில் முதல் வீட்டை அவர் எட்டுவதற்குள் சூரியன்

அஸ்தமித்து விட்டான். ''இந்த வீட்டில் யாராவது இருக்கிறார்களா?'' என்று அவர் கேட்டார்.

பருத்த தேகமும் சிவந்த முகமும் உடைய ஒருவர் விரைந்து வெளியே வந்தார். அவரைத் தொடர்ந்து, அதே போலப் பருமனான ஒரு பெண்மணி வெளிப் போந்தாள். இருவரும் எதையோ மும்முரமாக மென்று கொண்டிருந்தனர். அவர்களிடம் திரும்பவும் அதே கேள்வியை அப் புதுமனிதர் கேட்டார்.

''அட, சைத்தானே, நீரும் ஒரு தார்வீஜியர் தானா?'' என்று அந்தச் சிவந்த முக மனிதன் வினவினார்.

''அந்தப் பேர்வழியை இங்கே அடிக்கடி கூப்பிடுவீர்களா, என்ன?'' என்றார் புது மனிதர். உணவும் உறைவிடமும் அவர் கோரிய போது அந்தத் தம்பதி மௌனம் வகித்தனர். அவர்களுடைய பதிலுக்காகக் காத்திராமல், அந்தப் புதுமனிதர் தன் வண்டியிலிருந்து குதித்தார். ''உங்கள் பெயர் என்னவோ, அன்பரே?'' என்று விசாரித்தார்.

''என் பெயர் ஸிவெர்ட் டோன்ஸெடென், சரி, தங்கள் மனப்பான்மை எத்தகையதோ?''—அந்தப் புது மனிதரின் அருகில் அவர் சென்று, ஊன்றிப் பார்த்தார். க்ஜெர்ஸ்டியும் அவரிடம் சில கேள்விகள் போட விரும்பினாள். அவளும் அவரை உற்று உற்றுப் பார்த்தாள். அவர் தன் வீட்டில் தங்குவதில் அவளுக்கு அதிக இஷ்டமில்லை என்பது தெரிந்தது. டோன்ஸெடென் மீண்டும் பேசினார். ''நீர் எதற்காக இங்கு வந்திருக்கிறீர் என்று கேட்கிறேன். உமக்கு நிலமா வேண்டும்?''

ஒரு நிமிஷம் பொறுத்து அந்தப் புது மனிதர் பதில் சொன்னார். ''நான் ஒரு பாதிரி. புதிதாய் வந்தவர்களுக்கு முன் கடுமொழிகள் பேசுவது தகாது. நண்பரே! இப்போது சொல்லுங்கள், இன்றிரவு நான் இங்குத் தங்கலாமா, கூடாதா?''

தங்களுடன் ஒரு பாதிரியார் தங்குவது குறித்து க்ஜெர்ஸ்டிக்கு நிரம்ப மகிழ்ச்சி. அதே சமயத்தில் அவளுக்கு பயமாகவும் இருந்தது. எனினும் சொன்னாள்: ''கட்டாயம்

நீங்கள் எங்களுடன் தங்கத்தான் வேண்டும். ஆனால் எங்களுடைய உணவை உங்களால் உண்ண முடியுமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது.''

''எதுவானாலும் போதும், அம்மா...சரி, இனி என் குதிரையை நாம் கவனித்தாகவேண்டும்'' என்றார் அவர்.

டோன்ஸெடென் முதலில் பேசவே முடியவில்லை. அந்த அளவுக்கு அவர் பரபரப்பு அடைந்திருந்தார். நம் முடன் ஒரு பாதிரியாரா தங்கப் போகிறார் என்று வியந்தார் அவர். அந்தப் பாதிரியார் அடுக்கடுக்காகக் கேள்விகள் போட்டுக் கொண்டிருக்க, இருவரும் அந்தப் பரிதாபகரமான குதிரையைப் பண்டசாலைக்குக் கொண்டு போய் வெகுநேரம் அதற்கு வேண்டியதைச் செய்தனர். குடிசைக்குள் அவர்கள் வந்தபோது அது துடைக்கப் பட்டுத் துப்புரவாகவும் உற்சாக மூட்டுவதாகவும் இருக்கக் கண்டனர். மேஜைமீது ஒரு வெள்ளைத் துணியை க்ஜெர்ஸ்டி பிரித்திருந்தாள். அதன் மீது புதிய பாலும், வேகவைக்கப் பட்ட முட்டைகளும், மற்றும் ரொட்டி, காப்பி, கேக்குகள் முதலானவையும் வைக்கப்பட்டிருந்தன. அப்போதும்கூடப் போதுமான உணவுவகை இல்லையென க்ஜெர்ஸ்டி நினைத்து மேலும் சிலவற்றைத் தயாரித்துக் கொண்டிருந்தாள். பிரார்த்தனை புரிந்தபின் வேகமாக அவ்வுணவு வகைகளை அப்பாதிரி உண்ணத் தொடங்கி விட்டார். எல்லையற்ற பசி அவருக்கு.

அவர் சாப்பிடுகையில், தலையைக் குனிந்துகொண்டும் இடுப்பில் கை வைத்தவாறும் அறையின் நடுவில் நின்ற வண்ணம் டோன்ஸெடென் பேசிக் கொண்டிருந்தார். அவர்களுடைய பேச்சைச் செவி மடுத்தவாறு அடுப்பின் அருகில் க்ஜெர்ஸ்டி நின்றாள். அளவுக்கு அதிகமாகப் பேசித் தனக்கு முட்டாள் பட்டத்தை ஸிவெர்ட் தேடிக் கொள்ளாமல் இருக்கக் கூடாதா என்பதே அவள் பிரார்த்தனை! ஆனால் அவரோ எதிர் காலம் பற்றியும், இங்கு வந்தபின் ஆறாண்டுகளில் தாம் என்னென்ன செய் திருக்கிறோம் என்பது குறித்தும், பல்வேறு விஷயங்கள் பற்றிப் பாதிரியாரின் கருத்துக்களைக் கேட்டவாறும் மேன் மேலும் பேசிக் கொண்டேயிருந்தார். இறுதியில் ஒருவாறு உண்டு முடித்த பாதிரியார், ''சற்றே சும்மா இரும்,

அன்பரே! இன்றைய தினத்தை அருளியதற்காக ஆண்டவனுக்கு நாம் நன்றி செலுத்துவோம்'' என்றார். அதையடுத்து க்ஜெர்ஸ்டி அமர்ந்தாள். ஆனால் டோன்ஸெடெனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை; அறை நடுவிலேயே தொடர்ந்து நின்று கொண்டிருந்தார் அவர்.

அருகிலிருந்த ஒரு நண்பருடன் பேசுவது போல, மிக நெருக்கிப் பழகி நன்கறிந்திருந்த ஒரு நண்பரிடம் அளவளாவுவது போல அந்தப் பாதிரியார் மெதுவாகப் பேசலுற்றார். அன்று கழிந்த தினத்துக்காக ஆண்டவனுக்கு அவர் நன்றி கூறினார்; அன்று தாம் புரிந்த பாவங்கள் அனைத்தையும் மறந்துவிடும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டார்; இந்த வீட்டாரிடம் குறிப்பாக தெய்வத்தை நிந்திப்பது போல் பேசப்புகும் அந்த மனிதரின்பால் விசேஷ அருள் காட்டுமாறு வேண்டிக் கொண்டார். ஆலயமோ பாதிரியாரோ இல்லாமல் அனாதரவாக நிற்கும் இவ்வட்டார மக்களை மறந்து விடாதிருக்கும்படியும் கடவுளைக் கேட்டுக் கொண்டபின், 'அவ்வாறே ஆகுக' என்று ஆசி மொழி பகர்ந்தார். பிறகு ஒரு நிமிஷநேரம் மௌனமாக நின்றார். அவருடைய தாடிக்கு அங்கு எரிந்த மெழுகு வர்த்தி ஒளியூட்டி, வெள்ளி போலப் பளபளப்பை அளித்தது. அந்த அறையில் பூரண சாந்தி நிலவியது. ''ஆண்டவனைப் போற்றுவோம். இந்த அரிய உணவைப் படைத்ததற்காக நல்லவர்களான உங்களுக்கும் பாராட்டு உரித்தாகுக'' என்றார் அந்தப் பாதிரியார். பேச முடியாதபடி ஆடிப்போய் விட்டார் டோன்ஸெடென்; வாய் திறவாமல் வெளியே சென்றார். க்ஜெர்ஸ்டியோ அசையாமல் அமர்ந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

அநேகமாக ஒவ்வொரு பண்ணையிலும் உபரியாக ஒரு மட்குடில் கட்டப்பட்டிருந்தது. அதில்தான் அந்தப் பாதிரியார் அன்றிரவு உறங்க வேண்டும். அந்த உபரிக் குடிலில் பல பொருள்கள் அடைக்கப்பட்டிருந்த போதிலும் விருந்தாளிகளுக்காக ஒரு படுக்கையும் அதில் எப்போதும் தயாராக இருக்கும். அந்தப் படுக்கையைக் காட்டுவதற்காகப் பாதிரியாரோடு டோன்ஸெடென் தம்பதி சென்றனர். அவ்வறை அடைசலாக இருந்த

போதிலும் அதில் ஒரு நேச பாவமும் உற்சாகச் சூழ்நிலையும் தென்பட்டன. அதற்காகவும் அவர்களுக்குப் பாதிரியார் நன்றி செலுத்தினர். பின்னர் 'நல்லிரவு' ஆசி கூறி விடை பெற்றார்.

கடந்த ஈராண்டுகளில் டோன்ஸெடென் மூப் படைந்து விட்டார். ஒவ்வொரு வஸந்தத்தின் போதும் அவரை இருமல் பற்றிக் கொண்டு களைத்துக் குலைய வைத்தது. எனவே முன்னைவிட அவருக்கு அதிக உறக்கம் தேவையாயிருந்தது. ஆனல் அன்றிரவு அவரால் அதிகம் உறங்க முடியவில்லை. அந்தப் பாதிரியாரின் வருகை பற்றியே அவர் எண்ணிக்கொண்டிருந்தார்......பாவங்கள் மலிந்த என் வீட்டுக்கா வரவேண்டும்! என்று வியந்தார்.

மறுநாள் காலைச் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்த போது பாதிரியார் பல கேள்விகளைப் போட்டவாறிருந் தார். தன் கண்ணுக்குத் தென்பட்ட வீடுகளிலெல்லாம் யாரார் இருக்கிறார்கள் என்று வினவினர். அன்று அச் சிற்றுண்டியைச் சுவைத்துச் சாப்பிடுவது டோன்ஸெ டெனுக்குச் சிரமமாயிருந்தது; முதல் நாளிரவு போலவே கூடிய விரைவில் குடிசையிலிருந்து வெளியே சென்று விட்டார் அவர். சற்றுப் பொறுத்து, க்ஜெர்ஸ்டி பின் தொடரப் பாதிரியார் வெளியே வந்தார். மீண்டும் எங்கோ செல்ல ஆயத்தமாயிருந்தார் அவர். ''இங்கே எவர் வீடு பெரியது?'' என்று வினவினர்.

''ஏன், பெர்ஹான்ஸாவின் வீடுதான் பெரிது. இப்போது பெர்ஹோம் என்று அவர் அழைக்கப்படுகிறார். டோர்கெல்டல்லாக்ஸெனும் பெரியதொரு மரவீட்டைக் கட்டிக் கொண்டிருக்கிறார். ஆனல் அது இன்னும் முடியவில்லை.''

''சரி, இனி நீங்கள் சற்றுச் சுறுசுறுப்பாக வேலை செய்யவேண்டும், நல்லோரே? இன்று இரண்டு மணிக்கு பெர்ஹோமின் வீட்டில் நான் தெய்வப் பிரார்த்தனை நடத்தப் போகிறேன் என்பதை அண்டை அயலார் அனை வரிடமும் தாங்கள் தெரிவித்து வரவேண்டும்'' என்றுகூறி விட்டு க்ஜெர்ஸ்டியின் பக்கம் பாதிரியார் திரும்பினர். 'அந்த வீட்டுக்கு நீங்கள் சென்று அனைத்தையும் சித்தம்

செய்யும் பொருட்டு ஹோம் அம்மணிக்கு உதவினால் நலமாயிருக்கும்.''

சிறிது நேரம் இருவரும் அவரை மௌனமாகப் பார்த்தனர். பிறகு பெரெட்டைப் பற்றி அவரிடம் க்ஜெர்ஸ்டி கூறவாரம்பித்தாள். அவ்வப்போது ஸ்வெர்ட்டும் ஓரிரு வார்த்தை சொன்னார். பணத்தைப் பொறுத்த வரையில் பெர்ஹான்ஸா நிறையச் சம்பாதிக்கிறார் என்றனர் இருவரும். அதற்கு மேல் அந்த அப்பாவி பெரெட்டைப் பற்றி அவர்கள் கூறப் புகுந்ததும் பாதிரியாரின் முகத்தில் வருத்தம் குடிகொண்டது. சிந்தனைக் கோடுகள் படர்ந்தன. இறுதியில் அவர் சொன்னார், ''நல்லது, நானே முதலில் சென்று அவர்களிடம் பேசுகிறேன். அதற்குச் சில மணி நேரம் கழித்து நீங்கள் அங்கு வரலாம்!' டோன்ஸெடெனை நோக்கி, ''உங்கள் அலுவலைப் பொறுத்த வரையில் கவனித்து நன்றாகச் செய்யுங்கள். ஞானஸ்நானத்துக்காக எல்லாக் குழந்தைகளையும் அழைத்து வரும்படிச் சொல்லுங்கள். பிரார்த்தனைப் புத்தகங்களையும் எடுத்துவர ஏவுங்கள்'' என்றார். தமக்கு இடப்பட்ட பணியை நிறைவேற்ற டோன்ஸெடென் விரைந்து சென்றதும், பெர்ஹான்ஸாவின் வீட்டை நோக்கிப் பாதிரியார் மெதுவாக நடந்தார்.

பிரார்த்தனைக்கு உரிய ஆடைகளை அணிந்துகொண்டு ஜன்னலுக்கு முன்னால் பாதிரியார் நின்றார். அவருடைய உடைகள் புதிதாகவோ சுத்தமாகவோ காணப்படவில்லை. எனினும் அதை யாரும் பொருட்படுத்த வில்லை. உண்மையிலேயே நார்வீஜியரான ஒரு பாதிரியார் வந்திருக்கும் போது அதைப் பற்றியெல்லாம் யாருக்குக் கவலை! மேலும், டோன்ஸெடென் எல்லோரிடமும் கூறிய மாதிரி அவர் ஓர் அசாதாரணமான மனிதராகவே தென்பட்டார்.

வெள்ளைத் துணியால் மூடப்பட்ட மேஜை அந்த ஜன்னலுக்கு அருகில் போடப்பட்டிருந்தது. அதன்மீது இருந்த தண்டுகளில் வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட மெழுகு வத்திகள் பொருத்தப்பட்டிருந்தன. பக்கத்தில் ஒரு விவிலிய நூலும் பிரார்த்தனைப் புத்தகமும் இருந்தன.

அவ்வீடு நிறைய மக்கள் குழுமியிருந்தார்கள். படுக்கைகள்மீது பெண் மக்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்குப் பின்னுல் குழந்தைகள் இருந்தன. பெரிய பெட்டிமீதும் பெர்ஹான்ஸாவும், ஹான்ஸ் ஓல்ஸாவும் அவசரமாக ஏற்பாடு செய்திருந்த சில ஆசனங்களின்மீதும் ஆடவர்கள் அமர்ந்திருந்தனர். மற்றும் பலர் தரையில் வீற்றிருந்தனர். உள்ளே இடமில்லாதவர்கள் வெளியே நின்றனர். அல்லது, புல் தரையில் உட்கார்ந்திருந்தனர். அனைவரும் தத்தம் சிறந்த ஆடைகளை உடுத்திக்கொண்டு வந்திருந்தனர்.

அவர்களை எதிர்நோக்கி நின்ற பாதிரியார், ''மௌனமாக இருங்கள், நல்லவர்களே! இதோ ஆரம்பித்துவிடலாம்'' என்ருர். பின்னர் துவக்கப்பாவை அவர் படிக்கத் தொடங்கியதும் அந்த அடர்ந்த அறையில் ஆழ்ந்த மௌனம் உறைந்தது. அதன்பின் ஆலயத்தில் இருப்பதுபோலவே ஒரு பிரார்த்தனைப் பாடலை அவர்கள் பாடினர். எவ்வளவு அற்புதமாக இருந்தது அது!

கனுன் பிரதேசத்துக்கு இஸ்ரேலிய மக்கள் வருகை பற்றிப் பிறகு அப்பாதிரியார் கூறலானுர். பத்து இஸ்ரேலியக் குலத்தினர் பற்றியும் அவர்கள் அனுபவித்த இன்னல்கள் குறித்தும், தங்கள் சொந்தக் கடவுளை நம்புவதை அவர்கள் கைவிட்டது பற்றியும், அதன்பின் அவர்கள் மறைந்தது குறித்தும் எடுத்துச் சொன்னுர். ஆனுல் கஷ்டங்களுக்கிடையில் கடவுள் நம்பிக்கையை, இரு குலத்தினர் மட்டும் விடாமல் வைத்திருந்து வந்தனரென்றும், அவற்றினிடையிலிருந்துதான் மாந்தர்களை ரட்சிப்பதற்காக கிறிஸ்து தோன்றினுரென்றும் மேலும் கூறினுர். இஸ்ரேலியர்களைப்போன்றே இக்குடியேற்றக்காரர்களும் இருக்கின்றனர் என்றும், தாயகத்தை விடுத்துத் தொலை தூரம் வந்து புதிய நாட்டில் பல இன்னல்களுக்கு ஆளாகியிருப்பதாயும், குறிப்பாக, பலருக்குத் தீமை பயக்கும் தனிமைக்கும் வெட்டுக்கிளிப் படையெடுப்புக்கும்கூட இலக்காகியிருப்பதாயும் குறிப்பிட்டார். பிறகு, அவர்களது எதிர்காலத்தை எடுத்துரைத்தார். ஆண்டவன் அவர்களுக்கு அருளவிருக்கும்

அநேக அற்புதங்களையும், ஏற்கனவேயே அவர் அளித்திருக்கும் பல அரிய பொருள்களையும் சுட்டிக் காட்டினர். அதற்காகவெல்லாம் முழந்தாளிட்டு அவருக்கு நன்றி செலுத்த அவர்கள் எப்போதாவது நினைத்ததுண்டாவென வினவினர். புதிதாக எந்த சாம்ராஜ்யத்தை அவர்கள் நிறுவினாலும் சரி, ஆண்டவனின் கருணைக் கண் பார்வையில்தான் அது இருக்கவேண்டும். இல்லையேல், அது இருந்த இடம் தெரியாது என்று எச்சரிக்கையும் விடுத்தார்.

இஸ்ரேலியர்களைவிட அவர்கள் நிலை எவ்வளவோ மேல் என்பதையும் கூற அவர் தவறவில்லை. அடிமைகளாக இல்லாமல் சுதந்திர மக்களாகவே இங்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். இது பற்றி அவர்கள் எண்ணியதுண்டா? ஆண்டவனின் பெருமையைப் போற்றும் பணி புரிந்து, நம்பிக்கையைக் கைவிடாத இரு இஸ்ரேலியக் குடும்பங்கள்போல் தனிமைப் பட்டு நிற்கப் போகிறார்களா, அல்லது நம்பிக்கையைக் கைவிட்டதால் அழிந்த பத்துக் கூட்டங்களைப்போல் மறைந்துவிடப் போகிறார்களா என்றும் கேட்டார்.

பேசுகையில் தம் முன் அமைதியாக அமர்ந்திருந்த அம்மக்களைப் பாதிரியார் ஊன்றிக் கவனித்தார். முன்னால் இருந்தவர்களால் அநேகமாய் மறைக்கப்பட்டவளாய், கையில் சிறுவன் பெடெரை ஏந்திக்கொண்டு மூலையில் இருந்த பெரெட் அடுப்பருகில்அமர்ந்திருந்தாள். அவள் கையைப் பிடித்துக்கொண்டு பக்கத்தில் உட்கார்ந்திருந்தார் பெர்ஹான்ஸா. பாதிரியாரின் பேச்சைக் கேட்டபோது அவளது உதடுகள் அசைந்தன. அவள் முகத்தில் ஒரு ஐயம் குடி கொண்டது. அவர் உண்மைப் பாதிரியாரல்ல என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அப்படி இருந்தால் இந்தச் சூன்ய வெளியில் ஆண்டவன் பெருமை பற்றி அவர் பேசுவாரா? ஆகவே அது பொய்தான் என்று அவளுக்குப்பட்டது. எனினும் அவள் ஒன்றும் சொல்லவில்லை.

அந்தச் சொற்பொழிவும், பிரார்த்தனைப்பாடலும் முடிந்தபின் அதுகாறும் ஞானஸ்நானம் செய்யப்பட்

டிராத குழந்தைகளுக்கும், வீட்டிலேயே பெயர் சூட்டப் பட்டிருந்தவற்றுக்கும் ஞான ஸ்நானச் சடங்கைப் பாதிரி யார் நடத்தலானுர். குழந்தைகளும், அவற்றின் சுவீகாரப் பெற்ருேரும் அவருக்கும், மேஜைமீது வைக்கப் பட்டிருந்த தண்ணீர்ப் பாத்திரத்துக்கும் அருகில் வந்து நின்றனர். அனைவரும் கவனம் செலுத்த அந்தச் சடங்கு சரிவரத்தான் நிறைவேறி வந்தது. இறுதியில் 'வெற்றி வீரன்' பெடெருடன் ஸாற்றினு முன் வந்தாள். அச் சிறுவன் உரக்கச் சிரித்துக் கொண்டிருந்தான். தன் இள முகத்தில் மலர்ச்சியுடன் தன் கண்ணுக்குத் தெரிந்தோ ருடனெல்லாம் அந்தப் பாலகன் பேசினுன்.

அவனுடைய பெயரைப் பாதிரியார் விசாரித்தார். பின்னர் அதை உரக்கக் கூறிவிட்டு ஞானஸ்நானத்தை ஆரம்பித்தார். 'வெற்றிவீரன் பெடெர்' என்று அவர் பேசத் தொடங்கியதுமே, பெரெட் துள்ளி எழுந்தாள். கூட்டத்தை விலக்கிக்கொண்டு அறையின் மத்திக்கு ஓடினுள். அங்கு நிலவிய மௌனத்தை ஊடுருவிக் கொண்டு அவளது குரல் ஓங்கி ஒலித்தது. "இந்தத் தீய செயல் நடைபெறலாகாது! இந்தப் பாவம் புரியப்பட அனுமதிக்கக் கூடாது! சைத்தான் எல்லோரையும் பிடித் தாட்டும் இங்கு யாரே வெற்றி வீரனுக இருக்க முடியும்? உங்களுக்கெல்லாம் மூளை கலங்கிவிட்டதா, என்ன?" அவளது கூக்குரல்கள், பைத்தியக்காரியினுடையதேபோல் மேன்மேலும் வலுத்தன. அவற்றைக் கேட்டு மற்றப் பெண்டிரில் சிலர் அழவாரம்பித்தனர். பல குழந்தை களும் பயந்து அழுதன.

இறுதியில் பெர்ஹான்ஸா தன் மனைவியை எட்டிப் பிடித்து அணைத்துக்கொண்டார். இருவரும் மெதுவாக அம் மக்களை விலக்கிக்கொண்டு கதவை அடைந்தனர். அந்நேரம் முழுவதும் தன் அலறலை பெரெட் நிறுத்தவே யில்லை. "இது சைத்தானின் வேலைதான். இனி அவன் என் சிறுமகனையும் எடுத்துக்கொண்டு விடுவான் என்பதில் சந்தேகமில்லை" என்று அவள் அரற்றினுள். அவர்கள் வெளியே செல்லும் மட்டும் பாதிரியார் பேசாமல் இருந்தார். பிறகு, வேறேதும் சொல்லாமல் பிரார்த்

தனையைத் தொடர்ந்தார். அது முடிந்ததும்,கர்த்தருடன் ஒன்றுபடும் சடங்கை நடத்துவதற்காக அந்த ஞாயிற்றுக் கிழமையிலிருந்து பதினைந்தாவது நாள்தாம் அங்கு திரும்பி வரப்போவதாகத் தெரிவித்தார். ''அதற்கிடையில், சுவர்க்கத்தில் இருக்கும் நம் பரம பிதாவான ஆண்டவனிடம் நீங்கள் செய்த பாவங்களையெல்லாம் ஒப்புக்கொண்டுவிட வேண்டும்'' என்று தெளிவாகச் சொன்னார். அத்தோடு அன்றைய போதனையை முடித்துக்கொண்டார்.

அந்தச் சடங்குகள் பற்றியே பேசியவாறு முற்றத்தில் நின்றனர் குடியேற்றக்காரர்கள். அவற்றையும்விட அன்று நடந்த வருத்தமூட்டும் சம்பவம் குறித்தே அவர்கள் அதிகம் பேசினர். பெர்ஹான்ஸா பாவம் புரிந்தவர்தான் என்று அவர்களில் பலர் நினைத்தனர். எனினும் அம்மாதிரியானதொரு வேதனை தரும் சோதனை அக்குடும்பத்தின்மீது சுமத்துவது மிகுந்த பரிதாபத்துக்குரியதெனக் கருதினர்.

அவ்வீட்டைச் சேர்ந்தோர் எவரும் அங்கு காணப்படவில்லை. ஒவ்வொருவராக அங்கிருந்தவர்களில் பெரும்பலோர் போய் விட்டனர். உத்தேசித்தபடி உதவி செய்யச் சில பெண்டிர் மட்டும் தங்கினர். அவரவர் வீட்டுக்குச் சென்று விடும்படியும், ஒரு சமயத்தில் ஒருவருக்கு மேல் அங்கு வரக் கூடாதென்றும், பெரெட் எப்படி இருக்கிறாள் என்று விசாரிக்கப் புகாமல் எல்லாம் நல்லபடி இருப்பதாகவே நினைத்து நடந்து கொள்ள வேண்டு மென்றும் அவர்களிடம் பாதிரியார் கூறினார். ''நம்பிக்கையை அறவே இழந்துவிடும்படியான நிலைமை இல்லை இங்கு. இறுதியில் யாவும் சரியாகிவிடும் என்றே மனப்பூர்வமாக நம்புகிறேன்'' என்றார் அவர்.

சிறுவனைத் தம் மடிமீது அவர் எடுத்து வைத்துக் கொண்டு அவனுடன் விளையாட ஆரம்பித்தார். ''இவ் வீட்டாருக்கு அனைவரிலும் நெருங்கிய சிநேகிதி ஒருத்தி மட்டும் இப்போது இங்குத் தங்கட்டும். மற்றவர்கள் சென்று விடுங்கள். அவரவர் வீட்டுக்குச் சென்று, முடிந்த மட்டும் அமைதியாக ஆண்டவனைப் பற்றிச்

சிந்தியுங்கள்'' என்று அவர் மேலும் கூறினார். விரைவில் அந்த முற்றம் காலியாகிவிட்டது. நீண்ட நிழல்களை வீசியவாறு சூரியன் அஸ்தமிக்கத் தொடங்கினான். தன் கையைப் பிடித்துக் கொண்டு சிரித்தவாறு பெரெட் வேகமாக நடக்க முயன்றாள். அந்த முற்றத்தில் அங்கு மிங்கும் நடக்கலானார் பாதிரியார்.

புதிதாய்க் கட்டப்பட்டிருந்த மண் வீட்டிலிருந்து பேச்சுக்குரல் வரக் கேட்டு அதை நோக்கிப் பாதிரியார் நடந்தார். அங்கு மண்டியிருந்த இருளை ஊடுருவ அவரது பார்வை பழகியதும் ஒரு வைக்கோல் பொதி மீது பெரெட்டுக்கு அருகில் பெர்ஹான்ஸா உட்கார்ந் திருப்பதைக் கண்டார். பெர்ஹான்ஸாவின் மார்பில் தன் முகத்தைப் புதைத்து மறைத்துக் கொண்டிருந்தாள் அவள்; அவரோ, தன் மடிமீது அன்னா மேரியை இருத்தியவாறு பெரெட்டை அணைத்துக் கொண் டிருந்தார்.

''ஆண்டவன் உங்களுக்கு இனிய அமைதியை அருளட்டும்'' என்று அவர்களை நோக்கிக் கூறிய பாதிரி யார் தொடர்ந்தார்: ''எல்லோரும் போய் விட்டனர். இனி உங்களுடன் எனக்கும் நீங்கள் சாப்பாடு போட வேண்டும். ஹோம் அம்மையே, எனக்காக நேர்த்தியாக ஒரு கோப்பை காப்பி தயாரித்துத் தரமுடியுமா ?''

அவரது குரல் கேட்டதும் பெரெட் திடுமெனத் துள்ளி எழுந்தாள். தான் செய்தது குறித்தும், தங்களைப் பாதிரியார் கண்ட இடம் குறித்தும் அவள் பயந்திருந்தாற்போல் தோன்றியது, பெடெரை அவள் வாரியெடுத்து முத்தமாரி பொழிந்தாள். அவளை மேன் மேலும் இறுகப் பிடித்துக் கொண்டு தொடர்ந்து முத்தம் கொடுத்துக் கொண்டே யிருந்தாள். அதை அவளால் நிறுத்தவே முடியாதுபோல் தென்பட்டது.

''ஜாக்கிரதை, பெரெட், ஜாக்கிரதை !'' என்று அவளது கணவர் கெஞ்சினார்.

''ஏன், என் சொந்தக் குழந்தையைக் கூட நான் நேசிக்கலாகாதா ?'' என அவள் கத்தினாள்.

முடிந்த மட்டும் அன்பு செலுத்துங்கள். ஆயினும் அழகான இவனை உங்களுக்கு அருளிய ஆண்டவனுக்கு நன்றி செலுத்த ஒருகாலும் மறவாதீர். இவன் சிறந்த மனிதனுவான் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.''

பாதிரியார் கூறியதைக் கேட்டபின் பையனின் கையைப் பிடித்துக் கொண்டு வாய் திறவாமல் வெளியேறிஞள் பெரெட். அந்த வைக்கோல் பரப்பு மீதே பெர்ஹான்ஸா அமர்ந்திருந்தார். அவருடைய தலைமயிரும் தாடியும் வெளுத்து விட்டன. முகத்திலெல்லாம் சுருக்கங்கள். வயோதிகர் போலக் காணப்பட்டார். அவரருகில் பாதிரியார் உட்கார்ந்து கொண்டு மென் குரலில் பேசலானுர். ''எல்லாவற்றையும் என்னிடம் சொல்லுங்கள். ஒருவரால் உயரத் தூக்க முடியாததை இருவர் தாங்கிச் செல்லலாம் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!'' அவரது குரல் தழைந்து குழைந்தது.

அதையடுத்து பெர்ஹான்ஸா பேசத் தொடங்கினுர். கண்ணீரைத் துடைத்துக் கொள்ள அடிக்கடி தன் பேச்சை அவர் நிறுத்த வேண்டியதாயிருந்தது. எனினும் பெரெட் இம்மாதிரி மாற நேர்ந்த சந்தர்ப்பங்கள் யாவற்றையும் பாதிரியாரிடம் அவர் கூறி விட்டார். ''இனியும் இந்நிலை தொடர்ந்தால் நான் அவளை வேறெங்காவது அனுப்பித் தாஞகவேண்டும்'' என்று அவர் பெருமூச்சு விட்டார்.

''அவள் சித்தம் அறவே கலங்கி விட்டதா என்ன?'' என்று பாதிரியார் கேட்டார்.

''முழுவதும் கலங்கிஞல் என்ன, பாதி கலங்கிஞல் என்ன, இரண்டுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? கண்ணுடியில் பெரிய விரிசலோ, சிறிய விரிசலோ எது விழுந்தாலும் அதை உபயோகிக்க முடியுமா?'' பெர்ஹான்ஸா தொடர்ந்து சொன்ஞர்: ''இதற்கு என் தவறும் தான் காரணம். நான் தான் அவளை இங்கு அழைத்து வந்தேன். அது அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆஞல் இட்டு வந்தது பாவமாகி விடுமா? தன் எதிர் காலம் அமைய விருக்கும் இடம் தன் மனைவிக்குப் பிடிக்கவில்லை என்பதால் எவனும் அங்கிருந்து திரும்பி விடவேண்டுமா என்ன?''

''கூடாது, கூடாது; அவ்வாறு அவன் திரும்பவே கூடாது. எனினும் இருவரும் ஒத்துப் போனால் இன்னும் தரமாயிருக்கும்.''

''ஆஹா, அவ்வாறு சொல்லிவிடுவது எளிது. ஆனால் செய்வது கடினம். ஆயினும் நாங்கள் சண்டை பிடித்துக் கொண்டு இருக்கவில்லை. அநேகமாக அவள் வாயே திறந்ததில்லை எனலாம். இங்கு வந்த பிறகும் கூட அவள் எதையும் சொன்னதில்லை. அம்மாதிரி அவள் ஊமையாகி விட்டது தான் உபத்திரவமாக இருக்கிறது! இதுகாறும் எங்களுக்கிடையே உண்மையில் மனக் கசப்பு ஒரு போதும் ஏற்பட்டது கிடையாது. சொல்லப் போனால், சில சமயங்களில் நாங்கள் இருவரும் ஒருவரிடமொருவர் வேறெவரும் எக்காலத்திலும் கொண்டதைவிட அதிக அக்கறைகொள்கிறோம் என்றே நினைக்கிறேன். நீங்கள் ஒரு பாதிரியார், விவிலிய நூலைப் படித்தவர். ஆகவே, இந்நிலையில் ஒரு மனிதன் என்ன செய்வது என்பதை நீங்களே சொல்லுங்கள்.''

''உங்களுக்கு ஏற்பட்டுள்ள துயரத்தை பொறுமையுடன் தாங்கிக் கொள்ளவேண்டும்'' என்றார் பாதிரியார்.

பெர்ஹான்ஸா சட்டெனக் குறுக்கிட்டார்: ''ஊஹூம், அது போதாது எனக்கு. புரிகிறாற்போல் ஒரு விடைவேண்டும்! இங்கு அவளை நான் அழைத்து வந்தது சரியா, தவறா? வேறென்ன நான் செய்திருக்கக் கூடும்?''

''ஆம், நீங்கள் அப்போது செய்தது சரியே. ஆண்டவன் தடுக்காவிடில், நம் மனமும் மூளையும் நாடுகின்ற இடத்துக்கு நாம் செல்லத்தான் வேண்டும். ஆனால் அதன்பின் நீங்கள் பெரும்பாவங்கள் புரிந்து விட்டதாகக் கேள்விப்படுகிறேன். இப்போதோ ஆண்டவன் உங்களை அழைத்துச் செல்லும் வழிபற்றிப் புகார் சொல்லுகிறீர்கள். இந்த இடர்கள் முழுவதையும் பொறுமையுடனும் அன்புடனும் தாங்கிக் கொள்ள நீங்கள் பழகவேண்டும்!''

''ஆஹா, எதையும் சொல்வது எளிது. ஆனால். இங்கோ, மற்ற இடங்களையும் விடச் செயல் கடினம்! தனக்குத் தெரியாத 'விஷயங்கள் பற்றி எவரும்

எளிதாகப் பேசிவிடலாம். தன் சொந்தக் குழந்தைகளையே ஒருத்தி எப்போது கொன்றுவிடப் போகிருளோ என்று பயந்தவாறே ஒவ்வொரு நாளையும் நீங்கள் எப்போதாவது கழித்த துண்டா ?......அவள் இம்மாதிரி இருப்பதற்கு உங்கள் தவறே காரணமாக இருக்கலாம் என்பது தெரிந்தும் அவ்வாறு நீங்கள் வாழ நேர்ந்த துண்டா ?''

''அப்படிப்பட்ட அனுபவமேதும் எனக்குக் கிடையாது. அதற்காக ஆண்டவனுக்கு நன்றி! ஆமாம், அவள் எப்படி இவ்விதமானுள் என்பதைச் சொல்லுங்கள்'' என்று மெதுவாகக் கேட்டார் பாதிரியார்.

சிறிது நேரம் ஒன்றும் பேசமால் பெர்ஹான்ஸா உட்கார்ந்திருந்தார். பிறகு கதவருகில் சென்று வெளியே படர்ந்திருந்த இருளை நோக்கியவாறு தொடர்ந்து சொன்ஞர்: ''அமெரிக்காவைச் சொந்த நாடாக அவளால் கருத முடிந்ததேயில்லை. இங்கு அவளுக்கு இருப்புக் கொடுக்கவேயில்லை. சிலரால் தங்கள் தாயகத்திலிருந்து பிரிந்திருக்க முடியாது என்பது தாங்கள் அறிந்ததே. எனினும் கடைசிக் குழந்தையான பெடெர் பிறக்கு மளவு எல்லாம் சரியாகத்தான் இருந்தது. அந்தப் பிரஸவ சமயத்தில் தான் இறப்பது உறுதியென அவளுக்கு தோன்றிவிட்டது. மிகவும் கடினமான பிரஸவம் அது; அவளையும் கிட்டத்தட்ட இழக்க விருந்தோம். ஆனுல் எப்படியோ அது நலமாகவே நடந்தேறியதும் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. அந்த ஆனந்தத்தில், அனைத்தும் இனிது அமையு மென்றே தொடர்ந்து எண்ணினேன்; புதிய மகனுக்கு 'வெற்றி வீரன்' என்ற இரண்டாவது பெயரையும் கொடுத்தேன். அதை அவளால் தாளமுடிய வில்லை.''

''ஏன் அப்படி? அருமையான பெயராயிற்றே அது!''

''உண்மையாகத்தான் சொல்கிறீர்களா?''

''அதில் சந்தேக மென்ன! எந்தப் பிள்ளைக்கும் அது போன்ற நேர்த்தியான பெயரை நான் கொடுத்ததே யில்லை.''

களிப்பு மிகுதியினுல் பெர்ஹான்ஸாவுக்குச் சிறிது நேரம் பேச நாவெழவில்லை—''அப்படியானுல் அது நல்ல பெயர்தான் என்று சொல்கிறீர்களா? ஆண்டவனுக்கு எதிரானதல்லவே அது?''

''இல்லவே இல்லை! அப்படியுமா நீங்கள் சஞ்சலப் பட்டீர்கள்?''

''இப்போது என்னிடம் கூறியதை அவளிடமும் நீங்கள் சொல்வீர்களா? அந்தப் பெயரைச் சூட்டியதி லிருந்து அதுவே என் மனத்தைச் சுமையாக அழுத்தி வந்திருக்கிறது.''

''நிச்சயம் அவளிடமும் சொல்கிறேன். அப்பெயர் அவளுக்குப் பிடிக்கவில்லை என்ரு கூறுகிறீர்கள்?''

''ஆமாம். தன் பிடியில் எங்களைச் சிக்க வைக்க சைத்தான் தான் அப்பெயரை எங்கள் மனத்தில் திணித் தானென அவள் திடமாகக் கருதிஞள். அந்தப் பெயரைக் கேட்கவே பொறுப்பதில்லை அவளுக்கு. ஆகவேதான் இன்று நீங்கள் ஞானஸ்நானம் செய்யப் புகுந்தபோது அவளுக்கு வெறி பிடித்தது.''

''இம்மாதிரி வெறி எவ்வளவு நாளாக அவளுக்கு ஏற்பட்டு வருகிறது?''

''வெட்டுக் கிளிகள் படையெடுக்கத் தொடங்கிய திலிருந்து'' என்று பதிலளித்த பெர்ஹான்ஸா, முதல் நாளன்று தாம் வீடு திரும்பிய போது பெரிய பெட்டியில் பெரெட் ஒளிந்திருந்ததைக் கூறிஞர். அது முதல் தன் தாயைக் காணத் தொடங்கியதையும் குறிப்பிட்டார். அப்போது அவள் தாய் இறந்து விட்டாள் என்பதையும், பல மாதங்கள் கழித்தே அது பற்றித் தங்களுக்குத் தெரிய வந்தது என்பதையும் சொன்ஞர்.

''இறந்தவளை அவள் உண்மையில் கண்டிருக்க முடியாதே!''

''ஆம்; காணத்தான் செய்தாள். கண்டதோடு மட்டுமல்ல, பேசவும் பேசிஞள்! இறந்த பின்பும் தன் தாய் தன் அருகில் உட்கார்ந்திருப்பது போலவே பேசுகிருள்!''

''குழந்தைக்குத் தீங்கேதும் செய்ய எப்போதாவது முயன்ருளா?''

''அது பிற்பாடு நடந்தது. தன் தாய் அக்குழந்தையைத் தன்னுடன் வைத்துக் கொள்ள விரும்புவதாக அவளுக்குத் திடநம்பிக்கை. ஒரு நாள்...ஐயோ, அந்தப் பயங்கரத்தை என்னுல் கூற முடிய வில்லையே! அன்று மட்டும் ஸாற்றிஞ வந்திராவிடில் என்ன நடந்திருக்குமோ, சொல்வதற் கில்லை. ஆகவே, கோடைக் காலம் முடியுமட்டும் குழந்தையை ஸாற்றிஞ வைத்துக்கொள்ள அனுமதிக்கும்படி அவளிடம் கோரினேன். முதலில் அவளுக்கு மனமில்லை. எனினும் இறுதியில் அதற்கு இசைந்தாள். நான் அவ்வாறு செய்தது சரியா அல்லவா என்பது இப்போது எனக்குத் தெரியவில்லை. சிறுவன் இல்லாமல் தனிமையில் உழன்ருள் அவள். அதைத் தாங்கமாட்டமால் ஒரு நாளிரவு எழுந்து, அவனைத் திரும்ப எடுத்து வருதற்காக ஸாற்றிஞவின் வீட்டுக்குச் சென்ருள். அப்போது என்னுல் என்ன செய்ய முடியும், சொல்லுங்கள்.''

''ஆண்டவன் உங்களைக் கடும் சோதனைகளுக்குத் தான் ஆளாக்கி யிருக்கிருர். ஆயினும் அவரே உங்களைக் கைதூக்கி விடவும் தவறமாட்டார்.........அதை மறவாதீர்கள். அது இருக்கட்டும். இம்மாதிரி வெறி பிடிக்கும் வேளைகளுக் கிடையே அவள் எப்படி இருக்கிருள் என்பதைச் சொல்லுங்கள்.''

''நல்ல படித்தான் நடந்து கொள்கிருள். எல்லா வேலைகளையும் வழக்கம் போல் செய்கிருள். அவளுடைய விருத்தாந்தம் மட்டும் தெரியா திருக்குமானுல் அவளிடம் எவ்விதக் கோளாறும் கிடையாது என்றே அப்போது நினைப்பீர்கள். மாரிக்காலத்தில் அவள் நிலை மோசமாயிருக்கும் என்பது உண்மைதான். எனினும் அப்பருவத்தில் படரும் பனியாலும் அடரும் தனிமையாலும் நாம் எல்லோருமே மனமிடிந்துதான் போகிறோமல்லவா?

''அது சரி, ஆயினும் நானுயிருந்தால் அவளிடமிருந்து குழந்தையை மறுபடி பிரிக்க மாட்டேன். உங்களால் முடிந்த அளவு கவனமாக நீங்கள் கண்காணிக்க

வேண்டும். முன்பு போலவே அவளை நேசியுங்கள். நெருங்கிப் பழகுங்கள். அடிக்கடி அவளுடன் பேசுங்கள். இன்றிரவு நானும் இங்கே தங்கி, நாளை அவளுடன் பேச முயல்கிறேன். அவள் இதயத்தை எட்ட ஒரு வேளை ஆண்டவன் எனக்கு உதவினாலும் உதவக் கூடும்.''

பெர்ஹான்ஸா அப்போது கண்ணீர் விடத்தொடங்கி விட்டார். அவர் மனம் சாந்தியுற்றது. பேச வாய் வரவில்லை.

''வாருங்கள், இந்த இருளிலிருந்து பிரகாசம் மிக்க உங்கள் வீட்டுக்குச் சென்று உணவருந்துவோம். நம் ஆத்மாக்களைப் போலவே நம் உடல்களுக்கும் உணவு அவசியம்'' என்றார் பாதிரியார்.

முற்றத்தை அவர்கள் கடந்து கொண்டிருந்த போது ஓல் ஓடி வந்தான். அவர்கள் வீட்டுக்கு அருகிலிருந்த ஒரு சிறு குன்றின் மீதேறிய ஹான்ஸ், கீழே இறங்க மறுப்பதாகத் தன் தந்தையிடம் அவன் தெரிவித்தான். இறங்காததுடன் அங்கு அவன் அழுது கொண்டும் இருப்பதாகவும், தன் தாயை நினைந்து அவன் அஞ்சுவதாகவும் கூறினான்.

''பார்த்தீர்கள் அல்லவா, எங்கள் நிலை எப்படி இருக்கிறது என்பதை? நீங்கள் உள்ளே செல்லுங்கள். நான் அவனை ஒரு நிமிஷத்தில் திரும்ப அழைத்து வருகிறேன்'' என்றார் பெர்ஹான்ஸா.

அந்த இருளிடையே அவர் நடந்து அந்தச் சிறு குன்றை அடைந்தார். அழுகுரலைக் கொண்டு பையன் இருக்கு மிடத்தைக் கண்டுபிடித்தார். ''பெர்மாண்டை.... அம்மா......கொன்று...விட்டாளா? அவளுக்கு மீண்டும்... பைத்தியம் பிடித்து விட்டதா?'' என்று கேவினான் சிறுவன்.

''அப்படியெல்லாம் ஒன்று மில்லை. அம்மா நல்லபடித்தான் இருக்கிறாள். அவள் தயாரித்திருக்கும் அருமையான உணவைச் சாப்பிட உன் வருகைக்காக நாங்களெல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறோம். உம், அழுகையை நிறுத்தி விட்டு வீட்டுக்குவா'' என்றார் பெர்ஹான்ஸா.

வீட்டிலோ மேஜைமீது உணவுக் கலங்கள் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. அறையில் உற்சாகக்களை படர்ந் திருந்தது. உதவி செய்வதற்காக இன்னமும் அங்கிருந்த ஸாற்றினு, குழந்தைகளுடன் சிரித்துப் பேசிக் கொண் டிருந்தாள். குழந்தை பெர்மாண்ட் தூங்க வைக்கப்பட வேண்டியது தான் பாக்கி. ஏதோ பாத்திரங்களைக் கழுவியவாறு அடுப்பருகில் பெரெட் நின்றுள். பாதிரி யாரைப் பார்ப்பதற்காக ஒரு முறை அவள் திரும்பினுள்; பன்முறை அவரைப் பார்த்தவண்ணம் இருந்தாள். அவர் முகத்தில் அசாதாரணமான ஏதோ ஒன்று இருந்தது. சாப்பாடு ஒருபுறம் தயாராகிக் கொண்டிருக்கையில் அவர் குடிப்பதற்காக ஒரு கோப்பை பாலை அவள் கொடுத்தாள்.

விரைவில் தன் பிள்ளைகளுடன் பெர்ஹான்ஸா அங்கு வந்து சேர்ந்தார். நால்வரும் சாப்பிட அமர்ந்ததும் இரு பெண்டிரும் பரிமாறினர். ஆனுல் கண்ணீரினுல் சிவந் திருந்த சிறுவன் ஹான்ஸின் முகத்தைக் கண்டதும் பாதிரி யாருக்கு சாப்பாடு வேண்டியிருக்கவில்லை. மற்றுமொரு கோப்பை பால் மட்டும் கேட்டார். அதைப் பருகியதும் மற்றவர்களும் உணவு முடிக்கு மளவு காத்திருந்தார். பிறகு கைகளைக் கூப்பிக் கொண்டு தம் பக்கலிலேயே எப்போது மிருந்த ஆண்டவனைப் பிரார்த்திக்கத் தொடங்கினுர்.

அமைதியாக அவர் துதித்துக் கொண்டிருக்கையில் மற்றவர்களும் கைகளைக் கூப்பிக் கொண்டு, அவர் கூறிய வற்றைக் கவனமாகக் கேட்டனர். அஸ்தமன சமய மாதலால் அவ்வறையில் பொன்னிலக் கிரணங்கள் பள பளத்தன. படுக்கையில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளும் கொஞ்சங் கொஞ்சமாக அடங்கின. இறு தியில், பாதிரியாரின் நேச பாவம் மிகுந்த குரலைக் கேட்டுப் படுக்கையிலிருந்த பெர்மாண்ட் எழுந்தான். இரவு உடைகளை மட்டுமே உடுத்திக் கொண்டிருந்த அவன் மெள்ள அவரை நெருங்கி, தன்னை எடுத்துக் கொள்ளு மாறு கோரினுன். அவனைத் தடுத்து நிறுத்த பெரெட் விழைந்தாள். ஆனுல் எக்காரணத்தாலோ அவளால் அது இயல வில்லை. பாதிரியார் அதைப் பொருட் படுத்த வில்லை. குழந்தையைத் தூக்கி யெடுத்துத் தன் முழங்

கால் மீது இருத்தியவாறு பிரார்த்தனையைத் தொடர்ந்தார். சற்றும் நிறுத்தாமல் தம் இனிய, குழைவான குரலில் அவர்கள் அனைவரிடமும் விசேஷ சிரத்தை காட்டும்படி அவர் ஆண்டவனை வேண்டினார். தன் மடி மீதிருந்த அந்தப் பையனைப் பற்றிப் பிரார்த்திக்கலானார். ''ஒரு காலத்தில் நீங்கள் தேர்ந்தெடுத்த மகனைப் போலவே இவனிடமும் தனியருள் காட்டுங்கள், பரம பிதாவே! தன்னை வெற்றி கொள்வதுடன் தன் மக்களுக்காகவும் உண்மை வெற்றி வீரனாக இவன் திகழக் கருணை காட்டுங்கள்! உங்கள் அருளால் என்றென்றும் இவ் வீட்டில் சாந்தி நிலவட்டும்!......என் பிரார்த்தனைகளெல்லாம் ஈடேறுக!''

பிரார்த்தனையை அவர் முடித்த பின்பும் வெகு நேரம் வரை அனைவரும் மௌனமாக அமர்ந்திருந்தனர். ஆண் மக்களின் கண்கள் மூடியிருந்தன; பெண்டிரின் கண்களிலிருந்தோ நீர் சொரிந்தது. பிறகு பாலகனுடன் விளையாடத் தொடங்கி விட்டார் பாதிரியார். மிகவும் இயல்பான முறையில் அவர் விளையாடியதால் இருவரும் மகிழ்ந்தனர். இறுதியில், எல்லோரும் படுத்துக் கொள்ளும் நேரம் நெருங்கியது. பாதிரியார் அதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றுமில்லை.

மறுநாள் காலையில் பாதிரியார் மகிழ்ச்சிக் கடலிலேயே திளைத்தார் எனலாம். அவர் உண்பதையும் பேசுவதையும் கவனிப்பதே களிப்பூட்டுவதாயிருந்தது. அப்போது, பெரெட்டுடன் தனித்திருப்பதற்கு அவர் விரும்பியது பெர்ஹான்ஸாவுக்கு ஞாபகம் வரவே, பையன்களை அழைத்துக் கொண்டு வயல் வெளிக்குச் சென்று விட்டார். தரையையே நோக்கியவாறு அமர்ந்திருந்த பெரெட்டைப் பாதிரியார் அணுகினார். அம்மாதிரி நிலையில் அவளுடன் பேசுவது அவருக்குச் சிரமமாகத் தான் இருந்தது; எனினும் எப்படியோ மனத்தைச் சரிப்படுத்திக் கொண்டு தொடங்கினார்.

''இங்கே பாருங்கள், ஹோம் அம்மையே. உங்களிடம் ஒரு விஷயம் கேட்க நான் விரும்புகிறேன். வருகிற ஞாயிற்றுக் கிழமையிலிருந்து இரண்டு வாரங்கள் கழித்து

நான் இங்கு திரும்பிவர உத்தேசித்திருக்கிறேன். அப்போது உங்கள் வீட்டில் கர்த்தருடன் ஒன்றி நிற்கும் சடங்கு ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருக்கிறேன்.''

''இங்கா! எங்கள் வீட்டிலா?''

''ஆம், நீங்கள் வசிக்கும் இந்த வீட்டிலேயே. உங்கள் பாவங்களை யெல்லாம் ஆண்டவனிடம் எடுத்துரைத்து, அவரது இனிய கருணையைப் பெற உங்களுக்கு விருப்ப மில்லையா?''

''ஆனால் இவ்வீட்டிலா? ஊஹூம், கூடாது. ஒரு நாளும் ஆகாது! பாவங்கள் இங்கே...... ஏராளம், ஏராளம்...... இது புனித இடமில்லை!'' இதைச் சொன்ன வுடன் அவள் முகம் சிவந்தது; பேச்சை நிறுத்தி, மீண்டும் தரையையே நோக்கிக் கொண்டிருந்தாள்.

''உண்மை, பாவம் இங்கு இருக்கத்தான் இருக் கிறது. ஆயினும் கடவுள் அதை நீக்கிவிடுவார். ஆகவே, எதைப் பற்றியும் எண்ணாதீர்கள். அவர் பணிக்கு இவ் வறையை எப்படி ஏற்றதாக்குவது என்பது பற்றியே நாம் சிந்திக்க வேண்டும்.'' அது முடிவு செய்யப்பட்டு விட்ட விஷயம் போலவே தொடர்ந்து பேசிக்கொண் டிருந்தார் பாதிரியார்; அவளது மௌனத்தை அவர் சற்றும் பொருட்படுத்தவில்லை. அங்கிருந்த பெரிய பெட்டியை எப்படிப் பயன் படுத்துவது என்பது பற்றி அவர் பேசப் புகுந்த போதுதான் அவள் மனம் வேறெங்கோ ஈடுபட்டிருந்ததைக் கவனித்தார்.

''அது என் தந்தையின் பெட்டி......மிக நேர்த்தி யானதும்கூட ...... இல்லையா ?'' — அவளுடைய முகம் மீண்டும் குழந்தையைப் போன்று கள்ளமற்றுத் திகழ்ந்தது.

தான் நினைத்ததை யெல்லாம் கூறிவிட்டுப் பாதிரி யார் வெளியே சென்றார். அவ்வீட்டிலிருந்து அப்பால் நடந்தார். யாரையும் சந்திக்க அவர் விரும்பவில்லை. குறிப்பாக, பெர்ஹான்ஸாவைப் பார்க்க இஷ்டப்பட வில்லை. பெரெட்டின் மனம் திடுமென அமைதி கண்டது. முன்தினம் அவர்கள் அனைவரும் பாடிய பிரார்த்தனைப் பாடலொன்றை அவள் பாடத் தொடங்கினாள்.

அந்தக் குடியேற்றப் பகுதியின் வழியே வேனிற் காலத்தில் மேன்மேலும் பலர் சென்றனர். பெரிய வண்டி களில் வந்த அவர்கள் மேலும் மேலும் மேற்கே போனார்கள். எனினும் சிலர் அங்கேயே தங்கி, தங்களுக் கென மண் வீடுகளைக் கட்டிக் கொண்டார்கள். அவ் வாறு பிறரைக் குடியமர்த்துவதில் ஸாக்னிங்குகள் மிகுந்த சாமர்த்தியசாலிகளாக இருந்தனர். எனவே அப்பிரதேசம் முழுவதும் வெகு வேகமாக அபிவிருத்தி யடையத் தொடங்கியது. வெட்டுக் கிளிகள் மீண்டும் படையெடுத்து வந்த போதிலும் அவை அதிக காலம் தங்கிவிடவில்லை. மேலும், அவ்வருடம் சிறிது கோதுமை யையும், மற்றும் சில பயிர்களையும் அவை அழித் தொழிக் காமல் விட்டுவிட்டன.

ஒவ்வொரு விவசாயியும் வருடா வருடம் ஏதாவது மீதம் பிடித்திருந்தான். அவர்களில் பெரும்பாலோ ரிடமும் தங்கள் தேவைக்குக் கண்டது போகக் கொஞ்சம் பணம் மிகுந்திருந்தது. கோழிக் கூட்டங்கள் செழித்தன; கால் நடைகளின் தொகையும் கூடியது. இவற்றினு லெல்லாம் மேலும் பணம் குவிந்தது. அவ்வட்டாரத் திலேயே முதன் முறையாக அருகில் ஒரு இருப்புப் பாதையும் அமைந்தது. கிட்டத்தட்ட ஸியூக்ஸ் நீர்வீழ்ச்சி வரையில் அது நீண்டிருந்தது. இதையெல்லாம் விடச் சிறந்த சூழ்நிலை வேறென்ன இருக்க முடியும்? ஆகவே, மேன்மேலும் அதிக மக்கள் அங்கு தங்கலாயினர். ஆதியில் குடியேறியவர்கள் பெரிய பெரிய மர வீடுகளை நிர்மாணித்துக் கொண்டிருந்தார்கள். ஹான்ஸ் ஓல்ஸா அவர்களிலொருவர். முதல் வருட அனுபவத்துக்குப் பின் கால் நடைகளை அவர் வளர்க்க ஆரம்பித்தார். அதில் அவருக்கு நிறையப் பணம் கிடைத்து வந்தது.

டோன்ஸெடெனும் மரச்சட்ட வீடு கட்டுவது பற்றிப் பேசினார். ஆனால் அதற்காக அவர் ஒருபோதும் ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. தானும் கால் நடை வளர்க்க வேண்டிப் பெரியதொரு பண்டசாலையை ஹென்றி ஸோலம் கட்டினார்; அடுத்த வருடம் கலியாணம் செய்து கொண்டதும் வீடு கட்டுவது அவர் உத்தேசம். ஆக, அந்தச் சமவெளி சிறுகச் சிறுக மாறியது. அங்கு ஜன

சஞ்சாரம் ஏற்பட்டது. மரங்கள் நடப்பட்டன. வேகமாக வளர்ந்த அவை, சுற்றிக் கிடந்த வெற்று வெளியிலிருந்த சில புதிய வீடுகளை மறைக்கவும் செய்தன.

கர்த்தருடன் ஒன்று படும் சடங்கு நடந்த ஞாயிறன்று கால நிலை ரம்மியமாக இருந்தது. வெட்டுக்கிளி முட்டைகள் அப்போதுதான் தரையில் தெரிய வாரம்பித்தன; ஆனால் வெட்டுக்கிளிகள் ஏதும் இன்னமும் வந்திருக்கவில்லை. காற்று இலேசாக அடித்துக் கொண்டிருந்தது; சில பறவைகள் இன்குரல் எழுப்பின. குறித்த நேரத்துக்கு முன்னதாகவே பலர் பெர்ஹான்ஸாவின் முற்றத்தில் வந்து கூடிக் களிப்புடன் பேசிக்கொண்டிருந்தனர்.

முதல்நாள் இரவு பெர்ஹான்ஸாவின் வீட்டில்தான் பாதிரியார் படுத்துறங்கியிருந்தார். சீக்கிரமே எழுந்து தொழுகைக்காக அவ்வீட்டைச் சுத்தம் செய்தார். அனைத்தும் இயன்றமட்டும் துப்புரவாக இருந்தன. சமவெளியில் கிடைத்த மலர்களை பெரெட் கொய்து, நாலா பக்கமும் வைத்திருந்தாள். அவளிடமிருந்த கண்ணாடி ஜாடிகளையும் கோப்பைகளையும் அவை அலங்கரித்தன. அற்புதம் என்று கூறும் அளவுக்கு அதிகமாகவே அவை மிளிர்ந்தன. ஏதோ சிறு குழந்தைதான் அம்மலர்களைச் சேகரித்துச் சிங்காரித்திருப்பதாகத் தோன்றியது. பாதிரியாருக்கு அவற்றைக் காணப் பொறுக்கவில்லை.

மேஜைமீது ஒரு வெள்ளைத் துணி விரிக்கப்பட்டிருந்தது. சில இருக்கைகளையும் தயாரித்துத் துணியினால் தக்கவாறு மூடியிருந்தார் பெர்ஹான்ஸா. மெழுகுவத்தித் தண்டுகளும், மற்றும் பாதிரியாருக்குத் தேவையான பொருள்களும் மேஜைமீது ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. எனவே அந்த மேஜையைப் பார்த்தபோது ஒரு வேதிகை போலவே தோற்றம் அளித்தது. ஏற்பாடுகள் செய்வதில் முனைந்திருந்த நேரம் முழுவதிலும் பாதிரியார் பேசவேயில்லை. பிறகு தம்மைச் சுற்றி நோக்கிவிட்டுக் கூறினார். "தொழுகைக்குரிய உடை அணிந்துவரும் பொருட்டுச் சிறிய குடிசைக்குள்

இப்போது செல்லப்போகிறேன். நான் திரும்பி வந்ததும் நீங்கள் யாரும் என்னுடன் பேச முற்படாதிருக்க வேண்டுமென விரும்புகிறேன்.''

பிரார்த்தனை புரிந்தவாறே அச்சிறிய குடியினுள் அவர் நுழைந்தார். திடநம்பிக்கை இருந்தே தீரவேண்டிய அத்தருணத்தில்தான் தாம் பலவீனமுற்றும், அறவே சக்தியற்றும் நிற்பதாக அவருக்குப்பட்டது. ''ஆண்டவனன்றி நாம் வெறும் கூடுதான். ஆகவே அவரே அந்நம்பிக்கையை அருளவேண்டும்'' என்று நினைத்தவராக இறுதியில் மிகச் சிரமப்பட்டு எழுந்து வெளியே வந்தார். அதற்குள் அந்த வீட்டில் மக்கள் நிறைந்துவிட்டனர். அவர்கள் அனைவரும் மௌனம் வகித்தார்கள். எல்லோருக்கும் முன்னால் பெர்ஹான்ஸாவும் பெரெட்டும் வீற்றிருந்தனர். அவர்களுக்குத்தான் முதலில் கடவுளுடன் ஒருமைப்படும் சடங்கு நடைபெறும் என்றும், அது முடிந்ததுமே பெர்ஹான்ஸா தன் மனைவியை வெளியே அழைத்துச் செல்லவேண்டும் என்றும் பாதிரியார் கூறினார்.

உடனே அந்தச் சடங்குக்கு உரித்தான உபதேசத்துடன் தொழுகையைத் தொடங்கினார். பெரெட்டைப் பற்றியே எண்ணியவராக, ஆண்டவனின் பெருமையை எடுத்துரைத்தார். தனிமை செறிந்த இந்தச் சமவெளியில் பொருந்தி நிற்பதற்குக் கடவுள் நம்பிக்கையினால் கிட்டும் பேரானந்தம்தான் அவளுக்குத் தேவை. மற்றும் பலருக்குக்கூட அது அவசியமாயிருக்கலாம் என்று அவர் கருதினார். பாதிரியார் பேசத் தொடங்கினார். ஆனால் அவர் கூறவிரும்பிய வார்த்தைகள் வரமாட்டோம் என்றன. அவற்றுக்கு மாறாக, அவர் உத்தேசித்திராத வார்த்தைகளும் விஷயங்களும் வெளிவந்தன. எனவே, முன்னிலும் மெதுவாகப் பேசத் தொடங்கினார். சிதறிய தம் எண்ணங்களைத் திரட்டித் தொகுக்க முயன்றார். அந்தப் போராட்டத்தினால் அவர் முகம் சிவந்து கனன்றது. எனினும் அப்போதும் அவர் வாயிலாக வேறெவரோ பேசுவதுபோலவே தோன்றியது. தம் கூற்றுகளைக் கட்டுப்படுத்தச் சக்தியற்று நின்றார். விவிலிய

நூல் குறித்த மக்கள் பற்றியும் ஆண்டவனின் பெருமையை அவர்கள் கண்டு கொண்டது குறித்தும் அவர் எடுத்துரைத்தார். அதோடு தம் பேச்சை நிறுத்தி விடவே விரும்பினுர். ''ஏதுமறியாத இந்த நார்வீஜிய விவசாயிகளுக்கும் மாலுமிகளுக்கும் விவலிய நூல் குறிப்பிடும் மக்களைப் பற்றி என்ன தெரியும்?'' என்பதே அவர் கருத்து.

எனினும் அவர் போக்கில் திடுமென ஒரு மாற்றம் கண்டது. பெரு நகரொன்றில் தாம் அறிந்திருந்த ஒரு நார்வீஜியப் பெண்மணி பற்றிய கதையொன்றைக் கூறினுர். குழந்தைகளுடன் தம்முன் உட்கார்ந்திருந்த பாட்டாளிப் பெண்டிரைப் பார்த்தவாறு அன்னையின் அன்பு பற்றிப் பேசினுர். பிறகு, இந்த அன்பை தம் மக்களிடம் ஆண்டவனுக்குள்ள அன்புடன் ஒப்பிட்டார். ''எவ்வளவு அற்புதமானது இந்த அன்பு! இந்த அன்பையும் பெருமையையும் நேரில் கண்டு அனுபவிக்க விருப்பம் இருக்குமாணுல் மேஜையருகே வந்து புனிதப்படுத்தும் இந்தச் சடங்கின் பலனைப் பெறுவீராக!'' என்று அவர்களை அழைத்தார்.

அவ்வாறே அவர்கள் அவர் முன் வந்து மண்டியிட்டனர். அவர்களில் பலரது கண்களில் நீர் பொங்கியது. அதிகநேரம் பாதிரியார் பேசிவிட்டபடியால் வழக்கமான உபதேசத்துக்கு அவகாசம் இருக்கவில்லை. ஆகவே ஒன்றுபடும் தொழுகையை அதோடு அவர் முடித்தார். பிறகு, நேராகத் தம் வீடுகளுக்குச் சென்று அன்று மீதமிருந்த பொழுதைக் கடவுளைப் பற்றிச் சிந்திப்பதில் செலவிடும்படி அவர்களிடம் கூறினுர்.

வீடு என்று உண்மையாகச் சொல்லத் தக்க ஒன்றை ஹான்ஸ் ஒல்ஸா கட்டிக்கொண்டிருந்தார். நாள் முழுதும் அதை நிர்மாணிக்கையில் தமக்குத்தாமே அவர் பாடிக் கொள்வார். கீழே சாப்பாட்டு அறை, வாச அறை, இரு படுக்கையறைகள், மாடியிலும் மூன்று படுக்கையறைகளுடன் மிகப் பெரிய வீடாக அமையவிருந்தது அது. ஒரு படுக்கையறையைக் கூட கீழ்த்தளத்தில் கட்ட அவருக்கு இஷ்டமில்லைதான். ஆனுல்

வழக்கத்துக்கு விரோதமாக ஸாற்றிஞ அவை வேண்டும் என்று வற்புறுத்தினுள். அதனுல் அதிகப்படியாகச் செலவானபோதிலும்கூட இறுதியில் ஹான்ஸ் ஒல்ஸா ஒப்புக் கொண்டார்.

அதன்பின்தான் அந்த சுபச் செய்தியைப் பற்றி அவரிடம் ஸாற்றிஞ தெரிவித்தாள்—அத்தனை வருஷங்களுக்குப் பிறகு அவள் மறுபடி கருவுற்றிருந்தாள். அதனுல்தான் கீழே மற்ெருரு படுக்கை அறை வேண்டும் என்ருள். அந்நிலையில் அவள் எது கேட்டாலும் கொடுக்கத் தயாராயிருந்தார் ஹான்ஸ் ஒல்ஸா. எப்படியும், அவரைப் பொறுத்தவரை மிகவும் அனுகூலமான காலம் அது. மேன்மேலும் நிலங்கள் சாகுபடிக்கு வந்தன. கொட்டில்களில் கால்நடைகள் நிறைந்தன. இப்போதோ புதுக் குழந்தைக்காகப் புது வீடு எழுந்து வந்தது. அக்குழந்தை ஆணுகத்தான் பிறக்கும் என்பதில் அவருக்கு ஐயமிருக்கவில்லை.

அவருக்கு வருத்தமளித்த ஒரே விஷயம், பெர் ஹான்ஸாவின் நிலைதான். தம் நண்பர் சிரமப்படுவதையும், மூப்படைந்து விட்டதையும், பெரெட் படும் பல விதக் கஷ்டங்களையும் பார்த்துச் சங்கடப்பட்டார். 'பெர்ஹான்ஸாவின் பையனை நாம் எடுத்து வளர்க்கலாமா?'' என்று எண்ணினுர். ஆனுல் அது சரியா, தவரு என்பதை அவரால் பகுத்தறிய முடியவில்லை. அந்தப் பாலகனை வளர்ப்பதை ஒரு பெரிய காரியமாக அவர் நினைக்காவிட்டாலும் அவனைக் கொடுப்பதற்கு பெர்ஹான்ஸாவின் மனம் இடந்தரவில்லை. பெரெட்டின் நிலை உண்மையில் எவ்வளவு கேடாகியிருக்கிறது என்பதைத் தம் நண்பர் அறிந்து கொண்டிருக்கிருரா இல்லையா என்பது அவருக்கு விளங்கவில்லை. அந்தக் கோடையில் மறுபடியும் வெட்டுக் கிளிகள் படையெடுக்குமேயானுல் பெரெட் என்ன செய்வாள் என்பதை யாராலும் கூற முடியாது. எனினும் கூடக் குழந்தையைப் பெற்ருேரிடமிருந்து பிரிப்பது உகந்ததாயிருக்குமா?—ஊஹூம், அதுபற்றிய கருத்தை ஹான்ஸ் ஒல்ஸாவினுல் தெளிவாக காணமுடியவில்லை. எனினும், தம் நண்பரைப்

பற்றியும், தம் உவகை மிக்க நிலை குறித்தும் அவர் எண்ணியபோது அவரது இருதயம் துக்கச்சுமையைத் தாங்க மாட்டாமல் துவண்டது.

வெகு காலம் முன்பே தொழிற்கூடமாக பெர் ஹான்ஸா திருத்தியமைத்து விட்ட பழைய மண் பத்தைப் பண்டசாலையில் சில நாள் கழித்து பெர்ரெட் அமர்ந்திருந்தாள். மனோகரமான நாள் அது. அடிக்கடித் தலையை நிமிர்த்தி நோக்கியவாறு எதையோ அவள் தைத்துக் கொண்டிருந்தாள். பையன்கள் வயலுக்குச் சென்றிருந்தனர். அருகில் இருந்த புதிய பண்டசாலைக்குக் கூரை போட்டுக் கொண்டிருந்தார் பெர்ஹான்ஸா. முன்பு பாதிரியார் கவனித்த தெளிவற்ற கனவு மயக்கமே இன்னமும் அவள் கண்களில் தென்பட்டது; குழந்தை யைப் போன்ற கள்ளமற்ற நோக்கு அது.

அன்று அவள் மனம் நிம்மதியாயிருந்தது. எனினும் உடல் மிகவும் களைத்திருந்தது. அவள் தலைமீது பாதிரி யார் தன் கையை வைத்து, அவளுடைய பாவங்கள் அனைத்தும் விலக்கப்பட்டு விட்டன என்று கூறிய நாள் முதற்கொண்டே இவ்வாறு தான் அவள் இருந்தாள். உடல் களைத்திருந்தாலும் உள்ளம் இலேசாக, கவலை யற்று இருந்தது. எனவே, தன் பாவங்கள் உண்மை யிலேயே பரிகரிக்கப்பட்டு விட்டன என்பதை உணர்ந் திருந்தாள் அவள்.

இது சிறிய தொரு மண் வீடுதான் என்றாலும் நார்வே ஆலயங்களில் தாங்கள் பாடிய அதே பிராத்தனைப் பாடல்களையே இங்கும் அந்த அற்புதமான பாதிரியார் தங்களைப் பாடச் செய்தார் என்பது அவளுக்கு ஞாபகம் வந்தது; அவ்வாறு வீட்டில் பாடிய போதிலும் அதனால் தங்களுக்குத் தீங்கு எதுவும் நேர்ந்து விடவில்லை என்பதைக் கண்டாள். தன் தாயைப்பற்றி மறுபடியும் எண்ண வாரம்பித்தாள். விரைவில் மீண்டும் அவள் தன்னிடம் வருவாளென்றாலும் இம்முறை பெர்மாண்டை அவள் கோரமாட்டாள்; அவன் பாதிரியாகும் பட் சத்தில்-'எப்பேர்ப் பட்ட பேறு அது...3-ம் குடும்பத்திலும் கூட ஒரு பாதிரியாரா?'' என்று வியந்தாள்.

நார்வேயில் ஒருகாலும் இவ்வாறு நடந்திருக்க முடியாது என்பதைத் தன் தாயிடம்கூற அவள் தீர்மானித் தாள். ஆனால் இங்கோ எதுவும் சாத்தியமே! ...தங்கள் வீட்டிலேயே ஆலயச் சடங்குகள் நடந்ததை தாயிடம் கூற நினைத்தாள். அதை அவள் நம்பமாட்டாள் தான். ஆனால் பேசிப் பேசி இறுதியில் அவளை நம்பவைக்க முடியு மென பெரெட் நம்பினாள். பிறகு, அந்தப் பழைய பெட்டி வேதிகையாக உரு மாறியதையும், மண்டியிட்ட தங்களுக்கு முன்னால் பாதிரியார் நின்றவாறு தங்கள் பாவங்களெல்லாம் மன்னிக்கப் பட்டு விடுமெனக் கூறிய தையும் தாயிடம் கூற முடிவு செய்தாள். ஆம், எல்லாப் பாவங்களுமே மன்னிக்கப்பட்டு விட்டன!

தையல் வேலையைக் கீழே வைத்து விட்டுத் தன் கைகளை மடியில் இருத்திக்கொண்டாள்; முகத்திலோ ஒரு வெற்றி நோக்கு. அப்போது முற்றத்தில் யாரோ நடக்கும் ஒலி அவள் காதில் விழுந்தது. பெர் ஹான்ஸாவுடன் எவரோ பேசும் குரல் கேட்டது. ஹான்ஸ் ஒல்ஸாதான் அது. ஓசைப்படாமல் புதிய பண்டசாலையை அவள் நெருங்கினாள். அவருடன் ஒட்டி நின்றவாறு அவர்களது சம்பாஷணையைச் செவி மடுத் தாள். அவளைப் பற்றித்தான் அவர்கள் பேசிக் கொண் டிருந்தார்கள்.

பெர்மாண்டைத் தாம் அழைத்துக் கொண்டு போய் நன்கு வளர்க்கத் தயாராயிருப்பதாக ஹான்ஸ் ஒல்ஸா கூறிக் கொண்டிருந்தார். "பெரெட்டுக்கு இன்னொரு முறை அந்த வெறி வந்ததானால் என்ன செய்வாளோ, யாருக்கும் தெரியாது......" என்று அவர் கூறினார். பெரெட் குனிந்து, கீழே கிடந்த மரக்கட்டையொன்றை எடுத்து இறுகப் பிடித்துக் கொண்டாள். அப்போது பெர்ஹான்ஸா மெதுவாகப் பேசலானார்:

"ஊஹூம், அவள் அவனுடைய தாய்; ஆகவே அவன் அவள் அருகில் தான் இருக்கவேண்டும். அவன் எங்கள் வீட்டில் இருப்பதால் அவள் உடல் நலமுறுமெனின், அவன் வேறிடம் சென்று விட்டாலும் கூட அவள் குண மடையத்தான் மாட்டாள்."

மரத்துண்டைக் கீழே போட்டு விட்டு பெரெட் எழுந்து நின்றுள். அவள் முகம் சிவந்திருந்தது. கண்கள் அகன்றிருந்தன. தன் காதில் ஆலய மணி யோசை விழுவதாக அவளுக்குத் தோன்றியது.

''ஆம், அப்படி நீங்கள் நினைப்பதானுல்......'' என்று ஹான்ஸ் ஓல்ஸா மறுபடி பேச ஆரம்பித்தார்.

''ஆம், அப்படித்தான் இவ்விவகாரம் இருக்க வேண்டும். இது சம்பந்தமாக நான் வெகு நாள் யோசித்து விட்டேன். பெரெட்டை விடச் சிறந்தவளை ஆண்டவன் சிருஷ்டித்ததில்லை என்பதை நானறிவேன் ஆமாம். இதில் ஏதாவது குறை இருக்குமானுல் அது அவளை நான் இங்கு கொண்டு வந்ததால் தான் ஏற் பட்டதாகும். இம்மாதிரி வாழ்க்கைக்கு ஏற்ப உரு வாக்கப் பட்டவளல்ல அவள்; மிக இனிய சுபாவமுடைய வள். இங்கு நாங்கள் வந்தபின் அவள் மிக மிகக் கஷ்டப்பட்டு விட்டாள். இருந்த போதிலும் குழந்தையை அவள்தான் தொடர்ந்து வைத்திருக்கவேண்டும்.''

அதற்கு மேல் கேட்டுக் கொண்டு அங்கு நிற்க வில்லை பெரெட். இன்பக் கனவில் ஆழ்ந்தவளாக நடந்தாள். எங்கு செல்கிறும் என்பதைக் கூட அவள் கவனிக்கவில்லை. ஆகாயத்தில் அங்கு மிங்கும் மேகங்கள் அலைந்து கொண்டிருந்தன. அவற்றை அண்ணாந்து பார்த்தபோது ''அதுதான் ஆண்டவனின் பெருமை'' என்று அவள் தனக்குத் தானே கூறிக் கொண்டாள் வீட்டுற்குள் ஒரு குழந்தை அழுதது. அது அவளது கனவைக் கலைத்தது. வீட்டினுள் விரைந்தாள். படுக் கையில் கிடந்த பெர்மாண்டை வாரியெடுத்தாள் சிரித்து, விளையாட்டுக் காட்டியவாறு அவனை மீண்டும் மீண்டும் மார்போடு அணைத்துக் கொண்டாள். அவனைப் பார்ப்பதையும் தொட்டு மகிழ்வதையும் அவளால் நிறுத்தவே முடிவில்லை. பாலகனும் சிரித்தான்; தன்னை அவள் மறுபடியும் அணைக்க அனுமதித்தான்.

அவனுடன் விளையாடுகையில் பெரெட் மீண்டும் களைத்து விட்டாள்; தூங்கி விழுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை. அப்போது அவள் அழகியதொரு

கனவு கண்டாள். நிறைய சூரிய வெளிச்சமும், நீல வானமும், வெது வெதுப்பான மென் காற்றும் கூடிய இனிய கனவு அது. ஆனால் வெகு நேரம் அவளால் உறங்க முடியவில்லை. விழித்தெழுந்த போது பெர் மாண்ட் இன்னமும் தன்னருகிலேயே இருப்பதைக் கண் டாள். அவனைத் தூக்கியெடுத்து மடிமீது வைத்துக் கொண்டாள். அனைத்தும் புதுமையாகவும் விசித்திர மாகவும் அவளுக்குத் தோன்றின.

''எனக்கு இப்போது தின்பதற்கு ஏதாவது வேண் டும்'' என்றான் பெர்மாண்ட். அவனுக்குக் கொஞ்சம் பால் எடுத்துவர அவள் எழுந்தாள். ஆனால் அறை மத்தியை அடைந்ததும் சற்று நின்று, சுற்றிலும் பார்த் தாள். அங்கே ஒவ்வொன்றும் புதிதாகப் பட்டன. அவனுக்காக வென்றே ஒரு கோப்பை வைத்திருந்தாளே, அது எங்கே? அப்புறம் அந்த முட்டைக் கரண்டி எங்கு போயிற்று? ரொட்டியும் வேண்டுமல்லவா?...... ஆம், பாலுடன் சிறிது ரொட்டியையும் அவனுக்குக் கொடுத்தாக வேண்டும்! அப்போதுதான் அங்கு வந்த ஒரு வேற்று மனுஷிபோல் அவ்வீட்டில் அங்கு மிங்கும் அவள் தேடினாள். விரைவில், எல்லாப் பொருள்களையும் கண்டு பிடித்துப் பெர்மாண்டுக்குப் பால் கொடுத்தாள். வயிறு நிரம்பியதும் அவனும் களிப்படைந்தான்.

மற்றவர்கள் எல்லோரும் எங்கே போய் விட்டார்கள் என்று பெரெட் யோசிக்க வாரம்பித்தாள். சற்று நேரம் முன்பு பெர்ஹான்ஸாவின் பேச்சைக் கேட்டுவிட்டு வந்தாள் அவள்!—மறுபடியும் முற்றத்தில் இறங்கினாள். அங்கு வீசிய இனிய காற்றை உள்ளிழுத்தவாறு சுற்றிலும் நோக்கினாள். 'அதோ இருக்கிறார் பெர்ஹான்ஸா...... ஹான்ஸ் ஓல்ஸாவுடன் அவர் பேசிக்கொண்டிருக்கிறார்... ஓல்ஸாவைத்தான் நமக்குத் தெரியுமே!' அதன்பின் அங்கிருந்து ஓல்ஸா திரும்பி நடந்தார். அவளை நோக்கி வந்தார் பெர்ஹான்ஸா—'எவ்வளவு மாறிவிட்டார் அவர்! தலையிலும் தாடியிலும் நரை நிறைந்து விட்டதே!'

''உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது. பெர் ஹான்ஸா?'' என்று அவள் வினவினாள்.

சட்டென நின்ருர் பெர்ஹான்ஸா. நகர இயலாத வராய் அவளை உற்று நோக்கினுர். அதிசயத்தில் மூர்ச்சையுற்று விழுந்து விடுவோமென அவருக்குத் தோன்றியது. பெரெட்டோ தொடர்ந்து பேசினுள்: ''நீங்கள் நோயுற்றிருக்கிறீர்களா, பெர்ஹான்ஸா ? உங்களுக்கு உடல் நல மில்லாவிடில் ஓயாது வேலை செய்யக் கூடாது. அந்த வேலையைப் பிறகு செய்து கொண்டால் என்ன ?''

அவர் பேசமுயன்ருர். ஆனுல் வார்த்தைகள் வெளி வர மறுத்தன. அது கண்டு பெரெட்டுக்கு இன்னும் கவலை அதிகமாய் விட்டது. ''உள்ளே வாருங்கள், உடனே உங்களுக்குக் கொஞ்சம் பால் கொண்டுவந்து தருகிறேன்'' என்று கூறியவாறு வீட்டை நோக்கி விரைந்தாள். மெது வாகப் பின் தொடர்ந்த பெர்ஹான்ஸா தமக்குள் எண்ணிக் கொண்டார்: 'கடவுளின் கருணையே கருணை ! வெகுகாலம் கழித்துத்தான் இப்படிப் பார்க்கிறேன் இவளை! ஆனுல் இதிலிருந்து அவளுடைய மாறுதலைப்பற்றி என்ன கூறமுடியும் !'

காய்ச்சுவதற்காக அடுப்பில் சிறிது பாலை வைத் தாள் பெரெட். தன் கணவனுக்குச் சளிபீடித்து விட்டது; களைவது கடினமான கோடைச் சளி அது என்பதில் அவளுக்குச் சந்தேக மிருக்க வில்லை. ஆகவே அந்தப் பாலில் கொஞ்சம் மிளகைத் தூவினுள். அவர் சற்றுப் படுத்து உடலில் சூடேற்றிக் கொள்ளக் கூடாதா என்று எண்ணினுள். அங்குமிங்கும் விரைந்த போது சுவரொன்றில் தொங்கிக் கொண்டிருந்த கண்ணுடிக்கு எதிரே நின்று தன் தோற்றத்தை கண்டாள். அதைப் பார்த்தபின், பெர்ஹான்ஸா தன்னை விசித்திரமாக நோக் கியதில் ஆச்சரிய மொன்று மில்லை—என்று அவளுக்குப் பட்டது. அவள் எப்போதும் நேர்த்தியாகக் காண வேண்டும் என்பது அவரது விருப்பம். ஆனுல் அவளோ விகாரமாகத் தென் பட்டாள். உடனே முகத்தைக் கழுவிக் கொண்டு தலை மயிரை வாரினுள். ஞாயிறன்று அணியும் சிறந்த ஆடைகளை உடுத்திக் கொண்டாள்...... 'ஆஹா, இப்போது என் தோற்றம் முன்னைவிட நன்ரு

யிருக்கிறதே' என்று தன்னைத் தானே பாராட்டிக் கொண்டான்.

வேறு யார் வீட்டிலோ நுழைவது போலப் பயந்து கொண்டு மெதுவாக உள்ளே வந்தார்—பெர்ஹான்ஸா. மிளகு கலந்த சூடான பாலை அவர் முன்னால் பெரெட் வைத்து, அது பூராவையும் குடித்து விடும்படிக்கூறினாள். சற்றும் அலுங்காமல் பெர்மாண்டைத் தூக்கி யெடுத்த பெர்ஹான்ஸா, அவனைத் தன் மடிமீது வைத்துக் கொண்டார்; பின்னர் அவள் தந்த பால் முழுவதையும் குடித்தார். எனினும் அப்போதும் கூட அவரால் ஒன்றுமே பேச முடிய வில்லை. அவர் பால் குடித்துக் கொண்டிருக்கையில் அன்று நிகழ்ந்ததெல்லாம் தனக்கு ஒரு வேடிக்கையாகவே தோன்றுவதாக சிரித்துக் கொண்டே பெரெட் கூறினாள். ஒரு கணம் தான் தூங்கியதாயும், விழித்தெழுந்த போது வெகுகாலம், வெகு தூரம் சென்றிருந்ததாகத் தனக்குத் தோன்றியதாயும் அவள் தெரிவித்தாள்.

அவள் பேச்சைக் கேட்டபோது ஆனந்தக் கண்ணீர் வடித்தார் பெர்ஹான்ஸா. அவரை உற்று நோக்கிய வாறே அவள் விடாமல் பேசிக் கொண்டிருந்தாள். தான் முன்பு அறிந்த அன்புமிக்க பெரெட் பெண்ணைப்போலவே அவள் பேச்சில் இனிமையும் உற்சாகமும் சொட்டியதை அவர் கண்டார். பாலைக் குடித்து முடித்ததும் அவரை அவள் படுத்துறங்கச் சொன்னாள்; அவர் போர்வையைக் கூட இழுத்து நன்றாக மூடினாள்.

சுவரை நோக்கி முகத்தைத் திருப்பிக் கொண்டார், பெர்ஹான்ஸா. அழுகையைத் தன்னால் நிறுத்த இயலும் வரை அவர் திரும்பிப் படுக்கவில்லை. 'இப்படியும் கூட நடக்கக் கூடுமா!' என்று அவர் வியந்தவாறிருந்தார். பிறகு உற்சாக மடைந்தவராய் திடுமென எழுந்தார். "என்ன, இது, அதற்குள்ளாகவா எழுந்து விட்டீர்கள்?" என்று பெரெட் கேட்டாள், கவலையுற்றவளாய்.

"ஓ, ஆமாம். இந்தக் கோடையில் நாம் ஒரு வீடு கட்ட வேண்டுமானால் பல வேலைகளை நான் செய்தாக வேண்டும். இனி இவ்வாறு நாம் அதிககாலம் வசிக்கப்

போவதில்லை; பழைய பெர்ஹான்ஸாவைப்போல் மீண்டும் இளமைத் துடிப்பும் குதூகலமும் கொண்டவராய் அவளை நெருங்கி வந்தார். "நான் வெளியே செல்லுமுன் நீ தந்த அந்த அருமையான பானத்தில் இன்னும் கொஞ்சம் அருந்த வேண்டும்" என்றார். பிறகு, பெர்மாண்டை எடுத்துக் கூரைவரை தூக்கிப் போட்டுப் பிடித்தார். அவ்வாறு பன்முறை செய்தார். பையனால் சிரிப்பைத் தாங்க முடியாத வரையில் அவ் விளையாட்டை அவர் நிறுத்தவில்லை.

பாலைச் சுடவைத்துக் கொண்டிருந்த பெரெட் திரும்பி அவர்களது விளையாட்டைக் கவனித்தாள். "அடடா, இன்று நாமெல்லோரும் எவ்வளவு விசித்திர மாக இருக்கிறோம் !" என்றாள்.

எட்டாவது பாகம்

1

அந்தப் பரந்த சமவெளியில் 'அக்காலம் வாழ்ந்த வாழ்க்கைபற்றி அங்கு நேர்ந்த வெட்டுக்கிளிப் படையெடுப்பு, பட்டினித்துயர், தீ விபத்துக்கள், அங்கு பொழிந்த மழை, பனி, அங்கு அடித்த புயல்கள் ஆகியவற்றை யெல்லாம் குறித்துப் பிற்காலத்தில் கூறப்பட்ட கதைகள் எத்தனையோ! ஒரு மாரிக்காலத்தில் அக்டோபர் மத்தியிலிருந்து ஏப்ரல் மத்தி வரையில் எண்பது நாட்கள் இடைவிடாமல் பனி கொட்டியதாம். அப்போது ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளிலிருந்து பண்டசாலையை எட்டவும், அண்டையிலுள்ள கிநேகிதர்களின் வீடுகளுக்குச் செல்லவும் பூமிக்கு அடியில் சுரங்கப்பாதைகள் தோண்டவும் வேண்டியிருந்ததாம்! பின்னர் அந்தப் பனி உருகி, பெரு வெள்ளமாகப் பெருகி அந்தப் பிரதேசம் முழுவதையும் மூழ்கடித்ததாம். அந்த மாரிக்காலத்தில் மரித்தவர் எவ்வளவோ பேர்.

ஸ்பிரிங்க்ரீக்கில் குடியேறியவர்களிடம் இருந்த உணவும் விறகும் தீர்ந்து விட்டன. வைக்கோலைக்கொண்டு அடுப்பையும் கணப்பையும் மூட்டினார்கள். கால்நடைகள் பெருவாரியாகப் பனியில் புதையுண்டன. மக்களிலும் பலர் மறைந்தனர். இறந்தவர்களை வஸந்தம் வரையில் புதைக்கக் கூட முடியவில்லை. மீதியிருந்த மாரிக்காலம்

முழுவதில் வீடுகளுக்கு வெளியில் பனியிலேயே அவர்களுடைய சடலங்கள் உறையவைக்கப் பட்டிருந்கன—இறந்தவரோ எத்தனையோ பேர்.

2

வாய்க்காலுக்கு அருகாமையில் இருந்த தம் நிலத்தில் ஒரு பகுதிக்கு ஹான்ஸ் ஓல்ஸா வேலி போட்டிருந்தார். தம்மிடமிருந்த கணக்கற்ற கால்நடைகளுக்கு அதை மேய்ச்சல் நிலமாக அவர் பயன் படுத்தி வந்தார். வேனிற் காலத்தில் அவற்றுக்காக அவர் எதுவுமே செய்யவேண்டியிருக்க வில்லை. மாரிக் காலத்துக்கோ இயன்ற அளவு வைக்கோலைச் சேகரித்திருந்தார். மேலும், அந்த மேய்ச்சல் நிலத்திலேயே அவற்றுக்காகத் தொழுவமும் அமைத்திருந்தார். இந்தவகைகளில் அவற்றைப் பேணிக் காப்பாற்றி மாரிக்காலத்தைப் பத்திரமாகக் கழித்துவிட முடியுமென அவர் திடமாகக் கருதினார். ஆனால் பிப்ரவரி மாதத்தில் தோன்றிய மாரிக்காலம் அதன் தொடக்கமே என்பதைக் கண்டார். அதை முழுவதும் கடப்பதற்கு தாம் மேலும் பல ஏற்பாடுகள் செய்தாக வேண்டும் என்பதை உணர்ந்தார்.

அம்மாதத்தில் ஒரு நாள் கடுமையாகக் காற்று வீசியது; பனியும் பலமாகப் பெய்தது. எனவே கால்நடைகள் பத்திரமாக உள்ளனவா என்று பார்க்கும் பொருட்டு மேய்ச்சல் தரைக்கு ஹான்ஸ் ஓல்ஸா புறப்பட்டார். அங்கு அவர் போய்ச் சேர்ந்ததும் தமக்கு நிறைய வேலை காத்திருப்பதை அறிந்தார். ஏனெனில், கால் நடைக் கொட்டகையில் பெரும்பகுதியைக் காற்று கவிழ்த்திருந்தது. தூண்களைத் திரும்பத் தூக்கி நிறுத்துவது, இடைவெளிகளில் வைக்கோலைக் குவித்துநிரப்புவது, தரையில் மேலும் வைக்கோலைப் பரப்புவது போன்ற பல வேலைகளை அவர் செய்ய வேண்டி நேர்ந்தது. அவற்றை அவர் முடிப்பதற்குள் இருட்டி விட்டது.

மாடுகளை அத்தொழுவத்தில் அவர் அடைக்க வேண்டியிருந்தது. அது கடினமான வேலையே.

வைக்கோல் போரின் மறைவில் இருந்தபடியால் கால் நடைகளின்மீது காற்றுப்படவில்லை. ஆகவே அவை அவ்விடத்தைவிட்டுக் கொட்டகைக்கு நடக்க மறுத்தன. ஒவ்வொன்ருக அவற்றை அவர் பிடித்து இழுத்து வந்து கொட்டகைக்குள் சேர்க்கும்படியாயிற்று. அதற்கு வெகு நேரம் பிடித்தது. பனியும் காற்றும் அவரைச் சாடின. ஆயினும் எல்லா கால்நடைகளும் கொட்டைகைக்குள் வந்து சேரும் வரையில் அவர் ஓயவில்லை. வியர்த்துக் கொட்டியது அவருக்கு. வீட்டை நோக்கித் திரும்பி நடந்தார். ஆனுல் சில அடிகள் எடுத்து வைத்ததுமே அந்தப் புயலிலும் இருளிலும் அது தன்னுல் ஆகாது என்பதை உணர்ந்தார்.

மேலும், குளிர் அவரை நடுக்கியெடுத்தது. உடலெல் லாம் ஒரே வலி. அவரால் நடக்க இயலவில்லை. அன்றிரவை கதகதப்பான கால்நடைகளின் பக்கத்தில் படுத்துக் கழித்து, விடிந்ததும் வீடு செல்வதுதான் உசித மெனத் தீர்மானித்தார். அதன்படியே, இரு மாடுகளின் நடுவில் படுத்துறங்கிவிட்டார்.

ஆனுல் கொட்டகையின் ஒவ்வொரு இடுக்கு வழியாக வும் பனியும் காற்றும் உள்ளே வீசின. அதன் விளைவாக சற்றுக் கழித்து அவர் திடுக்கிட்டு விழித்தார். மிகுந்த சிரமத்துடன் எழுந்தார். அவர் மேலிருந்து கனமான பனிப் போர்வை யொன்று சிதறி விழுந்தது. கால்கள் மரத்துப்போயிருந்தன. முடிந்தமட்டும் நடக்க முயன்ருர். தூங்கிக்கொண்டிருந்த கால்நடைகள் காலில் இடறின. அவற்ருேடு காற்றும் அவரைக் கீழே தள்ளியது. கைகளும் அறவே மரத்துப்போய் விட்டன. அதற்கு என்ன செய்யவேண்டும் என்பது அவருக்குத் தெரியும். மறு படியும் உணர்ச்சி ஏற்படும்வரை கைகளின்மீது மேன் மேலும் பனியை வைத்துக்கொண்டேயிருந்தார்!

பின்னர், கால்களுக்கும் உணர்ச்சியூட்டமுற்பட்டார். முதலில் ஜோடுகளை அறுத்தெறிந்தார். காலுறைகளை யும் உருவினுர். வெறுங்கால்களுடன் முடிந்த வரையில் சுற்றிச்சுற்றி ஓடினுர். பிறகு கீழே உட்கார்ந்து பனியினுல் பாதங்களைத் தேய்த்தார். காலுறைகளையும் ஜோடு களையும் மீண்டும் அணிந்துகொண்டார். அங்கே தாம்

விட்டு வைத்த கயிறென்றைக் கொண்டு அவற்றைக் கட்டினார். மீதியிரவை அங்கே தாம் கழிக்க இயலாது என்பதை அறிந்துகொண்டுவிட்டார். 'எப்படியாவது வீடு செல்ல முயற்சி செய்யவேண்டியதுதான். இங்கே தங்குவதைவிட அம்முயற்சியின் விளைவாகப் பனியினால் உறைவதே மேல்' என்று எண்ணியவராய் அந்த இருட்டில் புறப்பட்டார்.

அது அவருக்கு மரணத் தாக்குதலாக அமைந்தது. அதிகாலையில் தம் வீட்டு வாயிற்படிகளில் அவர் வந்து விழுந்தபோது தம் உடைகளைக்கூட அவரால் கழற்ற முடியவில்லை. அவரைத் தாம் திரும்பப் பார்க்கப்போவதில்லை என்றே நினைத்தவளாக இரவு பூராவும் ஸாற்றினா விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். எனினும், அவர் திரும்பி வருவாரானால் வழி தெரிவதற்காக ஜன்னலில் ஒரு மெழுகுவத்தியை அவள் வைத்திருந்தாள். வீட்டில் வந்து அவர் விழுந்ததும் பரபரப்புடன் அவரை அவள் கவனிக்கத் தொடங்கி விட்டாள். மிளகு கலந்த சூடான பாலை அவர் மிடா மிடாவாகக் குடித்தார். அப்புறம் வீட்டிலிருந்த எல்லாக் கம்பளிகளையும் போர்த்திக்கொண்டு படுத்தார். எனினும் அவர் உடல் நடுங்கிய நடுக்கத்தில் அந்தக் கட்டில் ஒரேயடியாக ஆடியது. இடைவிடாமல் இருமவும் செய்தார். அந்த வறண்ட இருமல் அவர் நெஞ்சை இரண்டாகப் பிளந்து விடும்போலிருந்தது. இரண்டு நாட்கள் அல்லும் பகலும் அவர்அருகிலேயே ஸாற்றினா அமர்ந்திருந்தாள். அதன்பின் அவர் சற்றே குணமடைந்துவிட்டதாகத் தோன்றியது.

புயல் சிறிது ஓய்ந்தது. ஹான்ஸ் ஓல்ஸாவின் நிலையை பெர்ஹான்ஸாவிக்குத் தெரிவிக்க சறுக்கல் கட்டைகளை மாட்டிக்கொண்டு ஸோபீ விரைந்தார். அவளுடன் அவர் வந்து பார்த்தார். ஸாற்றினா மிகவும் களைத்தும் கலங்கியும் காணப்பட்டாள். எனினும் பெர்ஹான்ஸாவைப் பார்த்ததுமே அவள் புத்துயிர் பெற்று விட்டாள். அவரைப் படுக்கையறைக்கு அழைத்துச் சென்று காட்டினாள். அங்கே அவர் கண்ட காட்சி நல்லபடி இல்லை.

ஐரிஷ்காரர்கள் குடியேறியிருந்த இடத்துக்கருகே ஒரு சிறு குடிசையில் கிழவியொருத்தி வசித்து வந்தாள்.

யாருக்காவது நோய் கண்டால் அவளுக்குத்தான் சொல்லி யனுப்புவது வழக்கம். நோயாளிகளைத் தேற்றுவதில் அவளுக்கு அபூர்வமானதொரு திறன் இருந்ததாக எண்ணினர். தன் நண்பரின் நிலையைக் கண்டதும் அவருக்குச் சிகிச்சை செய்வதற்காக அவளை அழைத்து வர பெர்ஹான்ஸா விரைந்தார். விசேஷமான முறையில் சூடான ஒத்தடப் பொட்டலங்களை அவள் தயாரித்தாள். செய்முறையை ஸாற்றினுவுக்கும் சொல்லித் தந்தாள். சூடு குறையாமல் இருப்பதற்காக அந்த ஒத்தடப் பொட்டங்கள்மீது கம்பளிகளைப் போட்டு மூடி, பன்னி ரண்டு மணி நேரம் அவர்மீது வைத்திருக்கவேண்டு மென அவள் கூறினுள். பின் அந்தப் பொட்டலங்கள் பேரில் ஒரு சிலுவைக் குறியை வைத்துக் கட்டினுள். எவருக்கும் புரியாத ஏதோ வொரு மொழியில் சில பிரார்த்தனைகளைக் கூறினுள். அந்தச் சிலுவைக் குறியைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், விரைவில் திரும்பிப் பெற்றுக்கொள்வதாயும் கூறி விட்டுச் சென்ருள்.

ஹான்ஸ் ஒல்ஸாவின் வேலைகளையும் சேர்த்துச் செய்தார் பெர்ஹான்ஸா. நடந்த விவரத்தை பெரெட்டி னிடம் அவர் கூறியதும் அவள் ஸாற்றினுவிடம் சென்று தங்கினுள். சித்தப்பிரமையிலிருந்து மீண்டது முதல் மத அனுஷ்டானங்களில் பெரெட் மிகவும் சிரத்தை செலுத்தவாரம்பித்தாள்; எனவே நோயாளியின் படுக்கையருகில் அவள் அமர்ந்து ஒத்தடப் பொட்டலங் களில் சூடு குறையாமல் பார்த்துக்கொண்டதுடன் பிரார்த்தனைப் பாக்களையும் பாடினுள். பின்னர் டோன்ஸெடன் அங்கு வந்து, குடியேற்றப் பிரதேசத்தில் நடப்பவையெல்லாம் பற்றி முடிந்த அளவு மகிழ்ச்சி யோடு கூறுவதன்மூலம் ஹான்ஸ் ஒல்ஸாவை உற்சாகப் படுத்த முயன்ருர். பெரெட் மிகவும் மத பக்தி உடைய வளாகி விட்டபடியால் அவருக்கும் டோன்ஸெடனுக்கும் ஒத்துக்கொள்ளவில்லை. எனவே அவர் அவ்வறையினுள் வந்ததும் பக்திப் பாக்களைப் பாடுவதை நிறுத்திக் கொள்வாள். டோன்ஸெடன் சென்றதும் அவ்வறையி லுள்ள காற்று களங்கமுற்றுவிட்டதாக அவளுக்குத்

தோன்றியது. தூயதாக இருக்கவேண்டிய வாழ்க்கையில் எப்படித் தீமை படிகிறது என்பதை அவள் தெளிவாகக் கண்டாள். உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறார் ஒருவர். அவரிடம் கூற டோன்ஸெடனால் நினைக்க முடிவதெல்லாம் வெறுங் குப்பையைப் பற்றியும் வேடிக்கைக் கதைகளையும்தான்! அவருடைய வருகையினால் படிந்த தீமையைப் போக்குவதற்கு ஏதாவது தான்செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தாள். உடனே மற்றொரு பக்திப் பாடலை மிகத் தாழ்ந்த குரலில் பாடத் தொடங்கினாள்.

அன்றிரவு பூராவும் ஹான்ஸ் ஓல்ஸாவின் படுக்கையருகிலேயே கண்காணித்துக் கொண்டிருந்தாள் பெரெட். அவரால் அதிக நேரம் தூங்க முடியவில்லை. சற்றுக் கழித்து எழுந்து அவர் இருமியபோது ரத்தம்கொட்டியது. அவருடன் பல முக்கிய விஷயங்களைப் பற்றி தான் பேசியாகவேண்டுமென அவள் நினைத்தாள். விடியற்காலையில் அவர் விழிக்கும் வரை அதற்காகக் காத்திருந்தாள். பின்னர் சொன்னாள்: ''மரணத்திக்கு உங்களை நீங்கள் தயார் செய்துகொள்ளவேண்டும், ஹான்ஸ் ஓல்ஸா. இனி அதிகநாள் இந்த உபாதையை உங்களால் சமாளிக்க முடியாது''.

அமைதியற்றுத் தவித்தார் அவர்; அவள் பேச்சைப் புரிந்துகொள்ள அவர் விரும்பவில்லை. ''எவ்வளவோ பேர் இருமலிலிருந்து மீண்டிருக்கிறார்களே!'' என்றார்.

''ஊஹூம், உங்களுக்கு அருளப்பட்ட வாழ்நாள் அநேகமாகத் தீர்ந்துவிட்டது'' என்று அவள் கூறியதும் தம் கண்களை ஹான்ஸ் ஓல்ஸா மீண்டும் மூடிக் கொண்டார்; அப்படியே அசையாமல் கிடந்தார். ''நான் சொன்னது இவருக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் அதைக் கூறினது குறித்து எனக்குச் சந்தோஷமே. ஏனெனில், இந்தக் கண்டத்திலிருந்து இவர் பிழைத்தெழ மாட்டார்'' என்று பெரெட் எண்ணினாள். அப்போது ஹான்ஸ் ஓல்ஸா சொன்னார்: ''ஆண்டவன் எவ்வளவோ பாவிகளுக்கு கருணை காட்டியிருக்கிறார். எனக்கும் கொஞ்சம் மீதம் வைத்திருப்பாரென்றே நம்புகிறேன்...'' இதைக் கேட்ட பெரெட்டுக்கு மெய் சிலிர்த்தது.

திடுமென, ''நீங்கள் மட்டும் பச்சாதாபப் படுவீர்களே யானுல் ஆண்டவன் நிச்சயம் உங்களை மன்னித்து விடுவார் !'' என்ருள். ஆனுல் ''பெர்ஹான்ஸாவோ அப்போது ஓயாமல் இரும ஆரம்பித்து விட்டார். பின் புறம் சாய்ந்து கொண்டு உறங்கத் தொடங்கினுர். ஒத்தடப் பொட்டலங்களை மாற்றி விட்டு அவரையே பார்க்கலானுள் பெரெட். தங்கள் சம்பாஷணை பற்றி அவள் சிந்தனை திரும்பியது : ''அட பாவமே, டகோ பிரதேசத்திலிருந்து மிகமிகக் குறைவான மக்களல்லவா சுவர்க்கம் செல்லுவார்கள்! அங்கு ஹான்ஸ் ஒல்ஸாவைச் சந்திக்க இயலாவிடில் அது என்னவோ போல்தா னிருக்கும். அவருக்காகவே அங்கே அவரது தாயும் தந்தையும் காத்துக் கொண்டிருப்பார்கள். என்ருவது ஒருநாள் நான் அவர்களைச் சந்திக்கும்படித்தானிருக்கும். இங்கு நடந்தவை பற்றியும், அவர் ஒரு நாளும் சுவர்க் கத்தில் அவர்களைச் சந்திக்க முடியாது என்பது பற்றியும் அவர்களிடம் சொல்லவேண்டி யிருக்கும். ஐயோ, தீமையின் சக்தி தகர்க்க முடியாததாக வல்லவோ இருக் கிறது! இதோ என் வீட்டிலேயே அதன் வலிமையைப் பார்க்கிறேன் ! உயிர் ஊசலாடும் இந்நிலையிலும் கூட டோன்ஸெடென் கூறுவதையன்ருே கேட்டு மகிழ்கிருர் அவர்!''

கணப்பில் மேலும் விறகுகளை அவள் செருகினுள். ஹான்ஸ் ஒல்ஸா விழித்துக் கொண்டு அவள் பக்கம் திரும் பினுள். ''வெளியே எப்படி இருக்கிறது? யாராவது வைத்தியருக்கச் சொல்லியனுப்ப முடியுமா?''

''வைத்தியரா ? விடிந்ததும் அதற்கு ஆவன செய்வோம். ஆமாம். பாதிரியாரை அழைத்து வந்தா லென்ன, ஹான்ஸ் ஒல்ஸா?''

''பாதிரியாரா?''

''ஆமாம்...... அவர் உதவிதான் உங்களுக்குத் தேவை. நீங்கள் கர்த்தருடன் ஒன்றி நிற்கும் புனிதச் சடங்குக்கு உட்பட வேண்டும், ஹான்ஸ் ஒல்ஸா.''

''புனிதச் சடங்கா? ஆம். செய்ய வேண்டியதுதா னென நினைக்கிறேன் !'' என்ருர் நோயாளி ஹான்ஸ் ஒல்ஸா.

''சைத்தானிடம் சிக்குவதைப் போலப் பயங்கர மானது வேறில்லை'' வருத்தம் தோயத் தொடர்ந்தாள் பெரெட். ''நம்மிடம் தீமை தவிர வேறில்லை, ஆயினும் அந்தச் சடங்கின் போது ஆண்டவன் நம்மிடம் வருகையில் நம் பாவம் மன்னிக்கப்பட்டு, நமக்காக சொர்க்கவாசல் திறந்திருக்குமென கூறுகிறார். அதன் பின் நாம் மனச்சாந்தியுடன் வாழலாம்.''

சுவரின் பக்கம் ஹான்ஸ் ஓல்ஸா திரும்பி, வலுக் கட்டாயமாக ஒரு முறை இருமினார். அது கண்டு பெரெட் முன்னிலும் வருத்த முற்றாள். பிறகு ஹான்ஸ் ஓல்ஸா கூறினார். '' இறுதியில் அவரிடம் சரணமடைவதே பேரருள் என்று என் வாழ்நாள் முழுவதுமே எண்ணிவந் திருக்கிறேன்.''

ஆனந்தக் கண்ணீர் விடத் தொடங்கி விட்டாள் பெரெட். ''ஆனால் அவரைச் சந்திக்க உங்களைத் தயார் படுத்திக் கொண்டாக வேண்டுமே! சொர்க்கத்தில் அவரை அறிந்து கொள்ள வேண்டுமானால், அதற்குமுன் பூமியில் நீங்கள் அவரைக் கண்டு கொண்டாக வேண்டும். உங்களுக்காக நான் பிரார்த்தனை புரிகிறேன்.'' கட்டிலின் பக்கத்தில் அவள் மண்டியிட்டுப் பிரார்த்தனை புரியத் தொடங்கினாள். ஆனால் விரைவில் அண்டை வீட்டுக்கார ரொருவர் அங்கு அவளைத் தேடிவந்து விட்டார். தம் மனைவி பிரஸவ வேதனைப் படுவதாயும், பெரெட்டைத் தவிர உதவக் கூடியவர் யாரும் இல்லையென்றும் அவர் கூறினார். கழிவிரக்கத்தால் கசிந்துருக விருக்கும் ஒரு பாபாத்மா விடமிருந்து தன்னைப் பிரிக்க சைத்தான் செய்யும் சதியே அதுவென பெரெட் கருதினாள் எனினும், செல்வதன்றி செய்யக்கூடியது வேறில்லை என்பதையும் கண்டாள்.

அம்மாதிரி சந்தர்ப்பங்களில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வது வழக்கம். ஹான்ஸ் ஓல்ஸாவின் பண்ணை வேலைகள் நடந்தேறி விட்டன. என்றாலும் அவர் தேக நிலையோ மேலும் பாழாகி வந்தது. இருமலும் அதிகமாகி யிருந்தது. அவர் மனமும் கூட அமைதியாக இல்லை. எனவே அன்றிரவு தம்முடன் தங்கும்படி பெர்ஹான்ஸாவை அவர் கேட்டுக் கொண்டார்.

ஸாற்றிஞ படுத்துத் தூங்கவாரம்பித்து விட்டாள். தான் இறந்ததும் செய்ய வேண்டிய தெல்லாம் என்னென்ன என்பதைத் தம் உயிருக்குயிரான நண்பரிடம் உரைக்க வாரம்பித்தார் ஹான்ஸ் ஓல்ஸா. வெளியிலிருந்து அவருக்குக் கொஞ்சம் பணம் வரவேண்டியிருந்தது; அவரும் கொஞ்சம் கொடுக்க வேண்டியிருந்தது. அதைப் பற்றிச் சொல்லிவிட்டுத் தம் பண்ணை பற்றிப் பேசினுர். அதை நிர்வகிக்க தகுந்த நண்பரொருவர் கிடைத்தால் குழந்தைகளுடன் ஸாற்றிஞ அங்கேயே தங்கவேண்டும் என்ருர் அவர். இருமல்களுக்கிடையே எல்லாவற்றையும் பேசி முடித்தார்.

எனினும் சற்றுப் பொறுத்து பனியையும் காலநிலையையும் பற்றிக் கேள்விகள் கேட்டு மீண்டும் பேசத் தொடங்கி விட்டார். வெளியே நிலவரம் எவ்வளவு கடுமையாக இருக்கிறது என்பதைப் பெர்ஹான்ஸா அவருக்கு விவரித்தார். எங்குமே போக முடியாமல் இருக்கிறது என்ருர். அதைக் கேட்டதும் ஹான்ஸ் ஓல்ஸாவின் முகம் வெளிறி விட்டது! அவரது நெற்றியில் முத்து முத்தாக வியர்வை அரும்பியது.

''உங்களுக்கு வேண்டியது என்ன?'' என்று பெர்ஹான்ஸா வினவிஞர்.

''அப்படியாஞல் பாதிரியாரை அழைத்து வர ஆள் அனுப்ப முடியாதா?''

''அவர் வந்தாக வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்களா?''

''சைத்தானிடம் சிக்குவது பயங்கரம்......மிகமிகப் பயங்கரமானது.'' அவர் மறுபடியும் இரும ஆரம்பித்து விட்டார். அந்த இருமலின் கடுமைகண்டு அவரது முடிவு சமீபத்து விட்டது என்றே பெர்ஹான்ஸா முடிவு செய்து விட்டார். ஆயினும் விரைவில் ஹான்ஸ் ஓல்ஸாவின் இருமல் ஓய்ந்து, அவர் மீண்டும் தூங்கலாஞர். காலை வரையில் அந்த உறக்கம் நீடித்தது. அவர் விழித்ததும் வெளியே கிளம்பத் தயராஞர் பெர்ஹான்ஸா. அவருக்குப் பல வேலைகள் காத்திருந்தன. அவரைக் கவனித்தவாறு இருந்த ஹான்ஸ் ஓல்ஸா இறுதியில் கம்மிய குரலில்

கேட்டார். ''வெளியே எங்குச் செல்வதும் இன்னமும் சாத்திய மில்லை, அல்லவா?''

''இதோ பாருங்கள், அதைப்பற்றி நினைக்கவே நினைக்காதீர்கள். நன்றாகத் தூங்குங்கள், விரைவில் குணமடைந்து விடுவீர்கள். போய்விட்டு அப்புறம் வருகிறேன்.''

பெர்ஹான்ஸா கூறுவது தம் காதிலேயே விழாதது போல் ஹான்ஸ் ஒல்ஸா மறுபடியும் வினவினார். ''அது அசாத்தியம் என்று தானே நினைக்கிறீர்கள்?''

தன் நண்பரிடம் என்ன கூறுவது என்பதை அறிந்து கொண்டவராக பெர்ஹான்ஸா பதிலளித்தார். ''வீணில் அலட்டிக் கொள்ளாதீர்கள். அது விஷயமாக என்ன செய்யமுடியு மென்று பார்க்கிறேன்......நான் சொல்வது புரிகிறதல்லவா?''

''ஓ, பெர்ஹான்ஸா, உங்களைப் போன்ற நல்ல மனிதர் இதுவரை இருந்ததே கிடையாது!''

பெர்ஹான்ஸா அன்று வீடு திரும்பியபோது அவர் உடலில் திராணியே இல்லை. அவருக்கு உணவு எடுத்து வந்து வைப்பதற்குகாக பெரெட் காத்திருந்தாள். குணமடைந்து விட்டபோதிலும் அவளை இன்னமும் குழந்தை போலவே பெர்ஹான்ஸா பாவித்து நடத்தி வந்தார். மதம் பற்றிய அவளுடைய கருத்துக்களும் அவருக்குக் குழந்தைத் தனமானவையாகவே பட்டன. அவள் அளவுக்கு மிஞ்சி மதாசாரம் கொண்டாடுகிறாள் என்பது தான் அவர் நினைப்பு. ஆயினும் அதுபற்றி அவளிடம் ஒரு வார்த்தை கூட அவர் பேசவில்லை. சிறு குழந்தையுடன் வாதம் செய்ய இயலுமா? இருப்பினும் அவளுடைய மத வழிபாடுகள் அவருக்கு தொல்லையாயிருந்தன. குறிப்பாக அவருக்காக அவள் புரிந்த பிராத்தனைகள் எரிச்சலூட்டின. உலகிலே பெரும்பாவி அவர்தான் என்று தோன்றச் செய்தன அப்பிரார்த்தனைகள். எனினும் அவர் வாய் திறக்கவில்லை. ஆனால் முன்னைப்போல் ஒளிவு மறைவின்றி ஒருவருடனொருவர் அவர்கள் பழகவில்லை. ஆகவே ஹான்ஸ் ஒல்ஸாவின் நிலை இவ்வாறு இழிவாக இருக்கிறது என்பதைச் சாப்பிடும்போது பெரெட்டினிடம் பெர்

ஹான்ஸா தெரிவித்தார். சொல்லி முடித்ததும், ஜன்னலருகே சென்று வெளியே நோக்கியவாறு தொடர்ந்தார்: ''பாதிரியாரை அழைத்து வருவது பற்றியன்றி வேறெது குறித்தும் அவர் பேசுவதில்லை. அது எனக்குப் புரியவில்லை....

மகிழ்ச்சி பொங்கும் குரலில் பதிலிறுத்தாள் பெரெட்; ''ஆனால் எனக்கு அது புரிகிறது. பாதிரியாரை அழைத்துவர உடனடியாக யாராவது சென்றாக வேண்டும். உங்களுடன் வேறு யாராவது துணைக்கு செல் அதும் அவசியம். உங்களால் குதிரை சவாரி செய்ய முடியுமல்லவா ?''

''குதிரையா? இந்தப் பனி மழையிலா !''

''நம்மில் எவராலாவது தடுக்க முடியுமானால் நரகம் செல்லாமல் அவரைக் காப்பாற்றியேயாக வேண்டும்.''

''ஓஹோ. நரகத்துக்குத்தான் அவர் செல்லப் போகிறாரென்றால் இங்கிருந்து மற்றும் பலர் அவருக்கு துணை சேர்வர், தெரிந்து கொள் !''

அதைப்போல் இழிவான பேச்சைத் தான் கேட்டதே யில்லையென பெரெட் நினைத்தாள். அவள் சொன்னாள்: ''சுவர்க்கத்துக்குச் செல்வது எப்படி என்பது உங்களுக்கு விளங்கவில்லை. அப்படித்தானே ?''

''ஓ, ஆமாம், எனக்கு எதுவுமே புரியவில்லை. இன்றைய நிலையில் இந்தச் சமவெளியைக் கடந்து ஜேம்ஸ் நதி தீரத்துக்குச் சென்று உயிருடன் திரும்புவது எவராலும் சாத்யமானதா என்பது கூட எனக்குத் தெரியவில்லை. ஹான்ஸ் ஓல்ஸா சம்பந்தப்பட்ட வரையில் பாதிரியாரின் உதவி இல்லாமலே அவர் நல்ல மனிதர் என்பதை ஆண்டவன் அறிந்துகொண்டு விடுவார். இதுவே என் நம்பிக்கை.''

''சைத்தானிடம் சரியாகத்தான் சிக்கிக் கொண்டிருக்கிறீர்கள் நீங்கள் !'' என்று பெரெட் கத்தினாள்.

''நிறுத்து! என்னையும் மரணப்படுக்கையில் கிடத்த வேண்டும் என்றா நீ விரும்புகிறாய்?''

''பாதிரியாரை அழைத்து வர முயற்சி செய்வது சாத்தியம் தான், இல்லையா? உங்களுடன் துணைக்குவர

யாரையாவது தேடிப் பிடியுங்கள்...........தன் சறுக்கல் வண்டியுடன் ஹென்ரி வரலாம்; முடியாவிடில் அந்த வண்டியிலேயே நீங்கள் திரும்பிவிடலாம்.........செல்கிறீர்களோ இல்லையோ, முயற்சியாவது செய்யவேண்டும். அப்படி மட்டும் நீங்கள் செய்வீர்களேயானல் கர்த்தர் கட்டாயம் உங்களை மன்னித்து விடுவார்!''

கோப மிகுதியினால் பதில் கூற பெர்ஹான்ஸாவுக்கு நாவெழவில்லை. பிள்ளைகளைக் கூவியழைத்தார். அம்மூவருமாகக் காலை அலுவல்களைக் கவனிக்க விரைந்தனர். பெரெட்டோ தங்கள்சம்பாஷணைபற்றிச் சிந்திக்கலானாள்.

அவருக்கு இருந்த ஆத்திரத்தில் அவருடைய சித்தம் கலங்கிவருவதாகவே பெர்ஹான்ஸாவுக்குத் தோன்றியது. தன் குடும்பம் வசதியாக வாழ வேண்டுமென்பதற்காக வாழ்நாள் முழுதும் உழைத்துப் பாடுபட்ட பின் அவர் கண்டதென்ன?—எதுவுமே தெரியாத பாவி என்ற பேச்சுத்தான்! ஆயினும் பையன்களுடன் பேசியவாறே வேலை செய்தபின் அவர் மனம் சற்றே சாந்தியடைந்தது.

அவரது அலுவல்கள் கிட்டத்தட்ட முடிந்த சமயத்தில் சறுக்கல் கட்டைகளை மாட்டிக்கொண்டு ஸாற்றின் அங்கு வந்தாள். அவரை ஹான்ஸ் ஒல்ஸா கூப்பிடுவதாக அவள் தெரிவித்தாள். அவர் வெளியில் சென்று வரவேண்டுமென அவளும் விரும்பினாள்; ஆனல் பாதிரியாரை அழைத்து வருவதற்கு அல்ல; வைத்தியரை அழைத்து வருவதற்கே. பெர்ஹென்ஸாவினால் முடியாதது எதுவுமில்லை என்றே எல்லாரும் எண்ணினர். ஆனல் அவரோ அந்தப் பருவ நிலையில் பயணம் சென்றால் ஒருவரல்ல, இருவரும் மரிக்கத்தான் வேண்டியிருக்குமென நினைத்தார்.

இரவுச் சாப்பாட்டின்போது அவரும் பெரெட்டும் ஒன்றுமே பேசிக்கொள்ளவில்லை. சாப்பிட்டு முடித்ததும் பெரமாண்டுடன் விளையாடத் தொடங்கிவிட்டார்—பெர்ஹாஸா. என்ன செய்வது என்று தெரியாமல் பெரெட் தவித்தாள். தன் கோட்டை எடுத்து அணிந்துகொண்டு, சறுக்கல் கட்டைகளையும் கொண்டு வர அவள் வெளியே சென்றாள். ''யாராவது இப்போது உண்மை ஆண்மகனாக நடந்துக் கொள்ளவேண்டும்'' என்றாள்,

அவள். அது கேட்டு பெர்ஹான்ஸாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அவளை அடிக்கக்கூட கைகள் துடித்தன. ஆனால் சிரமப்பட்டுத் தம் சீற்றத்தை அடக்கிக் கொண்டவராய் ஆடைகளை எடுத்து உடுத்துக் கொண்டார். பெரெட் உணரக்கூட இயலாத அவ்வளவு விரைவாக வெளியேயும் சென்றுவிட்டார்.

நேர்த்தியான சறுக்கல் கட்டைகளைத் தயாரித்த சில புதிய குடியேற்றக்காரர்களின் வீடுகளுக்கு அவர் நேராகச் சென்றார். தம் நீண்ட பயணத்துக்காக அவர்களிட மிருந்து இருஜோடி கட்டைகளை இரவலாகப் பெற்றுக் கொண்டார். வீடு திரும்பியதும், தாம் பிரயாணம் செல்வதாயும், எப்போது திரும்பக்கூடும் என்பது தெரியா தென்றும் பிள்ளைகளிடம் சொன்னார். எல்லாவற்றையும் அவர்களால் கவனித்துக் கொள்ள இயலுமா என்றும் கேட்டார். முடியும் என்று உறுதி கூறினர் அவர்களும்.

ஜன்னல் வழியாக அவரை பெரெட் கவனித்தாள். புறப்படு முன் அவர் உடலில் உஷ்ணம் ஏறுவதற்காக சூடானகாப்பி தயாரித்தாள். அவர் சொன்ன வற்றுக்காக அவரிடம் தனக்குக் கோபமில்லை யென்று காட்ட அவள் விரும்பினாள். தந்தையிடம் சென்று, காப்பி தயாராயிருக் கிறது என்று தெரிவித்து வருமாறு பெர்மாண்டை அவள் ஏவினாள். அச்சிறுவன் வெளியே வந்ததும் அவனுடன் நிமிஷநேரம் விளையாடினார் பெர்ஹான்ஸா. பின்னர், 'விரைவில் வருகிறேன் என்று அம்மாவிடம் சொல்லு' என்று கூறி கதகதப்பான வீட்டுக்குள் அவனைத் திருப்பி னுப்பினார். ஆனால் சொன்னபடி அவர் உள்ளே செல்ல வில்லை. வீட்டை மறுபடி திரும்பிப் பார்க்காமலே சறுக்கல் கட்டைகளை மாட்டிக்கொண்டு பயணம் கிளம்பி விட்டார்.

ஜன்னல் மூலம் அவரை நோக்கிக் கொண்டிருந்த பெரெட் சிரித்தாள். ''வீட்டுக்குள்ளேயே அவர் வரப் போவதில்லையா என்ன? ஐயோ, இப்படி அவர் புறப் பட்டுப் போகவே கூடாது! அவருக்காக எவ்வளவுநேர்த் தியாக அனைத்தையும் தயாராக வைத்திருக்கிறோம்!'' அவரை அழைப்பதற்காக வாயிற்படிக்கு அவள் ஓடினாள்.

ஆனால் அதற்குள் அவர் வெகுதூரம் போய்விட்டார். காற்று அவளை மோதிப் பின்னுக்கு தள்ளியது. அந்தக் காற்றில் அலைபட்டுச் சுற்றிச் சுழன்றவாறு பெரிய பெரிய பனிச் செதில்கள் வானிலிருந்து விழுந்தன.

வீட்டைப் பற்றியும், அதற்கும் அதிகமாக பெர்மாண்டைப் பற்றியுமே சிந்தித்தவராக அந்தக் காற்றிலும் பனியிலும் மேன்மேலும் முன்னேறிக் கொண்டிருந்தார் பெர்ஹான்ஸா. அந்தப் பையன் அரும் பெரும் சாதனை புரிவான் என்பதில் அவருக்கு ஐயமிருக்க வில்லை. இருள் அதிகரிக்கத் துவங்கியது. காற்று வலுக்க லாயிற்று. பனிமழையும் பெருகியது. எனினும் அயராமல் அவர் நடந்து கொண்டிருந்தார். 'செல்வோம்...... மேலும் செல்வோம்......அப்போதுதான் விரைவில் வீடு திரும்ப இயலும்' என்பதே அவர் எண்ணம்.

3

அந்த வருட வஸந்தத்தின் போது ஜேம்ஸ் நதிக் கரையிலிருந்த ஒரு வயல் வெளியில் இருசிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். நன்ருயில்லை என்ற காரணத்தால் குடியேற்றக்காரரொருவர் விட்டிருந்த வைக்கோற் போரொன்று அருகிலிருந்த குன்றின் சரிவில் அப்படியே கிடந்தது. அந்தப் போருக்கருகில் வந்ததும் பையன்கள் சிலையாக நின்று விட்டனர். அந்தப் போரின் ஒரு புறத்தில், வைக்கோல் மீது சாய்ந்தவாறு யாரோ அமர்ந்திருந்தார். அந்த மே தினம் வெதுவெதுப்பாக இருந்த போதிலும் பனிச் சறுக்கல் காலங்களில் அணியும் உடைகளை அவர் அணிந்திருந்தார். அவர் தோளில் மற்று மொரு ஜதை சறுக்கல் கட்டைகள் தொங்கின. சறுக் கலுக்கு உகந்த தருணத்தை எதிர்பார்த்து ஓய்வெடுத்துக் கொண்டு அவர் உட்கார்ந்திருப்பதாகவே அச்சிறுவர் களுக்குத் தோன்றியது. அவரது மாரிக்கால உடைகள் அவர் உடலை இறுகப் பற்றியிருந்தன.

அவர் முகம் களைத்து வெளுத்திருந்தது. அவரது கண்களோ மேற்கு நோக்கித் திரும்பியிருந்தன.

மாநிலத்தின் தீரர்கள்

பழனியப்பா பிரதர்ஸ்